

# சமூக முன்னோடி எம் சி

# Social Pioneer M C

எம் சி சுப்பிரமணியம் நூற்றாண்டு விழா மலர்

M C Subramaniam Centenary Celebration Souvenir

அகில இலங்கை சிறுபான்மை தமிழர் மகாசபை

All Ceylon Minority Tamil Mahasabai

# சமூக முன்னோடி எம்.சி
# Social Pioneer MC
# நூற்றாண்டு விழா மலர்

செப்ரெம்பர் 27, 2017



**அமரர்.எம்.சி.சுப்பிரமணியம்.**

- முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் -

தலைவர்

**அகில இலங்கை சிறுபான்மை தமிழர் மகாசபை**

**1917 - 2017**

அகில இலங்கை சிறுபான்மை தமிழர் மகாசபை

## All Ceylon Minority Tamil Mahasabai

## நிர்வாகக் குழு

தலைவர்,
**திரு.பி.ஜே.அன்ரனி**

உப தலைவர்கள்,
**திரு.க. திருநாவுக்கரசு**
**திரு. க. கணேசலிங்கம்**
**திரு. செ. கந்தையா**

பொதுச்செயலாளர்,
**திரு.கே.கமலேஸ்வரன்**

உபசெயலாளர்,
**திருமதி.க. சுகந்தினி**

பொருளாளர்,
**திரு.கே.குணசிங்கம்**

## மலர்க் குழு

மலர்குழு தலைவர்
**திரு.மு.பாலசுப்பிரமணியம்**

மலர்குழு உப தலைவர்
**திரு.க.திருநாவுக்கரசு**

மலர்க்குழு செயலாளர்/
**திரு.க.கமலசேகரம்**

## சிலை அமைப்புக் குழு

தலைவர்
**திரு.க.திருநாவுக்கரசு**

செயலாளர்
**திரு. வீ. வீரகுமார்**

Emails:
mcsubramaniam100@gmail.com
samookakavalarmc@gmail.com

இணையம்.Web:
Samookakavalarmc.com

Facebook:
Samookakavalarmc

# சமூக முன்னோடி எம்.சி
# Social Pioneer MC



| | | |
|---|---|---|
| மலர் | : | சமூக முன்னோடி எம்.சி |
| Title | : | Social Pioneer MC |
| இதழ் | : | எம்.சியின் நூற்றாண்டு மலர் |
| Subjects | : | M C's Centenary Magazine |
| உள்ளடக்கம் | : | எம்.சியின் சமூக போராட்டங்களும் சாதனைகளும் |
| Contents | : | M C's Social Challenges & Victories |
| நூலாசிரியர்கள் | : | திரு.மு.பாலசுப்பிரமணியம். & திரு.க.திருநாவுக்கரசு |
| Editors | : | Mr.M.Balasubramaniam & Mr.K.Thirunavukkarasu |
| தொகுப்பாசிரியர் | : | திரு.க.கமலசேகரம் |
| Compiled | : | Mr.K.Kamalasekaram |
| அட்டை ஓவியம் | : | திரு. ஆசை.இராசையா |
| Cover Art | : | Mr.Asai.Rasiah, |
| அட்டை வடிவமைப்பு யாழ்ப்பாணம் | : | திரு.எஸ..நிகேசன், யாழ் ஸ்மாட், இராமநாதன் வீதி, |
| Cover Design Jaffna | : | Mr.S.Nikeshan, Yarl Smart, Ramanathan Street, |
| வடிவமைப்பு | : | யோகன் & கமலம் |
| Layout | : | Yogan & Kamalam |
| கணனிப்பதிவு | : | யோகன் & கமலம் |
| Computrising | : | Yogan & Kamalam |
| அச்சுப்பதிவு | : | "ரம்யன்" அச்சகம், மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. |
| Printers Chavakachcheri | : | "Ramyan" Printers, Madduvil North, |
| முதற் பதிப்பு | : | செப்ரெம்பர் 2017 |
| First Edition | : | September 2017 |
| வெளியீட்டுத் தினம் | : | செப்ரெம்பர் 27, 2017 |
| Published on | : | September 27, 2017 |
| வெளியீடு | : | அகில இலங்கை சிறுபான்மை தமிழர் மகாசபை |
| Published | : | All Ceylon Minority Tamil Mahasabai |

# சமூக முன்னோடி எம்.சி
# Social Pioneer MC

பொருளடக்கம் பக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | வாழ்த்துச் செய்திகள் | | |
| 2. | எம். சி. என்ற பெருமகன் | - P.J. அன்ரனி | 4 |
| 3. | சாதிய மேலாதிக்கத்திற்கு சாவுமணி அடித்தவர் | - கி. கமலேஸ்வரன் | 10 |
| 4 | எம். சி. என்ற நன்றிக்குரிய நாயகர் | - மு. பாலசுப்பிரமணியம் | 20 |
| 5. | சமூக முன்னோடி எம்.சி. | - க. கமலசேகரம் | 23 |
| 6. | எம். சி. யின் வாழ்க்கைச் சுவடுகள் | - க. கமலசேகரம் | 25 |
| 7. | எம்.சி. யின் பரிணாம வளர்ச்சியின் பார்வை | - க. திருநாவுக்கரசு | 31 |
| 8. | நினைவழியாக் குறியீடு எம். சி. | - தேவதாசன் | 35 |
| 9. | சாதியம் நவீனமாகியிருக்கிறது | - பி. இரயாகரன் | 40 |
| 10. | எம். சி. என்றோர் விடிவெள்ளி | - இ. சிவநாயகம் | 49 |
| 11. | இலங்கையின் அம்பேக்கார்... | - கே. சிவயோகநாதன் | 51 |
| 12. | பிற்பட்ட சமூகங்களின் திசைகாட்டி | - செ. கந்தையா | 53 |
| 13. | அவதார புருஷன் - கவிதை | - ஆகசி | 54 |
| 14. | அணைந்தும் அணையாத சாதித் தீ | - க. கணேசலிங்கம் | 56 |
| 15. | உரிமை மறுக்கப்பட்ட சமூகங்களின் நியாயவாதி | - க. சுகந்தினி | 59 |
| 16. | எம் சி என் எங்களின் நாயகன் - கவிதை | - இளமுருகன் | 60 |
| 17. | தமிழர் அரசியல் பொருளாதார அபிவிருத்தியும் அக முரண்பாடுகளும் | - மா. யோகசிங்கம் | 62 |
| 18. | சமூக முன்னோடி | - எஸ். போ. | 66 |
| 19. | வகை வகையாய் சாதிகள் - கவிதை | - வ. திவ்யராஜன் | 69 |
| 20. | நமது அரசியல் | - கே. வீ. வீரகுமார் | 70 |
| 21. | மீண்டும் வேண்டும் உயிர்ப்பு | - ந. மகாலிங்கம் | 73 |
| 22. | எம் சியின் சமூக விடுதலை போராட்டமும்...... | - க. சின்னராஜா | 76 |
| 23. | எம். சி. ஒரு வியக்கத்தக்க மும்முனைப்போராளி | - வ. திருநாவுக்கரசு | 81 |
| 24. | எம். சி. ஒரு சமூகப்போராளித் தலைவன் | - வே. சிவராஜலிங்கம் | 83 |
| 25. | தமிழ் மக்களின் விடிவுக்காய் போராடியவர் எம்.சி | - வ. திவ்யராஜன் | 87 |
| 26. | எம் சி. நினைவாக - கவிதை | | 94 |
| 27. | சமத்துவத்தின் குரல் எம்.சி. | - த. மகேந்திரராஜா | 96 |
| 28. | சமூக பேராசான்.... | - சீ. குணநாயகம் | 99 |
| 29. | எம்.சி. பற்றிய நினைவுகள் | - சீ செல்வராசா | 101 |
| 30. | எம். சி. என்ற ஆளுமை | - எஸ்.ஜே. ஜெயக்குமார் | 103 |
| 31. | அகில இலங்கை சிறுபான்மை தமிழர் மகாசபை | - க. நாகமுத்து | 105 |
| 32. | சாதியப் பிசாசை ஒழிக்க முற்பட்ட வீரத்தலைவன் | - கிருஸ்ணா | 107 |
| 33. | எம். சி. சுப்பிரமணியம்... | - எஸ். றஜீபன் | 112 |
| 34. | சாதியப் போக்கு ஒரு நோக்கு | - க.பாலன் | 114 |
| 35. | சமூகம் விழித்தெழ வழிசமைத்த வல்லோன் | - பவித்திரா | 116 |
| 36. | வளர்முக சமூகங்களின் முதலாவது பாரளுமன்ற..... | - ஆ.ந.இராசேந்திரன் | 118 |
| 37. | எம்.சி. ஒரு சகாப்தம் | - பொ. குணசங்கம் | 122 |
| 38. | இலங்கை தமிழர் அரசியல் தலைமைத்துவத்தில் சிறுபான்மை சமூகங்களினது தேவை | | 124 |





# வாழ்த்துச் செய்தி

முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் எம்.சி சுப்பிரமணியம் அவர்களின் நூற்றாண்டு விழா குறித்து வெளியிடப்படவிருக்கின்ற விசேட மலருக்கு வாழ்த்துச் செய்தியொன்றை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இலங்கைவாழ் ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் சமூக, அரசியல் அந்தஸ்துக்களை உயர்த்தவும் பொருளாதார, கல்வி, கலாசார, வேலைவாய்ப்பு போன்ற துறைகளில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி அதன் மூலம் பிற்படுத்தப்பட்ட சமூகங்களை கல்வியில் மேம்படச் செய்து உயர்ச்சி அடையச் செய்வதற்காகவும் அயராது உழைத்த அமரர் எம்.சி.சுப்பிரமணியம் அவர்கள் சிறந்த சிந்தனையாளன், நல்ல முற்போக்குவாதி, சமூகங்களுக்கிடையேயான ஏற்றத்தாழ்வு கலாசாரங்கள் மேம்பட்டிருந்த வேளையில் கல்வியை மேம்படுத்துவதன் மூலமே இம்மக்களுக்கு உயர்வைத் தேடித்தர முடியும் என்ற கொள்கையில் உறுதியாக இருந்தவர் ஆரம்பத்தில் கம்யூனிஸ்ட் கொள்கைகளை வெகுவாக ஆதரித்த திரு. சுப்பிரமணியம் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களை உயர்நிலைக்கு கொண்டுவர வேண்டும் என்ற தீவிரப் போக்கைக் கொண்டிருந்தார். டாக்டர் அம்பேத்கார் அவர்களின் போக்கிற்கு ஒத்ததாக செயற்பட்டார். நியமனப் பாராளுமன்ற உறுப்பினராக 1970இல் நியமிக்கப்பட்ட திரு. சுப்பிரமணியம் அவர்கள் 1977 வரை தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்தார். ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் விடிவுக்காக அவர்களுக்கு மேலதிக கல்வி வசதிகளை வழங்க நடவடிக்கைகள் எடுத்தார். குறிப்பிட்ட சமூகத்தினரை கல்வியில் மேம்பட்டவர்களாக்கி அரசாங்க அலுவலகங்களில் அரச உத்தியோகங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் அவர் வழிவகுத்தார்.

அவரின் தன்னலமற்ற பொதுநல நோக்குடைய உயரிய சிந்தனைகள் அவருக்கு அரசியல் மேடைகளிலும் உரிய கௌரவங்களைப் பெற்றுக் கொடுத்தன. தாழ்த்தப்பட்ட மக்களை மேம்படுத்த அயராது உழைத்த அவ்வேளையில் மேம்பட்ட சமூகங்களுடனும் நல்ல ஒரு சகோதரத்துவ உறவை பேணியமையால் இவரின் பணிகள் இலகுவாக்கப்பட்டன.

இத்தனை சிறந்த நற்பண்புகளும் ஒருங்கே இணையப்பெற்ற அமரர் எம்.சி.சுப்பிரமணியம் அவர்களின் 100வது ஞாபகார்த்த தினத்தில் அவரின் பெருமைகளை எடுத்துரைத்து அவரை நினைவு கூருவதில் உங்களுடன் இணைந்து நானும் மகிழ்வடைகின்றேன் எனத் தெரிவித்து நிறைவு செய்கின்றேன்.

நன்றி
**நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்**
முதலமைச்சர்
வடமாகாணம்.



# வாழ்த்துச் செய்தி

**பிமல் ரத்நாயக்க (பா.உ)**
மக்கள் விடுதலை முன்னணியின்
அரசியல் குழு உறுப்பினர்

நூறு ஆண்டுகள் என்பது பத்துத் தசாப்தங்களாகும். இந்தப் பத்து தசாப்தங்களாக ஒரு அமைப்பைக் கட்டிக்காத்து வருவதென்பது பெரும் சவால் நிறைந்த விடயமாகும். அதுவும் சாதிப் பிரச்சனையால் புரையோடிப்போயுள்ள யாழ்ப்பாணத்தில், அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையைக் கட்டிக்காத்து வருவதென்பது பாரிய சவாலாகும். அந்த சவால்களுக்கு முகம் கொடுத்துத் தனது பணியை செவ்வனே முன்னெடுத்து வருகின்ற மகாசபையினருக்கு, கூடுதலான சக்தியும் வலுவும் கிடைக்க வேண்டுமென மீண்டும் வாழ்த்துகின்றோம்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற பல்வேறுவிதமான ஒடுக்கு முறைகளுக்கு எதிராக அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையைப் போன்றே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆதரவான போராட்டத்தில் இடது சாரிகளின் பங்களிப்பும் அளப்பரியதாகும். அப்பணிகளில் இந்த நூற்றாண்டு விழாவுக்குச் சொந்தக்காரான எம்.சி சுப்பிரமணியம் அவர்கள் ஆற்றிய பங்கு அளப்பரியதாகும். அதனாலேயே நூறு ஆண்டுகள் கடந்த பின்னரும் அவரை நாம் நினைவு கூருகின்றோம். சாதாரணமாக ஒரு மனிதன் இறந்து மறுநாளே மறந்துவிடுகின்ற சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் எமக்கு எம்.சி சுப்பிரமணியம் அவர்களின் ஒரு முக்கியத்துவம் நிறைந்துயர்ந்து காணப்படுவதேன்? அதுதான் அவரின் ஒடுக்குமுறைக்கு எதிரான குரலாகும். அவர் கடந்து வந்த பாதையானது போராட்டம் நிறைந்த பாதையாகும். அதில் வெற்றிகளைப் போன்றே தோல்விகளுக்கும் முகம் கொடுத்துத் துவண்டு வீழாது எழுந்து நின்ற மாமனிதராகும். அதனால் தான் நூற்றாண்டுகளாக ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

மக்கள் விடுதலை முன்னணியைப் பொறுத்தவரையில், நீதியான தேசம் நியாயமான சமூதாயம், அடிமையில்லா மனிதருக்காக போராடும் அரசியல் இயக்கமாகும். இதில் கீழ்சாதி, மேல்சாதி, தாழ்த்தப்பட்டவர்கள், மேட்டுக்குடியினர் என மக்கள் தரம் பிரித்துள்ள முதலாளித்துவ முறைக்கு எதிராகவும் சமத்துவத்தை நிலைநாட்டும் சமவுடமைச் சமூதாயத்தைக் கட்டியெழுப்புவதற்காகவும் ஒடுக்கப்பட்டவர்கள் சார்பாக போராடும் இயக்கமாகும். ஆகவே எங்களைப் பொறுத்தவரையில் இந்த ஒடுக்கு முறைகள் அனைத்தையும் கட்டவிழ்த்து விடுவோர் ஆளும் வர்க்கமாகும். அவர்களுக்கே மக்களைப் பிரித்தாளும் தந்திரோபாயம் தேவைப்படுகிறது. இதிலிருந்து மீண்டெழ வேண்டுமென்றால் ஒரு சமூகம் என்ற வகையில் நாம் அனைவரும் முதலாளித்துவ சமூக ஒடுக்கு முறைக்கு எதிராகவும் சமத்துவத்தை நிலைநாட்டுவதற்காகவும் போராட முன்வரவேண்டும். அதுவே இன்றைய யுகத்தின் தேவையுமாகும். அவ்வாறான போராட்டத்தை முன்னெடுத்து வரும் அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபைக்கும், அதன் ஸ்தாபகர் எம்.சி சுப்பிரமணியம் அவர்களின் நூற்றாண்டு விழாவினைச் சகல வெற்றிகளுடன் முன்னெடுப்பதற்கு உள்ள உங்கள் அனைவருக்கும் போதுமான சக்தியும் வலுவும் கிடைக்க வேண்டுமென மக்கள் விடுதலை முன்னணியான நாம் வாழ்த்துகின்றோம்.

நன்றி

ශ්‍රී ලංකාවේ කොමියුනිස්ට් පක්ෂය
COMMUNIST PARTY OF SRI LANKA
இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி

91,Dr.N.M.Perera Mawatha
Colombo-0800800
Telpone-0112695328
Fax-0112691610
E.Mail-
Compartysi@gmail.com

17th September, 2017

**Comarde P.J Antony**
**Attorny-at-Law**
**President**
**All Ceylon Minority Tamils Mahasabha**

Dear Comrade,

# 100th Birth Anniversary of Comrade M.C. Subramaniam (Former M.P)

On the Occasion of the 100th Birth Anniversary of Comrade M.C.Subramaniam (Former M.P) the central Committee of the Communist Party of Srilanka takes pleasure in sending a message to the All Ceylon Minority Tamils Mahasabha, remembering him with deep respect and honor.

When M.C. Subramaniam was born in 1917 in the same year of the Great October Revolution, Srilanka was a British Colony with feudalism as the main stay in economy and the initial stage of growing capitalism.

The caste system was dominant in the social and religious life of the then ceylonese society. Such division of labour under feudalism interpreted as the caste system prevailed throughout the country and in all ethnic groups and nationalities. The Northern Province in particular Jaffna was no exception.

The colonialists took advantage of the then prevailing condition to convert those disadvantaged sections of the society into their religious faiths in violation of human rights and other fundamental rights of those people often ending in disputes, clashes and riots.

The Great October Revolution took place in 1917 in Russia which ushered in an era of national, social and human liberation. Ths historic event had a profound impact on the people's lives in Asia, Africa and Latin America. It was in this background of History that the left Movement emerged in Srilanka. Its precursor the Sooriya mal Movement as an anti-Imperialist and anti-feudal movement captured the imagination of our young people and in particular the disadvantaged sections of the Srilanka society in 1930s. Comrade M.C drawn in to this movement represented such disadvantaged people of the Jaffna society. Comrades A. Vaidyalingam and P.Kandiah, the pioneers of the left movement in Jaffna were sources of courage, and inspiration to the young M.C.

Comrade M.C associated himself closely with the National leaders of the left Movement namely Dr S.A Wicremasinghe, M.G Mendis, Pieter Keuneman and Rev.Udakendawela Sri Saranakara.

The All Ceylon Miority Mahasabha of which M.C. was a leader which grew under the influence of the Srilanka left movement spearheades the campaign fighting valiantly for the amelioration of the conditions of the disavantaged sections both in the Singala and Tamil communities. It was a struggle for a common cause. The All Ceylon Minority Mahasabha became an acknowledged leader fighting for this common cause of the depressed and disadvantaged sections of the Srilankan society. It grew under the influence of the left movement and in particular the communist party of Srilanka. Comrade M.C was elected to the central committee of the Communist party of Srilanka and later its distinguished member in parliament the role played by M.C was duly acknowledged by the then prime minister Mrs.Srimavo Bandaranaikea, the leader of the united front Government who had a great regard for M.C.

The Communist party of Srilanka dips its Red banner and salutes him with deep respect and honor for all what he had done for the cause of his people and country.

His 100th birth Anniversary will coincide with the 100th anniversary of the Great October Revolution.

Fraternally Yours
DEW Guanesekara
General Secretary
COMMUNIST PARTY OF SRILANKA

# எம்.சி. என்ற பெருமகன்

P.J. அன்ரனி
தலைவர் அ.இ.சி.த.மகாசபை
சட்டத்தரணியும் பிரசித்த
நொத்தாரிசும்

எம்.சி. என்ற இரு எழுத்துக்களாலும் அன்புடன் அழைக்கப்பட்ட பெருமகனே எம்.சி.சுப்பிரமணியம் அவர்களாகும். இவர் தமது இளம் பராயத்திலிருந்து சமூகத் தொண்டில் ஈடுபாடு உடையவராகக் காணப்பட்டார். ஆரம்பத்தில் காந்திய வாதியாகக் காணப்பட்ட இவர் கமியூனிஸ்ட் கொள்கையால் கவரப்பட்டு, கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்து இயங்கத்தொடங்கினார். அக்காலத்தில் இருந்த சாதிக்கொடுமைகள், அடக்குமுறைகள், சுரண்டல்களிலிருந்து சிறுபான்மைத் தமிழர் விடுதலைபெற கம்பியூனிஸ்ட் கட்சியினால்த்தான் முடியும் என நம்பினார். கட்சியின் முழுநேர ஊழியனாக இயங்கி வந்தார். வடபகுதியிலுள்ள கிராமந்தோறும் சென்று கட்சிப் பிரசாரம் செய்து வந்துள்ளதுமல்லாமல் சிறுபான்மைத் தமிழர்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டார். அக்காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்காக இயங்கி வந்த ஒடுக்கப்பட்டோர் ஊழியர் சங்கத்திலும் சேர்ந்து இயங்கினார். இச் சங்கம் பின்னாளில் அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை என பெயர் மாற்றப்பட்டு இயங்கிய போது அதன் தலைவராக தெரிவுசெய்யப்பட்டார். இக்காலத்தில் பல போராட்டங்களுக்குத் தலைமை தாங்கி நடத்தினார். அவை தேநீர்க்கடைப் போராட்டம் ஆலயப்பிரவேசப் போராட்டம் என்பனவாகும். அக்காலத்தில் ஆட்சி செய்த அரசாங்கங்களுக்கு எமது மக்களின் அரசியல் பிரதிநிதித்துவம் தொடர்பாகப் பல விண்ணப்பங்களை மகாசபை செய்தது. எம்.சி.சுப்பிரமணியம் அவர்களை எமது மக்களின் சார்பாகச் செனட் சபைக்கு தெரிவு செய்யுமாறு கோரப்பட்டது. ஆனால் லங்கா சமசமாஜ கட்சி அதனை எதிர்த்து வந்தது. பின்னர் 1970ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த முற்போக்கு ஐக்கிய முன்னனி எம்.சி.சுப்பிரமணியம் அவர்களை பாராளுமன்றத்தில் நியமன எம்.பி.யாக ஆக்கியது. மகாசபையின் நீண்ட காலக் கோரிக்கையானது ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா அவர்களினால் நிறைவேற்றப்பட்டது. இது இலங்கைச் சரித்திரத்தில் குறிப்பிடக் கூடிய முக்கிய நிகழ்வாகும்.

எம்.சி ஐயாவுக்கென ஒரு காரியாலயம் பலாலி வீதியில் திறக்கப்பட்டது. மகாசபைக் கூட்டங்களும் இங்கு நடாத்தப்பட்டன. காரியாலயத்தில் திரு.குணசிங்கம் இலிகிதராகக் கடமையாற்றினார். காரியாலயம் சுறுசுறுப்பாக இயங்கியது. உபதலைவர் திரு.மாட்டீன் செல்லையா அவர்கள் தனாதிகாரி தோழர் இராசையாவும் அடிக்கடி காரியாலயத்திற்கு வந்து கடைமையாற்றுவார். திரு.மாட்டீன் செல்லையா அவர்களும் நானும் ஆலய பிரவேசப் பிரச்சனைக்கு ஒரு தீர்க்கமான முடிவு காணவேண்டுமென

தீர்மானித்து, மகஜர் ஒன்றைத் தயாரித்தோம். 1957ல் கொண்டுவரப்பட்ட சமூகக்குறைபாடுகள் ஒழிப்புச் சட்டத்தை திருப்தி வலுவுள்ளதாக்கி ஆலயப்பிரவேசத்தை வெற்றிகரமாக செய்ய வேண்டுமென முயற்சி எடுத்தோம்.

1971ம் ஆண்டு எம்.சி.ஐயாவின் தலைமையில் மகாசபையின் உபதலைவர்களான மாட்டீன் செல்லையா, துரைசிங்கம், நிர்வாகச் செயலாளர், செல்லையாவுடன் நானும் ஒரு குழுவாகச் சென்று வீடமைப்பு அமைச்சர் தோழர் பீட்டர் கெனமன் அவர்களையும் பேட்டி கண்டு 1957ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சமூகக்குறைபாடுகள் ஒழிப்புச்சட்டத்தில் (prevention of social disabilities act of 1957) உள்ள குறைபாடுகளை விளக்கி அச்சட்டத்தைத் திருத்தி வலுவுள்ள சட்டமாகக் கொண்டுவந்தால் மட்டுமே வடபகுதியில் நிலவிவரும் சமூகக்குறைபாடுகளை ஒழித்துக் கட்டுவதோடு இந்து ஆலயங்களில் சிறுபான்மைத் தமிழரின் வழிபாட்டு உரிமைகளை நிலைநாட்ட முடியுமென்றும் அவரிடம் விளக்கிக் கூறினோம். எமது கோரிக்கையை ஏற்றுக்கொண்ட அமைச்சர் அவர்கள் உடன் கமிட்டி ஒன்றை அமைத்து உரிய திருத்தங்களைச் செய்து சட்டங்களை வலுவுள்ள சட்டமாக்கினார். அச்சட்டத்திருத்தமே Prevention of social disabilities amended act of 1971 எனப்பட்டது.

இச் சட்டத்திருத்தம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டதும் வடபகுதியிலுள்ள பிரசித்திபெற்ற இந்து ஆலயங்கள் பல எமது மகாசபையின் வேண்டுகோளுக்கு இணங்க சுமுகமாக ஆலயங்களைச் சகலரினதும் வழிபாட்டுக்குத் திறந்துவிடப்பட்டன. சட்டத்தினை அமுல்ப்படுத்த அப்போது வடபகுதியில் பொலிஸ் அத்தியட்சகராகவிருந்த ஆர்.சுந்தரலிங்கம் அவர்கள் பலவாறான ஒத்துழைப்பை எமக்கு வழங்கினார்.

வழமைபோல் மாலை நேரத்தில் காரியாலயத்தில் நாம் இருக்கும்போது எம்.சி.ஐயாவோடு பல்வேறு பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடுவதோடு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் தீர்மானிப்போம். ஒரு நாள் மாலை திருத்தப்பட்ட சமூகக்குறைபாடுகள் ஒழிப்புச்சட்டம் பற்றிக் கலந்துரையாடும் போது மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் திறந்துவிடப்பட்டுள்ளதோவென்று எப்படி அறியலாம் என்று கேட்டார். "போய் பார்த்துத்தான் அறியலாம்." என்றேன். நான் போய் பார்த்தால் என்ன? என்றார்.

"இல்லை ஐயா நான் முதல் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன். பின்னர் நீங்கள் போகலாம்" என்றேன்.

அதற்கு எல்லோரும் சம்மதித்தனர். அடுத்த நாள் காலையில் நேரத்தோடு எழுந்து தோய்ந்து குளித்துவிட்டு வெள்ளை வேட்டி கட்டி வெள்ளைநிறச் சால்வையும் போட்டுக்கொண்டு பஸ் ஸ்ராண்டுக்குப் புறப்பட்டேன். முதல் நாள் வீட்டில் விபரமாக எல்லோரும் கூறியிருந்தமையால் எதுவித எதிர்ப்போ தடங்கலோ எதுவுமின்றி நேரத்தோடு புறப்பட முடிந்தது. 762ம் நம்பர் கீரிமலை பஸ்சில் ஏறிப் புறப்பட்டேன். மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் இறங்கி, கோவிலின் கிழக்கு வாசல் பக்கம் போனேன். அப்போது இப்போதுள்ளபடியல்ல . கிழக்கு வாசல் பக்கமாகவே கோவிலுக்குப் போகலாம். போகும் பொழுது துரைச்சாமிக் குருக்களும் வேறு சிலரும் கோவில் வாசலில் இடது பக்கமாக நின்று கதைத்துக்கொண்டு நிற்பதை அவதானித்தேன். நான் நேரே கிணற்றடிக்குப்போய் தண்ணீர் அள்ளிக் கை, கால், முகம் கழுவிக்கொண்டு, கிணற்றிலிருந்த திருநீற்றை நெற்றியிலும்இ கைகளிலும்இ நெஞ்சிலும்

இட்டுக்கொண்டும் சால்வையை அரையில் கட்டிக்கொண்டும் கோவில் உட்பக்கம் சென்றேன். கோவிலுக்குள் பக்தர்கள் ஆங்காங்கே காணப்பட்டனர். மூலஸ்தானத்தில் தீபம் எரிந்துகொண்டிருந்தது. ஏனைய பக்தர்களுடன் ஒருவனாகத் தொழுது கொண்டு கோவிலின் உட்பிரகாரத்தைச் சுற்றிவந்தேன். வரும் பொழுது கோவில் திருத்த வேலைகளுக்கான பொருட்கள் ஓரிடத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்துக்கொண்டு நின்றேன். அப்பொழுது துரைச்சாமிக் குருக்கள் நான் நின்ற பக்கமாக என்னை நோக்கி வருவதை அவதானித்தேன். அவரை நோக்கி கை குவித்து வணக்கம் தெரிவித்தேன். அவர் என்னை நோக்கி, உற்றுப் பார்த்துக்கொண்டு நின்றமையால் "என்ன ஐயாஇ திருப்பள்ளி வேலைகள் எல்லாம் முடிக்காமல் தடைப்பட்டுப் போய் இருக்கிறதா?" என்றேன். அங்கு குவிக்கப் பட்டிருந்த பொருட்களைக்காட்டி "ஆம்" என்று தலை ஆட்டியவர் என்னைப் பார்த்து "எங்கிருந்து வருகிறீர்" என்று கேட்டதும் 'யாழ்பாணத்திலிருந்து வருகிறேன். நேற்றுக்கனவில் கந்தசுவாமியார் தோன்றித் தன்னை வந்து வழிபடச்சொன்னார். அதுதான் காலையில் புறப்பட்டு வந்தேன் என்றேன். "சரி" என்று சொல்லி தலையாட்டிவிட்டு என்னைக் கடந்து சென்றார். நான் திரும்பவும் மூலஸ்தானம் வரை சென்று வழிபட்ட பின்னர் பஸ்சில் புறப்பட்டு யாழ்நகர் வந்து சேர்ந்தேன். அன்று பிற்பகல் எம்.சி.ஐயா காரியாலயத்திற்கு வந்தபோது நடந்தவைகளைக் கூறினேன். "ஆலயத்திற்கு முன்னால் எந்தவித தடைகளும் போடப்பட்டிருக்கவில்லை. ஆலயம் பக்தர்களுக்கு திறந்து விடப்பட்டபடியே இருக்கிறது. பக்தர்களும் வந்துபோய்க் கொண்டு இருப்பதால் நீங்கள் போய்வரலாம்" என்றேன். அடுத்த நாள் காலையில் எம்.சி.ஐயா மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்குச் சென்று வழிபட்டு வந்தார். தான் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்குப் போய் வழிபட்டு விட்டு வந்த செய்தியை அப்போது வடபகுதி பொலிஸ் அத்தியட்சகராயிருந்த திரு.ஆர்.சுந்தரலிங்கம் அவர்கட்கு டெலிபோன் மூலம் தெரிவித்தார். ஆலயத்தில் எந்தவிதமான தடைகளும் போடப்பட்டிருக்கவில்லை என்றும் சட்டத்திருத்தம் உண்மையான மாற்றத்தையும் வெற்றியையும் கொண்டு வந்திருக்கின்றதென்றும் கூறி, பொலிஸ் அத்தியட்சகர் என்றவகையில் அவர்கள் ஆலயப்பிரவேசம் எங்கும் சுமுகமாகவும் வெற்றிகரமாகவும் நடைபெற எமது மகாசபைக்கு வழங்கிய ஆதரவுக்கும் நடவடிக்கைகளுக்கும் நன்றி தெரிவித்தார்.

அப்பொழுது "தினபதி" பத்திரிகை தமிழ் மக்கள் மத்தியில் பெரும் ஆதரவையும் வரவேற்பையும் பெற்ற பத்திரிகையாக இருந்து வந்தது. அதற்குக் காரணம் யாழ்ப்பாணம் நிருபராக இருந்த திரு.அரசரத்தினமாகும். யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் என்ன நிகழ்ச்சியாக இருந்தாலும் அதைப் பரபரப்பான முக்கிய நிகழ்ச்சியாகச் சுடச்சுட தினபதியில் வெளிக்கொண்டுவந்து விடுவார்.

எம்.சி.ஐயா மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்குச் சென்று வழிபட்ட செய்தியை அறிந்தவுடன் தேடி வந்துவிட்டார். எம்.சி.ஐயாவிடம் எல்லாம் கேட்டறிந்த அடுத்தநாள் தினபதி பத்திரிகையில் முன்பக்கச் செய்தியாக, பெரிய கொட்டை எழுத்தில் "எம்.சி. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் வழிபட்டார்" என்று வெளிவரச்செய்து விட்டார். இச்செய்தி யாழ்ப்பாணத்தில் ஒரு பரபரப்பான செய்தியாக இருந்தமையால் வரவேற்பைக் கொண்ட செய்தியாகவும் காணப்பட்டது. ஆனால் விடயம் இத்துடன் நின்று விடவில்லை. அடுத்தடுத்த நாள் மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலின் பிரதம குருவான துரைச்சாமிக்குருக்கள் எம்.சி.சுப்பிரமணியம் மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலுக்கு வரவும் இல்லை வழிபடவும் இல்லையென மறுப்பறிக்கையொன்றைத் தினபதியில் வெளியிட்டார். பொலிஸ் அத்தியட்சகர் திரு.ஆர்.சுந்தரலிங்கம் அவர்கள்

சட்டத்தை அமுல்படுத்துவதில் மிகவும் அக்கறையாகவும் தீவிரமாகவும் இருந்தார். துரைச்சாமிக் குருக்களை அழைத்து, சட்டத்தின் கடுமையை விளக்கி, தேவையற்ற அறிக்கைகளை விட்டுச் சமாதான சூழலைக் குழப்பவேண்டாமெனக் கேட்டுக் கொண்டதனால் அவ்விடயம் முற்றுப்பெற்றது. அன்று தொடக்கம் மக்கள் அச்சமின்றிக் கோவிலில் வழிபட்டு வருகின்றனர்.

**பாலாவோடை அம்மன் கோவில் ஆலயப்பிரவேசம்**

ஒரு நாள் பிற்பகல் 3.00 மணிபோல தனாதிகாரி இராசையா அண்ணனோடு கந்தோரில் இருந்தபோது காரைநகரைச்சேர்ந்த கந்தையா என்பவர் வந்தார். அவர் பாலாவோடை அம்மன் கோவில் சம்பந்தமாக எம்முடன் கதைத்தார்.

பாலாவோடை அம்மன்கோவிலில் திருவிழா தொடங்கிவிட்டதாகவும் தங்களுக்கும் மேற்படி ஆலயத்தில் திருவிழா இருப்பதென்றும் அத்தினத்தில் தாங்களும் ஆலயப் பிரவேசம் செய்யவேண்டுமென்றும், அதற்கு மகாசபை உதவ வேண்டுமென்றும் கேட்டார். நாம் அதற்கு உதவி செய்வதாகவும் உங்களின் விருப்பத்தைக் கோவில் தர்மகர்த்தா சபைக்கு மகாசபை அறிவிக்கும். நீங்கள் திருவிழாத் தினத்தன்று அன்னதானம் வழங்கக் கோவிலுக்குக் கொடுக்கும் வழமையான அன்னதானப் பொருள்களை வாங்கிக் கொடுக்குமாறும் அவரிடம் கூறினோம்.

பின்னர் பாலாவோடை அம்மன் கோவிலின் தர்மகர்த்தா சபைத் தலைவருக்கு எமது மக்கள் கோரிக்கையைத் தெரிவித்துச் சமாதானமாக எமது மக்கள் கோவில் உட்சென்று வழிபட அனுமதிக்குமாறு கேட்டிருந்தோம். எமது கடிதத்திற்குப் பதில் கிடைக்கவில்லை. கந்தையா அவர்கள் நான்கு நாள்களின் பின்னர் மகாசபைக் காரியாலயத்திற்கு வந்தார். தாங்கள் கோவில் திருவிழாவிற்காக வழமைபோல் அரிசி, காய்கறிகள் ஏனைய பொருள்களையும் முதல்நாள் கொண்டுபோய்க் கொடுத்ததாகவும் அவை யாவும் வைத்த இடத்திலேயே இருந்ததென்றும் அவைகளைக் கோவிற்காரர் எடுக்காமல் விட்டதனால் ஆடு, மாடுகள் அவைகளைத் தின்றும் மிகுதி கோவில் வீதிகளில் அங்குமிங்கும் சிதறிக் கிடந்ததாகவும் கூறினார். இச்செய்கையானது எமது மக்களின் ஆலயப்பிரவேசத்தை அவர்கள் முற்றாக வெறுக்கின்றார்கள் என்பதாகும்.

இதுவிடயமாக நாம் பொலீசில் முறைப்பாடு செய்தோம். பொலிசார் கோவில் தர்மகர்த்தா சபையுடன் கதைத்துக் கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்வதாகக் கூறினர். அதன்படி கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது. அக்கூட்டத்திற்கு இராசையா அண்ணரும் நானும் அவரின் காரில் சென்றிருந்தோம். கூட்டம் கோவிலின் முன்பாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அங்கு அப்போது யாழ் பொலீஸ் அத்தியட்சகராக இருந்த திரு.பேட்டஸ் பெரேரா அவர்களும் வந்திருந்தார். கோவில்காரருக்காக அட்வகேட் ஜனாப் சகிட் அவர்களும் வந்திருந்தார். கூட்டம் ஏ.எஸ்.பி அவர்களின் தலைமையில் கூடியது. அட்வகேட் சகிட் அவர்கள் என்னைப் பார்த்து மிஸ்டர் அன்ரனி இப்பிரச்சினையைச் சமாதானமாகத் தீர்த்துக்கொள்வோம் சம்மதம்தானே என்றார். நான் அதற்கு ஆம் என்றேன். அதற்கு அவர் நாங்கள் எல்லோரும் கொடிக்கம்பத்திற்கு

இப்பால் நின்று கும்பிடலாம்தானே என்றார். அதற்கு நான் மறுமொழியாக ஐயா, நாங்கள் ஒருவரையும் கொடிக்கம்பத்திற்கு இப்பால் நின்று கும்பிடும்படி கூறவில்லை. விரும்பினால் அவர்கள் அப்படி கும்பிடலாம். சட்டத்தின்படி யாவரும் சமம் நாங்கள் எங்கும்போய்த்தான் கும்பிட விரும்புகிறோம் என்றேன். அவர்கள் எனது பதிலை எதிர்பார்க்கவில்லை கொடிக்கம்பத்திற்கு இப்பால் சாதியை மடக்கிப்போடலாம் என எதிர்பார்த்தனர். அவர்கள் எதிர்பார்த்தபடி காரியம் நிறைவேறாதபடியால், பொது மக்களின் கருத்தைக் கேட்பதற்கு அவகாசம் வேண்டிக் கூட்டத்தை ஒத்திவைத்தனர். அடுத்த கூட்டத்தில் சரியான முடிவோடு வரவேண்டுமென ஏ. எஸ். பி. அறிவுறுத்தினார்.

அடுத்த கூட்டம் நடக்கவேண்டிய நாளும் நெருங்கியது. கந்தண்ணனை வரவழைத்து அடுத்த கூட்டத்தன்று நாமெல்லோரும் ஆலயப்பிரவேசம் செய்ய வேண்டும். அதற்கு ஆயத்தமாக எல்லோரும் குளித்து முழுகி வெள்ளைவேட்டி சால்வை அணிந்து நெற்றியில் விபூதி அணிந்து ஆசாரத்துடன் வரவேண்டுமென அறிவுறுத்தினேன். அன்றைய தினம் இராசையா அண்ணருடன் அவரது ஏபோட்டி காரில் காரைநகர் அம்மன் கோவிலுக்குச் சென்றோம். அங்கு ஏ.எஸ்.பி. திரு பேட்டஸ் பெரேராவும் பொலிசாரும் வந்திருந்தனர். கோவிலில் ஒருசில பொதுமக்களும் வந்திருந்தனர். ஆலயக்கதவு பூட்டப்பட்டிருந்தது. அங்கு நின்றவர்களிடம் ஏ.எஸ்.பி. அவர்கள் விசாரித்தபோது காலைப் பூசையும் மதிய பூசையும் முடிந்துவிட்டதால் ஐயர் போய்விட்டார். இனிமேல் மாலை 5 மணிக்குத்தான் பூசை செய்ய வருவார் என்றனர். ஏ.எஸ்.பி அவர்களுக்கு கோயிற்காரரின் திட்டம் விளங்கிவிட்டது. கோயிற்காரர் திட்டமிட்டே அன்று கூட்டத்திற்கு வரவில்லை என்றும், ஆலயப் பிரவேசத்தை இல்லாமல் செய்யவே இப்படி நடந்துள்ளனர் என்று ஏ.எஸ்.பி அவர்கள் அங்கு நின்றவர்களிடம் கோயில் திறப்புடன் ஐயரைக் கூட்டி வருமாறு கட்டளையிட்டார். ஐயரைக் கூட்டிக்கொண்டு வந்தனர். ஏ.எஸ்.பி ஐயரை நோக்கி கோவிலைத் திறக்குமாறு கட்டளையிட்டார். அங்கு வந்திருந்த எமது மக்களைப் பார்த்துக் கோவிலுக்குள் சென்று வழிபடுமாறு கூறினார். எமது மக்கள் கோயில் கிணற்றில் தண்ணீர் அள்ளி முகம் கைகால் கழுவி ஆசாரத்துடன் கோவிலுக்குள் சென்று வழிபட்டனர். கோவில் மணியையும் அடித்து வழிபட்டனர். பின்னர் ஏ.எஸ். பிக்கு நன்றி தெரிவித்துவிட்டுச் சந்தோசத்துடன சென்றனர். நானும் இராசையா அண்ணரும் காரில் திரும்பி வரும்போது தெருவேலிப்பக்கம் நின்ற பெண்கள் மண்ணாலும், கல்லாலும் எறிந்து திட்டினர். பின்னால் ஜீப்பில் வந்த ஏ.எஸ்.பி அவர்கள் ஜீப்பிலிருந்து இறங்கி அவர்களை விரட்டிக் கலைத்தார்.

### கொலை முயற்சி, கைக்குண்டுத் தாக்குதல்

1972ம் ஆண்டளவில் கரவெட்டி பொன் இல்லத்தில் நடந்த கூட்டமொன்றில் பங்குபற்றி விட்டு இரவு 11.00 மணியளவில் எமது மக்களின் பணத்தினால் எம்.சி.ஐயாவுக்கு வாங்கிக்கொடுக்கப்பட்ட 405 காரில் யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்தோம். காரின் முன்பக்க ஆசனத்தில் டிரைவர் சந்தியாப்பிள்ளையும் அடுத்து நானும் அடுத்து எம்.சி.ஐயாவும் பின்பக்கம் தோழர்கள் ஜீவாவும் எச்.ஜி.எஸ்.ரட்ணவீராவும் வேறொருவரும் இருந்தோம். கரவெட்டியிலிருந்து புறப்பட்டு, மண்டான் ஊடாக வல்லையை நோக்கி கார் வந்துகொண்டிருந்தது. அப்போது காரை நோக்கிக்

கைக்குண்டொன்று வீசப்பட்டது. குண்டு கார் பொணற்றில் விழுந்து பெரிய சத்தத்துடன் வெடித்தது. கார் உடனே நின்றுவிட்டது. ஒரே புகை இருட்டு, எங்குமே வெடித்த குண்டின் மருந்து மணம். எல்லோருக்குமே ஒரே அதிர்ச்சி. காரச் சாரதி சந்தியாப்பிள்ளை காரின் வெளிச்சத்தில் றோட்டின் கானுக்குள்ளிருந்து ஓராள் எழும்பி எமது காரைநோக்கி ஏதோ ஒன்றை எறிவதை அவதானித்து உடனே பிறேக்கைப்பிடித்துக் காரை நிறுத்திவிட்டார். எறிந்த குண்டு கார் பொணற்றில் விழுந்து பெரிய சத்தத்துடன் வெடித்தது. குண்டின் சிதறல்கள் காரின் முன்கண்ணாடியில் பட்டன. கண்ணாடி வெடித்து சிதறியதால் சிதறல்கள் எமது முகத்திலும் சட்டையிலும் விழுந்தன. சாரதியின் சாதுரியத்தினால் நாம் யாவரும் உயிர் தப்பினோம். காரை நிறுத்தாமல் விட்டிருந்தால் காரின் கண்ணாடியில் குண்டுவிழுந்து வெடித்திருக்கும். நாம் யாவரும் இறந்திருப்போம். சாரதி காரை ஸ்ராட் செய்து ஓட்டிவந்து எம்மை யாழ்ப்பாணம் கொண்டுவந்து சேர்த்தார். அடுத்தநாள் உதயன், வீரகேசரி பத்திரிகைகளில் எம்.சி.ஐயா நோக்கி குண்டு எறிய வில்லை, அருளம்பலம் என்று தவறுதலாக கருதித்தான் குண்டு எறியப்பட்டுள்ளது என்ற செய்தி வெளிவந்தது. உண்மையில் எம்.சி.ஐயாவை நோக்கித்தான் குண்டு எறியப்பட்டது. எம்.சி.ஐயா ஓர் தடித்த கமியூனிஸ்ட் சிறுபான்மைத் தமிழரின் தலைவர் எம்.சியாக எப்படி இருக்க முடியும் என்ற காழ்ப்புணர்ச்சியே காரணம் ஆகும். உண்மை மூடி மறைக்கப்பட்டது!

பின்நாளில் கம்யூனிஸ்ட் கட்சியில் பிளவு ஏற்பட்டு, பீட்டர் கெனமனின் ஆதரவாளராக இயங்கி வந்தார். மகாசபை தொடர்ந்து இயங்காமல் இருந்ததினால் தோழர் மு.வடிவேலு அவர்கள் மகாசபையின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். தோழர் நடராசா நிர்வாகச் செயலாளராகவும் தோழர் இராசையா தனாதிகாரியாகவும் நான் பொதுக் காரியதரிசியாகவும் செயற்பட்டோம். பின் நாள்களில் புலிகளால் மகாசபை இயங்காமல் தடை செய்யப்பட்டது.

### எம்.சி ஐயாவின் இறப்பு

எம்.சி.ஐயா நோய்வாய்ப்பட்டு யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு இறந்தார். அவரது மரணச்சடங்கிலிருந்து எல்லா நிகழ்விலும் பங்கு கொண்டு எனது விசுவாசத்தைச் செலுத்தினேன். காடாத்துச் சடங்கின் போது அவரது மகன் சந்திரபோஸ் மாஸ்டர் தேவாரம் ஒன்று படியுங்கோ என்றார். அப்போது ஏர் உழவு நடந்தது.

'தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடி(க்)
காடுடைய சுடலைப்பொடி பூசியென் உள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட்பணிந்து ஏத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மான் இவனன்றே"

என்ற தேவாரத்தைப் பாடிமுடித்தேன்.

எமது தலைவரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதோடு நில்லாமல் அவருக்குச் சிலை நிறுவி அவரை நாம் என்றும் நினைவு கூருவோமாக.

## சாதிய மேலாதிக்கத்திற்கு சாவுமணி அடித்தவர்



## அமரர் எம்.சி சுப்பிரமணியம்

கி.கமலேஸ்வரன்
BA,m.phil.Q, Eng.Diploma, SLAS Ltd.wr, tten ena
பொதுச்செயலாளர்
அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை

இலங்கையின் வடபுலத்திலே நீண்ட நெடுங்காலமாக நிலைத்திருந்த சாதிய மேலாதிக்க விலங்கொடித்த, பிற்படுத்தப்பட்ட தமிழர் என ஒரு பிரிவினரை உருவாக்கி, அவர்களுக்கென்றிருந்த உரிமைகளற்ற மனித வாழ்க்கை முறைக்கு சாவுமணி அடித்த ஒருவர் அமரர் M.C சுப்பிரமணியம் அவர்கள். நமது எதிர்காலச் சந்ததி நாம் பட்ட ஆதரவற்ற துன்ப துயரங்களுள் வதைக்கப்படாமல் நிம்மதியாக வாழவேண்டும் என்பதற்காக உடல், ஆவி, பொருள் யாவற்றையும் அர்ப்பணித்த, தமிழர் சமூதாயத்திலே அறியாமை இருளை அகற்ற, பஞ்சமரை ஈடேற்ற 1917ம் ஆண்டு அவதரித்தவர்தான் இன்றைய நூற்றாண்டு விழா நாயகன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் M.C சுப்பிரமணியம் அவர்கள்

உலக வரலாற்றிலே பல வகையான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அவற்றுள் பல தமது இலக்கினை அடைய முடியாமல் தோல்வியில் முடிவடைந்தன. ஆனால் இலங்கையிலே அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர்களினால் அவர்களின் மகாசபை என்ற அமைப்பின் ஊடாக ஒற்றுமையாகவும் உறுதியாகவும் ஒருவருக்கொருவர் உறுதுணையாகவும் சமூக விடுதலை என்ற இலட்சிய வேட்கையுடன் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதனால் போராட்ட நோக்கங்களில் பலவற்றை வெற்றிகொள்ள முடிந்தது. இந்த வகையிலே மேற்படி போராட்டங்களிற்குத் தலைமை தாங்கிய அமரர் M.C சுப்பிரமணியம் அவர்கள் தேசிய ரீதியில் மட்டுமன்றி, சர்வதேச ரீதியிலும் புகழ்பூத்த, ஒப்புயர்வு அற்ற போராட்ட வீரனாகச் சமூகத் தலைவனாகப் போற்றப்படுகின்றார். மதிக்கப்படுகின்றார்.

இலங்கைத் தமிழர் வரலாறு சாதியின் பேரால் பல நூற்றாண்டுகளாக, தலைமுறை தலைமுறையாக, கறைபடிந்த வரலாறாக இருந்துள்ளது. குறிப்பாக இலங்கையின் வடபகுதியிலே சாதிய மேலாதிக்கச் சிந்தனையுடன் பிறரை அடக்கி ஆளுகின்ற ஒரு பிரிவினர் கோலோச்சி வந்துள்ளனர். மறு பிரிவினராக அவர்களால் அடக்கப்பட்டு உரிமைகள் தடுக்கப்பட்டு அடிப்படை மனித உரிமைகள் கூட மறுக்கப்பட்ட சிறுபான்மைத் தமிழர்களும் நடைப்பிணங்களாக வாழ்ந்து வந்தனர். இவர்கள் சொத்து, சுகங்கள் எதுவுமின்றிச் சமூக மேலாதிக்க வாதிகளுக்கு ஏவல் செய்பவர்களாக ஆக்கப்பட்டிருந்தனர். இம் மக்கள் மிருகங்களைப் போலவும் தமது தேவைகளைக் கூட கூறமுடியாத வாயில்லாப் பூச்சிகளாகவும் தமது வாழ்க்கையினைக் கழிக்க வேண்டிய துர்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தார்கள்.

இன்றைய சூழ்நிலையிலே நீறு பூத்த நெருப்பாகச் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு எதிராக சமூக, அரசியல், பொருளாதார, கலாசார, கல்வி, வேலைவாய்ப்பு போன்ற பல்வேறு முனைகளிலும் நன்கு சதித் திட்டமிட்டு எம்மவர்களின் உயர்வு முடக்குவதற்கு முனைப்புடன் கருமங்கள் சாதிய பித்தர்களால் ஆற்றப்படுகின்றன. இந்நிலையில் தான் M.C சுப்பிரமணியம் அவர்களது அருமை பெருமைகள் மீண்டும் புலப்படுவதுடன் அவருடைய ஸ்தானம் எவராலும் நிரப்பப்பட முடியாமல் வெற்றிடமாகவே இருப்பதை உணர முடிகிறது.

இலங்கையில் வடபுலத்திலே எங்கெல்லாம் ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களாகிய பஞ்சமர்களுக்கு இடுக்கண்கள் இன்னல்கள் ஏற்படுத்தப்பட்டனவோ போதெல்லாம் அம்மக்களுக்கு உதவுகின்ற வகையில் செயல்பட்டவர் எம்.சி. அவர்கள். செயற்பாட்டுத்திறன் மிக்க M.C. அவர்கள் எப்பொழுதும் தான் சார்ந்த மக்களுக்காகவும் தான் சார்ந்த அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையினது, கொள்கைப் பற்றிலிருந்து சற்றும் விலகாமல் அம்மக்களது சமூக பெறுமதியான உயர்வு, பொருளாதார மேம்பாடு, அரசியல் ஆதரவு, கல்வி உயர்வு, கலாசார வாழ்வியல் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல பிரிவுகளினதும் உயர்விற்காகவும் அயராது பாடுபட்டார்.

அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்ட மக்களை ஈடேற்றுவதற்குச் சிறந்த மார்க்கம் இடதுசாரிக் கொள்கைகளே என்பதை ஏற்று இடதுசாரி இயக்கத்தோடு சேர்ந்து செயல்பட்டனர். இத்தகைய சேர்க்கைகளினாலே ஒருவித வலுவைபெற்றுக்கொண்டு தனிமனிதர் என்ற வரம்பைக் கடந்து ஓர் அமைப்பாக ஒரு வரலாற்று வெளிப்பாடாக, சமூக விடுதலைப் பயணத்திலே ஓர் உந்து சக்தியாகத் திகழ்ந்தார். அவர் தனது இலட்சியப் பயணத்திலே எண்ணற்ற சோதனைகளைச் சந்தித்து, தாங்கொணா வேதனைகளைத் தாங்கி வரலாற்றுச் சாதனைகளை ஏற்படுத்திய இலட்சிய நாயகனாக விளங்குகிறார்.

எமது மக்களின் இழிநிலையைப் போக்குவதற்கு, பொருளாதார பலமில்லாத அதிகம் கல்வி பெறும் வாய்ப்புக்களில்லாத, அரசியல் ஆதரவில்லாத அநாதைகளாக அரச இயந்திரத்தின் கடைக்கண் பார்வை கூட இல்லாததாகவே அந்தக்கால வாழ்வியற் சூழ்நிலையும் இருந்தது. அந்தக் காலப் பின்புலத்திலும் கூட எமது முன்னோர்களும்,

எமது சமூக முன்னோடிகளும் பிற்படுத்தப்பட்ட சமூக முன்னேற்றத்திற்காகச் சிந்தித்தார்கள்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வு என்பதன் அடிப்படையில் எம்மவர்களின் சிந்தனை செயல் வடிவம் பெற்றது. இலங்கையின் வடபுலத்தின் பல பகுதிகளிலுமிருந்து நமது மூதாதையர் வலுப்படுத்தப்பட்ட அமைப்பு ரீதியாகச் செயற்பட முடிவெடுத்தார்கள். அதன் விளைவாக "ஒடுக்கபட்டோர் சங்கத்தின் வளர்ச்சிக்கட்டமாக 1942ம் ஆண்டு உருவாக்கப்பட்ட நிறுவன மயப்பட்ட சமூக விடுதலை அமைப்பே அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை ஆகும்.

வடபுலத்தின் சமூக ஒடுக்கு முறையானது பாரம்பரியமான பொருளாதார முறையோடு கட்டுப்பட்டிருந்தமையால் பொருளாதார விடுதலை வாயிலாகச் சமூக ஒடுக்கு முறையிலிருந்து விடுதலை பெறமுடியும் என்ற கருத்தும் அதற்கான செயல் வடிவமும் மேற்படி மகாசபையால் முன்னெடுக்கப்பட்டது. கிராமம் சார் ஒடுக்கு முறைகளை முறியடிப்பதற்கு இடதுசாரிக் கருத்தியலே வலிதானது என மேற்படி மகாசபை கண்டறிந்து பின்பற்றியது. இந்நிலையில் பதினைந்து ஆண்டுகாலச் செயற்பாட்டின் பின்னர் 1957ம் ஆண்டு சமூக சிந்தனையாளர் M.C சுப்பிரமணியம் அவர்களுக்கு அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் தலைமைப் பொறுப்பு வழங்கப்பட்டது. அவரது தலைமைப் பொறுப்பிலிருந்து அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபைக்கு புதிய விசைச்சக்தி ஊட்டப்பட்டு "ஒடுக்கப்பட்டோரின் வீரியம்" என்ற எண்ணக்கரு வளர்க்கப்படலாயிற்று.

ஒடுக்கப்பட்டோரின் வீரியமானது ஒடுக்கப்பட்ட மக்களின் ஒற்றுமை உறுதிப்பாங்கு மற்றும் சாதியத்தை உள்ளடக்கிய வர்க்க நிலையான போர் உந்தல் என்பனவற்றின் அடிப்படையிலே உரமூட்டி, வளமூட்டியவர்களால் வளர்க்கப்பட்டது. ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்கையிலே ஏற்பட்ட தொடர்ச்சியான மேம்பாட்டின் ஊடாக வடபகுதி, குறிப்பாக யாழ்பாணச் சமூக மாற்றத்திற்கான தேவையை ஊக்குவித்தல், சமூகத்தின் நோக்கு தானாகவே மாறாதெனவும் அது மாற்றப்பட வேண்டும் என்பதற்கான உணர்வுகளைப் புலப்படுத்தல் சமத்துவம் என்ற ஆழ்ந்த எண்ணக்கருவை நடைமுறையிலும் அறிமுறையிலும் ஏற்படுத்தல், ஒடுக்கப்பட்டோரின் பாதுகாப்பிற்கான செயற்பாடுகளை வலுப்படுத்தல் போன்ற தலைமைத்துவ ஆளுமைகளூடாகப் பல்வேறு பரிமானங்களைக் கொண்ட அமரர் எம்.சி அவர்களுடைய தலைமைத்துவப் பண்புகள் வெளிகாட்டப்பட்டன.

இலங்கையின் வரலாற்றிலே தமிழர்கள் என்போர் மேலாதிக்க சக்தியினரான உயர் சாதியினர் எனக் கருதுபவர்கள் மட்டும் தான் என்பது மரபு ரீதியாக அவர்களால் பின்பற்றப்படும் நடைமுறையாக இருந்தது. அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட சிறுபான்மைத் தமிழர்கள் இலங்கைத் தமிழர் என்ற வரிசையில் வைத்து எண்ணப்படவில்லை மதிக்கப்படவுமில்லை. மனித உருவெடுத்து ஏதோ தமிழ்மொழியைப் பேசுகின்ற விலங்குகளாகவே நடாத்தப்பட்டார்கள் அவர்களுக்கும் மனவிருப்பங்கள் அபிலாசைகள் உயரிய எண்ணங்கள் உண்டு. என்பவை மட்டுமல்ல அவர்களை மனிதவர்க்கம் என்றுகூட உயர்சாதியினர் எனத் தம்மைக் கூறுகின்ற மேட்டுக்குடியினர் நினைக்கவில்லை இந்த நிலைமை மாறவேண்டும் மாற்றப்பட வேண்டும் என அமரர்

M.C சுப்பிரமணியம் அவர்களும் சமூக விடுதலையை உயிரினும் மேலாக மதித்து அவருடன் மிக நெருக்கமாக செயற்பட மகாசபை அங்கத்தவர்களும் வீறுகொண்டெழுந்து வலியுறுத்தினர்.

மகாசபைத் தலைவரான M.C சுப்பிரமணியம் அவர்கள் சமூக விடுதலைப் போராட்டத்தைப் பல பிரிவுகளாகவும் பல வடிவங்களாகவும் நடாத்த வழிகாட்டினார். மேலும் தமது போராட்டங்கள் செயற்பாடுகளிற்கு இடதுசாரிகளினது இறுக்கமான ஆதரவையும் தென்பகுதி அரசியல் வாதிகளினது தொடர்பு மற்றும் ஆதரவு உதவிகளையும் நுட்பமான தொடர்பாடல்களின் மூலம் பெற்றுக் கொண்டார்.

அதற்காகத் தென்பகுதி அரசியல் வானில் பிரகாசித்த அக்கால மந்திரிகளான பீற்றர்கெனமன், S.W.R.D பண்டாரநாயக்கா, W. தகநாயக்கா, ஏ.பி.டி. சொய்சா, துடாவை, சிறிமாவோ பண்டாரநாயக்கா போன்றவர்கள் பெரும்பான்மைத் தமிழர்களின் பலத்த எதிர்ப்பின் மத்தியிலும் சிறுபான்மைத் தமிழர் மகாசபைச் செயற்பாடுகளுக்கு ஆதரவளித்தனர். சிங்கள அரசியல் வாதிகளை எதிர்த்து, தமிழ் அரசியல் வாதிகளுக்கும் மேட்டுக்குடியினருக்கும் எம்.சி அவர்கள் தக்க பதிலடி கொடுத்தார். பொருளாதாரம் மற்றும் அரசியல் ஆதரவு அற்ற சிறுபான்மைத் தமிழர்கள் தமது வாழ்வியற் தேவைகளை நிறைவு செய்வதற்கு முடியாது. எனவே சிறுபான்மைத் தமிழர்கள் அரசாங்க உதவியைப் பெறுவது நியாயமானதே என வாதிட்டு நிலைநாட்டினார்.

எம்.சி அவர்கள் சமூக ரீதியாக நிண்டகாலமாக மறுக்கப்பட்டிருந்த தேநீர்க் கடைப்பிரவேசம், சிகை அலங்கரிப்பு நிலையப் பிரவேசம் சலவையகப்பிரவேசம், ஆலயப்பிரவேசம் போன்றவற்றில் உயிரைத் துச்சமாக மதித்து செயற்பட்டார்கள். இத்தகைய போராட்டங்களை முன்னெடுத்த போது சத்தியாக்கிரகம் உட்படப் பல முயற்சிகளைச் செய்தார்.

எம்.சி அவர்கள் தமது இலக்கினை அடைவதற்காகச் சமூக எதிராளிகளுடன் உரையாடித் தமக்கு வேண்டியதைப் பெற்றார். எதிராளிகளைப் பிரித்தாளுகை செய்தும், அவர்களுக்கு வேண்டியதைக் கொடுத்தும் சில சந்தர்ப்பங்களில் எதிரிகளைத் தண்டித்ததன் மூலம் சாம, பேத, தான, தண்டம் என்ற வகையிலே சமூகப் பெறுமான உயர்விற்கான இலக்கினை அடைந்து கொண்டார்கள். இந்நிலையிலே தேநீர்க்கடைப்பிரவேசம் தொடர்பாக சத்தியாக்கிரக முயற்சி நடவடிக்கைகளை மேற்கொண்டார் அதேவேளை மாநகரசபை முதல்வரைச் சந்தித்து அவரை வசீகரித்து உரையாடி தம்வசம் ஈர்த்துக் கொண்டார்.

இதன் பயனாகக் கண்ணியமான மாநகரசபை முதல்வர் தேநீர்க் கடைகள் அனைத்தும் சிறுபான்மைத் தமிழர்கள் அனைவருக்கும் பாரபட்சம் இன்றி, சமத்துவமாகத் தேநீர் வழங்கப்பட வேண்டும் என்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தமது முடிவினை அறிவித்தார். இல்லை எனின் தேநீர் கடைகளின் உரிமம் ரத்துச் செய்யப்படும் என்றும் தெரிவித்தார். தேநீர்க்கடைப் பிரவேசத்திற்குச் சில சில போராட்டங்களும் இடம்பெற்றிருந்தன ஆயினும் மேயரின் அறிவிப்பைத் தொடர்ந்து மேட்டுக்குடியினரிடையே சலசலப்புக்கள் எதிர்புகள் கிளம்பிய போதிலும் படிப்படியாகத் தேநீர்க்கடைகள் யாழ்ப்பாண நகரப் பகுதியில் அனைவருக்கும்

சமத்துவமாக ஒவ்வொன்றாக வேறுபாடுகள் எதுவுமின்றித் திறக்கப்பட்டன. தொடர்ந்து கிராமபுறங்களிலும் தேநீர் கடைகள் திறந்துவிடப்பட்டன.

இந்த வகையிலே இலங்கையிலே இடம்பெற்ற போராட்டங்களில் அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையினால் முன்னெடுக்கப்பட்ட தேநீர்க்கடைப் பிரவேசப் போராட்டம் முழுமையாக வெற்றி பெற்றதுடன் சிறுபான்மைத் தமிழர்கள் மத்தியிலே புரட்சிகரமான மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது. வெற்றிக் களிப்புடன் தொடர்ந்து செயல்பட்ட அ.இ.சி.த.மகாசபை சிகை அலங்கரிப்பு நிலையம் போராட்டம் மற்றும் சலவையகப் பிரவேசம் போராட்டம் என்பவற்றிலும் தொடர் வெற்றியைப் பெற்று அவற்றில் சமத்துவ நிலைமை ஏற்படுத்தியது எனலாம்.

ஆனால் அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையால் முன்னெடுக்கப்பட்ட இந்து ஆலயங்களிலே உட்பிரவேசித்து வழிபாடியற்றுகின்ற போராட்டமானது ஒரு பகுதி வெற்றியையே பெற்றுக் கொடுத்தது. முன்னர் விளக்கியது போல சாம, பேத, தான தண்டம் என்ற அணுகுமுறையைப் பின்பற்றினார்கள் யாழ்ப்பாணத்திலே சரித்திரப் பிரசித்தி பெற்ற ஆலயங்களின் நற்சிந்தனையுடைய கண்ணியமான ஆலய நிர்வாகங்கள் அதிக பிரச்சனைகள் இன்றிச் சகல மக்களுக்கும் சமத்துவ ஆலய வழிபாட்டிற்குத் திறந்துவிடப்பட்டன. ஆயினும் சில ஆலயங்கள் பலத்த போராட்டங்கள், கலகங்களின் பிற்பாடே திறந்து விடப்பட்டதாக அறிய முடிகிறது.

தற்போதைய சமகாலத்தில் கூட யாழ்மாவட்டத்திலே நூற்றுக்கணக்கான ஆலயங்கள் பிற்படுத்தப்பட்ட பஞ்சமர் மக்களுக்குக் கதவடைப்புகளைச் செய்தே உள்ளன. மேலும் 21ம் நூற்றாண்டிலே கூட சாதியத்தைப் பேணுகின்ற நிலையங்களாக மேற்படி ஆலய நிர்வாகங்கள் செயல்படுகின்றன. ஆயினும் அ.இ.சி.த மகாசபை இத்தகைய ஆலயங்களும் சகலருக்கும் வழிபாட்டிற்குச் சமத்துவமாகத் திறக்கப்பட வேண்டுமென நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

சமரசம் உலாவும் இடங்களில் ஒன்றாக மயானங்கள் பேசப்படுகின்றன ஆனால் யாழ்ப்பாண மாவட்டத்திலே மயானங்களிலே கூட சாதிப்பாகுபாடுகள் பிரதிபலிக்கின்றன. உயர் சாதியினருக்கு மட்டும் ஒரு மயானம் அதற்குச் சமீபத்தில் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு வேறொரு மயானமும் இருக்கிறது. மேலும் சமீபத்திலே பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளின் படி ஒரு மயானத்திலே இரு வேறு தகனக்கொட்டகைகள் வேண்டும் என்ற பிரச்சினையும் இருக்கிறது. ஆனால் இந்தப் பிரதேச அதிகாரி உயர்சாதியினருக்குச் சாதகமாகச் செயற்பட்டார் என்ற குறை ஒடுக்கப்பட்ட மக்களிடையே நிலவுகிறது. இப்பிரச்சினை மேல் அதிகார மட்டங்களுக்குக் கொண்டு செல்லப்பட்ட போதிலும் சமத்துவமான தீர்வுகள் இன்னமும் எட்டப்படவில்லை.

அ.இ.சி.த மகாசபையானது அமரர் எம்.சி அவர்களின் தலைமைத்துவத்திலே ஒடுக்கப்பட்ட மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும் அயராது பாடுபட்டு வந்தது. சமூக மேலாதிக்கவாதிகள் பஞ்சமர் சமூகத்தினரைக் கூறுபோட்டு, குறைந்த ஊதியத்திற்கு அதிக உழைப்புகளைச் சுரண்டினார்கள் பஞ்சமர்கள் அடிமைகள் எனவும் குடிமைகள் எனவும் நடாத்தப்பட்டார்கள்.

மேலும் பஞ்சமர்களில் பெரும்பாலானவர்கள் சீவல் தொழிலைச் செய்பவர்களாவர். இவர்கள் உழைத்து உழைத்து உரமேறிய மேனியராகப் பலர் வருமானம் குறைந்த அடிமட்ட வாழ்க்கையை வாழ்ந்து வந்தார்கள். மேற்படி தொழிலாளர்களின் வருமானத்தை அதிகரிக்கவும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் தலைவர் எம்.சி அவர்கள் அரும்பாடுபட்டார். தென்னிலங்கை இடதுசாரிகளின் உதவியுடன் தெங்கு பனம் பொருள் விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கினார். இந்நடவடிக்கைக்கு அன்னாருடைய பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தின் வகிபாகம் காத்திரமானது எனக் கூறிக்கொள்ளலாம் இவருடைய முயற்சியின் அறுவடையாக மேற்படி தொழிலைச் செய்த மக்கள் குடும்பங்கள் வாழ்வும் வளமும் பெற்று உயர்ந்துள்ளன.

அத்துடன் பஞ்சமர் சமூகங்களிலே படித்த இளைஞர்களுக்கு அரச நியமனங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கும் அரும்பாடுபட்டார். காணியில்லாத பஞ்சமர் சமூகங்களைச் சேர்ந்த ஒடுக்கப்பட்டவர்களுக்கு அரசகாணிகளைப் பங்கீடு செய்து வழங்கச் நடவடிக்கை எடுத்தார் இத்தகைய சமூகம் சார்ந்த அர்ப்பணிப்புமிக்க சேவையினால் வட இலங்கயில் மாத்திரமன்றி முழு இலங்கையிலும் நன்கு அறியப்பட்ட, மதிக்கப்பட்ட சேவையாளராக எம்.சி சுப்பிரமணியம் அவர்கள் பிரகாசித்தார்கள்.

நாடறிந்த சேவையாளன் என்ற மக்கள் தலைவன் M.C சுப்பிரமணியம் அவர்ளை அரசியல் கௌரவமும் அந்தஸ்தும் தேடி வந்தன. அரசியல் அமைப்பில் தேர்தல்கள் ஊடாகத் தெரிவு செய்யப்பட முடியாத மக்கள் குழுமங்களுக்கு நியமனப் பாராளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கும் நடைமுறை இருந்தது. இதன் அடிப்படையில் 1970 ஆம் ஆண்டு உலகின் முதற் பெண் பிரதமர் என்ற சாதனைக்குரிய திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசிலே இடது சாரிகளது ஆதரவுடனும் எம்.சி சுப்பிரமணியம் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார்கள்.

பிற்படுத்தப்பட்ட சமூகங்களை மேல் நிலைக்கு உயர்த்துவதில் தன்னை நாடி வந்த பாராளுமன்ற பதவியை அவர்கள் நன்கு பயன்படுத்தினார்கள் அடிமைகளைப் போல வாழ்ந்த பஞ்சமர்கள் நாட்டை ஆளுகின்ற மன்றத்தின் பிரதிநிதியாக முதல் தடவையாக நம்மவர் முத்திரை பதித்ததையிட்டு அந்தஸ்து ரீதியாகப் பெருமை கொண்டார்கள், நிமிர்வு கொண்டார்கள்.

பஞ்சமர் சமூக முன்னோடியான எம்.சி அவர்கள் எமது சமூகங்களின் கல்விக் கண்கள் திறக்கப்பட வேண்டும் எனச் சிந்தித்தார் அச்சிந்தனைக்குச் செயல் வடிவமும் கொடுத்தார் அக்காலத்தில் இருந்த கல்விச் சாலைகளில் பஞ்சமர் சமூக மாணவர்கள் கல்விக் கொள்கைக்கு ஏற்ப உளவியல் தாக்கமின்றிக் கல்வி கற்க முடியாத பாரபட்சமான சூழ்நிலை இருந்தது. மேட்டுக் குடியினரின் பிள்ளைகள் வகுப்பிலே கதிரையில் இருந்து படித்தார்கள் பஞ்சமர் சமூக பிள்ளைகள் நிலத்திலே இருந்து படிக்க வேண்டிய அடக்கு முறை இருந்தது. அவ்வாறாக பலவிதமான கல்வி ஒடுக்கு முறைகளுக்குத் தீர்வு காணப்படுவதற்காகச் சிறுபான்மைத் தமிழ்ப் பிள்ளைகள் படிப்பதற்கென அனேக அரசினர் பாடசாலைகளை கிராமங்கள் தோறும் உருவாக்கினார்.

இவற்றினூடாகப் பஞ்சமர்களின் கல்வி மேம்பாடு அபிவிருத்தி அடைய அக்காலக் கல்வி அமைச்சர் W. தகநாயக்கா அவர்களின் சிபார்சுகள் காரணமாயின.

தலைவர் M.C சுப்பிரமணியம் அவர்கள் தங்களது முயற்சியால் உருவாக்கப்பட்ட பாடசாலைகளுக்குப் பஞ்சமர் சமூகங்களில் கல்வித்தகமை கொண்டிருந்த 150 இற்கு மேற்பட்ட ஆசிரிய மாணவர்கள் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் உள்ளீர்க்கப்பட்டு ஆசிரியர்களாக வெளியேறினார்கள். யாழ்பாண மாவட்டக் கல்வி வரலாற்றிலே ஒரே தடவையில் நூற்றுக்கணக்கான பஞ்சமர் சமூகத்தவர்கள் ஆசிரியர் அந்தஸ்தைப் பெற்றதைச் சகித்துக் கொள்ள முடியாத மேல்தட்டு உறுப்பினர்கள் சஞ்சலம் அடைந்தார்கள். திறந்த கல்வி மரபும் பண்பாடும் நிறைந்த யாழ்மாவட்டத்திலே இவ்வாறாக பஞ்சமர் தொகையாக ஆசிரியர் நியமனம் பெற்றால் கல்வித்தரம், மரபு என்னவாகும். என ஆட்சி மன்றங்களிலும் பேசிக் கொண்டதாக அறிய முடிந்தது. அமரர் அவர்களது தலைமைத்துவப் பண்பினால் உந்தப்பட்ட மகாசபையினது செயற்பாடுகள் சிறுபான்மைத் தமிழர்களின் கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்களில் கூட மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது. என்றால் மிகையாகாது.

இவ்வாறாக எம்.சி சுப்பிரமணியம் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட உயர்வுகள் உந்நத நிலைகள் தொடந்து நீடிக்க முடியவில்லை. எமது நாட்டிலே உருவான அசாதாரண சூழலில் பஞ்சமர் மக்களது இயல்பு வாழ்கையையும் வெகுவாகப் பாதிப்புற்றது. பல ஆயிரக்கணக்கான பஞ்சமர் இளைஞர்களும் இறந்தார்கள். இம் மக்கள் அதிக வருமானம் இல்லாதவர்களாகவும் நில, புலம் போன்ற பௌதீக வளங்கள் இல்லாதவர்களாகவும் சிதைவுற்றனர். சின்னா பின்னப்படுத்தப்பட்ட இவர்களது இயல்பு வாழ்க்கை மீளவும் உருவாக்கப்படுவதென்பது மிகவும் சிரமமானதாகவே உள்ளது. அனேகா் இன்னமும் முட்கம்பி வேலிகளுக்கு உள்ளும் அகதி முகாம்களிலும் வைக்கப்பட்டுள்ளனர். இம்மக்களைப் பேசு பொருளாக்கி, அரசியல் அதிகாரம் பெற்றவர்கள் கூட இம்மக்கள் தொடர்பில் பாராமுகமாக இருப்பது மிகவும் பரிதாபத்திற்குரிய வேதனை மட்டுமன்றி கொடிய தூரோகச் செயலுமாகும்.

இக்காலத்தில் கூட அசாதாரண சூழ்நிலைக்குப் பின்னர் இயல்பு நிலை உருவாகியுள்ளது எனப் பொதுவாக கூறப்படுகின்ற போதிலும் தற்போது சாதியக் கெடுபிடிகள் முனைப்புடன் அதிகரித்துக் காணப்படுகின்றன. இவற்றைச் சுருக்கமாக குறிப்பிடுகின்றேன்.

- பஞ்சமர் சமூகத்தை சேர்ந்த திறமைசாலிகளாகவும் தகுதி வாய்ந்தவர்களாகவும் இருக்கும் அதிபர்கள் ஆசிரியர்கள் போன்றோரை மேட்டுக்குடியினர் மரபு சார்ந்த உயர்ந்த பாடசாலைகள் சிலவற்றிற்கு விண்ணப்பிக்க கூடாதென அழுத்தங்களையும் மிரட்டல்களையும் விடுக்கின்றனர்.

- உயர்ந்த பதவிகளில் இருக்கும் பஞ்சமர்களைப் பொய்யான குற்றச்சாட்டுகளைச் சுமத்தி (மதுமாது, நிதிமோசடி) அவர்களது பதவிகளை, பொறுப்புக்களை மாற்றுகின்றார்கள், இறக்குகின்றார்கள்

- பஞ்சமர்களுக்குரிய வெளிப்படையான சமூக அநீதியான ஆலயப் பிரவேசமின்மை நூற்றுக்கணக்கான ஆலயங்களில் இருந்தும் சமூகப் பெறுமான

✐இழிவை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில் அதியுயர் நிர்வாக அதிகாரிகள் கூட தற்போது உண்மைக்குப் புறம்பாக எதுவித பாகுபாடும் இல்லையெனப், பாதிக்கப்பட்ட மகாசபை பிரதிநிதிகளை மிரட்டுகின்றார்கள்.

✐ மகளிர் கல்லூரி ஒன்றில் அதிபராகப் பஞ்சமர் சமூகத்தை சேர்ந்த ஒருவர் நியமிக்கப்பட்டார் அதனை ஏற்காத மேலாதிக்க சக்திகள் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து சூழ்ச்சி செய்து அவர் விலக்கப்பட்டார் பாதிக்கப்பட்ட அதிபர் உயர் நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து பின்னர் குறுகிய காலத்திற்கு மட்டும் மீண்டும் அதிபராக இருக்கக் கூடியதாக தீர்ப்பு வழங்கப்பட்டு பின்னர் ஓய்வு பெற்றார்.

✐ பல்கலைக்கழகத்திலே சமூக ரீதியாகப் பல அநீதிகள் இழைக்கப்பட்டன. ஒரே போட்டிப்பரீட்சையில் குறைந்த புள்ளிகள் பெற்றவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டது. அதே பரீட்சையில் 13 புள்ளிகள் கூடுதலாக பெற்ற பஞ்சமர் சமூகத்தை சேர்ந்த ஒருவருக்கு (அவருக்கு) மட்டும் பல்கழைக்கழக பட்டத்திற்கு பூச்சியம் புள்ளிகள் வழங்கப்பட்டன. ஏன் அவருடைய பட்டத்திற்குப் பூச்சியம் புள்ளிகள் வழங்கப்பட்டது என விசாரனையில் வினாவிய போது தெரிவுக் குழுவினர் தாம் அசண்டையீனமாக இருந்ததாக எழுத்து மூலம் வழங்கியுள்ளார்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு அங்கே அதிகமான பழிவாங்கல்கள் இடம் பெற்றுள்ளன இவருக்கு இன்னமும் எதுவித தீர்வுகளும் வழங்கப்படவில்லை.

✐ பஞ்சமர் சமூகத்தவர்களை எல்லா வழிகளிலும் வஞ்சிப்பவர்களாகவும் பழிவாங்குபவராகவும் முன்னணியில் நிற்பவர்களாக மேட்டுக்குடியை சேர்ந்த உயர் அதிகாரிகளும் கல்வி மான்களுமே விளங்குகின்றனர்.

ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஏற்படுகின்ற மேற்கூறப்பட்ட அதிகரித்துச் செல்லும் அநீதிகளையும் பழிவாங்கல்களையும் சீர் செய்வதற்கு அநேக எம்.சி.சுப்பிரமணியங்கள் தோன்ற வேண்டும் அதுவரை எம்.சி விட்டுச் சென்ற வெற்றிடம் வெற்றிடமாகவே இருக்கும்.

வெற்றி கண்ட சமூக விடுதலைப் போராட்ட பிரிவுகளிலும் முற்றுப்பெறாதா சமூகவிடுதலைப் பிரிவுகளிலும் எம்.சி அவர்களுடன் தோளோடு தோள் கொடுத்து தம்மை அர்ப்பணித்தும் ஆகுதியாக்கியவர்களாகவும் பின்வருவோர் அறியப்படுகின்றனர்.

திருவாளர்கள் யோ.வெல்போல், இ.வே.செல்வரத்தினம், வேதநாயகம் போல், க.பசுபதி சி. வல்லிபுரம், சி.ஈ. குணரத்தினம், எஸ்.எம். மாட்டீன், எம். தம்பி ஐயா, கே.டானியல், என்.கே.இரகுநாதன், வ.பொன்னம்பலம், எஸ்.பொன்னுத்துரை, டொமினிக்ஜீவா, A.B.இராசேந்திரா SR.ஜேக்கப், D.ஜேம்ஸ், ஆ.ம.செல்லத்துரை, G.நல்லையா, வீ.P. கணபதிப்பிள்ளை, J.D. ஆசிர்வாதம், K.D மாணிக்கம், க.முருகேசு, ஆ.கிருஸ்ணபிள்ளை, V.J.அரியகுட்டி, K.இராசையா, M.ஐயாத்துரை, S.அப்புத்துரை, ஆ.ஆறுமுகம், S.சந்தியாப்பிள்ளை, K.தங்கவடிவேல், K.செல்வம், S.செல்லையா, S.இராசையா, K.தவசிப்பிள்ளை, G.மகாலிங்கம், K.துரைசிங்கம், V.சின்னப்பு, K.நடராசா, M.V. முருகேசு, M.S.அலெக்ஸாண்டர், க.வைரமுத்து, சி.சிற்றம்பலம்காந்தி P.J.அன்ரனி, வதிரி சூரனார், V.S. போல், S.T. நாகரத்தினம், க. நல்லதம்பி, சிவகுரு

G.M.பொன்னுத்துரை, ஐயம்பிள்ளை, சிவசம்பு, வேலர், இராசகோபால், E.மாசிலாமணி, கோபாலன், M.செல்லத்தம்பி, பாலசிங்கம் ச. வைரமுத்து உள்ளிட்ட பல முன்னோடிகள் M.C அவர்களுடன் இணைந்து தம்மை அர்ப்பணித்து செயற்பட்டார்கள்

இவர்களில் பலர் மேட்டுக்குடியினரால் தாக்கப்பட்டார்கள், காயப்படுத்தப் பட்டார்கள், கொல்லப்பட்டார்கள். ஆயினும் அவர்கள் தொடர்ந்தும் பஞ்சமர் மேம்பாட்டின் பல முனைகளிலும் முனைப்புடன் செயலாற்றினார்கள். தாக்குதலை மேற்கொண்டு காயப்படுத்தியவர்கள் ஒருவேளை அதனை மறந்துவிடலாம். ஆனால் காயப்பட்டவர்கள் தமது உள்ளத்தினதும் உடலினதும் வடுக்களையும் அதனால் ஏற்பட்ட வலிகளையும் இலகுவிலே மறக்கமாட்டார்கள். அதற்கு எமது சமூக முன்னோடிகள் விதிவிலக்காக, புறநடையாக இருக்கவில்லை மாறாக அவை அவர்களின் செயற்பாட்டுத்திறனில் புதியதோர் விசையை, உந்துசக்தியை ஏற்படுத்தியது. அவர்களின் கல்விச்சிந்தனை பிறபடுத்தப்பட்ட ஓர சமூகம் தன்னை உயர்த்திக் கொள்ள வேண்டுமானால் அதற்கு மிகச்சிறந்த ஆயுதம் கல்வி என்பது அக்கால இளைஞர்களுக்கு புகுத்தப்பட்டது. இதன் பிரதிபலிப்பாக, M.C.அவர்களின் அரிச்சுவட்டைப் பின்பற்றி உதயமான சிறுபான்மைத் தமிழர் விடுதலை முன்னணியும் அதன் தலைவர் சீ.ஈ.குணரத்தினம், M.S. அலக்சாண்டர், மு.செல்லத்துரை, இ.மாசிலாமணி, கோபாலன், எம்.செல்லத்தம்பி (அதிபர்) சி.பாலசிங்கம் போன்றோர் எமது கல்வி கற்ற இளைஞர்கள் அரச உத்தியோகம் பெற உள்ளூர் மகாசபைக் குழுக்கள் அமைத்து தகவல்களைப் பெற்றார்கள். இதன் பிரகாரம் பலநூறு இளைஞர்கள், யுவதிகள் அரச உத்தியோகம் பெறுவதற்குக் காரணர் ஆயினர். அத்துடன் கல்வி ஆணைக்குழுவிற்கும் பல்கலைக்கழக ஆணைக்குழுவிற்கும் சிபார்சுகளைச் செய்தனர். இவையூடாகாப் பல்வேறு கிராமங்களிலும் இளைஞர் மத்தியிலே மறுமலர்ச்சி ஏற்பட்டது. இத்தகைய மறுமலர்ச்சியின் பிரதிபலிப்பாக M.C இன் தணியாத கல்வித் தாகத்திற்கான தீர்வின் பொற்காலத்தை தரிசிக்க முடிந்தது.

தீர்மானம் மிக்க, சமூக மேம்பாட்டுச் சாதனைகளின் மத்தியிலேகூட, மேலாதிக்கசக்திகள் நன்கு திட்டமிட்ட கபடத்தனமான சதிகளைத் தற்போதும் அரங்கேற்றிக் கொண்டிருக்கிறார்கள். எம்மவரில் சிலர் மேற்படி சதிகளுக்கு எதிராக முகங் கொடுக்கிறார்கள். இவற்றிற்கு முகம் கொடுக்கத் திராணியற்றவர்கள் முதுகெலும்பில்லாத வாய்ச்சொல் வீரர்களாக இருப்பதுடன் எப்படியாவது வாழ்ந்துவிட்டுப் போவோம் என்ற விதமாக காற்று வீசுகின்ற திசையிலே சாய்பவர்களாகவும் ஒதுங்கிப்போகின்றவர்களாகவும் காணப்படுகின்றனர். இவர்கள் தமது கௌரவத்தையும் பொறுப்பு வாய்ந்த தமது உயர் பதவிகள் மற்றும் வேலைத்தலங்களையும் கூட நவீன இடக்கு முடக்கான நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக, வாலைச்சுருட்டித் தமது முறையற்ற விசுவாசங்களைத் தெரிவிக்கின்றன்றனர். அத்துடன் M.C அவர்களின் பாதையிலே பயணிக்கின்றவர்களையும் தமது இயலாமையின் வெளிப்பாடாக புறங்கூறுவதுடன்

M.C இன் செயற்பாடுகளும், சாதனைகளும் மறுக்கப்படுகின்றமையும் திசை திருப்பபபடுகின்றமையும் 21ம் நூற்றாண்டின் உச்சமான வேதனையாகவும் துரோகச் செயலாகவும் பார்க்கப்படுகிறது.

போற்றுவார் போற்றட்டும் புழுதிவாரித் தூற்றுவார் தூற்றட்டும் என்ற வகையிலே சமூகப் பெறுமான உயர்விற்குப் பாடுபட்ட M.C அவர்கள் தனக்காகவோ தனது குடும்பத்திற்காகவோ பணத்தைச் சம்பாதிக்கும் நோக்கம் கொண்டிருக்கவில்லை. இதற்கு உதாரணமாக ஒரு சிறு சம்பவத்தைக் குறிப்பிட முடியும். ஏழு பிள்ளைகளைப் பெற்றெடுத்த பின்னரும் கூட, தமது முகச்சவரம் செய்வதற்கு தனது சகோதரியான விசாலாட்சி அவருக்கு செல்லமாக அடித்துவிட்டு பணத்தைக் கொடுப்பாராம்.

இந்த வகையிலே M.C அவர்களுக்கு மட்டுமன்றி அவராலே உரிமை பெற்றுக் கொடுக்கப்பட்ட பஞ்சமர் சமூகங்களும் பிள்ளைப் பேறில்லாத விசாலாட்சி அம்மையாருக்கும் அவர் தம் கணவர் ஐயம்பிள்ளை அவர்களுக்கும் M.C குடும்பத்தைக் கூட காப்பாற்றிய ஜீவனோக மரக்காலைக்கும் தலைமுறை தலைமுறையாக நன்றி செலுத்த வேண்டிய தார்மிகக் கடமை உண்டு.

M.C என்றொரு ஆளுமை 1917 இல் தோன்றியிராதிருந்தால் இன்றும் கூட அன்றுபோல் அடிமைகளைப் போலவும் நடைபிணங்களாகவும் பஞ்சமர் சமூகங்கள் தமது முகமிழந்து வாழ்ந்திருப்பார்கள். M.C அவர்களால் வழிநடாத்தப்பட்டு முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களான தேநீர்க் கடைப்பிரவேசம், சிகையலங்கரிப்பு நிலையப் பிரவேசம், சலவையகப் பிரவேசம் என்பன பூரணத்துவமான நூறுவீத வெற்றியைப் பெற்றுக் கொடுத்தன. ஆயினும் ஆலயப்பிரவேசம் மற்றும் கல்வியுயர்வு, வேலைவாய்ப்பு, சமூகப் பெறுமான உயர்வு என்பவற்றிலே கற்களும் முட்களும் நிறைந்த பல கரடுமுரடான பாதைகளைக் கடக்க வேண்டியுள்ளது என்பதை கவலையுடன் ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

எனவே சமூக ஏற்றத்தாழ்வுகளையும் தொடர்ந்தும் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பேணப்படுகின்ற சாதியமைப்பு முறைகளுக்கும் எதிராகத் தேசிய, சர்வதேச முற்போக்கு ஜனநாயக, மானுடநேய சக்திகளுடன் சேர்ந்து சமூக, பொருளாதார, அரசியல், வாழ்வியல் மட்டங்களில் தொடர்ந்தும் திடவுறுதியுடன் செயற்பட்டு எமது சமூகப் பெறுமானத்தைச் சமப்படுத்த முற்படுவதே M.C அவர்களுக்கும் அவருடன் ஒத்திசைவாக இன்பத்திலும் துன்பத்திலும் சேர்ந்தியங்கிய சமூக முன்னோடிகளுக்கும் நாம் செலுத்தக்கூடிய நன்றிக்கூறும் அஞ்சலியுமாகும். நூற்றாண்டு விழா நாயகன் M.C அவர்களின் மற்றும் பயனாளிகளின் செயற்பாடுகளின் அறுவடையான பொருளாதார அமைப்புக்கள் மற்றும் பயனாளிகள் கல்வி நிலையங்கள் அவர்களாலே உத்தியோகங்கள் பெற்றுக்கொண்ட நல்ல உள்ளங்களும் அவர்களின் வாரிசுகளும் தமிழ் கூறும் நல்லுலகம் இருக்கும் வரை அவருடைய நாமத்தை என்றும் நன்றியுணர்வுடன் உச்சரித்துக் கொண்டே இருக்கும்.

## எம். சி. என்ற நன்றிக்குரிய நாயகர்



*மலர்குழு தலைவர்-*
**முத்துக்குமாரு பாலசுப்பிரமணியம்**
*ஓய்வுநிலை அதிபர்*
*முன்னாள் யாழ்பல்கலைக்கழகப்*
*பேரவை உறுப்பினர்.*

மண்ணதில் உலவும் எண்ணில் பல்லுயிர்கள் அறிவுசார் அளவுகோல் அடிப்படையில் ஆறென வெவ்வேறாய்க் கூறுபடுத்தப்படுகின்றன. மனம் படைத்த மனித இனம் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் அறிவுகளோடு பகுத்தறியும் அறிவதனையும் தொகுத்த வகையில் ஆறு அறிவு உடையதென வகுத்தமைக்கப்படுகின்றது. எது எவ்வாறாயினும் பிறந்ததன் பயனைச் சிறந்தொரு முறையில், நிறைந்தொரு நிலையில் போற்றிட ஆற்றி மறைந்தும் மறையாது உறைந்து கொள்வதாம் மாட்சிக்கு உட்பட்டோர் காலத்தால் அழியாத சாலச் சிறந்த சான்றோராய் நிலைத்து நிற்கின்றார்கள். அந்த வகையிலே ஒப்பரும் உயர்வில், செப்பரும் சீரிய செயலால் சிறப்புற்று, நன்றிக்குரிய நாயகராய், பெருமைக்குரிய பெரியோராய்ப் பேசப்படுபவர் எம்.சி. சுப்பிரமணியம் என்றால் அதில் மாற்றுக்கருத்துக்கள் ஏற்பட இடமில்லை.

பன்முகச் சிறப்பினைத் தன்னுயர் செயலிலே நாட்டிக்காட்டி, இன்னமுமே அவர் நம்மவரால் ஏற்றிப்போற்றிச் சாற்றப்படுகின்றார். அரசியல் வானிலே அனைவரது அவதானத்திற்குரிய ஒருவராகின்றார். பொருளாதாரச் சிந்தனைப்போக்கிலே தூர நோக்கினராகத் துலங்கி நிற்கின்றார். சமூக நிலையிலே மாண்புசார் மாற்றமதை ஏற்ற இணையிலா ஏற்றமதை ஏற்படுத்திய ஒருவராக உலகோரால் உயர்த்தி உரைக்கப்படுகின்றார்.

மாற்றமதை நயந்தேற்ற மாட்சிக்குரிய மாமனிதரான எம்.சி. ஏற்றமும் இறக்கமுமாகித் தோற்றமுற்றிருக்கும் ஒரு சமுதாயச் சூழலை அறவே வெறுத்தார். துள்ளித்திரியும் பள்ளிப்பிள்ளைப் பருவத்திலே சாதிதனைச் சாடி, சமத்துவத்தைத் தேடி,நீதிதனை நாடி ஓடிநின்ற பாங்கதனை, அரியாசனம் ஏறி அமர்ந்தோர் போன்று இருந்தோர்முன் சரியாசனம் வகுத்தமைத்து அமர்ந்ததன்மூலம் அவதானிக்கத்தக்கதாக உள்ளது. உலக மாந்தரெல்லாம் இறைவனின் படைப்பென்று ஆன்மிக உலகு நிறையவே ஒருபுறம் பறையறைந்து நிற்கின்றது. ஆனால் இறைவன் உறையும் நிறைவிடமென நினைக்கப்படும் ஆலயங்களிலே பேதங்களும் வாதங்களும் சாத்தனின் வேதங்களாய்

ஓதும் விதத்தில் விளங்கிய அன்றைய நிலையிலே, உணவகங்களிலே, பிற பொது இடங்களிலே, மயிர்புனை கூடங்களிலே, சலவைத் தொழிலகங்களிலே, பிற பொது இடங்களிலே, ஏற்றமுற்றோர், இறக்கமுற்றோர் என்று இருவேறு தரத்திலே பிரித்துச் சாற்றப்பட்ட சந்தர்ப்பத்திலே மாற்றமதை ஏற்புற நயந்து, தான்சார்ந்த சமூகத்திற்கான ஏற்றம்மிக்க எண்ணிலாக் கருமங்களை ஆற்றி, சாதனைச் செம்மலாய், சரித்திர நாயகனாய் மிளிர்ந்து நின்றார்.

தான்சார்ந்த அரசியலை, சமூக, பொருளாதார மாற்றங்கள் தோற்றம்பெறும் வகையிலே பாங்குறப் பயன்படுத்தி நின்றார். 1957ம் ஆண்டின் சமூகக் குறைபாடுகள் ஒழிப்புச் சட்டமானது செயற்திறனற்ற ஏட்டுச் சுரைக்காயாகவே காணப்பட்டது. அந்நிலையில் இடதுசாரி அரசியலைப் பயன்படுத்தி 1971ஆம் ஆண்டு சமூகக் குறைபாடுகள் ஒழிப்புத் திருத்தச் சட்டத்தினைக் கொண்டுவந்து, மாற்றத்தினைச் சட்ட வலுவோடு ஏற்படுத்துவதற்கான நிலையினை வகுத்தது அவரது மதிநுட்பத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு, சாதனைக்கோர் வலுவுள்ள சான்றாதாரம். உண்மையிலே எம்மத்தியில் உயர்ந்தோர் என்றுஉரைக்கப்படும் பெரும்பான்மை மாந்தர்களுக்கு மனமாற்றம் வந்ததென்று கூறுவதைவிட வலுவுள்ள சட்டத்தால் வந்த தடுமாற்றம் அடுத்த நிலைமாற்றமே என்றால் அதில் இருவேறு கருத்துக்கள் இல்லை எனலாம். இந் நிலைக்குக் காரணம் காற்றுள்ளபோது தூற்றிக்கொண்ட எம். சி. யின் போற்றத்தக்க ஏற்றம் மிக்க செயலென்றே யான் கூறுவேன்.

தாழ்ந்த பொருளாதாரம் கொண்ட சமுதாயம் வீழ்ந்து மண்ணோடு மண்ணாய் மறைந்திடாதிருக்க அன்னவர் ஆற்றிய பன்னரும் சேவைகளை என்னென்பேன்! தனது சமூகத்தின் தொழில்சார் சங்கத்தின் செயலாளராகச் செயற்பட்டு செப்பனிட்ட செயற்பாடுகள், பல்வேறு துறைசார் நிலைகளில் ஏற்படுத்திய வேலைவாய்ப்புக்கள், கௌரவப் பதவிகள் எல்லாம் அன்னவர் தூரநோக்குடன் புரிந்த சாதனைகள் என்றே சொல்வேன்.

அறியாமை இருளிலே அமிழ்ந்திருந்த ஒரு சமுதாயத்திற்கு அறிவொளி அளிப்பது, பன்முக வளர்ச்சியை ஏற்படுத்துமோர் அறிவுசார் செயற்பாடாகின்றது. தாழ்வுற்று, வறுமை மிஞ்சி, தாழ்த்தப்பட்ட வகையில் விடுதலையற்றுக் கிடந்த சமுதாயம் பாழ்பட்டழியாது பாதுகாக்கப்படுவதற்கு ஏற்றதோர் அத்திவாரம் அமைக்கப்படுதல் வேண்டும். அறிவார்ந்த ஒரு சமுதாயத்திலேதான் விழிப்புணர்வு என்பது ஏற்படமுடியும். ஆகவே தாழ்த்தப்பட்டவர்கள் பாடசாலைகளிலே புறக்கணிக்கப்பட்டிருந்த அன்றைய சூழலிலே அவர்களுக்கென்றே ஆக்கிய 15வரையான அரசினர் பள்ளிகளிலே சுதந்திர உணர்வோடு, தமது ஆற்றலை வெளிப்படுத்தும் வாய்ப்போடு தாழ்த்தப்பட்டோரின் பிள்ளைகள் கற்றுயர்வதறகுறு ஏற்றதோர் ஏற்றம்மிக்க சூழல் ஏற்படுத்தப்பட்டது. இப்பள்ளிகளிலே கற்பிப்பதற்கெனத் தாழ்த்தப்பட்டவர் மத்தியிலே இருந்த உரிய தராதரம் பெற்றவர்கள் ஆசிரியர்களாக அமர்த்தப்பட்டனர். ஒருபுறம் மாணவருக்கேற்ற கல்விவாய்ப்பு மறுபுறம் பிற்படுத்தப்பட்டோருக்கான வேலைவாய்ப்பு. அந்தவகையிலே அறியாமை அகல, வறுமையும் சிறுமையும் மறைய, எதிர்காலச் சமுதாயமானது வளர்ச்சிப்பாதையிலே ஏறுகொண்டு வீறுநடை போட எம்.சி.என்ற இணையிலாத் தலைவர் ஆற்றிய அரும்பணிதனை அறியாதவர் அறியாதாரே.

இன்று மேற்குறித்த பள்ளிகளால் பல் பயனுற்று, சமுதாயம் என்ற சங்கிலியிலே பிரகாசிக்கின்ற மணிகளாக ஒளிரும் பலர் பெற்றதன் பயனைப் பற்றுயர் நிலையில் முற்றுமாய் மொழிந்து மகிழ்வர். இன்னொரு சிலர் அன்னவர் ஆற்றிய இன்னரும் சேவையைச் சொல்லிடத் தயங்கி, தம்மை, தம் சமூகத்தை மறைத்தவாறு நன்றிதனைக் கொன்றவாறு கூறும் கூற்றுக்கள் எமக்கு வெட்கமும் வேதனையும் தருவதாகின்றன.

இத்தகையோரிற் சிலர் மற்றவரால் இனங்காணப்பட்டுச் சமுதாயத்தின் பேரில் ஒதுக்கப்படுகின்ற நிலை அமையும்போது உறவுகளைத்தேடி, நாடி, கூடும் நிலை ஏற்படுவதைப் பார்க்கும்போது எமக்குப் பரிதாபமேற்படுவதுண்டு. உண்மையிலே எம்.சி. என்ற பெருமகன் தனது மகாசபைத் தலைமைப் பதவியை, பாராளுமன்ற உறுப்பினர் என்ற உயர்ந்த நிலையினைத் தான் சார்ந்த சமுதாயத்தின் அறிவாற்றல், பொருளாதார மேம்பாடு போன்றவற்றிற்குப பயன்படுத்தினாரேயன்றி, இவற்றிற்கு மேலாக அனைத்துச் சமுதாயங்களுக்குமான பொதுப்பணிகளைப் புரிந்தாரேயன்றிச் சுயநல நோக்கோடு எந்தச் சந்தர்ப்பத்திலும் செயற்பட்டவரல்லர். காட்சிக்கெளிய மாட்சி, கடுஞ்சொல்லற்ற தாழ்மைப்பண்பு உள்ள அவரை அனைவரும் அணுகிப் பயனுற்ற பாங்கதனை உள்ளுவோர் யாவரும் உவகையுறுவர்.

கல்வியின் பயன் அறிவு, அறிவின் பயன் ஒழுக்கம், அறிவறிந்த அறிஞர் பண்பட்டு நிற்கும் போதுதான் சமுதாயத்திற்குப் பயன்பட்டு வாழ்வர். அரமெனக் கூரிய அறிவிருந்தாலும் அன்புடையராய், தீமைக்கு நாணுபவராய், பகுத்துண்டு பல்லுயிரோம்பும் ஒப்புரவாளராய், தொடர்புடையார் இடரதனை அறிந்தகற்றும் தயவாளராய், தூய்மைமிக்க வாய்மையாளராய் வாழும் சான்றோர் மக்கட்பண்புடைய மாண்பாளராக நிற்க, அஃதற்றோர் மரமென மதிக்கத்தக்கோராகவே அமைவர். அந்த வகையிலே அல்லற்பட்டு ஆற்றாது அழுத, தாழ்த்தப்படத் தாழ்ந்து வருந்திய அனியாய அடக்குமுறைக்குள் அகப்பட்டுத் தவித்த தம் உறவுகளின் துயரதனைத் தன் துயர் போல் கருதி ஆற்றிய அரும்பணிகள் அனேகம்! அனேகம்!! அறிவின் பயன் மற்றவர் துயரைத் தன்துயர்போல் கருதுவதாகும். மனம் படைத்த மனிதனின் மாண்பும் அதுவே. இதனைத்தான் வான்மறை வள்ளுவன்

"அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்

தன்நோய்போற் போற்றாக் கடை"

என்று அன்றே, நன்றே கூறிச் சென்றான். வள்ளுவன் வகுத்த இலக்கணத்திற்கு இலக்கியமாய் இலங்கியவர் எம்.சி. அவர்கள் மற்றவரை மதித்து, அவருற்ற துயரைத் தன்துயர் போல் கருதிப் பற்றுறுதியோடு பணிபுரிந்த அவர் நமது நன்றிக்குரிய நாயகராக என்றென்னும் எம்மவர் மனங்களிலே நின்று நிலைத்திடுவார். இன்று நூற்றாண்டு காணும் அன்னவர் சேவையின் சிறப்பதனை வாயார வாழ்த்திக் கொள்ளும்போது யான் அளவிலா ஆனந்தம் அடைகின்றேன். செயற்கரிய செயல்புரிந்த அன்னவர் மேன்மைதனை நன்றியுலகு என்றுமே மறந்துவிடாது.



யோவல் போல்



ஏஸ்.ஆர்.ஜேக்கப்
- காந்தி -



கே.டானியல்



இ.வே.செல்வரட்ணம்

# சமூக முன்னோடி எம்.சி
## Social Pioneer MC

*- திரு. க.கமலசேகரம்*

அமரர் உயர்திரு எம்.சி. சுப்பிரமணியம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எமது சமூக காவலர் என்ற இந்த உண்மை பரந்துபட்ட அனைவரும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகும்.
"எம்.சி" எனப் பலராலும் அன்புடன் அழைக்கப்பட்ட உயர்திரு எம்.சி. சுப்பிரமணியம் இந்த ஆண்டுடன் உதயமாகி செப்ரெம்பர் 27 அன்று நூற்றாண்டும், அமரராகி எதிர்வரும் ஜனவரி 12ல் மூன்று தசாப்தங்களையும் அண்மிக்கின்றது.

இன்று அவருடைய போராட்டங்கள் பற்றியும், ஈழத்தில் ஒடுக்கப்பட்டோராக வாழ்ந்த தமிழர்களின் நிமிர்வுக்கு அவர் ஆற்றியுள்ள பங்களிப்புப் பற்றியும் ஆழ்ந்தறியும் ஆய்வுகளுடன் புதிய ஆர்வங்கள் தோன்றியுள்ளன. அவரது காலத்தில வாழ்ந்து அவரது சமூகத்துக்கான அளப்பரிய அர்ப்பணிப்புக்களை கண்டறிந்தவர்களென்ற முறையிலே, அவரது நூற்றாண்டில் அவர் குறித்த தகவல்களை, சேவைகளை, தாக்கங்களை சமூகத்துக்கான நன்மைகளை அவரோடிணைந்து ஊக்கமும் ஆக்கமும் அளித்தவர்களின் விடயங்களையும் ஆவணப்படுத்தி அவரின் பாதங்களுக்கு சமர்பிக்க விழைகிறோம்.

அன்னார் பற்றிய விரிவான தகவல்களை அமரரின் மைந்தன் திரு.எஸ்.சந்திரபோஸ் அவர்களின் ஆக்கங்கள், அறிக்கைகளிலிருந்தும், வெளியீடுகளிலிருந்தும் அவரின் அனுமதி, அறிவித்தலுடனும் பெருமளவில் பயன்படுத்தியுள்ளோம். அதற்காக அவருக்கும் அவரது குடும்ப அங்கத்தவர்களுக்கும் அவரின் ஆக்கங்களுக்கு பங்களித்தவர்களுக்கும், அனுமதித்து உரிய திருத்தங்கள் தந்தளித்தவர்களுக்கும் நன்றி கூறுகிறோம்.

காலாதி காலமாக சமூக மாற்றம் எதுவும் ஏற்படாத நிலையில் பொறுத்தது போதும் என்று கிளர்ந்தவர்களில் தலைமகனாக பிரதான முன்னோடியாக எம்.சி.திகழ்ந்தவர். அவர் மிகுந்த திடசங்கற்பத்துடன், அர்ப்பணிப்புடன், பற்றுறுதியுடன் தாழ்த்தப்பட்ட மக்களின் விடிவுக்காக உழைத்தவர். "அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை" என நிறுவனப் படுத்தப்பட்டு முன்னெடுக்கப்பட்ட சமூக மீட்பு விடியல் பயணத்தில் தலைமைப் பாத்திரத்தினை நான்கு தசாப்தங்களுக்கு மேலாக எம்.சி.வகித்தவர்.

இந்த மக்களின் கல்வி வளர்ச்சிக்காக புதிய பாடசாலைகள் அமைத்தல் அடங்கலாக அரும் பணியாற்றினார். ஆலயம் மற்றும் தேநீர்க்கடைப் பிரவேசப் போராட்டங்கள் ஆங்காங்கே நடத்தப்பட்டதற்கு எம்.சி. உந்து



ஏஸ்.ரீ.நாகரட்ணம்



க.பசுபதி



சி.சீ.குணரட்ணம்



வேதநாயகம்.போல்

சக்தியாயிருந்து வழி நடத்தினார். ஆலயப்பிரவேசப் போராட்டத்தை பொறுத்தவரை குறிப்பாக மாவிட்டபுரம் போராட்டத்தை எடுத்துக்கொண்டால் இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அப்போராட்டத்தில் எம்.சி. வகித்த திடகாத்திரமான துணிச்சலான பாத்திரம் மறக்க முடியாததாகும்.

பிந்திய காலத்தில் இராணுவ ஆக்கிரமிப்புக்குள்ளாகி வெகுவாகச் சிதைக்கப்பட்ட இக் கோயிலுக்குள் சிறுபான்மைத் தமிழர் தலைகாட்ட முடியாது என அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம் தலைமையில் நடாத்தப்பட்ட அடாவடித்தனங்களை முறியடித்த பெருமை எம்.சி.யையே சாரும் என்றால் அது மிகையல்ல.

திரு.எம்.சி சுப்பிரமணியம் அவர்கள் அரசியல் ரீதியில் சமூகங்களை முன்னேற்றுவதற்கு பல நடவடிக்கைகளை எடுத்தார். எம்.சி. அவர்கள் சாதரண துவிச்சக்கர வண்டியில் கிராமம் கிராமமாகச் சென்று மக்களுக்கு அறிவூட்டியதுடன் பிரச்சனைகளுக்கும் முகம் கொடுத்த மக்களுக்கு ஆதரவும் அளித்தார்.

எம்.சி அவர்களின் கால்கள் படாத பிற்படுத்தப்பட்ட மக்கள் வசிக்கும் கிராமங்களிலே இல்லை எனலாம். அப்போதைய உள்ளூராட்சி மன்றங்களான பல்வேறு கிராம, பட்டின, நகர, மாநகர, சபைத் தேர்தல்களில் எல்லாம் எம்மவர்களை வேட்பாளர்களாக நிறுத்தி அவர்களுக்கு வேண்டிய மனத்துணிவையும், மற்றைய உதவிகளையும் செய்து வெற்றிபெற்று உறுப்பினர்களாக உதவினார்.

தென்னிலங்கை கட்சிகளுடன் எம்.சி அவர்களுக்கிருந்த தொடர்பானது எமது சமூகங்கள் உயர் சாதியினரால் தனிமைப்படுத்தப்பட்டு ஒதுக்கப்படும் நிலையில் இருந்த பாதுகாப்பளித்தது.

சிறுபான்மைத் தமிழர் நடத்திய போராட்டங்களில் எம்.சி.யின் பங்கும் பணியும், அவர் இணைந்து செயலாற்றிய ஸ்தாபனங்களின் செயற்பாடுகளும், அதனால் வென்றெடுக்கப்பட்ட சாதனைகளும் இணைந்துள்ள கட்டுரைகளில் பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்களால் ஆக்கி அளிக்கப்பட்டுள்ளன.

கட்டுரைகளிலே இடம்பெறும் கருத்துக்கள் தகவல்கள் அத்தனையும் கட்டுரையாளர்களின் எண்ணங்கள் அனுபவங்கள் கருத்துக்கள் ஆகும்.

அமரரின் பாதங்களுக்கு அவரால் வளர்ந்தவர்கள், உயர்ந்தவர்கள், அவர்கள் தம் குடும்பத்தினர், உறவுகள் நட்புக்கள் யாவரும் அன்னாரின் நூற்றாண்டில் மலர் தூவி அர்ச்சிக்கின்றோம்.


டோமினிக் ஜீவா


எஸ்.பொன்னுத்துரை


ஏன்.கே.ரகுநாதன்


கே.தங்கவடிவேல்

## அமரர் உயர் திரு. எம்.சி. சுப்பிரமணியம் அவர்களின் வாழ்க்கைச் சுவடுகள்

மலர்க்குழு செயலாளர்-
***திரு. க. கமலசேகரம்.***

இலங்கையில் வடமாகாணத்தில் யாழ் நகரில் இற்றைக்கு நூறாண்டுகளுக்கு முன் எமது சமூகத்தின் விடிவெள்ளியாக பெருமகன் திரு. முத்தர் கணபதிப்பிள்ளை அவர்களுக்கும் திருவாட்டி கண்ணாத்தாள் கணபதிப்பிள்ளை அவர்களுக்கும் கனிஷ்ட திருமகனாக திரு. எம்.சி. சுப்பிரமணியம 1917ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 27ம் திகதி இம்மண்ணில் அவதரித்தார். திருமதி விசாலாட்சி ஐயம்பிள்ளை, திருமதி பாக்கியம் செல்லையா ஆகியோர் இவரது சகோதரிகள் ஆவர். மூன்றரை வயதில் தனது தாயாரை இழந்த இவர், தந்தையின் வழிகாட்டுதலிலும் சகோதரிகளினது அரவணைப்பிலும் சிறப்பாக வளர்ந்து வந்தார்.

இவரது சகோதரியான திருமதி விசாலாட்சி ஐயம்பிள்ளை தம்பதியருக்கு பிள்ளைப் பாக்கியம் இல்லாத காரணத்தினால் இவரையே தமது சகோதரனுக்கு சகோதரனாகவும் பிள்ளைக்குப் பிள்ளையாகவும் வளர்த்து வந்தனர்.

இவர் ஐந்து வயதுப் பராயம் அடைந்தபொழுது யாழ்ப்பாணப் பெருமாள் கோயிலடியில் அமைந்திருந்த வேதப்பள்ளி என வழங்கப்பட்ட 'மெதடிஸ்த மிஷன்' ஆரம்பப் பாடசாலையில் ஆரம்பக் கல்விக்காக இவரது தந்தையாரால் சேர்க்கப்பட்டார்.

அக்காலத்தில் அப்பாடசாலை கிறிஸ்தவப் பாடசாலையாக இருந்தபொழுதிலும், சிறுபான்மைத் தமிழர்களின் பிள்ளைகள் மண்தரையில் இருந்தே கல்வி பயில வேண்டிய நிலை இருந்தது. உயர் ஜாதிப் பிள்ளைகளாகக் கருதப்பட்டோர் மட்டுமே மேலே வாங்குகளில் இருந்த கல்வி கற்றனர். ஆயினும் இச்சந்தர்ப்பத்தில் எம்.சி. அவர்களின் தந்தையும் இவரது உறவினரான கன்னாதிட்டிச் சின்னத்தம்பி என்பவரும் தமது இரு பிள்ளைகளுக்கும் ஏனைய தாழ்த்தப்பட்ட சில பிள்ளைகளுக்கும் தாமே வாங்கு மேசைகள் செய்து ஏனைய


என். வைரமுத்து


வீ.ஜே..அரியகுட்டி


Dr.V.சின்னப்பு


Dr. எஸ்.அப்புத்துரை

பிள்ளைகளுடன் சமத்துவமாக இருந்து படிக்கும் நிலையை உருவாக்கினர்.

இக்காலத்தில் இப்பாடசாலையின் தலைமை ஆசிரியரின் நல்லெண்ணம் காரணமாகவும் இவ்வேற்பாடு அக்காலத்தில் செய்யப்பட்டது.

1927ம் ஆண்டு அண்ணல் மகாத்மா காந்தி அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தபோது யாழ்ப்பாணம் மணிக்கூண்டு வீதி வழியாக ஊர்வலமாக யாழ். நகர மக்களால் அழைத்துவரப்பட்ட பொழுது பாடசாலை மாணவருடன் மாணவராக அணிவகுத்து நின்று வரவேற்பில் கலந்து கொண்டிருந்த சிறுவன் எம்.சி.யை அண்ணல் காந்தி தம் அருகில் அழைத்து தம் கையிலிருந்த மாதுளம் பழத்தினை அவருக்கு அளித்து ஆசீர்வாதம் செய்தார்.

எதிர்காலத்தில் எம்.சி. ஒரு சிறந்த சமூகத் தொண்டனாக வருவார் என்பதனை அண்ணல் காந்தி தம் தீர்க்கதரிசனத்தால் அறிந்திருந்தாரோ அல்லது அவரது ஆசிதான் எம்.சி.யைச் சிறந்த சமூகத் தொண்டனாக்கியதோ என்பது ஆய்வுக்குரிய விடயம்.

எம்.சி. அவர்கள் சிறப்பாகக் கல்வியில் கொண்டிருந்த ஆர்வம் காரணமாக ஆரம்பக் கல்வியை 5ம் வகுப்புவரை மெதடிஸ்த மிஷன் ஆங்கிலப் பாடசாலையில் முடித்துக்கொண்டு, சம்பத்திரிசியார் கல்லூரி என்று சொல்லப்படும் "சென் பற்றிக்ஸ்" கல்லூரிக்கு உயர் கல்விக்காகச் சென்றார்.

அங்கு அவர் கல்வி, விளையாட்டுக்களில் சிறந்து விளங்கினார். தான் கல்வி கற்கும் காலத்தில சமூக சீர்திருத்தக் கொள்கைகளை உள்வாங்கிக் காணப்பட்டார். தமிழினத்தில் காணப்படும் சமூகக் குறைபாடுகளும் உயர்வு தாழ்வுகளும் மூடப் பழக்கங்களும் நீக்கப்பட வேண்டுமாயின் அனைவரும் கல்வி கற்க வேண்டும். அனைவருக்கும் கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்பதனை உணர்ந்து தமது மாணவப் பருவத்திலேயே தமது நண்பர்கள், சுற்றத்தவர்கள், அயலவர்கள் ஆகியோருக்கு இரவுப் பாடசாலை அமைப்பொன்றை இலவசமாக நடத்தி வந்தார்.

இவருடன் திரு. க. இராசையா, திரு. சிவகுரு மாணிக்கம் (Retired Railway Guard), திரு. ஜி. எம். பொன்னுத்துரை ஆகிய அக்கால நண்பர்களும் இணைந்து செயலாற்றினர். இவ்வாறு நடத்தப்பட்டு வந்த இரவுப் பாடசாலை அமைப்பு வளர்ச்சி பெற்று ஆரியகுளம் சன்மார்க்க வாலிபர் சங்கமாக உருவாகியது. மற்றும் இவ்வாசிகசாலை இன்றும் யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி, பலாலி வீதிச் சந்தியில் கம்பீரமாக நிற்கின்றது. பிற்காலத்தில் இச்சனசமூக அமைப்பு இரு கிளைகளாகப் பிரிந்து ஆரியகுளம் சந்தியிலும் பலாலி வீதி பருத்தித்துறை வீதி சந்தியிலும் இயங்கி வருகின்றன.

யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரியில் மெற்றிகுலேஷன்


கே.தவசிப்பிள்ளை..J.P


கே.இராசையா


எஸ். இராசையா


சைவப்புலவர்
க.சி வல்லிபுரம்

(Matriculation) வகுப்புவரை கல்வி கற்று பின்னர் Ceylon cold Stores இலும், அதன் பின்னர் அரசாங்க லிகிதர் சேவையிலும் கடமையாற்றிய இவர் இலங்கையிலும் இந்தியாவிலும் எழுந்த சுதந்திரப் போராட்டங்களினால் கவரப்பட்டுத் தமது தொழிலை இராஜினாமாச் செய்து பொது வாழ்வில் சேவை செய்ய ஆரம்பித்தார்.

ஆரம்பத்தில் அகில இந்திய காங்கிரசிலும், அகில இலங்கை காங்கிரஸ் மகா சபையிலும் தம்மை இணைத்துக்கொண்ட எம்.சி. அவர்கள் காலப்போக்கில் காங்கிரசார் போராட்டம் அரசியல் அதிகாரத்தில் வெள்ளைத்துரைக்குப் பதிலாக கறுப்புத்துரை அமர உதவுமேயன்றி அனைத்து மக்களது உரிமைகளையும் வென்று எடுக்கும் ஒரு அமைப்பாக மலராது அடக்கி ஒடுக்கப்பட்டு உரிமை மறுக்கப்பட்ட மக்களுக்கு ஓர் நிரந்தர விடுதலையைத் தேடித்தராது என்பதனை இனம் கண்டு, மனித குல விடுதலைக்காகவும் அனைத்து மக்களின் சமத்துவத்திற்காகவும், சகோதரத்துவத்துக்கும் சிறந்தது என அறிந்து அதனை ஏற்றுத் தம்மை கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைத்துக்கொண்டார்.

அகில இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்ப் பிராந்திய ஸ்தாபக உறுப்பினர்களுள் ஒருவராகத் திகழ்ந்து தமது இறுதி மூச்சுவரை தாம் சார்ந்த ஸ்தாபனம் மூலம் மனுக் குலத்திற்காக உழைத்தார்.

1944 தை மாதம் செல்வி இலட்சுமி செல்லையா என்ற மாதினைத் திருமணம் செய்துகொண்டு இல் வாழ்வில் திளைத்து நான்கு ஆண் பிள்ளைகளுக்கும், மூன்று பெண் பிள்ளைகளுக்கும் தந்தையானார். "தாரமும் குருவும் தலைவிதி" எனபர் பெரியோர். எம்.சி. ஐயாவுக்கு வாய்த்த மனைவியின் அருங் குணங்களே அன்னாரின் தொண்டுகளுக்கெல்லாம் அடிநாதமாக விளங்கியது என்றால் அது மிகையாகாது.

எம்.சி. ஐயா ஒரு சிறந்த தொழிற்சங்கவாதியாகத் திகழ்ந்தார். வட இலங்கைக் கள்ளிறக்கும் தொழிலாளர் சங்கத்தின் பொதுக் காரிய தரிசியாக இருந்து, நசுக்கப்பட்ட தொழிலாளர்களின் நலனுக்கும் மேம்பாட்டிற்கும் உழைத்தார்.

இன்று கள்ளிறக்கும் தொழிலாளர் சந்ததியினரின் உயர் நிலைக்கும் வளமான வாழ்வுக்கும் வட இலங்கைக் கள்ளிறக்கும் தொழிலாளர் சங்கத் தலைவராக இருந்த ஜேக்கப் காந்தியினதும் எம்.சி. ஐயாவினதும் கடின உழைப்பே காரணமாகும். அகில இலங்கைத் தொழிலாளர் சம்மேளனத்துடன் இணைந்து பணியாற்றியதன் பலனாகப் பலமுறை இந்தியாவுக்கும் 1996இல் சோவியத் யூனியன் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் இலங்கையின் தொழிற்சங்க சம்மேளனத்தின் பிரதிநிதியாகச் சென்று எம் நாட்டுத் தொழிலாளர்களின் நிலைகளைப் பற்றி அங்கு உணர்த்தியும், அந்நாட்டுத் தொழிலாளர் நிலை பற்றி அறிந்தும் வந்தார்.

இலங்கை வாழ் தமிழ் மக்களிடையே நிலவிய சமூகக்



எஸ்.எம்.மாட்டின்



எம்.தம்பிஐயா



ஜி.மகாலிங்கம்,



ஆ.ம.செல்லத்துரை

குறைபாட்டின் காரணமாக தமிழ் மக்களிடையே காணப்பட்ட சாபக் கேடான தீண்டாமையை ஒழிக்கவும் தாழ்த்தப்பட்ட தமிழர்களின் நிலையை உயர்த்தவும் உரிமைகளை வென்றெடுக்கவும் அவர்கள் தனி வாழ்விலும் பொது வாழ்விலும் சமத்துவமாக நடத்தப்படவும் கல்வி, நில உரிமை, தொழில் வாய்ப்பு, ஆலயங்களில் வழிபாட்டுச் சுதந்திரம், சம ஆசனம், சமபோசனம் ஆகிய வாய்ப்புக்களை ஏற்படுத்தவும், இவற்றின் அடிப்படையில் மனித உரிமைகளை வென்றெடுக்கவும் அயராது அல்லும் பகலும் உழைத்து இலங்கை முழுவதும் பரந்து பட்டு வாழ்ந்த அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் தலைவரானார்.

மக்கள் தொண்டு என்றால் என்ன என்பதற்கு உதாரண வடிவமே எம்.சி. என்று பலரும் போற்றும் வண்ணம் வாழ்ந்த இவர் தனி மனிதனாக நின்று தொண்டாற்றாது ஸ்தாபன ரீதியாக இணைந்தே தொண்டாற்றினார்.

ஆரியகுளம் சன்மார்க்க வாலிபர் சங்கம்,
வட இலங்கை கள்ளிறக்கும் தொழிலாளர் சங்கம்,
அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை,
சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி,
இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி,
இலங்கை தொழிலாளர் சம்மேளனம்,
இலங்கை சோவியத் நட்புறவு சங்கம்,

என பல்வேறு ஸ்தாபனங்களுடன் இணைந்து எல்லா மக்களும் எல்லாம் பெற்று இன்புற்று வாழும் நல்லதோர் சமுதாயம் உருவாக வேண்டும் என்ற இலட்சியத்துடன் அயராது உழைத்தார்.

இவர் இருமுறை யாழ். மாநகர சபைத் தேர்தலில் 14ம் வட்டாரத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் அபேட்சகராக நின்றபொழுதிலும் அக்காலத்தில் நிலவிய சாதிப்பாகுபாடுகள் காரணமாகவும், நிலப் பிரபுத்துவச் சிந்தனைகளாலும் வெற்றி வாய்ப்பினை சொற்ப வாக்கு வித்தியாசத்தில் இழந்தார்.

இதேபோன்றே 1960களில் இலங்கை பாராளுமன்றனத்தின் மேற்சபையான செனற்சபை உறுப்பினர்களுக்கான தேர்தலிலும் சொற்ப வாக்கு வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்தார்.

இவ்வாறான தோல்விகளினால் என்றுமே எம்.சி. ஐயா துவண்டவர் அல்லர். தோல்விகள் யாவும் அவரை மீண்டும் மீண்டும் சமூகப் பணியில் முன்னைவிட முனைப்பாக ஈடுபடவைத்தன. பதவியைத் தேடி ஓடியவரல்ல எம்.சி. ஐயா. கடமைகளை நாடி

ஓடியவர். அவரது கடமை உணர்வும் தன்னலமற்ற சேவை மனப்பான்மையும் அவரை நாடிப் பாராளுமன்ற உறுப்பினர் பதவி வந்தடைய ஏதுவாயின.

'சொலல்வல்லன் சோர்விலான் அஞ்சான் அவனை

இகல்வெல்லல் யார்க்கும் அரிது"

என்ற வள்ளுவன் வாக்குக்கு அமைய வாழ்ந்து 1970 முதல் 1977 வரை இலங்கைப் பாராளுமன்றத்தின் நியமன அங்கத்தவராகப் பதவியில் அமர்ந்து தாழ்த்தப்பட்ட தமிழர்களுக்கு மட்டுமன்றி முழுத்தமிழ்ச் சமுதாயத்துக்குமே தொண்டாற்றினார். பாராளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய காலத்தில்



எஸ்.சந்தியாப்பிள்ளை

சமூகக் குறைபாடு ஒழிப்புச் சட்டம்,

கூட்டுறவு முறையிலான கள்ளிறக்கும் தொழிலாளருக்கான அமைப்புகள்,

நிலமற்ற விவசாயத் தொழிலாளருக்கான நில உடமை.

கல்வியில் சம வாய்ப்பு,

வேலையற்ற இளைஞருக்குத் தொழில் வாய்ப்புகள்,

வீடமைப்புத் திட்டங்கள்

என்பன இவரது அயராத பணியால் செயல் வடிவம் பெற்றன.



கே.துரைசிங்கம்

1977இல் இலங்கை அரசியலில் மாற்றம் ஏற்பட்ட பின்னர், தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்த பின்னரும் உடல் நிலை குன்றும் வரை அயராது சமூகப் பணியும், தாம் சார்ந்த அரசியல் கட்சிப் பணியும் புரிந்துவந்தார்.



எம்.ஆறுமுகம்,

1956இல் SWRD பண்டாரநாயக்கா தலைமையில் அரசாங்கம் அமைக்கப்பட்டபொழுது தாழ்த்தப்பட்ட தமிழ் மக்களின் கல்வி வளர்ச்சிக்காகப் பாடசாலைகளை ஆரம்பிக்கும் பணியில் ஈடுபட்டார். அந்த நேரத்தில் கல்வி அமைச்சராக இருந்த டபிள்யூ. தகநாயக்கா அவர்களால் தாழ்த்தப்பட்ட தமிழ் மக்கள் கல்வி பெற வசதிகள் அற்ற வசதிகள் மறுக்கப்பட்ட கிராமங்களில் 15 பாடசலைகள் ஆரம்பிக்கப்பட்டு இன்று அவை அரசாங்கப் பாடசாலைகளாக இயங்கி வருகின்றன.



கே.நல்லதம்பி

ஆரம்பத்தில் இவை தாழ்த்தப்பட்ட தமிழர்களுக்காகவே என்று ஆரம்பிக்கப்பட்டபோதிலும் இன்று முழுத்தமிழ் சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்கும் தொண்டாற்றி நிற்கின்றன.



கே.செலவம்



எஸ்.செல்லையா



சூரன் - தேவரயாளி



செல்லன் கந்தையா

| | தொகுதி |
|---|---|
| 1. குட்டியபுலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை | கோப்பாய் |
| 2. கட்டுவன்புலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை | காங்கேசன்துறை |
| 3. சண்டிலிப்பாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை | மானிப்பாய் |
| 4. சுதுமலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை | மானிப்பாய் |
| 5. அச்சுவேலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை | கோப்பாய் |
| 6. புலோலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை | பருத்தித்துறை |
| 7. இமையாணண் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை | பருத்தித்துறை |
| 8. வசந்தபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை | காங்கேசன்துறை |
| 9. மந்துவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை | சாவகச்சேரி |
| 10. மட்டுவில் தெற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை | சாவகச்சேரி |
| 11. சரசாலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை | சாவகச்சேரி |
| 12. வரணி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை | சாவகச்சேரி |
| 13. கைதடி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை | சாவகச்சேரி |
| 14.வெள்ளாம் போக்கட்டி அரசினர் தமி.கலவன் பாடசாலை | சாவகச்சேரி |
| 15.பொன் கந்தையா அரசினர் தமி. கலவன் பாடசாலை | மானிப்பாய் |

இப்பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட காலகட்டத்தில் சில உயர் ஜாதி வெறியர்களாலும் மாற்றுக்கட்சியினராலும் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவங்களும் உண்டு.

எம்.சி.ஐயா உடல்நலக்குறைவினால் 1989ம் ஆண்டு ஜனவரி 12ம் திகதி யாழ் வைத்தியசாலையில் அமரத்துவமடைந்தார். அவரது மரணச் சடங்குகள் சமூக போராட்டங்கள் தீவிரமடைய வித்திட்ட வில்லூன்றி மயானத்திலேயே இடம்பெற்றதென்பது நினைவுகூரத் தக்கது.



# எம்.சி அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராகிய
## பரிணாம வளர்ச்சி உள்ளடக்கிய பார்வை

**க.திருநாவுக்கரசு.**
ஓய்வுநிலை அதிபர்

தமிழ் மக்கள் மத்தியில் மிக நீண்ட காலமாக நிலவிய சமூக ஏற்றத் தாழ்வுகள் பல்வேறு வடிவங்களாக அடக்கி ஒடுக்கப்பட்ட அடிமைகளாக வறுமை நிலையில் வாழ்ந்து மடியும் மக்கள் கூட்டமாக காணப்படுகிறது. இது சமுதாயத்தில் தொடர்ந்து நிலவும் இழி நிலையாகும்.

அதே வேளை உலகின் மூன்றாவது செம்மொழி அந்தஸ்துக்குரிய தமிழ்மொழி. மிக உயரிய மொழிச் செழுமை கொண்ட இனம். பண்பாட்டுச் செழுமைக்கு இழுக்கான தன்னுடன் வாழும் சக மனிதர்களை பாகுபாடுகள் பாராட்டில் பார்க்கும் சமுதாயக் கொடுமை எப்படிப் புகுந்தது.

'பொய்யும் வழுவும் பொருந்திய பின்னர் ஐயர் வகுத்தனர் கரணமென்ப" என்று தொல்காப்பியம் கூறுகிறது. அதேநேரம் மேட்டுக்குடிச் சிந்தனையாளர்கள் "வர்ணாச்சிரம தர்மம்" என்று தர்மத்துக்குள் புகுந்து விளையாடுகிறார்கள். வால்டெயர், றூசோ போன்றவர்களின் பிரான்சியப்புரட்சிச் சிந்தனை நமக்குத் தந்த சுதந்திரம், சமத்துவம் சகோதரத்துவம்" என்பன நோக்குவதற்குரியவை 1917ல் பிறந்த MC 1917ல் ஏற்பட்ட ஒக்டோபர் சோசலிசப் புரட்சிக் கருத்துக்களாலும் போகப் போக உருக்கேறுகிறார்.

எம்.சி மாணவனாக இருந்த காலத்தில் ஹன்டி பேரின்பநயகம் அவர்களின் முயற்சியால் மகாத்மா காந்தி அவர்கள் யாழ்ப்பாணம் வந்தார்கள். மகாத்மா காந்தி அவர்களுக்கு எல்லோரும் திரண்டு யாழ் மணிக்கூட்டு வீதி வழியாக வரவேற்பு நடைபெற்றது. அந்த வரவேற்பில் இந்திய குல்லா அணிந்து அழகான உடை அணிந்து நின்ற ஊர்வலத்தில் எம்.சிக்கு மகாத்மாகாந்தி அவர்கள் மாதுளங்கனி ஒன்றைக் கொடுத்தது ஏம்.சிக்கு கிடைத்தற்கரிய ஆசீர்வாதமாகவே ஊர்வலத்தில் நின்ற பலராலும் ஏம்.சி போற்றப்பட்டார்.

மாணவர்களுக்கு சிறுவயதில் ஆங்கிலம் கற்பிப்பது ஏம்.சிக்கு அலாதியான விருப்பமாகக் காணப்பட்டது. இதே காலத்தில் யாழ் பலாலி வீதிச்சந்தி யாழ்ப்பாணத்தில் சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கத்தினை வாலிபர்களுடன் சேர்ந்து ஆரம்பித்துச் செயலாற்றினர். இந்த வாலிபர்களின் அமைப்பே எதிர்காலத்தில் மகாசபையாக மாற்றம் பெற்றது.

1940ல் இடதுசாரிக் கருத்துக்கள் கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டைப் பகுதிகள் உள்ளடக்கிய தென்பகுதிகளெங்கும் பரவியது. S.A விக்கிரமசிங்க, பீற்றர்கெனமன், A.வைத்திலிங்கம், P.கந்தையா, P.கார்த்திகேசன் போன்ற தலைவர்கள் கொழும்பு தலைநகரில் தொழில்சங்க வேலைகளைக் கட்டியெழுப்பினர். அதே நேரம் தோழர் P.கார்திகேசனை யாழ்ப்பாணம் நோக்கி அனுப்பி சமூகப் பிரச்சினைகள் மற்றும் கட்சிக் கருத்தரங்குகள் குடாநாடெங்கும் பரவலாக நடாத்தப்பட்டன.

பூபாலசிங்கம் புத்தக சாலையில் கார்திகேசன், எம்.சி, இராமசாமி ஐயர், டொமினிக் ஜீவா, டானியல், க.இராசையா போன்ற பலர் ஒன்று கூடி குடாநாட்டில் நிலவும் சாதிக் கொடுமைகள் அட்டகாசங்களைப் பற்றியெல்லாம் பேசிக்கொள்ளுவார்கள்

எம்.சியின் தலைமையில் யாழ் பலாலி வீதியிலுள்ள சன்மார்க்க ஐக்கிய சனசமூக நிலையத்தில் அகில இலங்கைச் சிறுபாண்மைத் தமிழர் மகாசபை என்ற அமைப்பை உருவாக்கினார்கள். அதில் யோவேல்போல், யோக்கப் காந்தி, ஆ.ம.செல்லத்துரை, முருகேசு மாஸ்டர், முதலியார் இராசேந்திரம், டொமினிக் ஜீவா, டானியல் இராசையா போன்ற பலர் பரவலாக இடம் பெற்றனர்.

யாழ் கொட்டடி வில்லூன்றி மயானத்தில் பாகுபாடில்லாமல் ஒரே இடத்தில் தகனக்கிரியைகள் செய்ய ஒரு பெண்மணியின் பிரேரத்தைக் கொண்டு சென்ற போது சாதிவெறியர்களும் பொலிசாரும் சேர்ந்து எரிக்க விடாது தடுத்ததுடன் முதலி சின்னத்தம்பி துப்பாக்கியால் சுடப்பட்டு மரணமடைந்தார். பின்னர் அந்தப் பெண்மணியின் பிரேதம் காக்கை தீவிலுள்ள சுடலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டது. எம்.சி முதலியார் A.B இராசேந்திரா அவர்கள் போராடிக் காலப்போக்கில் சமத்துவம் நிலைநாட்டப்பட்டது.

தொடர்ந்து ஆங்காங்கே சாதிக்கலவரங்கள், வீடுகள் குடிசைகள் தீக்கிரையாக்கப்படல் போன்றவை நடைபெறும் இடங்களுக்கும் பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடுகள் செய்யவும் இரவு பகல் பாராது சென்று எம்.சி கவனித்து வருவார்.

ஆலயப் பிரவேசம் தேநீர்க்கடைப் பிரவேசம் போன்ற பல்வேறு பிரச்சினைகள் பற்றி சம்பந்தப்பட்ட இடங்களுடன் தொடர்பு கொண்டு தொடர்ந்து போராடுவார்.. 1952ல் பருத்தித்துறைத் தொகுதிக்கு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தர்மகுலசிங்கம் அவர்களை ஆதரித்து மகாசபை மூலம் தாழ்த்தப்பட்ட மக்களின் வாக்குகள் அனைத்தும் தர்மகுலசிங்கத்துக்கே அளித்து சொற்ப வாக்குகளாலேயே தர்மகுலசிங்கம் அவர்கள் தோற்றார்.

ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்கள் அத்தொகுதியில் வெற்றி பெற்றார். ஆனால் இந்தச் சிறுபான்மைத் தமிழரின் அவல நிலைகளைப் போக்க சிறிதும் அக்கறை காட்டவில்லை.

1956ல் அதே பருத்தித்துறைத் தொகுதியில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் போட்டியிட்ட பொன் கந்தையா வெற்றிபெற அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையும் அதன் தலைவர் ஏம்.சியும் இரவுபகலாக உழைத்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த காலகட்டத்தில் எம்.சி யின் நிதானப் போக்கும், நேர் வழிப்போக்கும், மகாசபையின் செல்வாக்கும் தென்னிலங்கை அரசியல் தலைமைகளுக்கும் சிறுபான்மைத் தமிழர்களின் அவல நிலைகளைப் போக்க முன்வந்தார்கள்.

ஏம்.சி மிகக் காத்திரமும் கனதியும் கொண்ட தலைமைத்துவத்தையும் S.W.R.D பண்டார நாயக்கா ஆழமாக உணர்ந்து எம்.சியை Senate சபைக்குக் கொண்டுவர தீவிர முயற்சி எடுத்தார். ஆனால் சாதி வெறி பிடித்த பிற்போக்குவாத பாராளுமன்ற உறுப்பினர் சிலர் காலைவாரியதால் எம்.சி இரண்டு வாக்குகளால் செனற்றர் சபைக்குத் தெரிவு செய்யப்படவில்லை.

மகாசபையின் S.V.செல்வரத்தினம் பொதுக் காரியதரிசியாகவும் K.பசுபதி அவர்கள் நிர்வாகக் காரியதரிசியாகவும் C.E.குணரத்தினம் அவர்கள் பொருளாளராகவும் K.இராசையா, K.டானியல், டொமினிக் ஜீவா, கவிஞர் செல்லையா, செல்லையா, குலேந்திரம், பீ. அப்புத்துரை, M.வைரமுத்து S.V போல், K.செல்லத்துரை போன்றவர்கள் உள்ளடக்கிய நிர்வாக சபையும் உச்ச நிலையில் செயல்பட்டது குறிப்பிடத்தக்கது.

மகாசபையினதும் MCயினதும் பல்வேறு சாதனைகளுள் உச்சமான சாதனைகள் எமது மக்களுக்கு கல்வி, சமூக, பொருளாதார விடிவுகள் கிடைத்தவைகளுள் முக்கியமானவை

1. அரசினர் பாடசாலைகள 15 ஆங்காங்கே கிராமங்களில் மகாசபையால் ஆரம்பித்தமை.
2. ஆசிரியர்கள் 100க்கு மேற்பட்டோர் இப்பாடசாலைகளில் நியமனம்.
3. எமது பட்டதாரிகள 10க்கு மேற்பட்டோர் நியனம்
4. கல்வி அதிகாரிகள் இரண்டு பேர் நியமனம்
5. சமாதான நீதிவான்கள் எமது மக்கள் மத்தியில் முதல் முதல் நியமனம்
6. 1972ல் மறு சீரமைக்கப்பட்ட ப.நோ.கூ சங்கங்களுக்கு நெறியாளர் சபைக்கு எம்மவர் இவ்விரண்டு பேர் நியமனம்
7. ஆசிரியர் பயிற்சிக் கால சலைகளுக்கு சலுகை அடிப்படையில் தெரிவு செய்யப்படுதல்
8. எமது மக்களின் இருப்புக்கள் மற்றும் பலம் அடிப்படையில் உள்ளூராட்சித் தேர்தல்களில் வெற்றி பெற்றுச் சேவையாற்றல்
9. வாடகைக் கட்டுப்பாட்டுச் சபைக்கு எம்மவர் நியமனம்
10. Lotteries Board க்கு எம்மவர் நியமனம்.

மொத்தமாக நோக்கும் போது S.W.R.D பண்டார நாயக்கா, சிறிமாவோ பண்டாரநாயக்கா, சந்திரிக்கா பண்டாரநாயக்கா, பொன் கந்தையா, N.M பெரேரா, பீற்றர் கெனமன் மற்றும் பல தென்னிலங்கைச் சக்திகள் எமது மக்களுக்காக ஆற்றிய சேவைகள் வரலாற்றுப் புகழுக்குரியவை.

1940களிலிருந்து 1970களின் மிகப் பிற்பட்ட காலப்பகுதியின் MC சாதித்த பெரும் வெற்றிகள் சிறுபாண்மைத் தமிழ் மக்கள் சுய மரியாதையுடன் தலை நிமிர்ந்து வாழ வைத்த நிகரற்ற தலைவன் MC தான் என்றால் MC உயர்ந்த தலைவராகிறார்.

ஏனைய தனிப் பெரும் தலைவர்கள் என்று தமக்குத்தாமே கூறும் பெரும் மனிதர்களேயன்றி நல்ல மனிதர்களா நல்ல தலைவர்களா நிரூபிக்கத் தவறிவிட்டார்கள். காரணம் ஒடுக்கப்பட்ட மக்களின் ஒடுக்கு முறைகளை மறைமுகமாக ஆதரித்தும் வெளிப்படையாக எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுத்தும்

இருப்பதால் MCக்கு நிகர் MCதான். MC யின் நாமம் என்றும் வாழும் 1970 எம்.சி. தலைமையில் பிரதமர் கௌரவ ஸ்ரீமாவோ அவர்களைச் சந்தித்த தூதுக் குழுவினருக்கு சமூகக் குறைபாடுகள் ஒழிப்புச் சட்டத்தைத் திருத்தி வலுவுள்ளதாக ஆக்கி உதவினார்கள்



நிறைவுரையில் மாவிட்டபுர ஆலயப் பிரவேசம் தொடர்பில் 1970ல் பிரதமர் சிறிமாவோ பண்டார நாயக்க அவர்கள் சமூக குறைபாடுகள் ஒளிப்புச் சட்டத்தைத் திருத்தி வலுவுள்ள சட்டமாக ஆக்கித்தர

MCயின் தலைமையில் மகாசபையின் தூதுக்குழுவை அழைத்து எங்களை வரவேற்று உள்ளே அழைத்த போது வவுனியாவின் தனிப்பெரும் தலைவர் சுந்தரலிங்கம் ஐயாவைப் பற்றிக் கூறிய வார்த்தையைக் கூறி வைக்க விரும்புகிறோம். How old is ,Mir Suntharalingam அவரின் பிற்பட்ட காலத்தில் மாவிட்டபுரம் ஆலயப் பிரவேசத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தது. வாழ்நாள் தவறாகும்.








அப்போதைய தமிழரசுக்கட்சித் தலைவர் S.J.V கூட இந்தப் பிரச்சினையில் ஒருநாளும் வாய்திறக்கவில்லை. தமிழ் காங்கிரஸ் தலைவர் G.G கூட இந்தப் பிரச்சினையில் எதிர்ப்பு நிலையே பதிவு செய்துள்ளார். ஆகவே தமிழ்த் தலைவர்களின் கையாலாகாத்தனத்தை வெளிப்படுத்தியதல் MC தனிப்பெருந் தலைவராகவே நாம் காண்கிறோம்.

இந்த 2017ஆம் ஆண்டின் MCயின் நூற்றாண்டு காலத்தில் அவரின் உருவச்சிலையை யாழ் நகர் மத்தியில் எல்லோருடைய பார்வைக்கும் காண வைப்பதும் அவர் பெயரில் முத்திரை வெளியிடுவதும் MCயின் நூற்றாண்டு மலரையும் அ.இ.சி.த.மகாசபை வெளியிட்டு நன்றியுணர்வை வெளிப்படுத்துவது நம் எல்லோருடைய கடமையுமாகும்.

# நினைவழியாக் குறியீடு: "எம்.சி."

**தேவதாசன்**
இலங்கைத் தலித் சமூகமேம்பாட்டு முன்னணி
(பிரான்ஸ்)

*முத்தர் கணபதி சுப்பிரமணியம், எம்.சி. சுப்பிரமணியமாக முதலில் அறிமுகமானார். சாதியத் தீண்டாமைக் கொடுமைகளை எதிர்த்துப் போராடிக் கிடைத்த பல சாதனைகளை, எம்.சி. சுப்பிரமணியம் அவர்களோடு அருகில் நின்று அவதானித்த தோழர்களும் நண்பர்களும், சாதிய ரீதியாக பல்வேறு சமூக ஒடுக்குமுறைக்குள்ளாக்கப்பட்ட மக்களும், முத்தர் கணபதி சுப்பிரமணியம் எனும் நாமத்தைச் சுருக்கி "எம்.சி." எனும் நினைவு அழியாக்குறியீடாகத் தம் மனங்களில் களஞ்சிப்படுத்தி வருகின்றனர்.*

*1917 செப்டெம்பர் 27ம் திகதி பிறந்த எம்.சி அவர்கள் 1989 ஜனவரி 12ம் திகதி காலமானார். நெருங்கிவரும் அவரது நூறாவது ஆண்டு நினைவேந்தலில் சாதிய ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களுக்காக மேற்கொண்ட அவரது அரசியல் சமூகப் பணிகளையும் சாதனைகளையும் நினைவூன்றும் அவசியத்தை இலங்கைத் தலித்சமூக மேம்பாட்டு முன்னணியினராகிய நாம் உணருகின்றோம்.*

*ஒரு நாட்டின் அரசியலையும், அந்நாட்டில் வாழும் சமூகங்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் தலைமைகள் பற்றிய விமர்சனபூர்வமான பார்வையையும் முன்வைத்து, தம்மை வளப்படுத்தும் ஆற்றல் இல்லாத சமூகம் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்வதை, தவிர்க்கமுடியாத அவலத்தைக் கொண்டிருக்கும். அந்த வகையில் நாம் இலங்கையின் அரசியலில், அதுவும் குறிப்பாக வட-கிழக்கு, தமிழ் பேசும் சமூகங்கள் எனும் ஒற்றை அடையாளத்தை முன்வைத்து அச்சமூகங்களின் அரசியலைப் பிரதிநிதித்துவப்படுத்திய தலைமைகளின் செயல்பாடென்பது எந்தவிதமான பங்களிப்பை செய்திருக்கின்றது? கிடைக்கும் குறைந்த பட்ச அதிகாரங்களைப் பயன்படுத்தி மக்கள் சார்ந்து, சமூகம் சார்ந்து எவ்வாறான பணிகளை*

நிறைவேற்றியிருக்கிறார்கள்? இதுகுறித்து எவ்வித விமர்சனப்பார்வையும் அற்ற சமூகமாக நாம் இருக்கிறோம்! கடந்தகால அத்தலைமைகளின் அரசியல் பிரதிநிதித்துவமானது இரண்டு பிரிவாகச் செயல்பட்டிருப்பதை நாம் அவதானிக்கலாம்.

காலனித்துவ காலத்திலும், ஆயுதப்போராட்டத்தின் தீவிர போக்கு மேலெழுந்த காலகட்டம் வரையான அரசியல் பிரதிநிதித்துவம் என்பதாகவும், ஆயுதப்போராட்ட வடிவத்தில் பிரதிநிதித்துவப் படுத்தியதான காலகட்டமாக இரண்டுவகையான அரசியல் பிரதிநிதித்துவத்தை நாம் சந்தித்திருக்கின்றோம். இதில் ஆயுதப்போராட்டத்தினூடான சமூகப் பிரதிநிதிகளின் செயல்பாட்டையும், அதனூடாகக் கிடைத்த அனுபவங்களையும் நினைவுபடுத்தி மீளவும் இரணகளமாக்கும் செயலை நாம் இங்கு தவிர்த்துக் கொள்கின்றோம். அது இன்றைய தலைமுறையினரும், எதிர்காலத் தலைமுறையினரும் அறியும் வகையில் இரத்த வாடை நீங்கா வகையில் தொடர்ந்தும் இலக்கியங்களாகவும், வரலாறாகவும் பதிவு செய்யப்பட்டுக்கொண்டே இருக்கிறன.

யாழ்மாவட்டத்தில் சாதியத் தீண்டாமைக்கெதிரான போராட்டங்களில் ஈடுபட்ட இரண்டு அமைப்புகளில் "தீண்டாமை ஒழிப்பு வெகுஜென இயக்கம்" தனது பங்கிற்குத் தீண்டாமைக் கொடுமைகளையும், அதற்கெதிராக அது மேற்கொண்ட போராட்டங்களையும், சாதனைகளையும் பதிவு செய்திருக்கின்றது. ஆனால் அகில இலங்கைச் சிறுபான்மை தமிழர் மகாசபையினதும் குறிப்பாக அதனது பிற்கால தலைவரான எம்.சி. அவர்களதும் அவரது பணிகளும் இன்றைய புதியதலைமுறையினரும் எதிர்கால தலைமுறையினரும் அறிந்துகொள்ளும் வகையில் பெரிதாகப் பதிவுசெய்யப்படவில்லை என்றே கூறலாம். தமிழ் பேசும் சமூகத்திற்கான அரசியல் பிரதிநிதிகளாகத் தேர்தல் மூலமாக மக்களால் தேர்வு செய்யப்பட்ட தலைமைகளானவை மக்கள் சார்ந்த, சமூக-பிரதேச மேம்பாடு வளர்ச்சி குறித்த பணிகள் எதனையும் இதுவரையில் மேற்கொண்டார்களா என்றால் எதுவுமே இல்லை. ஆனாலும் மீண்டும் மீண்டும் தேர்தல்களில் ஈடுபடுகின்றார்கள் மக்களால் தெரிவுசெய்யப்பட்டே வருகின்றனர். அது எவ்வாறு சாத்தியமாகிறது! தற்போது வடமகாணசபையில் குறைந்தபட்ச அதிகாரத்தை பெற்றிருப்பினும் மக்கள்சார்ந்த, சமூகம் சார்ந்த பணிகள் எதுவுமே செய்பவர்களாகவோ, அதில் குறைந்தபட்ச அக்கறையுடையவர்களாகவும் தம்மை வெளிப்படுத்தும் ஆற்றலும் இல்லாதவர்களாக செயல்படுகின்றார்கள். பேரினவாதிகள் எனச் சிங்கள அரசை அடையாளம் காட்டுவதன் ஊடாகவும் தம்மை விமர்சிப்பவர்களையும், அரசுடன் இணைந்து பணிபுரிய முயல்பவர்களையும் துரோகிகளாக அடையாளம் காட்டுவதன் ஊடாகவுமே தொடர்ந்தும் தமது அரச பிரதிநிதித்துவத்தைத் தக்கவைத்து வருகின்றனர்.

கடந்த காலங்களில் தீண்டாமைக்கொடுமைகளை அனுபவித்த சமூகங்கள் தமிழ் பேசும் சிறுபான்மை இனமாக வகைப்படுத்தப்பட்டனர். பிற ஒடுக்குமுறை சாதியினர் தமிழ்பேசும் பெருமான்மை இனமாக வகைப்படுத்தப்படிருந்தனர். அதிலும் சமூக-அரச சலுகைகளையும் அதிகாரங்களையும் கொண்டவர்களான சைவவேளாளர் எனும் மேலாதிக்க சாதியினரால் சிறுபான்மைத் தமிழர் எனும் "தலித்துக்கள்" பல்வேறு சமூக ஒடுக்குமுறைக்குள்ளாகி வந்தனர். 1940 களில் சிறுபான்மை இனமான ஒடுக்கப்பட்ட சாதியினர் மத்தியிலிருந்து கல்வி அறிவுபெற்ற சிந்தனையாளர் சமூக சாதிய தீண்டாமை கொடுமைகளுக்கு எதிரான போராட்டங்களை மேற்கொள்ளத் தலைப்பட்டனர். அதில் வடபகுதியில் சாதிரீயாக ஒடுக்கப்பட்டு வந்த சிறுபான்மை இனங்களின் "பாராளுமன்ற பிரதிநிதியாக" அச்சமூக நலன் சார்ந்து செயல்பட்ட ஒரே ஒரு பிரதிநிதி எம்.சி. சுப்பிரமணியம் என்பதே இதுவரைகால வரலாற்று உண்மை.

1972, புதிய அரசியலமைப்பு மாற்றம் நிகழ்ந்தபோது முஸ்லிம்கள், பறங்கியர், மலையகத் தமிழர்கள், இலங்கைத் தமிழர்கள் எனத் தனித்தனி சிறுபான்மை இனங்களாக அடையாளப்படுத்தும் நோக்கில் விவாதிக்கப்பட்டது. அப்போது வடக்கில் வாழும் சாதிய தீண்டாமைக்குள்ளான சிறுபான்மை தமிழர்களையும் தனி இனமாக பிரகடனப்படுத்தப்பட வேண்டும் எனும் ஆலோசனை எம்.சி அவர்களால் முன்வைக்கப்பட்டது. இதுவிடயமாக அபிப்பிராயங்களை பகிர்ந்துகொள்வதற்கென ஒரு பத்திரிகையின் அவசியம் உணரப்பட்டு அப்பத்திரிகைக்கு "உதயவட்டம்" எனவும் பெயர் வைக்கப்பட்டது. வர்க்கபேதமற்ற சமூகத்தைக் கண்டடையும் இலட்சியத்துடன் செயல்பட்டுவந்த கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான எம்.சி. அவரகள் எவ்வாறு தனிச் சாதி, தனி இனம் எனப் பிரிவினை பார்த்து செயல்படமுடியும் என உறுப்பினர்களின் விமர்சனம் காரணமாக "உதயவட்டம்" பத்திரிகை ஒரு இதழுடன் நின்றுபோனது. சாதிரீதியாக ஒடுக்கப்பட்டு வரும் சமூகத்திற்கெனத் தனித்துவமான பத்திரிகையின் அவசியம் குறித்துச் சிந்தித்த எம்.சி அவர்களின் முயற்சி தொடரமுடியாது போனது.

குடியிருப்பிற்கு அருகாமையிலிருக்கும் மயானத்தை அகற்றக்கோரி, புத்தூர் கலைமகள் கிராம மக்களின் 49 நாட்களுக்கும் மேலான போராட்டம் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த் சாத்வீகப் போராட்டத்தை வெகுஜனப்படுத்துவதற்கும், தொடர்ந்து பல்வேறுபகுதிகளிலும் நடைபெற்றுவரும் சாதிய ரீதியான சமூக ஒடுக்குமுறைகளை வெளிக்கொண்டுவருவதற்குமான அச்சமூகம் சார்ந்த தனித்துவமான ஊடகம் எதுவும் இல்லை. ஆனால் அம்மக்கள் சார்ந்த தனித்துவமான பத்திரிகையின் அவசியத்தை அப்போதே எம்.சி அவர்கள் உணர்ந்திருக்கிறார்.

எம்.சி அவர்கள் பாராளுமன்ற அங்கத்தவராக இருந்த காலகட்டத்தில் தீண்டாமைக் கொடுமைக்குள்ளான சமூகத்தின் கல்வி-பொருளாதார மேம்பாட்டிற்காகவே சிந்தித்துச் செயல்பட்டுவந்தவர். கல்வி கற்பதற்கே தடைவிதிக்கப்பட்ட காலத்தில் ஒடுக்கப்பட்டுவந்த மக்களுக்கான பாடசாலைகளை நிறுவினார். எம்.சி அவர்களின் முயற்சியினால் அச்சமூகத்திலிருந்து பல ஆசிரியர்கள் உருவாக்கப்பட்டார்கள்.

சைவவேளாள சமூகத்தவர்களே கல்வி அதிகாரிகளாக மேலாதிக்கம் செய்து வந்த சூழலில் தகுதியின் அடிப்படையில் யாழ்ப்பாணத்தின் கல்வி அதிகாரியாக ஒடுக்கப்படும் சமூகத்தை சேர்ந்த இராஜலிங்கம் அவர்கள் எம்.சியால் முன்மொழியப்பட்டார். இராஜலிங்கம், செல்லத்துரை, நல்லையா போன்ற ஒடுக்கப்பட்ட சமூகத்தை சேர்ந்தவர்களை தமிரசுக் கட்சித்தலைமை தம்மோடு இணைத்துக்கொண்டு தம்பக்கமும் ஒடுக்கப்படும் மக்கள் சார்ந்த பிரதிநிதிகள் இருப்பதாகப் பாவனை செய்தனர். தமிழரசுக் கட்சியுடன் இணைந்த பேற்படி கனவான்கள் தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் ஆதாயத்தை பெற்றிருக்கலாம். ஆனால் அப்பிரதிநிதிகளால் ஒடுக்கப்பட்டுவந்த, அவர்கள் சார்ந்த சமூகத்திற்கு எந்தப் பயனும் கிட்டியதில்லை. இன்றும் சாதிய ரீதியாக ஒடுக்கப்படும் மக்களுக்கான பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தின் அவசியத்தை எம்.சி அவர்களை நிவேந்தும் இத்தருணத்தில் சிந்திக்க தூண்டுகிறது. யுத்தத்திற்குப் பிற்பாடு சாதிய ஒடக்குமுறையானது அதிகாரமட்டத்தில் மிகக் கொடூராமாகவே செயல்பட்டு வருகிறது. உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் அதிபர் நியமனத்திற்குத் தகுதியுள்ள நவமணி சந்திரசேகரம் அவர்களின் நியமனத்தைத் தடுப்பதற்கான பின்னணியாகச் சாதியம் இருந்தது. திருகோணமலை நகரசுத்தித் தொழிலாளர்கள் தம்மை நிரந்தரப் பணியாளர்களாக நியமிக்கும்படி மேற்கொண்ட போராட்டத்திற்கு எதிராகச் சாதிய மேலாதிக்க அதிகாரம் பின்னணியாக இருந்திருக்கிறது. இவ்வாறான பல்வேறு சாதிய ஒடுக்குமுறைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு அம்மக்கள் சார்ந்த தனித்துவமான பிரதிநிதித்துவத்தின் அவசியத்திற்குச் சாட்சியமாக இருப்பவர் எம்.சி அவர்கள். எம்.சி அவர்களின் பிரதிநிதித்துவமும் அம்மக்கள் சார்ந்த அவரது பணிகளையும் நாம் இத்தருணத்தில் நினைவுகூரக் கடைமைப்பட்டிருக்கின்றோம். யாழ்ப்பாணப் பாராளுமன்ற பிரதிநிதியாகச் செயல்பட்டவர்களில் மக்கள் சார்ந்த பணிகளை மேற்கொண்ட ஒரே ஒரு மக்கள் பிரதிநிதி எம்.சி. அவர்கள்தான் என்பதை நாம் மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

இங்கே நாம் ஒரு சம்பவத்தைப் புதிய தலைமுறையினருக்கு நினைவுபடுத்துவதை வரலாற்றுக்கடமையாகக் கருதுகின்றோம். சமூக ஒடுக்குமுறைக்குள்ளாகிவரும் தமது சமூகத்தின் அவல நிலையை காண்பிக்கவும் கல்வி-பொருளாதாரத்தில் ஒடுக்குமுறைச் சாதியினரால்

தொடர்ந்தும் மறுக்கப்பட்டு வந்த உரிமைகளை அரசாங்கத்தினூடாக பெறும் நோக்கத்திற்காகப் பிரதித் தொழில் அமைச்சரான எம்.பி. டி. சொய்சா அவர்களை 1957ல் அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை தனது 14வது மாநாட்டிற்கு அழைத்திருந்தது. அரச மந்திரியை யாழ்ப்பாணம் அழைத்தது ஒரு துரோக செயலாகக் கருதி "பெரும்பான்மைத் தமிழர்களால்" கறுப்புக்கொடி காண்பித்து எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இது சம்பந்தமாக அகில இலங்கை சிறுபான்மை தமிழர் மகாசபையின் 16வது மாநாட்டு அறிக்கை இவ்வாறு கூறுகிறது:

இந்த வேளையில் நாம் நெஞ்சில் நிறுத்த வேண்டியதொன்று. நாம் மந்திரியை வரவழைத்துச் சிறுபான்மைத் தமிழர்களின் வாழ்க்கை நிலை, கல்வி-பொருளாதார நிலைகளைப்பற்றி எடுத்துச்சொல்லி நியாயமான, இதுகாலவரை மறுக்கப்பட்ட உரிமைகளை அரசாங்கத்திடமிருந்து பெறுவதற்காகவே. இது நமது குற்றமா? பலவழியிலும் உரிமை இழந்த நாம் எமது உரிமைகளைப் பெறமுனைவது குற்றமென்றால் இன்று தமிழர்கள் சிங்களவரிடம் உரிமைப்போராட்டம் நடத்துவதில் என்ன அர்த்தமிருக்குமோ?

"சிறுபான்மைத் தமிழர்கள்" "பெரும்பான்மைத்" தமிழர்களிடம் எங்களின் உரிமைகளை பறிக்காதீர் உரிமைகளை அடைவதற்குத் தடைக்கற்களாக இருக்காதீர் என எத்தனை ஆண்டுகளாகக் கூறிவந்திருக்கிறார்கள்? உரிமை மறுக்கப்பட்ட மக்களுக்கு உதவிசெய், சலுகை காட்டு என்று அரசாங்கத்திடம் கேட்பது தவறா? எங்கள் உரிமைக்குத் தடையாக நிற்பவர்கள் தாங்கள் மட்டும் அரசாங்கத்திடம் உரிமைக்காக வாதாடுவதும் சலுகை கேட்பதும் நியாயமா?

மந்திரியின் வரவை எதிர்த்தவர்கள், தங்களுக்கு தேவையேற்பட்டபோது சிங்கள மந்திரிகளை வரவழைத்து மாலைசூடி, விருந்துக்கும் கேளிக்கைக்கும் இடமளித்ததை எண்ணிப்பார்க்க ஏன் மறுக்கிறார்கள்?..."" என்பதாக அவ்வறிக்கை நியாயம் கேட்டிருந்ததை இங்கு நாம் எம்.சி அவர்களை நினைவேந்தும் தருணத்தில் வலியுறுத்த வேண்டியுள்ளது.

**இலங்கைத் தலித் சமூகமேம்பாட்டு முன்னணி (பிரான்ஸ்)**
From- kailanathan duraisamy <asura57@gmail.com>

# தனி மனித உரிமையாகவும் - உடைமையாகவும், சாதியம் நவீனமாகியிருக்கின்றது

- பி.இரயாகரன்

நான் சாதி பார்ப்பதை நீ கேட்க முடியாது. எனது தனியுடைமைக்கும் சாதிய வடிவங்களைக் கையாள்வதைத் தடுக்கும் உரிமை கிடையாது என்கின்றனர். தனி மனிதன் தொடங்கி சாதியக் குழுமங்கள் வரை, முதலாளித்துவச் சுதந்திரம், ஜனநாயகம் என்ற முகமூடியை அணிந்து கொண்டு, சாதியத்தை முன்நகர்த்துகின்றனர். தனிச்சொத்துரிமையினைப் புனிதமாகக் கொண்டு, சாதியப் புனிதத்தை முன்வைப்பதுடன், அவற்றைக் கோருகின்றனர்.

"நான் சாதி பார்ப்பதில்லை" என்று கூறுவதும், "இன்று சாதி எங்கே இருக்கின்றது" என்று கேட்பதுவும், சாதியம் குறித்த சமூக உள்ளடக்கமாக முன்வைக்கப்படுகின்து. வேறு சிலர் தாங்கள் "தமிழர்கள்" என்று கூறி, அதனால் சாதியமே கிடையாது என்கின்றனர். இன்னொரு பகுதியினர் திருமணத்தில் மட்டுமே சாதி பார்ப்பதாகவும், அது சாதி அடிப்படையில் அல்ல, தமக்கு இடையில் ஒத்துப்போகும் (சாதிய) மனப்பாங்கு அடிப்படையில் என்கின்றனர்.

தங்களை "முற்போக்குவாதிகளாக, ஜனநாயகவாதிகளாக, சமூக செயற்பாட்டாளராக, மனிதாபிமானியாக.." காட்டிக் கொள்ளும் பலரின் சாதி அணுகுமுறை இவைதான். சாதி என்பது இல்லையென்றும், அது தானாக அழிந்து வரும் சமூக எச்சமாகவும் காட்டுகின்றனர். சாதி குறித்து பேசுவது தான், சாதியை உயிர்ப்பிக்கின்றது என்கின்றனர்.

வேறு சிலர் தமிழனாகிவிட்ட இனத்தில் இல்லாத சாதி குறித்து பேசுவது "சிங்களவனின் சதி" என்றும், (முன்பு போல்) இல்லாத சாதியை பேசுவது தன்னார்வக் குழுக்களின் பிழைப்புக்கான ஒன்று என்று கூறுகின்றனர்.

சாதி ஒடுக்குமுறையைக் குறித்துப் பெரும்பான்மையினரது கருத்துகள் இதில் ஏதோ ஒன்றாக இருக்கின்றது. சாதிய சமூகத்தில் வாழ்ந்தபடி, சாதிய வாழ்க்கை முறையை அனுசரித்துக் கொண்டு இருக்கின்றவர்களின் இக் கண்ணோட்டமே, சாதிய ஒடுக்குமுறையைத் தக்க வைக்கின்றது.

சாதியை நாங்கள் திருமணத்தில் பார்க்கின்றோம் மற்றும்படி சாதி இல்லை என்று பெரும்பான்மை கூறுவது உண்மையா எனின் இல்லை. இன்று தமிழ்க் கலாசாரத்தின் பெயரில் நடைபெறும் சடங்குகளும், சம்பிரதாயங்கள், வாழ்க்கை முறைகளும் எதைக் குறிக்கின்றன? காலாகாலமாக இருந்து வந்த சாதியப் பண்பாட்டு, கலாசார வாழ்க்கைக் கூறுகளை, அடிப்படைகளைக் கொண்ட, சாதிய வாழ்க்கைமுறையையே கட்டியமைக்கின்றது. இந்தப் பண்பாட்டு ரீதியான சாதிய வாழ்க்கை முறையே, இந்து மத சாதிய வாழ்க்கை முறைக்குள், சமூகத்தை இழுத்து வீழ்த்துகின்றது.

உதாரணமாக 1980 களில் பரந்தளவில் மாட்டு இறைச்சி உண்ட யாழ் சமூகம், இன்று மாட்டு இறைச்சி உண்பதை இழிவாக கருதுமளவுக்கு, சமூகத்தின் சாதி மனப்பாங்கு மேலோங்கி வருகின்றது. இது போன்று புதுப்புதுச் சாதி ஆகம

விரதங்கள் தொடங்கி, புதிதாக தோன்றும் சாதி ஆகமக் கோயில்கள் வரை, சாதியமே கோலோச்சி வருகின்றது. ஒடுக்கப்பட்ட சாதிகள் ஒடுக்கும் சாதிக்கு போட்டியாக கட்டும் கோயில்கள் கூட, சாதி ஆகம விதிப்படி கோயிலுக்கு வெளியில் ஒடுக்கப்பட்ட சாதிகளை நிறுத்தி விடுகின்றன.

சாதிய ஊர்களுக்கும், சாதிக் கோயில்களுக்கும், சாதி ரீதியான இழிவான தொழில்களுக்கும், சாதி உறவுகளுக்கும் சாதிப் பந்திகளுக்கும் பஞ்சமில்லை. ஊர் நிலத்தை விற்கும் போது சாதி பார்த்து விற்கின்றான் தமிழன். சாதி கடந்து நுழையும் கோயில் பந்திகளில், சாதி பார்த்துச் சபையில் அமர்த்துகின்றான். இப்படிச் சாதி என்பது, தமிழனின் யாழ் மையவாதச் சிந்தனை முறையிலும், வாழ்க்கை முறையிலும் புளுத்துக் கிடக்கின்றது.

ஊருக்கு வெளியில் வெள்ளாளன் வாழ்வதில்லை. அவன் கோயிலைச் சுற்றித் தான் வாழ்கின்றான். எந்த நகரச் சுத்தி தொழிலாளியாகவும் வெள்ளாளன் இருப்பதில்லை. ஒடுக்கப்பட்ட சாதிகளுக்கென்று, குடியிருப்புகள், தொழில்கள் சாதி ரீதியாக வரையறுக்கப்பட்டு, சாதிச் சமூகமாக ஒருங்கிணைக்கின்றது.

தமிழனின் இந்தச் சாதிய அளவுகோல்களின் அடிப்படையில் உருவானதே இனத் தேசியம். அதாவது தமிழன் என்ற பெயரில் உருவானது சாதித் தேசியம். சாதியை ஒழிக்கவில்லை. மாறாக ஒடுக்கப்பட்ட மக்கள் மேலான ஒடுக்கும் சாதியத்தின் மேலாதிக்கத்தை, தேசியத்தை முன்னிறுத்தித் தொடர்ந்தது. அதாவது சாதித் தேசியம் மூலம் 1960 களில் தொடங்கிய சாதிப் போராட்டத்தின் அரசியல் நீட்சியை இல்லாதாக்கியது.

இனவாத சாதியத் தேசியத்தின் மூலம் உருவான தலைவர்கள், ஒடுக்கும் சாதிக்கே தலைமை தாங்கினர், தலைமை தாங்குகின்றனர். இந்த வகையில் ஒடுக்கப்பட்ட மக்கள் ஒடுக்கும் சாதித் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதே, தமிழ் தேசியத்தின் அரசியலாக இன்னமும் நீடிக்கின்றது.

தமிழ் கலாசாரம் குறித்து!

தமிழனின் கலாசாரமென்பது சாதியம். கோயில்கள் கலாசார மையமாக இருப்பதால், கோயில்களில் சாதி அடிப்படைவாத நடைமுறைகள் இறுக்கமாகி வருகின்றன. அவர் அவர் இடத்தில் நிற்கவும், வாழவும், சாதிய "தமிழர் பண்பாட்டை" முன்னிறுத்தும் அதேநேரம், அதைக் கடைப்பிடிக்கக் கோருகின்றனர்.

"தமிழனின்" கலாசாரப்படி ஊர்கள் சாதிய அடிப்படையில் கலக்கப்படக் கூடாது. ஊருக்குள் வந்த மற்றைய சாதிகளை விரட்ட வேண்டும். ஒடுக்கும் சாதி அல்லாதவருக்கு காணிகள் விற்கப்படக் கூடாது. இதைத் "தமிழன்" கலாசாரமாக கடைப்பிடிக்குமாறு, ஊர்கள், ஊர்ச் சங்கங்கள் கோருகின்றன.

தமிழனின் கலாசாரம் சாதியத் திருமணங்களை முன்னிறுத்துகின்றது. கலப்புத் திருமணங்களைத் தமிழ்க் கலாசாரத்துக்கு எதிரானதாகக் காட்டுகின்றது. பேசிச் செய்யும் சாதியத் திருமணத்தைத் தமிழ்க் கலாசாரமாகவும், "காதல்" திருமணத்தைத் தமிழ் கலாசாரமல்ல என்றும் கூறி, அதைத் தடுக்கக் கோருகின்றனர்.

சாதிய சமூக உரிமைகளை முன்னிறுத்தி, தனிமனித உரிமைகளையும் உணர்வுகளையும் கட்டுப்படுத்தக் கோருகின்றனர். தமிழனின் ஆணாதிக்கக் கலாசாரத்தை உயர்த்தி, பெண்களின் உரிமைகளை மறுக்கின்றனர்.

இப்படிப் பற்பல. யாழ் பல்கலைக்கழகம் முதல் வடக்கு முதலமைச்சர் வரை கலாசாரம் சார்ந்து முன்வைத்த உள்ளடக்கம் இவைதான். இன்று கலாசாரம் குறித்துப் பேசுகின்றவர்கள் ஏகாதிபத்தியப் பண்பாட்டுக் கலாசாரக் கூறுகளைத் தமதாக்கிக் கொண்டு, அதேநேரம் பெண்கள் சார்ந்த ஏகாதிபத்தியக் கலாசாரக் கூறுகளை எதிர்ப்பதன் மூலம், நிலப்பிரபுத்துவப் பெண்ணாகப் பெண்ணை முன்னிறுத்துவதையே, இவர்கள் முன்வைக்கும் "தமிழ்க் கலாசாரமாகும்".

ஆணாதிக்க மற்றும் சாதிய அடிப்படையில் சடங்குகள் சம்பிரதாயங்கள் செய்வதைத் தமிழன் பண்பாடாகவும், இதன் அடிப்படையில் ஒழுக மறுக்கின்றவன்மேல் வன்முறையை முன்வைக்கின்றது. இதைத்தான் தமிழ் மக்கள் பேரவை தொடங்கி யாழ் பல்கலைக்கழகம் வரை கலாசாரமாக முன்வைக்கின்றனர்.

பெண்கள் "அடக்க ஒடுக்கமாக" ஆணுக்குக் கட்டுப்பட்டு வாழ்தல், குழந்தை வளர்ப்பு, சமையல், ஆணுக்குச் சேவை செய்தல், சாதிய மதக் கலாச்சாரத்தை கொண்டு ஒழுகுதல்.. இதையே பெண் தன் கடமையாக, வாழ்க்கையாகக் கொண்டு வாழ்தலையே "தமிழன் கலாசாரம்" கோருகின்றது.

ஒடுக்கப்பட்ட சாதிகள் அவரவர் சாதிய எல்லைக்குள், அவரவர் சாதியக் கடமையைச் செய்து வாழ்வதை உறுதி செய்து வாழ்வது என்பதைத்தான் "தமிழன் கலா சாரம்" முன்வைக்கின்றது.

நிலப்பிரபுத்துவ சாதிய கலாசாரத்தையும், ஏகாதிபத்திய நுகர்வுக் கலாசாரத்தையும் அடிப்படையாகக் கொண்ட, சாதிய ஆணாதிக்க கலாசாரத்தைத் தாண்டி "தமிழன் கலாசாரம்" என்று எதுவும் கிடையாது. அதாவது ஒடுக்கப்பட்ட மற்றும் உழைக்கும் மக்களின் கலாச்சாரத்துக்கு எதிராக, தமிழனின் சாதியக் கலாசாரம் என்பதே, இதன் பின்னுள்ள உண்மைகளும் வக்கிரமுமாகும்.

### *அரசியலாகச் சாதிக் கலாசாரம்*

யுத்தத்தின் பின் வடக்கில் அரசியல் "கலாசாரம்" குறித்து அதிகம் பேசப்படுகின்றது. "கலாசாரத்தைப்" பேணுதலும், பாதுகாத்தலுமே தமிழனின் வாழ்வியலாக முன்வைக்கப்படுகின்றது. இதன் மூலம் தமிழனின் சாதிக் கலாசாரத்தை மீள வீரியமாக்குவதே, தமிழனின் அரசியலாக மாறி வருகின்றது.

இதுவரை காலமும் தமிழ் இனவாதத்தை முன்வைத்த அரசியல் தலைமைகள், இன்று "கலாசாரத்தை" முனைப்புடன் முன்னிறுத்தத் தொடங்கியுள்ளனர். வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் பேரவையின் ஐந்தாவது கூட்டத் தொடர், முன்வைத்துள்ள மூன்று பிரேரணைகளில் ஒன்று, "கலாசாரத்தை" வீரியமாக்குவதைப் பற்றியது.

போராட்டத்தில் தோற்றுப்போன ஆனால் அரசியல்ரீதியாகத் தோற்காத தமிழ் இனவாத அரசியல் "கலாசார" வடிவம் பெற்று வருகின்றது. சமூக ஆதிக்கம் பெற்ற இந்த "கலாசார" அரசியலின் சாரமென்ன? "கலாசாரம்" என்பது வாழ்க்கை முறை. வாழ்க்கை என்கின்ற போது சடங்குகள், சம்பிரதாயங்களில் தொடங்கிச் சமூக விழுமியங்கள் வரை அதற்குள் அடங்கும். சடங்குகள் சம்பிரதாயங்கள் சாதியை அடிப்படையாகக் கொண்டு இருக்கின்றன.

அதாவது "தமிழர்" சாதிய சமூகமாக இருப்பதுடன், பிறப்பிலேயே "தமிழன்" சாதியில் தான் பிறக்கின்றான். சாதிய அடிப்படையில் தான் வழிபாட்டு முறையைக் கொண்டவர்கள். தமிழர் அனைவருக்குமான சாதி கடந்த பொது வழிபாட்டு முறையையோ, வாழ்க்கையையோ கொண்டு இருப்பது கிடையாது. சாதிக்கொரு வழிபாடும், சாதி வாழ்க்கை முறையும் தான் இருக்கின்றன.

திருமணங்கள் சாதியத்துக்குள் நடக்கின்றன. ஆக இப்படி வேறுபட்ட வாழ்க்கை முறையும், அதன்படி ஒழுகுவதுமே தமிழன் முன்வைக்கும் "கலாசாரம்". இங்கு கலாசாரம் சாதிக்கொரு கலாசாரமும், சாதி இந்துகள் முன்வைக்கும் சாதியக் கலாசார வாழ்வியல் ஒழுங்கைப் பேணுவதையே தமிழ் கலாசாரம் என்கின்றனர். இந்த வகையில் இதை முன்னிறுத்தும் இந்து மதமே, சாதிய மதமாக இயங்குகின்றது.

இந்து மதமே சாதியம் தான். இந்து மதத்தில் பிறக்கும் போது, சாதி அடையாளத்தை இட்டு விடுகின்றது. வளர்ப்பு முறை தொடங்கி வாழ்க்கை முறை வரை, அனைத்தும் சாதியாக இருக்கின்றது.

இந்த வகையில் இந்துமதம் சாதியத்தை அடிப்படையாகக் கொண்டதாக, யாழ் மேலாதிக்கச் சமூகமாகவும் இருக்கின்றது. சாதியத்தின் இறுக்கமான அமைப்பு முறையைப் பேணுகின்ற தரப்பு, மேலாதிக்கம் கொண்ட சமூக அடுக்காக இருக்கின்றது. இங்கு சாதிய யாழ் மேலாதிக்கச் சமூகம் என்கின்ற போது, வெள்ளாளிய சிந்தனை மற்றும் வாழ்க்கை முறையாகவும், அதைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வெள்ளாளிய சாதிய இந்துக்களையும் குறிக்கின்றது. சாதிய வெள்ளாளியமும், இந்துத்துவமும் ஒன்றையொன்று சார்ந்து இயங்குகின்றது. இதில் ஒன்றைக் கைவிடுவதன் மூலம், மற்றதை துறப்பதில்லை.

இந்துக்களாக இருக்கக் கூடிய மீனவர்கள், கூலி விவசாயிகள், சலவைத் தொழிலைச் செய்கின்றவர்கள், முடி திருத்தும் கலைஞர்கள், பறையடிக்கும் தொழிலைச் செய்பவர்கள், குயவர்கள், கள் இறக்கும் தொழிலாளர்கள்... என்று சமூகத்தில் வெவ்வேறு தொழிலைச் செய்கின்றவர்களை, சாதிகளின் பெயரால் அடையாளப்படுத்தி, அவர்களைத் தமக்குக் கீழானவர்களாகச் சாதிய இந்துத்துவம் வைத்திருக்கின்றது. இந்துக்கள் எல்லாம் சமமான இந்துக்கள் அல்ல. மாறாக சமமற்றதாக, சாதியம் வரையறுக்கின்றது. இதில் சாதி "வெள்ளாளியமானது", பெரும்பான்மை வெள்ளாளியத்தையும் தனக்கு கீழ் வைத்திருக்கின்றது.

மாட்டை உண்ணுகின்ற இந்துக்களையும், மாமிசம் உண்ணுகின்ற பெரும்பான்மையான தமிழர்களையும், தனக்கு கீழாக, இழிவான சமூகமாகச் சாதிய வெள்ளாளியம் தாழ்த்தி வைத்திருக்கின்றது. "தீட்டு", "புனிதம்".. போன்ற சாதி இந்துக்களின் வாழ்க்கை நடைமுறைகளை இந்துத்துவமாக முன்னிறுத்தி, இதன்படி ஒழுகும் தம்மை சாதி இந்துக்களாகப் புனிதப்படுத்தி, இப்படி ஒழுகுவதைத் தமிழன் "கலாசாரமாகவும்" வரையறுத்துக் காட்டுகின்றான்.

பெண்களின் மாதவிடாயைத் "தீட்டாகவும்", இந்துச் சடங்குளைச் செய்ய முடியாத வகையில் பிறப்பிலேயே பெண் குறைபாடு கொண்டவளாக இந்துமதம் கருதுவதுடன், ஆணுக்கு அடிமையாகப் பெண்ணை வைத்திருக்கின்றது. இது தான் தமிழனின் இந்துத்துவக் கலாசாரம். இதைத்தான் வெளியில் இருந்து வந்த கிறிஸ்துவ மதமும் உள்வாங்கி, அதுவும் சாதிய மதமாக தன்னைத் தக்கவைத்து இருக்கின்றது.

இந்தச் சாதிய சமூகம் தன் மீதான இனவொடுக்குமுறைக்கு எதிராக, தமிழ் தேசியத்தை முதன்மையான அரசியற் கூறாகக் கொண்டு இயங்கியது. ஒடுக்கப்பட்ட இனமாகத் தன்னை முதன்மைப்படுத்திக் கொண்ட சமூகம், தனக்குள் ஒடுக்கும் சாதியத்தைக் கொண்டு இருந்தது.

இந்த அரசியல் பின்புலத்தில் இருந்த சாதியமும், அதை அடிப்படையாக கொண்ட இந்துமதமும், இன்று இந்துத்துவமாக மேலெழுந்து வீரியம் பெற்று வருகின்றது. இன்று இந்துத்துவம் அரசியல் கூறாக மேலோங்கி, சாதியமே முதன்மையான வடிவம் பெறுகின்றது. அது வெளிப்படும் வடிவம் தான் சாதிமான்கள் சொல்லும் "கலாசாரம்". இங்கு "கலாசாரம்" என்பது இந்துத்துவமாகவும், இந்துத்துவம் என்பது இயல்பிலேயே சாதியமாகவும், சாதியமென்பது சாதி இந்துக்களின் அதிகாரமாகவும், அதன் பழக்கவழக்கமாகவும் இருக்கின்றது.

மீன்பிடித்தல் என்பது "இந்து புனிதத்துக்கு" முரணானதாக இந்துத்துவ அரசியல் முன்வைக்கின்றது. சாதி இந்துத்துவம் மாமிச உணவை முன்வைத்து, மீன்பிடிக் கலாசாரத்தையும், வாழ்க்கை முறையையும், இந்து கலாசாரத்துக்கு முரணானதாகக் காட்டுகின்றது. இவை சாதி அடிப்படையில் தீட்டுக்குரியதாகவும், இந்து புனிதத்துக்கு விரோதமாகவும் காட்டுகின்றது.

இந்தியாவில் மாடு புனிதமானது என்று கூறி, மாடு உண்பதை தடை செய்து மனிதனைக் கொல்லும் அதே சாதி வெறி இந்துத்துவமே யாழ்ப்பாணத்தில் ஆட்டம் போடுகின்றது. இந்தியாவின் இந்துத்துவம் இலங்கையில் புகுத்தப்படுகின்ற பொதுவான சர்வதேச அரசியற் பின்னணியில், இதைக் காணமுடியும்.

"மீன்பிடி" இந்து சாதிய வாழ்க்கை முறைக்கு முரணானதாக, இந்துத்துவ நிகழ்ச்சிநிரலை, தமிழனின் பெயரில் வடமாகாண முதலமைச்சரால் முன்வைக்க முடிகின்றது என்றால், தமிழன் சாதிய சமூகமாக இருப்பதாலேயே.

மேற்கு சார்பான நவதாராளவாத உலகமயமாதலுடன் அரசு கொண்டுள்ள உறுதிப்பாடு, சாதிய அடிப்படையிலான இந்துத்துவ நிகழ்ச்சிநிரலைக் கொண்டு ஒத்தியங்கும் கூட்டமைப்பு, பிற இன மக்களின் இருந்து இனரீதியாகத் தமிழ் மக்களைப் பிரித்து வைத்திருக்க முடியாது.

மக்களை இன ரீதியாகப் பிரித்து வைத்திருக்கவே இந்துத்துவம் முன்வைக்கப்படுகின்றது. இந்துத்துவம் என்பது சாதியை முதன்மையாகக் கொண்டு, சமூகத்தைப் பிரித்து விடுவதே. சாதிக்குக் கோயில்களைக் கட்டுவதன் மூலம் அடையாளத்தைத் தேடும் புலம்பெயர் சாதியவாதிகளின் இந்துத்துவ நடவடிக்கைகள், சாதி இந்துத்துவத்தின் பொது நிகழ்ச்சிப் போக்கில் ஒரு அங்கமாக இயங்குகின்றது.

இந்துத்துவ நிகழ்ச்சிநிரல் சாதியாகவும், சாதிய நிகழ்ச்சிநிரல் இந்துத்துவமாகவும் இருப்பதுடன், மக்களைப் பிளக்கின்றது. இந்த அடிப்படையில் கிறிஸ்துவ மதத்திலும் சாதியம் இயங்குகின்றது. சாதிய-மத முரண்பாட்டைக் கொண்டு மக்களை பிரித்தாளும் நிகழ்ச்சிநிரல் தான், தமிழர்களின் மேலான இன்றைய அரசியலாகி வருகின்றது. இதற்கு எதிரான ஒருங்கிணைந்த நடைமுறைப் போராட்டம் தான், இன்று எமது அரசியல் தெரிவாக இருக்க முடியும்.

*நவீனமாகிவிட்ட சாதியம் குறித்து!*

நவீன நவதாராளவாத சாதியத்தை, அதன் சமூகப் பொருளாதார உள்ளடக்கத்தில் இருந்து விளங்கிக் கொண்டு போராடாத வரை, சாதியம் குறித்த சரியான போராட்டத்தை நடத்த முடியாது. குறிப்பாக 1960 களில் நிலவிய சமூகப்பொருளாதார உள்ளடக்கத்திலான அன்றைய சாதிய அடிப்படைகளைக் கொண்டு, இன்றைய சாதியை விளங்கிக் கொள்ள முடியாது. அதாவது கடந்தகாலத்தில் பருப்பொருள் வடிவிலான சாதியத்தையும், அதன் சிந்தனை முறைமையைக் கொண்டு நவீன சாதியத்தை விளக்கவோ போராட்டத்தை நடத்தவோ முடியாது.

இன்று சாதியம் குறித்து அறிவுபூர்வமாக இருப்பதெல்லாம் பழைய சாதிய வடிவமே ஒழிய. நவீன சாதிய வடிவம் குறித்த அறிவியல் அல்ல. இந்தச் சிந்தனைமுறை பழைய சாதிய வடிவ எச்சங்களை மட்டும் முன்னிறுத்தி, சாதிக்கு எதிராகக் குறுகிய அரசியலை பேசுவதுடன், சாதி குறித்த அறிவும் போராட்டமும் முடிந்து போகின்றது.

1960 களில் பொது இடங்களைப் பயன்படுத்த முடியாத தீண்டாமை அடிப்படையிலான சாதிய முறைமையை அடிப்படையாகக் கொண்டு, சாதியம் விளங்கிக் கொள்ளப்பட்டது. தீண்டாமையிலான அன்றைய சாதிய சமூகக் கொடுமை மீதான அன்றைய போராட்டங்களானது, அந்த முறைமையைக் கிட்டத்தட்ட இல்லாதாக்கியது. இன்று அவற்றையும் அதன் எச்சசொச்சங்களைக் கொண்டு சாதியை விளங்கிக் கொள்ள முனைவதும் எதிர்ப்பதுமே, குறைந்தபட்ச சாதி குறித்த பொதுப்புரிதலாக காணப்படுகின்றது.

கடந்த இந்தச் சாதிய வரலாற்றுப் பின்னணியும் - சிந்தனை முறையும் தான், "நான் சாதி பார்ப்பதில்லை - எங்கே சாதி பார்க்கின்றார்கள்" என்று கூறுவதற்கும் - கேட்பதற்கும், அதையே "முற்போக்கான" அரசியல் அடையாளமாக முன்வைக்கக் காரணமாகவும் - தூண்டுதலாகவும் இருக்கின்றது. இதேபோன்று "இன்று எங்கே சாதி இருக்கின்றது" என்று இயல்பாகக் கேட்பது, இன்று பொதுப்புத்தியாக மாறி இருக்கின்றது. இப்படி ஒப்பீட்டுரீதியான பொதுப்புத்தியும் கடந்தகால எச்சங்களை முன்னிறுத்தியுமே சாதி குறித்த புரிதல் காணப்படுகின்றது.

ஒடுக்கும் சாதிய சமூக அமைப்பில் சாதிச் சமூக உறுப்பினராக வாழ்ந்தபடி, சாதி குறித்து இப்படித்தான் விளங்கிக் கொள்கின்றனர். மறுபக்கம் பிறப்பை அடிப்படையாகக் கொண்ட இந்த சாதியச் சமூக அமைப்பில், ஒடுக்கப்பட்ட சாதிகளில் பிறக்கின்றவர்கள் ஒடுக்கும் சாதிய வாழ்க்கை முறையிலான வாழ்க்கை முறைக்குள் வாழுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டு இருக்கின்றனர். அதேநேரம் சாதி ரீதியாக ஒடுக்கப்படும் சாதிய உள்ளடக்கத்தை உணர்பவர்களால், சாதியத்தின் உள்ளடக்கத்தை (பருப்பொருளை) இனம் காட்ட முடியாதவராக இருக்கின்றனர்.

ஏங்கே? எப்படி? எந்த வடிவில்? சாதி இயங்குகின்றது என்பதை, உள்ளடக்க ரீதியாக விளக்கவும், விளங்கிக் கொள்ளவும் முடிவதில்லை. சாதிய ஒடுக்குமுறையை முன்வைத்து அணிதிரளும் வண்ணம், பௌதிகப் பொருளை இனம்காட்ட முடிவதில்லை. குறிப்பாகத் திருமணங்களில் சாதியம் நிலவுவதை அவரவர் தனிப்பட்ட உரிமையாகவே முன்னிறுத்துகின்றனர்.

மறுபக்கத்தில் 1960 களில் சாதிக்கு எதிராகப் போராடியவர்கள், சாதி ஒழிப்பின் அடிப்படையில் கலப்புத் திருமணங்களை ஊக்குவிக்கவில்லை. இதற்கான அவர்களின் அன்றைய காரணகாரிய அடிப்படைகளைக் கடந்து, சாதியை எதிர்கொள்ள முடியாதவராக இருக்கின்றனர்.

சாதியம் குறித்த பழைய இடதுசாரி உள்ளடக்கத்தில் தொங்கிக் கொண்டு நிற்பவர்கள் முதல் சாதி ஒடுக்குமுறையை முன்னிறுத்தித் தலித்தியத்தை முன்வைப்பவர்கள் வரை, கடந்தகால அடிப்படைகளில் தான் சாதியத்தை விளங்கிக் கொண்டு, அதையே சாதியமாகக் காட்ட முனைகின்றனர்.

1960களுக்கு பின்பாக 60 வருடங்கள் கடந்துவிட்ட இன்றைய நிலையில், உலகப் பொருளாதாரம் முதல் இலங்கைச் சமூகப் பொருளாதாரம் வரையான அனைத்தும் பாரிய மாற்றத்துக்கு உள்ளாகிவிட்டது. வாழ்க்கைமுறைகளும், வாழ்வு குறித்த கண்ணோட்டமும் மாறிவிட்டது.

இப்படி 60 வருடங்களில் மாறிவிட்ட இந்தச் சமூகப் பொருளாதார மாற்றங்களுடன், சாதியம் எப்படி இயங்குகின்றது என்ற அடிப்படைக் கேள்விகள் மூலம், சாதியம் குறித்த அறிவும் - புரிதலும் இன்றி நவீன சாதியத்தை விளங்கிக் கொள்ள முடியாது.

1960 களில் இருந்த சாதிய அடிப்படைக்கான சமூகப் பொருளாதார (பொருள்முதல்வாத) உள்ளடக்கத்தை, நவதாராளவாத சமூகப் பொருளாதாரம் தகர்த்து விட்டது. இன்று பண்பாட்டு, கலாசார வடிவில் புரிந்து கொள்ளும் சாதியமானது, நவதாராளவாத சமூகப் பொருளாதார உள்ளடக்கத்துடன் எப்படி எந்த வடிவில் இயங்குகின்றது?

இன்றைய நவதாராளவாதமாகவுள்ள நவீன சாதியத்தை, வெறும் பண்பாட்டுக் கலாசார வடிவிலானதாகக் குறுக்கிவிட முடியுமா? இந்துமதச் சாதியச் சடங்குளாகவும், சம்பிரதாயமாகவும் சாதியை விளக்கிவிட முடியுமா? சாதியை வெறுமனே சிந்தனை மற்றும் பண்பாட்டு மட்டத்தில் நிலவுவதாகக் குறுக்கிவிட முடியுமா? சாதியத்தை அறிவுசார்ந்த ஒன்றாக வரையறுத்துவிட முடியுமா?

1960களில் சாதிக்கு எதிரான போராட்டத்தின் 50 ஆண்டு நினைவை முன்னின்று நடத்துகின்றவர்கள், இன்றைய சாதி குறித்த கண்ணோட்டமாக எதை முன்வைக்கின்றனர்? அன்று சாதிக்கு எதிராகப் போராடிய கிராமங்களிலோ-போராட்டத்தில் ஈடுபட்டவர்களை முன்னிறுத்தியோ, இந்த நிகழ்வுகள் நடத்தப்படுவதில்லை ஏன்? சாதிப் போராட்டம் நடந்த கிராமங்கள் தொடர்ந்தும் சாதியக் கிராமங்களாகவே தொடரும் பின்னணியில் இருந்து, 50 ஆண்டு நினைவுகளும் - கருத்துகளும் முன்னெடுக்கப்படுவதில்லையே! ஏன்?

ஆக, சாதியைப் புத்திஜீவிகளின் அறிவு சார்ந்த ஒன்றாகக் குறுக்கி, அதையே நவீன சாதியம் குறித்த புரிதலாக மாற்றிவிடுவதைக் காணமுடிகின்றது.

இன்றைய சமூகப் பொருளாதார உள்ளடக்கத்தை (பொருளை முதன்மையாகக்) அடிப்படையாகக் கொண்டு சாதியை பகுத்தாராய்வதன் மூலமே, யாழ் மையவாத வெள்ளாளிய சாதியத்தின் இன்றைய பரிணாமத்தை விளங்கிக் கொள்ள முடியும். அதேநேரம் இந்த யாழ் மையவாத வெள்ளாளிய சாதியமே தமிழ் தேசியமாகவும் - நவதாராளவாத ஏகாதிபத்திய பொருளாதார உள்ளடக்கமாகவும் கூட இயங்குகின்றது. இப்படிப் பிரிக்க முடியாத வண்ணம்

ஒன்றையொன்று சார்ந்து ஒரே அச்சில் இயங்கும் அதேநேரம், இதைப் பிரித்து அணுகுவதன் மூலமே சாதியத்தைத் தகர்த்தெறிய முடியும்.

இந்த வகையில் நவீன யாழ் மையவாத வெள்ளாளிய சாதியமானது, நவதாராளவாதமாக ஒருங்கிணைந்து நிற்கின்றது. எப்படி காலனிய காலத்தில், காலனிய சமூகப் பொருளாதாரத்துடன் ஒன்றுபட்டுச் சாதியம் இயங்கியதோ, அப்படித்தான் இன்றும் தன்னை நவீனமாக ஒருங்கிணைத்து நிற்கின்றது.

முன்பு நிலப்பிரபுத்துவ - அரை நிலப்பிரபுத்துவ சமூகப் பொருளாதார உள்ளடக்கத்துடன் இணைந்த, முதலாளித்துவ தரகு முதலாளித்துவ அடிப்படையிலான காலனிய - அரைகாலனிய தனியுடமையிலான சமூகப் பொருளாதரக் கட்டமைப்பில், சாதிய சமூக பிளவுகளை முன்னிறுத்தி உற்பத்தி - உழைப்பு பிரிவினையைக் கொண்டும், சாதியக் கூலி முறைமையைக் கொண்டும் சாதி இயங்கியது. இதன் மூலம் சாதியை பிரித்துக் கையாளவும் - இயங்கவும் முடிந்தது.

இன்று இலங்கை நவதாராளவாத சமூகப் பொருளாதாரமாகிய நிலையில், பழைய சாதிய உற்பத்தி முறைமைகளும் - உழைப்புக் கூறுகளும் - சாதி வடிவிலான கூலி முறைமைகளை ஒட்டுமொத்தமாக இல்லாதாக்கியது. அதாவது உலகமயமாகிவிட்ட நவதாராளவாதமானது குறுகிய கண்ணோட்டங்களை அடிப்படையாக கொண்ட சந்தைப் பொருளாதார சமூக வாழ்க்கை முறைமைகளை ஒழித்துக்கட்டி விடுகின்றது. மாறாக ஒற்றை நுகர்வுப் பண்பாட்டைக் கொண்ட மனித சமூகத்தையே, உலக சந்தை உருவாக்குகின்றது. இங்கு சாதியப் பாகுபாடுகள் கொண்ட சமூகப் பிளவுகள், உலக சந்தைக்கு ஏற்ப இருக்கவும் - நீடிக்கவும் முடியாது போகின்றது.

அதேநேரம் ஜனநாயகம் குறித்தும் - மனித உரிமைகள் குறித்துமான சமூகங்களின் பொது விழிப்புணர்வும், போராட்டங்களும், சமூகப் பிளவிலான முந்தைய சாதிய வடிவங்களை தொடர முடியாததாக்கி விட்டது.

சாதியின் வெளிப்படையான அடையாளங்களும், வாழ்க்கை முறைகளும் அழிந்துவிட, தனிமனிதனின் அகக் கூறாகச் சாதி ஒடுங்கியது. அதாவது சாதி எங்கிருந்து, ஏன் தோன்றியதோ - அதன் மூல வடிவத்துக்குள் மீள தன்னை தக்கவைத்துக் கொள்ளத் தொடங்கியுள்ளது.

மனித உழைப்பைச் சுரண்டும் தென்னாசிய வடிவமே, சாதியத்தின் வரலாறு. இந்த வகையில் இந்தியாவின் தனியுடமைக் கண்ணோட்டமாகவே சாதியம் தோன்றியது. அதாவது தனிமனிதச் சொத்துடைமை என்ற தனியுடமைக் கோட்பாட்டை, பிறப்பிலான ஒரு சமூகப் பிரிவுக்கான சொத்துடைமையிலான உரிமையாக வரையறுத்துக் கொண்ட போது, அது சாதியமானது. உலகெங்கும் பரம்பரை பரம்பரையாக நீடித்து வந்த தொழில் சார்ந்த வாழ்க்கை முறைமை அதாவது வர்ணமுறைமை தனியுடைமையாகிய போது சாதி தோன்றியது. தொழிலை பிறப்பிலான பரம்பரை ரீதியான தனியுடமையாக வரையறுத்துக் கொண்ட போது, சாதியம் தோன்றியது. இதுவே சமூகத்தின் பொதுச் சாதியச் சட்டதிட்டமாக மாறியதுடன், இதை நியாயப்படுத்தும் கோட்பாடுகள் முதல் மதம் வரையான அனைத்து, வெளிப்படையான பண்பாட்டு கலாசார சாதிய வடிவங்களாகவும், தீண்டாமை முதல் பல்வேறுவிதமான சாதியப் பரிணாமங்களுக்கு வித்திட்டது.

தனிச்சொத்துடைமையே சாதியின் மையமாக இருக்க, அதைச் சுற்றி இயங்கிய கடந்தகாலச் சாதிய வேறுபாடுகளும் - முரண்பாடுகளும், நவதாராளவாதத்தின் வருகையுடன் முடிவுக்கு வந்திருக்கின்றது.

சாதியம் தன் மூல வடிமான தனியுடமை வடிவத்துக்குள் ஒடுங்கிக் கொண்டு இயங்குகின்றது. சாதியத்தைத் தனிமனித உரிமையாகவும், தனிமனிதத் தேர்வாகவும் முன்னிறுத்திக் கொண்டு, தன்னை நவீனமாக்கியுள்ளது. தனிமனித சொத்துடைமை போல், சாதியத்தைத் தனிமனித வாழ்க்கை நெறியாக முன்வைக்கின்றது. சாதியத்தைத் தனிமனித உரிமையாக முன்வைக்கின்றது.

தனியுடமைச் சமூக அமைப்பில் சொத்துடமையானது "ஜனநாயகம் - சுதந்திரத்தின்" தனிமனித தேர்வாகவும் - உரிமையாகவும் முன்னிறுத்துகின்ற அதே பொருளில், சாதியமும் தனிமனித தேர்வாக உரிமையாகத் தகவமைத்து இயங்குகின்றது.

சமூக பொருளாதாரக் கட்டமைப்பு முற்றுமுழுதாக நவதாராளவாத சமூகப் பொருளாதாரமாக மாறிவிட்ட சாதிய சமூக அமைப்பில், தனியுடைமைக் கண்ணோட்டத்திலேயே சாதியம் இயங்க முடிகின்றது. உதாரணமாக ஒடுக்கும் - ஒடுக்கப்பட்ட இரண்டு சாதிப்பிரிவுகளும், தங்கள் தனியுடமை சார்ந்து சாதி அடிப்படையிலான கோயில்களைக் கட்டுவதும் - சாதி அடிப்படையில் பூசை செய்வதும், இந்த நவதாராளவாத தனியுடமை கண்ணோட்டத்தின் பின்னணியில்தான்.

இந்த வகையில் சாதியப் போராட்டமானது நவதாராளவாத சமூக பொருளாதாரத்துக்கு எதிரானதாகவும், மறுபக்கத்தில் சாதிய அடிப்படையிலான தனிமனித உரிமை - தெரிவு - வாழ்க்கைமுறைக்கு எதிரானதாகவும் நடத்தப்பட வேண்டும். இந்தத் தனியுடைமையிலான (சாதிக்) கோயில்கள் முதல் சாதிக் கிராமங்கள் வரை இயங்குவதும், சடங்கு சம்பிரதாயங்கள் என்று எங்கும் தனிமனித சாதியத்தெரிவிலான உரிமையில் தலையிட முடியாது என்ற தனியுடைமைக் கண்ணோட்டம் மூலமே, சாதியம் இயங்குவதை இனம் காணவேண்டும்.

பொதுவான சமூகக் கண்ணோட்டத்தை மறுக்கும் தனிமனித சாதியக் கண்ணோட்டத்திலான சமூக பொருளாதார இயங்குதளம், பொதுவுடைமைக்குப் பதில் தனியுடமை என்ற அடித்தளத்தில் இயங்குவதைக் காணமுடியும்.

தனிமனித உரிமையில் சமூகம் தலையிட முடியாது என்ற தனியுடமைக் கண்ணோட்டத்தில், யாழ் வெள்ளாளியச் சாதியம் இன்று இயங்குவதைக் இனம் கண்டு கொள்வதன் மூலமே, சாதியப் போராட்டத்தை நடத்த முடியும்.

பி.இரயாகரன்
16.07.2017
From- kailanathan duraisamy <asura57@gmail.com>



# M.C. சுப்பிரமணியம் என்றோர் விடிவெள்ளி...

இ. சிவநாயகம்.
-மானிட ஆர்வலர்-
அளவெட்டி இலங்கை.

சமூகப் பிற்படுத்தலும் ஒடுக்குமுறையும் வறுமையின் கொடுமையும் வியாபித்திருந்த காலகட்டத்தில் இவற்றுக்கான விடிவுபற்றித் தனது வாலிபப்பருவத்தின் ஆரம்பத்திலேயே 1940 களில் சிந்திக்கத் தொடங்கியது மட்டுமல்ல செயற்படவும் ஆரம்பித்த ஓர் புதுமையாளன்தான் எம்.சி. சுப்பிரமணியம் அவர்கள் என குறிப்பிடுவது மிகவும் பொருத்தமாக இருக்கும். 20ம்நூற்றாண்டின் முற்பகுதியிலும் அதற்கு முன்பும் "தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா" என்ற இறுமாப்பு வார்த்தைகளை உச்சரித்துக் கொண்டிருந்த தமிழ் இனம் தன்னிடையே வாழ்ந்து வந்த ஒரு பகுதியினரைத் தலை நிமிர விடாது செய்வதற்கான வேலைத் திட்டங்களை மிகவும் கவனமாகக் கையாண்டு வந்தது. இந்த நிலையை மாற்றி அமைக்க எம்.சி.சுப்பிரமணியம் என்ற ஓர் துணிகரமான மனிதன் அன்று புறப்பட்டான்.

இறைவன் தமிழர்கள் அனைவருக்கும் பொதுவானவன். ஆனால் அந்த இறைவன் உறையும் ஆலயம் எல்லாத் தமிழர்களுக்கும் பொதுவாக இருந்ததில்லை. ஏனென்றால் தமிழினத்தின் ஒரு பகுதியினர் அந்த ஆலயத்தினுள் சென்று பொதுவான இறைவனை வணங்குவதற்கு இன்னொரு தமிழர் கூட்டத்தினால் தடுக்கப்பட்டு வந்தனர். இதை இறைவனும் ஏன் அனுமதித்தான் என்று சிந்திக்கத் தோன்றுகிறது. இந்த நிலைக்கு எதிரான போராட்டம் எம்.சி.சுப்பிரமணியம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பல்வேறு திசைகளிலும் பல தரப்பட்ட பரிமானங்களிலும் இவ்வாறான போராட்டங்கள் நடத்தப்பட்டன.

ஆலய வணக்கத்திற்கு தடைபோட்ட அதே கூட்டம் தன்னை கல்வியிலும் பொருளாதாரத்திலும் உயர்ந்த நிலையில் நிலைநிறுத்திக் கொண்ட அதேவேளையில் அரசியல் அதிகாரங்களையும் தன்னகத்தே கொண்டிருந்தது. இதனால் இறை நீதி, ஜீவகாருண்யம், மனித உரிமை போன்ற விடயங்களைத் தனக்குமட்டும் சாதகமாக மாற்றி வைத்திருந்தது. சம காலத்தில் பொதுச்சேவை வழங்கும் நிறுவனங்களான சிகை அலங்கரிக்கும் கடைகள், சலவைத் தொழிலகங்கள் மற்றும் தேநீர்க் கடைகள், உணவகங்கள் போன்றவற்றைத் தனக்கெனப் பிரத்தியோகமாக வரையறுத்துக் கொண்டது. இவ்வாறான

ஸ்தானங்களில் பிற்படுத்தப்பட்ட மக்கள் எந்தச் சேவைகளையும் பெறமுடியாது. இந்த நிலையில் கல்வியில் மேம்பட்ட, பொருளாதாரப் பலம்மிக்க, அரசியல் அதிகாரத்தைக் கொண்ட அந்தக் கூட்டமே தொடர்ந்து பராமரித்து வந்தது. இவ்வாறான கொடுமைகுளுக்கு எதிராகப் பலமான குரலை எம்.சி.சுப்பிரமணியம் அவர்கள் எழுப்பிவந்தார்.

இத்தியாதி பரிமாணங்களுக்குள் வாழ்ந்து வந்த அந்தப் பிற்படுத்தப்பட்ட தமிழர்கள், தமிழர்களிடமே சம உரிமை கேட்டுப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய நிலையில் வாழ்ந்து வந்தனர். தமிழ் இனம் ஒடுமைப்பாடு நிறைந்தது எனப் பறைசாற்றிக் கொண்டு தன்னகத்தே பாகுபடுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் இனம் பற்றி சிந்திக்க வெட்கமாக உள்ளது! பிற்படுத்தப்பட்ட தமிழர்களின் ஸ்தாபனமாக மகாசபை ஒன்றை உருவாக்கிக் கட்டியெழுப்பியதன் மூலம் அந்த மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் தலைவராக அங்கீகரிக்கப்பட்டார். இந்த வேளையில் சிங்கள இடது சாரிகளால் அடையாளம் காணப்பட்ட இந்த மாமனிதன் தேசிய அரசியலுக்குள் உள்வாங்கப்படக்கூடிய தகுதி வாய்ந்த, பெரும் வல்லமை உள்ள, மதிப்பிற்கு உரியவாராகக் கணிக்கப்பட்டார்.

1970 களில் சிறீலங்கா சுதந்திரக்கட்சி இடது சாரிக் கட்சிகளினால் உருவாக்கப்பட்ட கூட்டு அரசாங்கத்தில் ஓர் நியமன பாராளுமன்ற உறுப்பினராக உள்ளீர்க்கப்பட்டார். இச் செயற்பாட்டின் வாயிலாகப் பிற்படுத்தப்பட்ட மக்களைக் கௌரவித்த இடதுசாரிக் கூட்டரசு இம் மக்கள் எதிர் கொண்ட சமூகச் சவால்களுக்குத் தீர்வு காணும் நோக்கத்தில் சட்ட ஆதரவை வழங்கியது. இதன் பிரகாரம் பொது இடங்களில் எல்லா மனிதர்களும் சமமாகக் கணிக்கப்படவேண்டும் என்று ஏற்கெனவே வலுவற்றிருந்த சட்டத்திற்கு புதியவடிவம் ஒன்றை கொடுக்கும் முகமாக இவ்வாறான பாகுபாடுகளை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யலாம் என்ற வலுவை இச்சட்டத்திற்கு எம்.சி. சுப்பிரமணியம் அவர்கள் பங்கேற்ற கூட்டரசே வழங்கியது. இச் சட்டம் அமுல்நடத்தப்பட ஆரம்பித்ததும் 1971ல் பொது இடங்களில் பாகுபாடு காட்டும் தன்மை படிப்படையாகக் குறைவடைந்து வந்தது. இச் சட்ட ஆக்கலின் பின்னணியில் எம்.சி.சுப்பிரமணியம் அவர்களே இருந்தார் என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும்.

எனவே இவ்வாறான சக்திபடைத்த ஓர் மாவீரம் கொண்ட எம்.சி.சுப்பிரமணியம் அவர்கள் பிற்படுத்தப்பட்ட மக்களின் ஓர் விடிவெள்ளியாக இருந்தார் என்பது மிகவும் பொருத்தமாகும். எனவே இந்தப் பிற்படுத்தப்பட்ட மக்கள் தமது குடிகள் வீதத்திற்கு ஏற்ப அரசியல் அதிகாரத்திற்குச் செல்வதன் மூலம் கல்வி, பொருளாதார விடயங்களில் முன்னேற முடியும். இதற்கெனத் தற்கால நிலைமைக்கேற்றாற் போல் எம்.சி.யின் பாதையில் இருந்த சாதகங்களை இனங்கண்டு அணிதிரள வேண்டும்.

# இலங்கையின் அம்பேக்கார் M.C. சுப்பிரமணியம்

அகில இலங்கைச் சிறுபான்மை தமிழர் மாகாசபையின் பெருமைக்குரிய தலைவராக இருந்துவந்த திரு. M.C. சுப்பிரமணியம் அவர்களைப்பற்றி நேரடியாக அவரது போராட்டத்தின் ஓர் அங்கமான தீண்டாமை காரணமாக மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம் எமக்கு உட்சென்று வழிபடுதல் தடைப்பட்டு இருந்தது. அச்சந்தர்ப்பத்தில் அவர் தலைமையில் பலநூறுபேருடன் சத்தியாக்கிரகத்தில் பங்குகொண்டிருந்தேன். அவர் எவ்வித தயக்கமுமின்றித் தீண்டாமைக்கு எதிரான போராட்டத்தில் முன் வரிசையில் வீற்றிருந்ததை என்னால் காணமுடிந்தது. இது என்னுடைய இளமைப்பருவத்தில் நான் நேரடியாகக் கண்ட காட்சி. எனது மாமனார் மு. செல்லப்பாக்கியம் அவர்கள் அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் வடமராட்சிக் கிளை தலைவராக இருந்துவந்த நிலையில் நானும் அவருடன் இவ் விவகாரங்களினால் ஈர்க்கப்பட்டிருந்தேன். அத்துடன் இன்றுவரையும் இம் மகாசபையின் அங்கத்தவராக இருந்துவருகிறேன்.

திரு. M.C. அவர்கள் அடிக்கடி நடத்தும் வடமராட்சிக் கிளைக் கூட்டம் எமது வீட்டில்தான் நடப்பது வழக்கம். அவருடைய கருத்துக்கள் பலவாயின எமது சிறுபான்மை இன மக்களுக்கு எவரிடமிருந்து விடுதலை கிடைக்கவேண்டும்? இந்த ஒடுக்குமுறை அற்ற உரிமை யாவும் உயர்சாதி என்ற போர்வைக்குள் இருந்துவரும் இந்துக்களிடமிருந்துதான் கிடைக்க வேண்டும். இந்து சமயம் என்பது ஓர் சாதியை வளர்க்கும் நிறுவனமாகக் கணிக்கப்பட வேண்டியுள்ளது. ஆதலால்தான் கோவில்களுக்குட் சென்று வழிபட எம்மவர்களுக்கு அனுமதி மறுக்கப்படுகின்றதோவென்று கருதக்கிடக்கிறது என்றார்.

தமிழர்களுடைய உரிமை என்ற விடயம், அன்றுதொடக்கம் உரிமைப் போராட்டமாக இன்றுவரை நடந்துகொண்டு வருகின்றது.இவ் உரிமைப் போராட்டம் பெரும்பான்மை சிங்கள மக்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்காகவே தொடர்ந்துகொண்டிருக்கின்றது. ஆனாலும் ஒரே சமயம், ஒரேமொழி பேசுகின்ற, ஒரே கலாசாரத்தையுடைய எமக்கு உரிமை மறுக்கப்படுகின்றது. எனவே இந்த உயர்சாதி இந்துக்களென்று, உயர்சாதிக் குலத்தவர் என்று தங்களை அடையாளப் படுத்துகின்றார்கள். அதாவது பாலைத் தரம்பார்க்க அளவுகோல் இருக்கின்றது. உயர்சாதி தாழ்சாதி என்பதனை எந்த அளவுகோலில் அளவிடமுடியும்? எம்மவர்களுக்குத் தீண்டாமை காரணமாக எப்போது ஒடுக்குமுறை இல்லாத சம உரிமை பேணல் சாத்தியமோ அப்போதுதான் பெரும்பாண்மை சிங்கள மக்களிடமிருந்தும் இவர்கள் தமிழ் மக்களுக்குரிய உரிமையைப் பெறமுடியும் என்பதை ஆணித்தரமாக உரைத்தவரே திரு. M.C சுப்பிரமணியம் அவர்கள்.

திரு. M.C சுப்பிரமணியம் அவர்கள் ஒரு சமயத்தில் எமது தீண்டப்படாத சமூகத்தவர்கள் தமிழர்களின் மூன்றில் ஒரு பங்கிற்குக் கூடுதலாக இன விகிதாசாரத்தை கொண்டிருந்தும் பல பாராளுமன்றத் தேர்தல்கள் நடந்தும் எம்மவர்களுடைய விகிதாசாரத்திற்கு ஏற்ற வகையில் பாராளுமன்ற

உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவில்லை. இவ்வாறு பலபேர் எம்மவர்கள் தெரிவு செய்யப்பட்டிருப்பின் எமது விடுதலைப் பயணமும் ஏனைய சலுகைகளும் எம்மால் பெறப்பட்டிருக்க முடியும்.ஆனாலும் தெரிவு செய்யப்பட்ட உயர்சாதிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எமது மக்களுக்கென்று சில தொழில்களை வரையறுத்து வழங்கி வந்தமை கண்கூடு. குறிப்பாக, எம்மவர்களுக்கு இ.போ.சபையில் நடத்துநர், காரியாலயங்களில் அலுவலக ஊழியர்கள் போன்றவைகளைக் குறிப்பிடலாம். ஆனாலும் உயர்கல்வி பெற்றிருந்தும் நிறைவேற்று அதிகாரமுள்ள அரச நிறுவனங்களில் உயர்பதவிகளை வழங்குவதில்லை என்பதனையிட்டு M.C அவர்கள் மிகவும் கவலைகொண்டிருந்தார். இக்காலத்தில்தான் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் பிரதமராகவிருந்தார். இந்நிலையில் எம்மவர்களுக்குத் தீண்டாமைசார்பாக இழைக்கப்படுகின்ற விடயங்களை நன்குணர்ந்த ஓர் நியமன பாராளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெற்று எமது மக்களுக்குச் சேவையாற்ற முனைப்புற்று நின்றார். அதன் பயனாகப் பல பாடசாலைகளை உருவாக்கியது மட்டுமல்லாமல் பல ஆசிரியர்களையும், அரச நிறுவனங்களில் அரச உத்தியோகத்தர்களையும் கல்வி அதிகாரிகளையும் எம்மவரிடையே உருவாக்கிய பெருமை M.C சுப்பிரமணியம் அவர்களையே சாரும். ஆனாலும் கடந்த காலங்களில் அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர்மகாசபை சார்பான பல நகர்வுகளுக்கு ஒத்தாசை புரியும்படி M.C அவர்களால் உத்தியோகம் பெற்றவர்களிடம் நானும் தலைமைப்பீடமும் சென்றிருந்தோம் ஆனாலும் அவர்கள் தற்சமயம் ஓர் உயர்வான நிலையில் இருப்பதாக எண்ணி எவ்வித ஒத்தாசையும் தராமல் எதிர்ப் பிரச்சாரங்களிலும் ஈடுபட்டனர். "இப்ப என்ன சாதி இருக்கு" என்று கேட்கின்றனர். சாதி ஒழிந்துவிட்டதாக எண்ணத் தங்களையும் மறைக்கின்றனர். இவர்கள் ஒரு துரோகிகளாக மாறியுள்ளனர்.

இந்தியாவின் அரசியல் சாசனம் அம்பேத்கார் அவர்களால்தான் உருவாக்கப்பட்டது. பல போராட்டங்கள் தீண்டாமைக்கெதிராக இவரால் மேற்கொள்ளப்பட்டமை சரித்திரம். அந்த வகையில் தமது இனத்திற்காகப் பல சட்டங்களையும் இயற்றிவர்தான் திரு. அம்பேத்கார். அதே பாணியில் M.C சுப்பிரமணியம் அவர்களும் பாராளுமன்றத்தில் ஒரு உறுப்பினராக இருந்த காலத்திலும் அதற்கு முன்பான காலங்களிலும் தீண்டாமைக்கெதிரான போராட்டங்களைச் செய்த தலைவர் ஆகின்றார். அவ்வாறு பாராளுமன்றத்திலும் தீண்டாமைக்கெதிராகப் பல சட்டங்களையும் உருவாக்கியமையும் யாவரும் அறிந்த விடயம். எனவேதான் 'இலங்கையின் அம்பேத்கார் M.C சுப்பிரமணியம்' என்பதில் இரு வேறு கருத்துக்கள் இல்லை.

"Samooka theepam" **K. Sivayoganathan.**
"Samasri thesa keerthi" ex. General ManaGer Coop
ex. Member of Director's board Teaching Hospital Jaffna.
Sella Mahal.
Thunalai Centre.
Karaveddy.

# பிற்பட்ட சமூகங்களின் திசைகாட்டி M.C.



திரு. செ. கந்தையா
முன்னாள் மேயர் - யாழ் மாநகர சபை
உப தலைவர் -
அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை

தாழ்த்தப்பட்ட சமூகங்களில் பஞ்சமர் என்று சொல்லப்படுகின்ற ஐந்து சமூகத்தவரின் விடுதலைக்காகப் போராடிய நியாயவாதி M.C. சுப்பிரமணியம் ஆவார். பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் கல்வி கற்க முடியாத காலத்தில் பல பாடசாலைகளை நிறுவி எங்களை உயர் நிலைக்கு கொண்டுவந்த காரணத்தால் அன்னாருக்கு 100வது ஆண்டு நினைவு நாளையும் அவரின் திரு உருவச் சிலையையும் நிறுவ எடுக்கப்பட்ட முயற்சி உண்மையில் பெருமைப்படத் தக்கதே. பிழைப்பிற்காக எந்தவித தொழில் துறைகளிலும் ஈடுபடாது தனது பெரும்பாலான நாள்களையெல்லாம் ஒடுக்கப்பட்ட, உரிமை மறுக்கப்பட்ட மக்களின் நலவுரிமைக்காக, அவர்களது மனித விடுதலைக்காக உழைத்த ஒரு மாமனிதன் ஆவார். அவர் பேச்சிலே ஒரு புலி, செயலிலே சிங்கம், குணத்தில் கவரிமான் இவர்போன்றே பணிகள் செய்தோரின் பட்டியலில் பலநூறு ஆண்டுகள் மக்கள் மனங்களில் பதிவு செய்யப்படும்.

எம்சியும் எம்பியுமான திரு. சுப்பிரமணியத்தின் செயற்பாடுகளை நினைவுகூரும் போது அவரின் செயற்பாடுகள் ஒடுக்கப்பட்ட, அடக்கப்பட்ட மக்களுக்கு முன்னுதாரணமாகக் காணப்படுகின்றது. ஆகவே தொடர்ந்தும் நாம் எமது பணிகளை முன்னெடுப்பதற்கு எமது மக்கள் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என நான் நம்புகிறேன்.

# அவதார புருசன்

–ஆகசி

எம்.சி.ஐயா!
நீங்கள் வாழ்ந்த காலம்
தலித்துகளுக்கு ஒரு பொற்காலம்!
ஒற்றையடிப் பாதைகளும்
ஓலைக் கொட்டில்களும்
உயர் சாதியினர் மனம் வைத்தால்
வேலைகளும்
அன்றைய தலித்துக்களின் வாழ்க்கை!
அங்கே எல்லாம் உங்கள் பாதம் பட்டு
அவர்கள் சாப விமோசனம் பெற்று
வளமான வாழ்க்கை வசதிகளை
அனுபவிக்கத் தொடங்கினார்கள்!

வெள்ளை நாசனலும் வெள்ளைச் சாரமும்
கபடமில்லா மனம் களைக்காத உழைப்பும்
சலிக்காத தொண்டும் சறுக்காத கொள்ளையும்
உங்கள் பிரதிவிம்பம்!

மேடையில் ஏறிநின்று கண்களை மூடிக்கொண்டு
மந்திர உச்சாடனம்போல் நீங்கள் பேசும் பொழுது
கேட்டுக் கொண்டு நிற்கும் தலித்துகளுக்கு
உரு ஏறத் தொடங்கும்!
என்ன நினைத்து உச்சாடனம் பண்ணினீர்களோ
அதை அவர்கள் செய்து முடித்தார்கள்!

நீங்கள் பாடிய தேவாரம்
ஆலயக் கதவுகளை அவர்களுக்குத் திறந்துவிட்டது!
உங்களுக்குப் பயந்து

கறல் பேணிகளும் கழுவாத போத்தல்களும்
தேநீர்க்கடைத் தாவாரங்களிலிருந்து
ஓடி ஒளிக்க ..
உள்ளே புகுந்த அவர்கள்
கிளாசில் தேநீர் அருந்தத் தொடங்கினார்கள்!
உங்கள் விஸ்வரூபம்
அடிவாங்கிக் கொண்டிருந்த அவர்களை
திருப்பி அடிக்கப் பண்ணியது!
தெளிவான பாதையில் போகச் செய்தது!

உங்கள் அவதாரம் முடிந்தபின் .
உங்கள் பாதங்களால் நசிக்கப்பட்ட சாதி அரக்கன்
மீண்டும் உயிர்த்து எழுந்துவிட்டான்!
அரக்க உருவத்தை மாற்றி
அழகான உருவம் எடுத்து
நேரடியாகக் கொல்லும் வியாதியைப் போலல்லாது
நின்று கொல்லும் வியாதியைப் போல
தலித்துகளை வருத்தத் தொடங்கிவிட்டான்!

மாயத்தோற்றமும் மயங்கும் சொற்களும்
அரக்கனின் கபடத் தனம் என்று
தலித்துகள் பலருக்கு விளங்குகிறது!
குசு குசுக்கிறார்கள்
வெளியில் பேசப் பயப்பிடுகிறார்கள்!
ஓங்கி ஒழிக்க ஒற்றுமையாகப் போராட
உங்களைப்போல் ஒரு தலைவன்
இன்று இல்லையே என்று ஏங்குகிறார்கள்!

சாதி அரக்கனை முற்றாக அழிக்க
மீண்டும் நீங்கள்
அவதாரம் எடுக்க வேண்டும்!
நிச்சயம் எடுப்பீர்கள்!

# அணைந்தும் அணையாத சாதித் தீ



**கணபதி கணேசலிங்கம்**
உபதலைவர் :
அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை

20ம் நூற்றாண்டின் தொடக்க காலங்களில் பிரித்தானியர் வசமிருந்த இலங்கை அரசின் சுதந்திரத்தை உறுதி செய்வதற்கான இலங்கை மக்களின் போராட்டம் மெதுவாகவேனும் முன்னெடுக்கப்பட்டபொழுது சிங்களத் தலைவர்களின் பங்களிப்பிற்கேற்பத் தமிழ்த் தலைவர்களின் பங்களிப்பும் காணப்பட்டதென்றால் அது மிகையாகாது. அக்காலப் பகுதியில் தமிழர்கள் சிறுபான்மையினர் என இனங் காணப்பட்டிருக்கவில்லை. சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஐம்பதுக்கு ஐம்பதாகவே கருதப்பட்டனர். ஆனாலும் அரசியல் இலாபம் கருதிய ஒரு சிலரின் செயற்பாடுகளினால் இனப்பிணக்கு ஏற்படுவதற்கான தீ மூட்டப்பட்டது. அதுபோலவே தமிழர்களுக்கிடையிலான சாதியமைப்பு முறை என்பது தமிழர்கள் மத்தியிலான ஒற்றுமைக்கு வேட்டு வைப்பதொன்றாயிற்று. ஏறத்தாழ இன்றைய தமிழர்களிடையேயான வேற்றுமைக்கும் அரசியல் பிணக்குகளுக்கும் காரணமாக அமைவது சாதிவேறுபாடுகளின் இறுதிவிளைவேயன்றி வேறில்லை. சாதி வெறியின் கொடூரத்தால் கீழ்சாதியினர் என ஒதுக்கப்பட்டோர் விலங்குகளை விடவும் கொடூரமாக நடத்தப்பட்டாரே தவிர மனிதகுலமாகப் பார்க்கப்படவில்லை என்பதே ஐதார்த்தமாகும். கல்வி கற்பதற்காக ஒழிந்து மறைந்து திரிந்த காலத்திலே அடிமை விலங்கைத் தகர்த்தெறிய வந்த தலைவர் அமரர் M.C. சுப்பிரமணியம் ஐயா அவர்கள் கீழ் சாதியினர் என கருதப்பட்டோர் அடைந்த துன்பங்களை நேரில் கண்டார், அனுபவித்தார். ஏதோ ஒரு வகையில் கற்றுத் தேறிய M.C. ஐயா தன்தொழிலையும் துச்சமெனத் தூக்கியெறிந்து விட்டுக் கீழ்சாதியெனப்பட்டவரின் துயர் துடைக்கப் புறப்பட்டார். சமவுடைமையையும் சமவுரிமையையும் தேடித் தோன்றிய கம்யூனிஸ்ட் கட்சிகளின் பால் ஈர்க்கப்பட்டார். தேசிய மட்டத்தில் சிங்களத்

தலைவர்களே அக்கட்சியின் தலைவர்களாக விளங்கியதால் ஒடுக்கு முறைக்கு உள்ளாகி நின்று கீழ் சாதியினர் அனுபவித்த கொடூரங்களை உலகறியச் செய்வது இலகுவானதாக அமைந்தது. அதனால் 1970 ஆம் ஆண்டில் இலங்கைப் பாராளுமன்றத்தில் நியமன உறுப்பினரானார். பாராளுமன்றம் எனும் சகடத்தில் குதியாட்டம் போட்டு ஏறியவர் கீழ் சாதியனர் அனுபவித்து வந்த துன்பியல் சம்பவங்களை உலகறிய முழங்கினார். இதன் விழைவாகவே தமிழ்த் தலைமைகள் 1977ம் ஆண்டு கீழ்சாதியினர் ஒருவருக்கு பாராளுமன்றம் செல்லும் வாய்ப்பினை ஏற்படுத்தியது

உயர்சாதியினரின் கோவில்களில் வழிபடச் செல்வதும், தேநீர்க் கடைகளில் ஆகாரம் தேடிச் செல்வதும், கீழ்சாதி எனப்பட்டோருக்கு முற்றாகவே மறுக்கப்பட்டதொன்றாகக் காணப்பட்டது. இவற்றை மீற முற்பட்டவர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்கள் உயிர் ஆபத்துக்கள் அனேகம். இது ஒரு வகையில் சிங்களப் பேரினவாதிகளால் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குச் சமனாகவே அல்லது அதனை விடக்கூடியதொன்றாகவே இருந்தது என்று கூறுவதில் தவறில்லை. 1950ம் ஆண்டளவில் இலங்கையில் தமிழ் மக்களின் அளவு 10 வீதமாகக் காணப்பட்டபொழுதும் பல்கலைக்கழக அனுமதியில் 25 வீதமும் அரசாங்க உத்தியோகங்களில் தமது வீதாசாரத்திற்கு மீறிய வகையிலும் பதவிகளை வகித்தனர். ஆனாலும் அத்தொகையில் கீழ்சாதியினர் எனக் கருதப்பட்டோரில் ஏறத்தாழ எவருமே இடம்பெறவில்லை. இ∴து சமஷ்டி ஆட்சி கோரும் தமிழர்களை வெட்கப்பட வைப்பதொரு விடயமாக இருப்பதுடன் கீழ் சாதியினர் எனப்பட்டோர் பட்ட அவலங்களைக் கோடிட்டுக் காட்டுவதாகவும் உள்ளது. இலங்கை சுதந்திரம் பெற்றபின்பு இலங்கையிற் காணப்பட்ட சட்டங்களும் உரிமைகளும் அனைவருக்கும் சமனாகக் காணப்பட்டபொழுதும் கீழ்சாதித் தமிழர்கள் எனப்பட்டோர் அரசாங்கப் பாடசாலைகளில் கற்பதற்கான சூழ்நிலை முற்றிலும் மறுக்கப்பட்டதாகவே அமைந்தது. ஆனாலும் சிலர் தாம் குடியிருக்கும் பகுதியிலிருந்து வெளியேறி, தமது அடையாளத்தைக் காட்டிக் கொடுக்காது வேறு பாடசாலைகளில் கல்வி கற்றுத் தேறி அரசாங்க உத்தியோகத்தையும் பெற்றுக்கொண்டனர். இவ்வாறானதொரு அடக்குமுறை மற்றும் பாகுபாட்டின் காரணமாகவே கீழ் சாதியினர் எனப்பட்டோர் கணித, விஞ்ஞான உயர் கல்வித் தகைமையையோ உயர்அரச பதவிகளையோ அதிகளவில் பெற்றுக் கொள்ளவில்லை என்பது ஏற்புடையதாகும். சாதித்தீயை அணைப்பதற்கு ஒரே வழி கல்வியே என்று கங்கணங்கட்டிய M.C. ஐயா பாராளுமன்ற அங்கத்தவராக இருந்த காலத்தில் 15ற்கும் மேற்பட்ட அரசாங்கப் பாடசாலைகளை உருவாக்க வழிசெய்ததன் மூலம் கீழ்சாதியினர் எனப்பட்டோர் தமது கல்வித் தகைமைகளை இன்று வரை ஓரளவு பெறும் நிலைக்கு வித்திட்டார் என்பதே உண்மையாகும். இவ்வாறானதோர் நிலைமை இந்தியாவின் டொக்டர் அம்பேக்கார் எய்திய நிலைமையை ஒத்ததொன்றாக ஒப்பிடக்கூடியதாகும். M.C. ஐயாவின் முதுமைக் காலத்திலே தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டம் முனைப்புப் பெற்ற வேளை கீழ்சாதியினர் எனப்பட்டோர் தாம்பட்ட அவலங்களை வெளிக்காட்டாமல்

தமிழரோடு தமிழராய் இணைந்து தேசிய விடுதலைப் போராட்டத்தில் இணைந்தனர். வேறுபாடுகள் குறைந்தன. M.C ஐயாவின் குரலும் ஒடுங்கிப்போனது. தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டம் ஆயுத முனையில் உச்சமடைந்தபொழுது சாதித்தீ முற்றிலும் அணைவதற்குத் தயாரானது. ஆனாலும் 2009ம் ஆண்டிலே தமிழர்களின் ஆயுதப் போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டபொழுது தமிழர்கள் ஜனநாயக அரசியலினூடாகத் தமதுரிமைகளை வென்றெடுக்கத் திட்டமிட்டுச் செயலாற்றுகின்றனர். எது எவ்வாறிருப்பினும் உயர் சாதி அரசியல் வாதிகள் ஒரு சிலரும் நிர்வாக அதிகாரிகளும் என .இணைந்து பணவசதி பதவி மோகங்கொண்ட சில சிறுபான்மைத் தமிழர்களின் உதவியுடன் அணைந்து சென்ற தீயைக் கொழுந்து விட்டெரியச் செய்துள்ளனர். இதன் வெளிப்பாடாகவே இன்று யாழ் மாவட்டத்தில் ஏறத்தாழ உயர்சாதியினரின் அளவுக்குச் சமமான எண்ணிக்கையில் கீழ் சாதியினர் எனப்பட்டோர் காணப்பட்டபொழுதும் அவர்களிற்கான பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் முற்றாகவே மறுக்கப்பட்டுள்ளது. இவ்வாறானதொரு திட்டம் அவர்களின் பிரச்சினைகளை மூடி மறைக்கும் சதியேயன்றி வேறில்லை. அதுமாத்திரமல்லாமல் கீழ்சாதியினரெனப்படுவோரிடையும் கூட பிரித்தாளும் தந்திரத்தைக் கையாண்டு அவர்களின் பிரதிநிதித்துவத்தை வடக்கு மாகாண சபையில்கூட இரண்டு அல்லது மூன்றுபேர் என மட்டுப்படுத்தியுள்ளனர். இவ்வாறானதொரு நிலை தமிழரின் ஆரோக்கியத்திற்கு உகந்ததல்ல எனக்கூறி, தாழ்த்தப்பட்ட சமூகத்தின் வழிகாட்டியாக மாத்திரமல்லாமல் தமிழர்கள் எல்லோரும் ஒன்று என்று வாழ்ந்துவந்த அன்புக்குரிய, மரியாதைக்குரிய அமரர் M.C. சுப்பிரமணியம் ஐயா அவர்கள் காட்டிய வழியே சிறந்தது.

> "ஒட்டார் பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே
> கெட்டான் எனப்படுதல் நன்று"
>
> திருக்குறள்- 967

# உரிமை மறுக்கப்பட்ட சமூகங்களுக்கான நியாயவாதி



*திருமதி கமலலோஜன் சுகந்தினி*
நிர்வாகச் செயலாளர்
அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை

பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலஞ்சென்ற M.C. சுப்பிரமணியம் ஐயா அவர்கள் தனது காலப்பகுதியில் உரிமை மறுக்கப்பட்ட பல சமூகங்களின் நலனுக்காகப் பாடுபட்டதுடன் பல பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதில் நியாயவாதியாகச் செயற்பட்டார்.

பல ஆலயங்களின் வழிபாட்டுத் தடைகளை நீக்கித் திறந்து விடவும், பாடசாலைகள், கடைகளில் இருந்த தடைகளையும் முன்மாதிரியாக நின்று நீக்கியும் செயற்பட்டார். தற்காலத்தில் பல பிரச்சினைகள் பல சமூகங்களிடையே மேலோங்கி உள்ளது. இவைகளுக்கான தீர்வுகள் காணப்படவேண்டியது மிகவும் அவசியமாக உள்ளது. அவர் காட்டிய வழியில் நின்று நாமும்

உரிமைக்காகக் குரல் கொடுப்போம்,
உண்மையுடன் செயற்படுவோம்
நீதிக்காகப் பாடுபடுவோம்
வெற்றி காண்போம்

# "எம்சி" என்ற எங்களின் நாயகன்!

"இளமுருகன்"

அடக்கி மேலும் மடக்கி ஒடுக்கியும்
ஆளும் ஆளுமை மாளவும் வீழவும்
கிடக்க விட்டதால் கீழ்ப்படும் மக்களின்
கோட்டைக் கூட்டித்தீ மூட்டிய வீரராம்!

சாதி வாதம் ஓதிய பாதகர்
சரித்தி ரத்தில் சமத்துவம் மாய்த்தவர்
நீதி ஓதிடார் நீசர் நிலைதனை
நீக்க ஆக்கமாம் ஊக்கம துற்றவர்!

சாய்ந்து வீழ்ந்தவர் வாழ்ந்து வளம்பெற
தாலம் தெங்குச் சங்கச் செயலராய்
ஒய்ந்தி டாது உழைத்த உழைப்பதன்
உயர்வை உன்னுவர் உறுபயன் உறவுகள்

கூறு மோர்சிறு பான்மைத் தமிழர்கள்
கூட்டி நாட்டும் குறித்த மகாசபை
வீறு கொண்டெழு தலைவர்முன் தாபகர்
வெற்றி பற்பல முற்றும் உரைப்பனோ!

வணக்க மோர்தலம் வாய்த்ததே நீர்க்கடை
வகை மயிர்புனை வாம்சல வைக்கடை
இணக்க மோடு ஏற்றிடார் என்பதால்
ஏற்ற மாற்றம் போற்றிட ஆற்றினார்

அன்று தேசியப் பேரவை தன்னிலே
அடக்கப் பட்டவர்க் கான தலைவனாய்
நின்று நன்று நிறுத்திய சாதனை
நீளும் நம்மவர் நிம்மதி செம்மையாம்!

தாழ்ந்த வர்குறை தவிர்த்திடு சட்டத்தை
தாக்க முள்ளதாய் ஆக்கிட அன்றுதான்
வாழ்ந்த தான இடது அணிதனை
வைத்துச் சாதித்த சாதனை எத்தனை!

பூட்டப் பட்ட கதவு திறந்தது
பொய்யின் சாதிப்பேய் பையத் தளர்ந்தது
தீட்டப் பட்ட தீவிர திட்டங்கள்
தேசத் தெம்மவர் கௌரவம் காத்தது

தள்ளி வைத்தும் தரையில் இருத்தியும்
தாழ்த்தப்பட்டவர் தங்களின் கல்விக்குக்
கொள்ளி வைப்பதாய்க் கூற்றென நின்றவர்
கொடுமை தன்னைக் கெடவிட வைத்தவர்

ஆக்கி ஊக்கினார் அரசினர் பள்ளிகள்
அடக்கப் பட்டவர் ஆசிரி யர்பலர்
தூக்கி மேலுறத் தொடர்ந்தவர் பிள்ளைகள்
தொகுத்த கல்வியால் தொடர்ந்து வளர்ந்தனர்.

ஊக்க மாகி உயர்ந்த மகாசபை
உற்ற தான நியமன உறுப்பொடு
நீக்கமற்ற நிறைதுணி வோடுதான்
நியம னங்கள் நிறைய நிறுவினார்

சனச மூக நிலையம தாக்கினோர்
சமூகத் தோர்சமா தானத்து நீதிவான்
மனது சேர்கிரா மத்துறு சேவகர்
மற்றக் கூட்டுற வுற்ற பதவிகள்

ஏற்ற கேம்பிறிஜ் ஜூனியர் தேறியோர்
எமது மக்களின் ஏற்றம தெண்ணியே
சாற்ற வேறுதன் பதவி துறந்துமே
சாத னைக்குறு சரித்திரம் செய்தனர்

முன்பு காந்திய வாதியு மானவர்
முடங்கி யோரின்முன் னேற்றம் கருதியே
பின்பு சோசலி சத்தை நயந்தவர்
பேற்றின் ஆற்றலைச் சாற்றியே போற்றுவோம்

ஒடுக்கப் பட்டவர்க் கோர்விடி வெள்ளியாம்
உழைத்து வாழ்பவர்க் குழைத்தொரு உத்தமர்
எடுத்துக் காட்டிடும் இவர்யுக புருஷனாம்
எம்சி என்ற எங்களின் நாயகன்!

# தமிழர் அரசியல் பொருளாதார அபிவிருத்தியும் அக முரண்பாடுகளும்

- மாணிக்கம் யோகசிங்கம்

விகிதாசர அடிப்படையில் இலங்கைத் தமிழரின் எண்ணிக்கை 12 சதவீதம் என சிறியதொன்றாகக் காணப்படினும் அவர்கள் பிரதேச ரீதியாக ஒரு பகுதியில் செறிவாக வாழ்ந்துவருவது குறிப்பிடத்தக்கதாகும். அதுவே இலங்கையின் வடக்கு மாகாணமும், கிழக்கு மாகாணமும் ஆகும். பூர்வீக வரலாற்றுக் காரணங்களிலிருந்து தோன்றிய இந்த நிலலமை தமிழர் தமது மரபு ரீதியா வாழிடம் கருதுவதற்கும் அந்த வரையறையினுள் ஒருமித்த பொருளாதாரமொன்றை நிறுவிக் கொள்வதற்குமான இட ரீதியான எல்லைகளையும் கூடவே வகுத்துக் காட்டுவதற்கும் சாத்தியமாகின்றது. இப் பிரதேசத்தின் தனித்துவம்கொண்ட தரைத்தோற்றம், காலநிலை, வளங்களின் கொடை போன்றவையும் இலங்கைத் தமிழர்களின் பொருளாதார அலுவல்களை வேறுபட்ட தன்மை கொண்டு பரிணமிக்க ஏதுவாகியதுடன் அது தனித்துவம் வாய்ந்ததொரு சமூக பொருளாதார கலாசார அமைப்பு தோன்றுவதற்கும் வசதிசெய்து கொடுத்தமையானது எந்த வகையிலும் ஆச்சரியத்திற்குரியதொன்றல்ல.இவ்வாறாகத் தோன்றியிருந்த சமூக பொருளாதார அமைப்பினை ஆட்சி செய்வதற்கான பணித்துறை அலகும் வளர்ச்சி பெற்றிருந்ததென்றால் அது மிகையாகாது. அதுவே தமிழர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க "யாழ்ப்பாண இராச்சியம்" என்பதாகும் இத்தகையதொரு வரலாறுதான் தமிழர்களின் சுயாட்சிக் கோரிக்கையை தெளிவாகக் கோடிட்டுக் காட்டுகின்றது. ஆனாலும் அக் கோரிக்கைக்கு முன்பதாகத் தமிழர்களின் தனித்துவம் எவ்விதம் இல்லாதொழிக்கப்பட்டது என்பதனையும் ஆய்வு செய்யவேண்டியது கட்டாயமாகும். தமிழரசின் வீழ்ச்சி என்பது 1505 ஆம் ஆண்டுமுதல் மேற்கத்தைய காலணித்துவம் இலங்கையில் பரவுவதற்கு இடமளிக்கப்பட்டதுடன் தொடக்கி வைக்கப்படுகின்றது. குறிப்பாகப் போர்த்துக்கேயர் 1619ஆம் ஆண்டு யாழ்ப்பாண இராட்சியத்தைக் கைப்பற்ற அதன் அஸ்த்தமனத்துக்கான காலம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படுகின்றது. 1833ஆம் ஆண்டு கோல்புறூக் சீர்திருத்தங்களுக்கு அமைவாக இலங்கைத் தீவு முழுவதும் ஒருமித்த நிர்வாக முறை கொண்டுவரப்படும் பொழுது தமிழரசின் ஆணிவேர் பிடுங்கி எறியப்பட்டது. அரசாட்சியை நிர்வாக மட்டத்தில் ஒழுங்கு செய்யும் நோக்கத்தில் இலங்கைத் தீவானது கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், திருகோணமலை, கண்டி என ஐந்து மாகாண அலகுகளாகப் பிரிக்கப்பட்ட பொழுது தமிழர்கள் அனுபவித்துவந்த ஒரே எல்லையின் கீழான நிர்வாக ஒற்றுமை என்பது முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. தமது நலன்களையே முன்னிறுத்திச் செயற்பட்ட காலணித்து ஆட்சியாளர்கள் வடக்கு கிழக்குப் பகுதிகளிலிருந்து திரட்டிய வளங்களை மீள் முதலீடு செய்ய முன்வரவில்லை, இதனால் வடக்கு, கிழக்கு பொருளாதாரத்தில் உட்கட்டுமான வசதிகளில் முன்னேற்றம் என்பது இடம்பெறவேயில்லை ஆகவே இப்பகுதியில் காணப்பட்ட வளங்களைப் பயன்படுத்த முடிந்திருக்கவில்லை

அல்லது வடக்கு கிழக்கு வளங்கள் இல்லாத பிரதேசமென மக்கள் இனங்கண்டனர். மலையகத்தில் பெருந்தோட்டங்களைத் திறந்த காலனித்துவ ஆட்சியாளர்கள் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் காணப்பட்ட பனை, தெங்கு, மா, பலா, வாழை போன்றவற்றையும் கருத்திலெடுக்கத் தவறியுள்ளனர். அவற்றையும் இப்பகுதிகளில் பெருந்தோட்டங்களாகத் திறந்திருந்தால் தமிழர்களின் பொருளாதாரம் தலையெடுத்திருக்க முடியும் ஆனால் இவ்வாறான எதிர்க்கணிய நடவடிக்கைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து தமிழர் அரசியற் பொருளாதாரத்தை நெருக்கடிக்குள்ளாக்கியது.

இவ்வாறானதொரு நிலைமையில் தமிழர்கள் தமது ஊதியத்தை விற்பனை செய்து வாழ்வாதாரத்தைத் தக்க வைப்பதற்காக தெற்கு நோக்கி நகர்ந்ததன் மூலம் சிங்களப் பொருளாதாரத்தோடு தம்மையும் சொருகிக் கொண்டனர். இதன்மூலம் இலங்கை என்ற தீவடங்கிய பொருளாதாரத்திற்குள் தமிழர் அரசியல் பொருளாதாரம் இணைக்கப்பட்டு, தமிழரசு தன்னைத்தானே மாய்த்துக்கொண்டது. இது போன்றதொரு நடைமுறையைத்தான் தமிழர்கள் இன்றுவரை பின்பற்றுகின்றனர். வெளிநாடுகள் நோக்கி நகர்வதன் மூலமே தமது வசதி வாய்ப்புக்களை மேம்படுத்திவிடலாம் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையைக் கொண்டுள்ளனர். இந்த வகையான வெளிநோக்கிய இடம்பெயர்வுக்குத் தமிழர்களிடையேயான பல்வேறு அகமுரண்பாடுகளும் காரணம் என்று கூறுவதில் தவறிருக்க முடியாது.

காலணித்துவ ஆட்சியாளர்களிடமிருந்து இலங்கையின் சுதந்திரத்தையும் தன்னாட்சி இறைமையையும் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் தேசிய மட்டத்திலான சுதந்திரப் போராட்டதை முன்னெடுத்துச் செல்லும் நோக்குடன் 1919ம் ஆண்டிலே நிறுவப்பட்ட தேசிய காங்கிரசில் முதலாவது தலைவராகப் பொன்னம்பலம் அருணாசலம் தெரிவு செய்யப்பட்டமை விரும்பியோ விரும்பாமலோ தமிழர் சிங்களவர்களுக்கிடையில் நல்லிணக்கம் காணப்பட்டதையும் உணர்த்தியது. தேசிய ஒருமைப்பாடு மற்றும் இன ஒருமைப்பாடு என்பதனை வென்றுகொள்ளும் நோக்குடன் தேசிய காங்கிரசைப் பயன்படுத்த எண்ணிய பொன்னம்பலம் அருணாசலம் 1921ஆம் ஆண்டின் பிற்பகுதியில் தேசிய காங்கிரசுடனான உறவை முறித்துக்கொண்டு அதிலிருந்து வெளியேறியமை தமிழர் சிங்களவர்களுக்கிடையிலான உறவுகளில் ஒரு பிரிநிலைக் கோடாக அமைகின்றது.

அரசியல் நன்மை கருதி ஒருசாராரால் கைக்கொள்ளப்பட்ட இனவாதம் அவர்களுடன் மாத்திரம் எவ்வகையிலும் மட்டுப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அரசியல் அரங்கிலிருந்த சகலரும் அதனைப் படிப்படியாகத் தழுவிக்கொண்டபோது இலங்கையின் முழு அரசியலையும் இனவாதம் பீடித்தது மாத்திரமல்லாமல் தமிழர்களின் முற்றான அரசியற் பொருளாதார வளர்ச்சியே அதனால் நிர்ணயிக்கப்படும் நிலை தோன்றியது. இவை புறநிலையிலிருந்தான முரண்பாடாக அமைந்திருக்க அகநிலையில் தோன்றிய மற்றுமொரு முரண்பாடு தமிழர் அரசியற் பொருளாதாரத்தை தீர்த்துக்கட்டியது. அதுவே இனவாதத்தின் சாயல்படிந்த முறையில் வளர்ச்சியடைந்து சென்ற சாதிவாதமாகும். இதனால் ஏற்பட்ட துயரங்களின் உச்சக் கட்டமே சிறுபான்மை தமிழர் மகாசபையின் தோற்றமும் அமரர் உயர்திரு M.C சுப்பிரமணியம் அவர்களின் பாராளுமன்ற உறுப்பினர் நியமனமும் ஆகும். இவ்வாறானதொரு அமைப்பின் தோற்றமும் அவரது நியமனமும் கீழ்சாதியினர் எனக் கருதப்பட்டோர் இப்பிரதேசத்திலேயே பட்ட துன்பங்கள் அளவிடமுடியாதவை என்பதனையே கோடிட்டுக் காட்டுகின்றது. இவ்வாறான

அவலங்களைப் பட்டியலிடும்பொழுது அவை முடிவில்லாததாக அமைந்துவிடும். எவ்விதமான சொல்லொணாத் துயரங்கள் ஏற்பட்டபொழுதும் அவை மறைக்கப்பட வேண்டிய னவாகவும் மறக்கப்படவேண்டியனவாகவும் உள்ளன ஏனெனில் தமிழர்கள் இன்று நாடிநிற்பதெல்லாம் சுயாட்சி உரிமையாகும். இதனால் தமிழர்களின் ஒ்ற்றுமை என்பது சிதறடிக்கப்படக்கூடாது என்பதே உறுதியான நிலைப்பாடாகும். இந்த நிலைப்பாட்டை வெற்றி கொள்வதில் உயர்சாதியினரும் சரி கீழ் சாதியினரெனப்படுவோரும் சரி உறுதியாக உள்ளனர் என்பதே யதார்த்தமாகும்.

1977ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் முன்னாள் ஜனாதிபதி அமரர் J. R. ஜெயவர்த்தனா அவர்களினால் கொண்டுவரப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கை என்பது சாதி வேற்றுமையை தகர்த்தெறியும் பிரதானமான கருவியாகத் தொழிற்பட்டது. கீழ் சாதியினர் னெப்பட்டோர் உயர்சாதியினரால் அனுபவித்துக்கொண்ட பல்வேறு உரிமைகளையும் பெற்றுக்கொள்ள முடிந்தது. கீழ்சாதியினர் எனப்பட்டோர் உரிமைகளைப் பெற்றுக்கொள்கின்றார்கள் என்பதனை வெளிச்சம் போட்டுக் காட்டுவதுபோல்தான் இக்காலப் பகுதியிலே பாராளுமன்றத்திலே உடுப்பிட்டித் தொகுதி உறுப்பினர் அமரர் உயர்திரு இராசலிங்கம் அவர்களின் பிரசன்னம் அமைந்தது.அதனோடு இணைந்த வகையில் 1983 ஆம் ஆண்டிலிருந்து தமிழர்களின் போராட்டம் என்பது ஆயுதமேந்தும் கட்டத்திற்கு மாற்றப்பட்டது. இக்காலப்பகுதியோடு தமிழர்களின் ஒற்றுமை உலகெங்கும் ஓங்கி ஒலித்தது. தமிழர்களிடையேயான சாதி வேற்றுமை என்பது ஏறத்தாழ முற்றாகவே ஒழிந்தது அல்லது ஒழிக்கப்பட்டது. சாதி முறையால் பாதிக்கப்பட்டவர்கள் தமது துயரங்களை மறந்தனர். இக்காலப்பகுதியிலும் பின்னர் வந்த காலப்பகுதியிலும் பிறக்கின்ற தமிழர்கள் சாதிவேற்றுமைகளைத் தெரியாதவர்களாக, தமிழர்களாகவே பிறந்தனர்; பிறக்கின்றனர். 2009ஆம் ஆண்டு தமிழர்களின் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டது. 1983ஆம் ஆண்டின் பின்னரான காலம் என்பது தமிழர்களின் அரசியற் பொருளாதாரம் நன்கு ஒழுங்கமைக்கப்பட்டுச் சமத்துவத்தைக் கொண்டதாக, தன்னிறைவுத் தன்மையை எட்டுவதற்கானதாக அடித்தளமிடப்பட்டது என்பதை மறுப்பதற்கில்லை. ஆனாலும் ஆயுதமேந்திய விடுதலைப்போராட்டம் மௌனித்தபோது அதனைத் தத்தெடுத்துக் கொண்ட தமிழர்களின் பிரதான கட்சியானது பலத்த சவால்களுக்கு மத்தியிலும் தமிழர்களின் இலக்கை வெற்றிகொள்வதில் கடுமையாக உழைத்தது என்பதும் பெருநதொகையான தமிழர்கள் அதற்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றார்கள் என்பதும் மறுப்பதற்கு இல்லை. ஆனாலும் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவெனப் பிரசவிக்கப்பட்ட மாகாணசபை முறையைத் தீர்வுக்கான அடிப்படையாகப் பெற்றுக்கொண்டு அதன் தேர்தலைச் சந்தித்த பொழுது பிரதான தமிழ்க்கட்சியானது இட ஒதுக்கீட்டினை மேற்கொள்ளும் பொழுது சாதி முறையையும் ஒரு கருவியாகக் கையாண்டமை தமிழர்களின் அரசியற் பொருளாதாரம் எங்கே செல்கின்றது எனக் கூறமுடியாமலுள்ளது. அதன் தொடராகவே கல்விப்பணிமனைகளில் கூட அரசியல்வாதிகளின் முறையற்ற தலையீடு மீண்டும் பழைய நினைவுகளை மீட்டெடுக்கவும் இலங்கை அரசாங்கத்தின் எதிர்பார்ப்புக்களை இலகுவாக ஈடேற்றவும் உதவிவிடும். இவ்வாறான நீதி, நியாயமற்ற சிந்தனைகள் அகற்றப்படவேண்டும். எந்தவிலை கொடுத்தேனும் தமிழர்களின் ஒற்றுமை பேணப்பட்டு அவர்களின் இலக்கு அடையப்படல் வேண்டும் என்பதோடு அமரர் M.C சுப்பிரமணியம் ஐயா அவர்களிற்கு தலை வணங்குகின்றோம்.

# சமூக முன்னோடி

எஸ்.பொ

எம்.சி.இலங்கையிலே தோன்றிய சமூகப் போராளிகளுள் ஒரு முன்னோடி முதன்மையானவர். யாழ்ப்பாண மாநிலத்தின் இருபதாம் நூற்றாண்டு சமூக வரலாற்றை எழுத முயலும் எவரும் எம்.சி.யின் பங்களிப்பினைச் சிரத்தையிற் கொள்ளாது தமது படிப்பாய்விற்கு முழுமை சேர்த்தல் சாலாது.

இருபதாம் நூற்றாண்டின் முதல் மூன்று கந்தாயங்களின் வரலாறு இலங்கைவாழ் யாழ்ப்பான வேளாளர்களின் அதிகாரத்தினதும், அந்த அதிகாரத்தினை என்றும் தம்முடன் தக்கவைத்துக் கொள்வதற்கு அவர்கள் மேற்கொண்ட செயற் பாடுகளினதும், உபவிளைவான அரசியல் நிலைப்பாடுகளினதும் வரலாறு என்றுதான் எனக்குத் தோன்றுகின்றது.

இந்த வரலாறு, சேர் பொன்னம்பலம் இராமநாதன் படித்த இலங்கையருக்கான ஏகபிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து துவங்குகிறது. தமிழர்களுடைய தலைவர்களெனத் தலைநிமிர்த்தியோர் சைவ வேளாளர்களுடைய அதிகார மையங்களை சிக்காராகப் பிடித்துக் கொள்வதற்கான முயற்சிகளையே தமது அரசியலாக்கிக் கொண்டனர்.

சைவ வேளாளர்களின் அதிகாரம் என்பது தம் மத்தியில் வாழ்ந்த சிறுபான்மைத் தமிழர்களைத் தமது அடிமைக் குடிமைகளாக அடக்கி ஒடுக்கி, அடிமைத்தனம் என்னும் நுகத்தடிகளிலே கட்டிவைக்கும் ஜாதித் துவத்திலிருந்துதான் பெறப்பட்டது. இது தேசவளமைக் காலத்திலிருந்தே தமது முதுசொம்மெனவும் பாராட்டி, ஆண்டு அநுபவித்தனர்.

ஆங்கில மொழிப் பயிற்சி காரணமாக, யாழ்ப்பாண வேளாளர் ஆங்கிலேயரின்கீழ் இடைநிலை அதிகாரப் பதவிகளைக் கைப்பற்றிச் சுகித்தது. அவர்களுடைய மேலாண்மைக்கு அலங்காரக் குஞ்சங்கள் சேர்ப்பதற்கு சிங்களக் கிராமங்களிலிருந்து ஆயாக்களையும் "போய் (டிழலஎள)களையும் தருவத்துக் கொண்டார்கள்.

ஜீ.ஜீ. பொன்னம்பலம் முதலானோர் இலங்கைவாழ் தமிழர்களுள் பெரும்பான்மையினராக வாழ்ந்த இந்திய வம்சாவளித் தமிழர்களுடைய பிரஜா உரிமையைப் பறித்த செயலும் இந்த அதிகார வெறியின்பாற்படும். "காடு சுடும்" என்று நாடாளுமன்றத்தில் "சவபால் பேசிய "அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம், மாவைக் கந்தனைச் சிறுபான்மைத் தமிழர் தரிசிக்கலாகாது என்று சண்டித்தனஞ் செய்ததும் யாழ்ப்பாண வேளாளர்களின் ஆதிக்க வெறியின்பாற்படும்.

இந்த ஆதிக்க வெறியின் எதிர்வினையே 1983 ஆம் ஆண்டு அரங்கேற்றப்பட்ட ஈழத்தமிழர் சங்காரம். இந்த உண்மையை இன்று புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழர்கள் பலர் மறந்து, தீக்கோழி சாகஸம் புரிதல் அவலக்கோலமே

சிங்கள இனவெறியர்கள் வேளாளத் தமிழர்களைக்கூட "பறைத் தமிழன்" என்று அழைத்தே, துரத்தித் துரத்தி அடித்தார்கள். இந்த சோகத்தை உலகெலாம் கொண்டு சென்று அகதி அந்தஸ்து பெற்று புதிய வாழ்க்கை துவங்கியோர், புலம்பெயர்ந்து செல்லுகையில் கடாசப்பட வேண்டிய யாழ்ப்பாண வேளாள மேட்டிமைகளின் அனைத்து நோய்களையும் சுமந்து சென்று பரப்பி வாழுதல் தமிழருடைய ஒட்டுமொத்த வாழ்வியலுக்கு ஆரோக்கியமானதல்ல.

இலங்கைத் தமிழர்களுள் மிக ஒடுத்தப்பட்ட ஒரு பகுதியினரின் விடுதலை நோக்கிய அனைத்து செயற்பாடுகளிலும், கலகங்களிலும் எம்.சி. முன்னுதாரணமான ஆழ்தடம் பதித்துள்ளார். இதனை மறுதலிக்கும் விதமாக புதிய யாப்பின்போது அவர் தமிழர் நலனைக் காட்டிக்கொடுத்த துரோகி என்றெல்லாம் பிரசாரம் செய்தல், அறியாமை சார்ந்தது. அபக்குவமானது; அயோக்கியத்தனமானது.

தமிழர் உரிமைகளுக்காக வாதாடிய மேட்டுக்குடியினர், முதலில் தம் மத்தியிலே வாழ்ந்த சிறுபான்மைத் தமிழருக்கு சம உரிமை வழங்கப் படுதல் வேண்டும் என்கிற தார்மீகக் கடமையை ஏன் மறந்தார்கள் என்பதற்கான காரணங்கள் இன்றுவரை முன்வைக்கப்படவில்லை என்பதை நாம் உணருதல் வேண்டும்.

நிறபேதங்களுக்கு அப்பால், மொழி பேதங்களுக்கு அப்பால், கடின உழைப்பால் வளமான வாழ்க்கை அமைத்துக்கொள்ளலாம் என்கிற பொருளாதார மேம்பாடு சார்ந்த கலாசாரம் பேணப்படும் புலம்பெயர்ந்த நாடுகளிலே, நாம் தமிழர்கள் என்று கூறாது, நம் தமிழர்களுள் சாதி குறைந்தவர்களும் இருக்கிறார்கள் என்று காலாவதியான கொள்கைகளைப் பிரசாரம் செய்தல் எவ்வகையில் புத்தாயிரத்திற்குப் பெருமை சேர்க்கும்?

இன்றும் தமிழர்களுக்கு மத்தியில், சரிநிகர் சமானமாக வாழமுடியாத அபபாக்கியர்களான சிறுபான்மைத் தமிழர்களுக்கு கௌரவமான முகத்தைத் பெற்றுத்தருவதற்கு எம்.சி மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளும் பாடுகளும் புத்தாயிரத்தில் புதிய வெளிச்சத்தில் தரிசிக்கப்படுதல் வேண்டும்.

இலங்கை தமிழரசுக் கட்சி தமிழ் பேசும் இனம்" என்கிற கோஷத்தில் முஸ்லிம்களை இணைத்துக் கொள்ளலாம் என்று எடுத்த அரசியல் முயற்சி மிகப்பரிதாபகரமாகத் தோல்வியைத் தழுவிற்று காரியப்பர்களும், முஸ்தபாக்களும், மசூர் மௌலானாக்களும் வெட்கமின்றித்தந்தை செல்வாவின் முகத்திலே கரியைப் பூசித் தமது அரசியல் வியாபாரத்தை அமோகமாக நடத்தினார்கள்.

காலப்போக்கிலே தன்னைத் தேசியக் கட்சியாக மாற்றிக் கொள்ளுவதற்கான ஞானங்கள் பெரும்பாலானவற்றை எம்.சி. யின் அரசியல் செயற்பாடுகளிலிருந்தும் நிலைப்பாடுகளிலிருந்தும் பெற்றார்கள் என்ற உண்மை ஈழத்தமிழர் வரலாற்றில் இடம் பெறாமை, வரலாறு எழுதுவதிலே நேர்மையும் நடுநிலைமையும் பேணப்படாமை காரணமாக இருக்கலாம். அறிவின் சந்நிதானத்திலே இந்த வழுக்கள் நேர் செய்யப்படுதல் வேண்டும்.

இலங்கை நாடாளுமன்றத்தில் சிறுபான்மைத் தமிழர்களின் பிரதிநிதியாக எம்.சி. சுப்பிரமணியத்தின் குரலே முதலில் ஒலித்தல் வேண்டும் என்பது சரித்திர நியதியாக அமைந்தது. கால் நூற்றாண்டு காலம் முழுநேர அரசியல் ஊழியனாக, யாழ் மண்ணிலே மார்க்ஸிய இயக்கத்தினை வளர்த்ததற்கான அங்கீகாரமாகவும் அஃது அமைந்தது.

தனது சமூகத்தின் நிமிர்வுக்கு அவர் உழைக்க முடிந்த போதிலும், தன்னை நியமன உறுப்பினராக்க உதவிய கம்யூனிஸ்ட் கட்சிக்கும், நியமித்த அரசாங்கத்திற்கும் கீழ்ப்படிவுள்ள ஓர் உறுப்பினராக இயங்குதல் நாடாளுமன்ற அரசியல் பாராட்டும் மரபாகும். இதனை அறிந்திருந்த மேட்டுக்குடி அரசியல்வாதிகள், அவர் தமிழர் நலனைக் காட்டிக் கொடுத்தார் என்று தூஷண மழையை அவர்மீது பொழிவதற்குக் கொஞ்சமும் பின்னிற்கவில்லை.

ஆனாலும் அந்த அகந்தையாளர் சிறுபான்மைத் தமிழனின் குரல் நாடாளுமன்றத்தில் ஒலித்தல் ஆகுமானது என்கிற ஞானத்தை எம்.சி.யின் நாடாளுமன்ற ஊழியத்திலிருந்தே பெற்றார்கள் என்கிற உண்மையை ஏற்றுக்கொள்ளவும் கூச்சப்படுகிறார்கள்.

மூப்பின் அடிப்படையில் யாழ்ப்பாணத்தின் கல்வி அதிகாரியாக எம்.சி.யால் முன்மொழியப்பட்ட இராஜலிங்கத்தை அவசர அவசரமாகத் தத்தெடுத்து தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஆக்கியதின் உண்மை வரலாறும், இப்பின்னணியில் மீள எழுதப்படவேண்டிய ஒன்றாகும். தமிழர் தேசியம் என்பதிலே சிறுபான்மைத் தமிழரும் இணைத்துக் கொள்ளப்பட்டார்கள் என்று மேடைகளிலே பிரசாரம் செய்வதற்காக அவசரக் கோலத்திலே, தமிழரசுக் கட்சியினரால் செல்லத்துரை, நல்லையா, இராஜலிங்கம் ஆகியோர். தலைவர்களாக அறிமுகப்படுத்தப்பட்டார்கள்.

இவ்வாறு, தலைவர்களாக்கப்பட்ட அவர்கள் தனிப்பட்ட வகையில் ஆதாயம் பெற்றிருக்கலாம். அவர்களுடைய ஊழியத்தினால், சிறுபான்மைத் தமிழர்கள் வாழ்வியல் ரீதியில் அடைந்த நிமிர்வுகள் பற்றி ஒரு பந்தி எழுதுவதற்குக்கூட மூளையை மிகுந்த பிரயாசைகளுக்கும் கசக்குதல்களுக்கும் உட்படுத்த நேரிடும்.

இவற்றை நாம் கவனத்திலே எடுத்துக் கொள்ளும்3 பொழுது, ஈழத் தமிழர்களுடைய அரசியல் வரலாறு மீள்பார்வை செய்து, நடுவுநிலைமை பேணி, எதிர்காலத்தில் எழுதப்பட வேண்டிய ஒன்று என்பது புலப்படும்.

இந்த வரலாற்றின் நீட்சியாகத்தான் தமிழ் ஈழத்தின் போராட்ட வரலாறு அமையும். ஆறுமுகநாவலர், பொன்னம்பலம் சகோதரர்கள், ஜீ.ஜீ.பொன்னம்பலம் என வழக்கிலுள்ள வாய்பாடுகள் கிழித்தெறியப்பட்டு, தோழர் எம்.சி. சுப்பிரமணியத்தின் பெயரும் சேர்க்கப்படும் ஒரு புதிய வாய்பாடுதான் உண்மைத் தேடலுக்கான வழியைக் கோலும்.

இரண்டு பாடசாலைகளைத் தோற்றுவித்து, சைவ வேளாளரின் கல்வி முன்னேற்றத்திற்கு மட்டுமே உழைத்த ஆறுமுகநாவலரின் கல்வித்தொண்டு பற்றி துலாம்பாரமாக எழுதித் தள்ளியுள்ளார்கள்.

சிறுபான்மைத் தமிழர்கள் சமத்துவமும் சமநீதியும் சுகிக்கும் மனிதர்களாக எழுச்சி பெறுவதற்குக் கல்வி அபிவிருத்தியே திறவுகோலைத்

தன்னகத்தே வைத்துள்ளது என்பதை அடிநாளிலேயே உணர்ந்து, சிறுபான்மைத் தமிழர் அதிகமாக வாழும் மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதிகளிலே பதினைந்து புதிய பாடசாலைகளை ஆரம்பித்தும், சிறுபான்மைத் தமிழர்கள் மத்தியிலே நூற்றுக்கணக்கான பயிற்றப்பட்ட ஆசிரியர்களை உருவாக்கியும், அவர்கள் மத்தியிலே கல்வி அதிகாரிகள் தோன்றிடச் சகாயித்தும் யாழ்ப்பாண மண்ணிலே, சிறுபான்மைத் தமிழர் மத்தியிலே, கல்வியின் மறுமலர்ச்சிக்கு அயராது உழைத்த எம்.சி.யின் பங்களிப்பும் இணைத்ததுவாக ஈழத்தின் தமிழர் கல்வி வரலாறு மீள எழுதப்படும் தேவையும் ஏற்பட்டுள்ளது.

பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்" என்கிற பாரதி கனவைத் தமிழ்நாட்டில் காமராஜரும், ஈழத்தில் எம்.சி.யும் நனவாக்கினார்கள் என்கிற உண்மை அப்பொழுதுதான் வெளிச்சத்துக்கு வரும் வரலாற்றில் நேர்ந்துள்ள இந்த அசட்டைகளையும், பிறழ்வுகளையும் நேர்செய்து எழுதுவதற்கான ஓர் ஆவணமாக இந்நூல் அமைகின்றது.

பல கட்டுரைகள் சம்பவங்களை நேரில் கண்டவர்களின் சாட்சியமாக (eye-Witness) அமைந்துள்ளன. எனவே, அவை நம்புதிறனுக்கு வலுச்சேர்க்கின்றன.

என்னுடைய சுயசரிதம் போன்றும், நான் வாழ்ந்த மண்ணினதும், சமூகத்தினதும் வரலாற்றினை சுமார் இரண்டாயிரம் பக்கங்களிலே விரியும் "வரலாற்றில் வாழ்தல்" என்னும் நூலினை நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் எழுதி வெளியிட்டேன். அந்நூல் ஓர் அறுபது ஆண்டு வரலாற்றின் ஆவணம்.

அந்நூலில் பல்வேறு இடங்களில் எம்.சி. பற்றிக் குறித்துள்ளேன். அவை அவருக்குச் சொல் மாலை ஆட்டும் முயற்சியில் எழுதப்பட்டன அல்ல. அவரின்றி நான் இலக்கிய ஊழியனாய் உயர்ந்திருக்க முடியாது என்பதை நான் சத்தியமாகவே இங்கும் பிரசித்தப்படுத்துவதில் மனநிறைவு அடைகின்றேன்.

எம்.சி. தீர்க்கதரிசனம் மிக்கத் தலைவன். கோதாரியாக அல்லாமல், களத்திலே தொண்டனாய், சேவகனாய், தோழனாய், நண்பனாய், நல்லாசிரியனாய், மந்திரியாய், பல பரிமாணங்களிலே, பல தசாப்தங்களாக நிமைப்பொழுதும் சோராது, உறுதியாகவும் தொடர்ச்சியாகவும் உழைத்தார்.

தன்னலங்களிலும் பார்க்க, தான் பிறந்த ஒடுக்கப்பட்ட சமூகம் சமத்துவமும் சமநீதியும் பெற்று உத்தம குடிமக்களாக உயருதல் வேண்டும் என்கிற ஊழியத்தையே தன் வாழ்க்கையின் அர்த்தமாக்கிக் கொண்டார். பேச்சிலும், செயலிலும், வாழ்க்கையிலும் எளிமையின் ஆராதனையாளராகவே வாழ்ந்தார். இவற்றினாலேதான், என் அத்தான் என்ற உறவுமுறைகளுக்கு அப்பாலாக அவர் ஓர் அபூர்வனாய் வாழ்ந்தார் என்று என் மனம் அஞ்சலி செய்கின்றது.

இந்த அஞ்சலி அணுக்கமானது: ஆத்மார்த்தமானது விசுவாசமானது. பதவிகள் எதுவுமே அவரிடம் நத்தாது. அவர் ஏற்றிய கல்வித் தீபத்தால் நிமிர்ந்து வாழும் பரமார்த்த தொண்டன் ஒருவனின் மனப்பூர்வமான அஞ்சலி,

## வகை வகையாய் சாதிகள்

வயிரமுத்து - திவ்வியராஜன்

ஊற்றுநீர் ஒன்று
கிணறுகள் வேறு வேறு
எரித்தால் பிடிசாம்பல்
எரியிடங்கள் வேறு வேறு

புதைத்தால் ஆறடிமண்
புதையிடங்கள் வேறு வேறு
கடவுள் ஒன்று
வணங்கிடங்கள் வேறு வேறு

சாமிகாவ ஒரு கூட்டம்
தேரிழுக்க தனிக் கூட்டம்
பூஜை செய்ய ஒரு சாதி
பூக்கட்ட ஒரு சாதி

பறையடிக்க ஒரு சாதி
தவிலடிக்க மறு சாதி
மயிர் வெட்ட ஒரு சாதி
பயிர் செய்ய ஒரு சாதி

மீன் பிடிக்க ஒரு சாதி
இரும்படிக்க ஒரு சாதி
கழிவகற்ற ஒரு சாதி
துணி துவைக்க ஒரு சாதி

ஆடை நெய்ய ஒரு சாதி
பாடை சுமக்க ஒரு சாதி
மரமேற ஒரு சாதி
மரவேலைக்கு மறுசாதி

எண்ணெய் வடிக்க ஒருசாதி
மண்ணைக் குழைக்க மறுசாதி
நகை செய்ய ஒரு சாதி
வகை வகையாய்ப் பல சாதிகள்

# நமது அரசியல்

K. வீரப்பிள்ளை வீரகுமார்.

**இலங்கை சோசலிசக் குடியரசு:**

உலகப் பரப்பில் பல வகையிலும் முன்னணி நின்று முன்மாதிரித் தேசமாக முதன்மை பெறவேண்டியது. எம்மிடையே ஏற்படுத்தப்பட்டுவிட்ட பேதாபேதங்கள் நமது வளர்நிலைகளைத் தலைகீழாக்கிவிட்டது.

**அரசியல்கள்:**

கொள்கைகளையும் தாண்டி இனம், மதம், மொழி, வர்க்கம், இல்லாத ஜாதி பேதங்களைக் காட்டித் தேச ஒற்றுமையின் கட்டமைப்புக்களைக் காவுகொண்டுவிட்டன.

**தலைவர்களின் செயல் முனைப்புக்கள்:**

வாக்கு வங்கிகளை உயர்த்தும் நோக்கில் பிரிவினைகளைத் தூண்டி, மனங்களையும் துண்டாடி, சமநீதி, சம உரிமை, சமத்துவம் சகோதரத்துவம் அத்தனையும் வெறும் வார்த்தை ஜாலங்களாய் மேடைகளிலும் அறிக்கைகளிலும் வெளியிட்டு அவை காற்றோடு காற்றாய்க் கலந்துவிட்ட நிலைமைதான் நமது வரலாறு.

**1948 பெப்ரவரி 4:**

தேசம் சட்டரீதியாகச் சுதந்திரம் பெற்றுவிட்ட நிலையிலும் நம்மவர்களின் ஆதிக்க முனைப்புக்கள் நம்மவர்கள் நம்மவர்களையே அடக்கி ஒடுக்க முனையும் செயல் நெறிகள், தமிழ் தலைவர்கள் என்று போற்றப்படுகின்ற பலரின் அரசியல் வியூகங்களின் விளைவுதான் என்பதை தெட்டத் தெளிவாக உணர முடிகின்றது.

புறந்தள்ளப்பட்டவர்களிலும் சிலர் அரசியல் நப்பாசையில் ஆதிக்க சக்திகளின் கோடிக்குள் முடங்கி, அவர்கள் ஏதோ பரிதாபப்பட்டு, கொடுக்கின்ற சொற்ப ஒதுக்கீடுகளுக்குச் சோரம்போகின்ற நிலைமைகளும் புறந்தள்ளப்பட்ட மக்களை இன்னும் இன்னும் அரசியல் அதிகாரங்களிலிருந்து அந்நியப்படுத்தி வருகிறது. அரசியலில், அரசியல் சமத்துவம் புறம்தள்ளப்பட்டு, காலாதிகாலம் ஒருசாராரே பதவிகளைப் பெற்று வருவதும் தொடர்கின்றது.

1970களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தில் M.C. சுப்பிரமணியம் அவர்கள் நியமன உறுப்பினராகப் பாராளுமன்றம் சென்றமை பலவகையிலும் புறந்தள்ளப்பட்ட மக்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்தபோதும் இரண்டு போக்குகள் குறிப்பாக சுட்டத்தக்கன.

1. பல வகையிலும் அரசியல் ரீதியாக புறக்கணிக்கப்பட்ட மக்களுக்கு இவரது அரசியல் செயற்பாடுகள் கல்வி, பொருளாதாரம், சமூக விடுதலை என்பவற்றையும் உத்வேகப்படுத்தியது.
2. ஆதிக்க சக்திகள் விரும்பியோ விரும்பாமலோ புறந்தள்ளப்பட்ட மக்களிலிருந்து வேட்பாளர்களை, நிலைநிறுத்தவும் ஒப்புக்கேனும் இந்த மக்கள்மீது கரிசனம் காண்பிக்க வழி சமைத்தது.

வாக்காளர் தொகையில் கணிசமான தொகையினர் புறந்தள்ளப்பட்டவர்களாக இருக்கின்றபோதும் இன்றுவரை அவர்கள் சார்பாகக் குறித்த விகிதாசாரத்திற்கு ஏற்ப உறுப்பினர்கள் பாராளுமன்றம் செல்லமுடியாத நிலை ஆதிக்க சக்திகளின் அரசியல் சாணக்கியம் ஆகும்.

ஒடுக்கப்பட்ட மக்களின் வெகுசனப் போராட்டங்கள் பலவற்றுக்கும் உந்து சக்தியாக இருந்த M.C. அவர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினராக அல்லாது நியமன உறுப்பினராகவே பாராளுமன்றத்திற்குச் சென்ற தன்மை புறந்தள்ளப்பட்ட மக்களுக்கான ஒரு சலுகையாக கொள்ளப்பட்டாலும் புறந்தள்ளப்பட்ட மக்கள் தமக்கான அரசியல் விழிப்பைப் பெற்றிருக்காத நிலைமையினையும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

மொத்த உறுப்பினர்களில் கணிசமான உறுப்பினர்களை பெற்றுக்கொள்ளக் கூடிய வாக்குப் பலம் இவர்களிடம் இருந்து வருகின்றபோதும் இவர்களது அரசியல் கொத்தடிமைத்தனங்கள் ஆதிக்க சக்திகளின் நோக்கங்களுக்கு வடிகாலாக அமைகின்றமை எவராலும் மறுக்கமுடியாத வெளிப்படை உண்மை.

M.C. அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்ட அந்தவேளை M.C. அவர்களின் கீர்த்திக்கு பங்கம் ஏற்படக் கூடியவாறான நியாயங்கள் தலைவர்கள் பலராலும் திட்டமிட்டுப் பரப்பப்பட்டிருக்கும் கருவியாக புறந்தள்ளப்பட்டவர்களும் சிலர் பயன்படுத்தப்பட்டிருப்பர்.

M.C. யின் அரசியல் பயணத்தின் உத்வேகம் தமக்கான அரசியல் பயணத்தின் தடையாகி, தமக்குக் கிடைக்கவேண்டிய பாராளுமன்ற ஆசனங்கள் பல பறிபோகலாம் என்பதும் தம்மால் கட்டமைக்கப்படும் அரசியல் போக்குகள் சிக்கலாகி, நிலைமை மாறிவிடும் என்பதும் ஆதிக்க சக்திகளின் அரசியல் தனங்களால் நன்குணரமுடியும். எவ்வாறு இந்த சூழ்நிலைகளை சமாளிப்பது? தமக்கான அரசியல் நிலைகளை தக்கவைப்பது எங்ஙனம்? புறந்தள்ளப்பட்டவர்களின் அரசியல் முனைப்புப் பெற்று அவர்கள் அரசியல்

விழிப்புப் பெறின் கணிசமான ஆசனங்கள் கைமாறும் இதனால் கிடைக்கின்ற சில ஆசனங்களுக்காக எங்களுக்குள்ளேயே போட்டி பூசல்கள் ஏற்பட்டு, பிரிவினைகளும் சச்சரவுகளும் பூதாகாரப்படுத்தப்பட்டு அரசியல் ரணகளப்பட்டுவிடும்.

பலவகையிலும் சிந்தித்த ஆதிக்க சக்திகள் இதனை முடக்குவதற்கான மார்க்கங்களைக் கட்டமைத்திருப்பர். இதன்போது செயற்பாடுகளை வெளிப்படையாக செயற்படுத்த முனையும்போது புறந்தள்ளப்பட்ட மக்கள் ஒன்றித்துவிடுவர் என்பதை உணர்ந்து கபடத்தனமான காய்நகர்த்தல்களை மேற்கொண்டிருப்பர்.

சித்தாந்த ரீதியாகவோ, சாதி ரீதியாகவோ பிரச்சினைகளை ஏற்படுத்தல், புறந்தள்ளப்பட்டவர்களில் எடுபடக்கூடிய முக்கிய பிரமுகர்களை இனங்கண்டு அவர்களைத் தம்பக்கம் திருப்புதல், புறந்தள்ளப்பட்டவர்களில் எந்தவொரு சமூக சிந்தனைகளுமின்றி, அரசியல் நோக்கங்களுமின்றி உயர் நிலைகளில் இருக்கும் நபர்களை இனங்கண்டு புறந்தள்ளப்பட்டவர்களின் தலைவர்களாக அவர்களைக் காட்டி, தமது எடுபிடிகளாகப் பயன்படுத்துதல்.

இவ்வாறு தமக்கிடையே ஏற்படவிருந்த போட்டி பூசல்களை வலு சாமர்த்தியமாகத் திசை திருப்பி, தமது அரசியல் இருப்புக்களைப் பாதுகாப்பதில் ஆதிக்க சக்திகள் வெற்றி பெற்றுள்ளனர் என்பதைத்தான் நமது அரசியல் வரலாறுகள் துலாம்பரப் படுத்துகின்றன.

M.C. சுப்பிரமணியம் அவர்கள் நியமன உறுப்பினராக நியமனம் பெற்ற சந்தர்ப்பத்தை புறந்தள்ளப்பட்ட மக்கள் சரியாகப் பயன்படுத்தியிருப்பின் புறந்தள்ளப்பட்டவர்கள் சார்பாகவும் கணிசமான மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டிருப்பர். புறந்தள்ளப்பட்டவர்கள் வாழ்க்கைத் தரங்களும் உயர்வுற்றிருக்கும். இன்று புறந்தள்ளப்பட்ட மக்களிலும் கணிசமான தொகையினர் பொருளாதார ரீதியாகவும் கல்வி நிலைமைகளிலும் தன்னிறைவு பெற்றிருக்கின்ற போதும் அந்த மாற்றத்திற்கான அடிப்படை அரசியல் என்பதைவிட வெளிநாட்டு புலப் பெயர்வு என்பதுதான் வெளிப்படை.

வெளிநாட்டுப் புலப்பெயர்வு இல்லாது நம்மவர்களின் அரசியலுக்குள்ளேயே புறந்தள்ளப்பட்ட மக்கள் வாழும் நிலை ஏற்பட்டிருப்பின் இன்றுள்ள வாழ் நிலைகள் எப்படி இருந்திருக்கும்?

புறந்தள்ளப்பட்டவர்கள் தமக்கான அரசியல் பற்றிச் சிந்திக்கவேண்டிய தருணம் புகழுக்காகவும், மாலை மரியாதைகளுக்காகவும் நயினார் விசுவாசங்களுக்காகவும் தமக்கான தனித்துவங்களை தான்சார்ந்த மக்களின் வாழ் நிலைகளை அடைவு வைக்கும் கொத்தடிமை அரசியல் இனியும் வேண்டாமே. சமத்துவ வாழ்வின் மாண்பிற்காக M.C. சுப்பிரமணியம் அவர்களின் நூற்றாண்டு விழாவில் அனைவரும் ஒன்றிணைவோம்.

# மீண்டும் வேண்டும் உயிர்ப்பு

– திரு. நல்லதம்பி மகாலிங்கம்

புராதன காலத்தில் தேவர்களுக்குத் தீங்கு செய்து அவர்களை அடக்கி ஒடுக்க நினைத்த அசுரவம்சத்தில் வந்த சூரனின் கொடுமைகளுக்கு முடிவு கட்டியவர் முருகப் பெருமான். அம்முருகப் பெருமானின் நாமத்தை தாங்கிவயவராகவும் அன்று சாதியம் என்னும் பெயரால் அடக்கி ஒடுக்கப்பட்ட அடிமைகள் குடிமைகள் எனப் பஞ்சமர்கள் என்று அடையாளபடுத்தப்பட்டவர்களின் துன்பங்களை கண்டு கிளர்ந்தெழுந்த ஒரு மக்கள் தலைவனாக விளங்கியவர் அமரர் திரு M.C சுப்பிரமணியம். ஒரு கால இடைவெளியில் மேலாதிக்கவாதிகளும் நிலபிரபுத்துவ வாதிகளும் பஞ்சமர்கள் என வரையறுத்த ஒரு சமூகத்தினரை மிகவும் கீழ்த்தனமாகவும், அடிமைகளாகவும், குடிமைகளாகவும் அடக்கி ஆழப்பட்ட நிலையில் அவர்களின் பிரதிநிதியாக முன்னின்று அவர்களின் அடிப்படை உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தவர் திரு M.C சுப்பிரமணியம் ஐயா அவர்கள் இதற்காகப் பற்பல வெகுஜன போராட்டங்களை நடத்தியதோடு பல முற்போக்கான எண்ணக் கருத்துக்களையும் முன்வைத்துப் பல்வேறு வெகுஜன கட்டமைப்புகளையும், பாடசாலைகளையும் அந்தந்த மக்களின் பிரதேசங்களில் நிறுவுவதற்கு முன்னோடியாக உழைத்து நின்றார்.

தமிழ் இனத்திற்கு உள்ளேயே அடிமைப்பட்ட இனம் (சிறுபான்மையினர்) அடிமைப்படுத்திய இனம் (பெரும்பான்மையினர்) என்ற பாகுபாடு இன்றைய காலகட்டத்தில் விசாலமடைந்ததால் மனம் விரக்தியுற்றார். சிறுபான்மை மக்களின் பிரச்சினையை வெளியே கொண்டு வருவதற்கு ஏற்கனவே **1942** இல் அகில இலங்கை சிறுபான்மை மகாசபை என்ற அமைப்பு உருவாக்கியிருந்த போதிலும் அம்மக்களின்

பிரச்சனைகளுக்கு பூரணத்துவமான ஒரு தீர்வின்றி இருந்தவேளையில் அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை என்ற அமைப்பிற்கு 1956இல் தலைவராக ஏற்று மிகவும் நீண்டகால தலைமைப் பதவியை வகித்தார். இக்கால கட்டத்தில் பல முற்போக்கு சிந்தனையாளர்களுடன் இணைந்து சிறுபான்மைத் தமிழ் மக்களின் விடிவிற்காக உழைத்தனர். இந்நிலையில் இன்றுவரை மக்களின் மனங்களிலே விடிவெள்ளியாகத் திகழ்நதுவரும் M.C சுப்பிரமணியம் என்ற பெருந்தகை இவ் நூற்றாண்டின் பதிவிற்குரியவர் ஆகிறார்.

ஒரு தேசிய அரச அமைப்பிற்குள் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் பல்வேறு தேவைகளும் புறக்கணிக்கப்பட்ட நிலையிலும் மேலாதிக்க வர்க்கத்தினரால் தீண்டதகாதவர்கள் ஆசாரம் இல்லாதவர்கள் என ஒதுக்கப்பட்டு, நலிவுற்ற வேளையில் மிகவும் துணிச்சலாகத் தேசிய அரசாங்கத்தின் முன் அவர்களின் பிரச்சினைகளைக் கொண்டு சென்றவர் ஆகிறார். இதனால் சிறுபான்மைத் தமிழன் என்ற வகையில் அன்றைய தேசிய அரசாங்கம் இவருக்கு ஒரு நியமன பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்கி கௌரவித்தது. இதனாற்றான் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்ட சிறுபான்மை மக்களின் பல்வேறு தேவைகள் இவர் ஊடாக நிறைவேற்றப்பட்டன. இம்மக்கள் மத்தியில் அன்றைய நிலையில் கல்வி இலக்கினை அடைந்த கணிசமானவர்களுக்கு அவரவர் தகுதிக்கு ஏற்ப அரச உத்தியோகங்களையும் பெற்று கொடுத்ததோடு பல பொது கட்டமைப்புளையும் செவ்வனே ஆற்றிய பெருந்தகையாய் மிளிர்ந்தார். பஞ்சமர் என்ற மக்கள் கூட்டத்தின் தலைவனாக திகழ்ந்த இவர் அன்றைய காலத்தின் நெருக்கீடுகளுக்கு ஒரு கணிசமான தீர்வினைப் பெற்றுதரக்கூடிய ஒருவராகவும் விளங்கியுள்ளார்.

அன்று அடக்கி ஒடுக்கப்பட்டவர்களை ஒதுக்கக் காரணமாக இருந்தவர்களின் மேலாதிக்க சிந்தனைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்து எல்லோரையும் விழிப்படைய வைத்தார்.

இதன் மூலம் தம்மக்களையும் மனிதர்களாக வாழவைத்த பெருமைக்கு உரியவர் ஆகிறார்.

எது எவ்வாறு இருந்த போதிலும் மேலாதிக்க சிந்தனையின் வெளிப்பாடுகள் இன்றும் நீறு பூத்த நெருப்பாக ஆங்காங்கே துளிர்விட்டு கொண்டிருக்கின்ற உண்மையைச் சிறுபான்மை மக்களால் மிகவும் வேதனையோடு உணர முடிகிறது. மேல்நிலை அரச உத்தியோகங்களில் ஏனைய சமூகமட்ட அமைப்புக்களில் அரச உயர் கல்வி பீடங்களில் தகுதியான கல்வி பெறுபேறுகளை அடைந்தோருக்கும் உரிய நியமனங்கள் மறுக்கப்படுகின்றன.

ஒரு தேசியப் போராட்டத்தின் காலச் சூழலில் அமுக்கப்பட்ட நிலையில் இருந்து தற்போது புத்துயிர் பெறுகின்றதா? என்ற ஐயமும் உள்ளது. ஏனெனில் மறைமுகமாக அடக்கியாளும் எண்ணக்கருக்கள் மேலோங்கி, தகுதியான உரிமைகள் மறுக்கப்பட்டு, அவை நீத்துப் போகும் அளவிற்குப் புறம் தள்ளப்படும் நிலையை அடைந்துள்ளமைக்குப் பல சான்றாதாரங்கள் உண்டு. உதாரணமாகப் போட்டி பரீட்சைகளில் தகுதியான பெறுபேறுகளையும் தொழில்சார் அனுபவங்களையும் பெற்றவர்களின் உயர்பதவிகள் மறுக்கப்பட்டுள்ளன.

மேலும் தேர்தல் காலங்களில் தேசிய அரசியல் பிரசன்னங்களும் திட்டமிட்டு வகைப்படுத்தப்பட்டு செயற்படுத்தப்படுகின்றன. தந்திரமான பேச்சுக்களையும் செயற்பாடுகளையும் முன்நிறுத்தி, அற்ப சொற்பமான ஒரு சில ஒதுக்கீடுகளையும் சிறுபான்மைத் தமிழர் பிரிநிதிகளுக்கு வழங்கி, அதுவே பூரணத்துவமான பிரதிநிதித்துவமெனச் சமயோசிதமாக, ராஜதந்திரமாக காய் நகர்த்தி, எம்மக்களின் அரசியல் வாக்குரிமையைப் பெற்று, ஆசனம் தேடி மீண்டும் ஒருமுறை மேலாதிக்க வர்க்கத்தின் தலைமையை உருவாக்கி எம்மை அடிமைப்படுத்தும் நிலை உருவாகி வருகின்றது. இந்நிலையை உணர்ந்து செயற்பட வேண்டியது காலத்தின் தேவையும் கட்டளையும் கூட. ஆகையால் தான் எம்மை விட்டுப் பிரிந்த அமரர் திரு M.C சுப்பிரமணியம் என்னும் பெரும் மதிப்பிற்குரிய சிந்தனையாளனின் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் உறுதி கொண்டு அவருக்கு ஈடிணையாக எமக்கொரு தலைவரை உருவாக்குவது மிகவும் இன்றியமையாதது ஆகும். இதன் மூலம் எமது மக்களுக்கான ஒடுக்குமுறை சவால்களுக்கு முகம்கொடுத்து எமது அடையாளத்தை வெளிப்படுத்துவதே இன்றைய காலத்தின் தேவையாகும்: எம்மை அடிமைப்படுத்தி, அடக்கி, ஒடுக்கி, ஆண்ட மேலாதிக்கவாதிகளின் எண்ணக்கருக்களை உடைத்து விளிப்படையச் செய்த அமரர் திரு M.C சுப்பிரமணியம் ஐயா அவர்களுக்கு நாம் செய்யும் அர்ப்பணமாகவும் இது அமையும் என்பதில் உறுதியான நம்பிக்கை கொள்வோம்.

நன்றி

நொத்தாரிஸ் தோட்டம் (மண்டான்)
கரணவாய் மேற்கு கரவெட்டி

# எம். சி. சுப்பிரமணியம் அவர்களின் சமூக விடுதலைப் போராட்டங்களும் தலைமைத்துவமும்

-க.சின்னராஜா-
முன்னாள் பொருளாளர்
அ.இ.சி.த.மகாசபை

இலங்கையில் சாதி அடிப்படையில் ஒடுக்கப்பட்டு, சமூக உரிமைகளும், மனித உரிமைகளும் மறுக்கப்பட்ட தமிழ் மக்களுக்காக, சுமார் அரை நூற்றாண்டுக்கு மேலாகப் போராடிய ஒப்பற்ற மாபெரும் தலைவர் எம்.சி. சுப்பிரமணியம் அவர்களாவார்.

சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கம், அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை, இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி, இலங்கை பாராளுமன்றம் ஆகிய இந்த நிறுவனங்களின் உறுப்பினராக இருந்து கொண்டு அவர் ஆற்றிய சமூக சேவை அளப்பரியது, சாதியமும், தீண்டாமையும் கோலோச்சி, தாழ்த்தப்பட்டும் ஒடுக்கப்பட்டும், உயர்குடித் தமிழர்களால் அடிமைகள் குடிமைகளாய் அடக்கி ஆளப்பட்ட நலிவுற்ற பஞ்சம மக்களின் மானிட சமூக விடுதலைக்கு எம்.சி.அவர்கள் அயராது அர்ப்பணிப்புடன் பாடுபட்டார். அவர் களம்பல கண்டவர். இரவும் பகலும் மக்களின் சமூக விடுதலைக்காய் உழைத்தவர். ஏழை எளிய மக்களுக்கும் விவசாயிகள், தொழிலாளிகள் மற்றும் அனைத்துப் பாட்டாளி வர்க்கத்திற்கும் அவர்களின் விடிவிற்குமாய் இரத்த வியர்வை சிந்திய முற்போக்குச் சிந்தனையாளர்.

எம்.சி.அவர்கள் காந்தியின் அகிம்சைக் கொள்கையினையும், ஈ.வேரா பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையினையும் நன்கு அறிந்தவர். அவற்றினை விளங்கிக் கொண்டு வாழ்ந்தவர். அதன் பின்னணியில்தான் சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கத்தினை அவர் உருவாக்கினார். பின்னர் அது சிறுபான்மைத்தமிழர் மகாசபையாக இணைந்து கொண்டது.

சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் ஸ்தாபகர்களில் மிக முக்கியமான ஒருவராக எம்.சி.இருந்தார். அவர் அந்த மகாசபை மூலம் எமது தாழ்ப்பட்ட மக்களின் கல்வி, காணி, குடியிருப்பு, வேலைவாய்ப்பு, சமத்துவம், சமூக நீதி என்பவற்றிற்காகப் போராடிப் பல வெற்றிகளை மக்களுக்குப் பெற்றுக்கொடுத்தார். இப்படியான சூழ்நிலையில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியையும் மகாசபையையும் வலுப்படுத்தினார்.

1943ல் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி கொழும்பில் ஆரம்பிக்கப்பட்ட போது டாக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்க, எம்.ஜீ. மென்டிஸ், ஆரியவன்ச குணசேகர, தோழர் காத்திகேசன் என்போர் கட்சியின் முக்கிய அமைப்பாளர் ஆனார்கள்.

இப்படியான ஒரு சூழ்நிலையில் கம்யூனிஸ்ட் கட்சிக்கு யாழ்ப்பாணத்தில் ஒரு கிளை அமைக்க வேண்டிய பொறுப்பினை ஏற்று, தோழர் கார்த்திகேசன் இங்கு வந்தார்.

1944ல் யாழ்ப்பாணம் வந்த தோழர் கார்த்திகேயன் முற்போக்குச் சிந்தனையோடு இயங்கிக் கொண்டியிருந்த தோழர் எம்.சி.சுப்பிரமணியம், இராமசாமி ஐயர், டாக்டர் சு.வே.சீனிவாசகம், ஆர்.ஆர்.பூபாலசிங்கம், அரசடி இராசையா ஆகியோரைக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைத்துச் செயற்படத் தொடங்கினார். இக்கட்சியானது தொழிலாளர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெறத் தொடங்கியது.

கம்பியூனிஸ்ட் கட்சியின் ஆரம்பகால உறுப்பினராக விளங்கிய எம்.சி. அவர்கள் அக்கட்சியை வளர்த்தெடுப்பதில் தீவிரமாக உழைத்தவர். சாதிரீதியாக ஒடுக்கப்பட்டு பல துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு கம்யூனிஸ்ட் கட்சியே ஒரு சிறந்த வழிகாட்டி என்பதை அவர் உணர்ந்தார். இதனால் சகல பாட்டாளி மக்களோடும் ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவரையும் ஒன்று திரட்டிச் சிறுபான்மைத்தமிழர் மகாசபையின் தலைமையின் கீழ் பலபோராட்டங்களை நடாத்தினர்.

எம்.சி. அவர்கள் சாதிக்கொடுமையால் பாதிக்கப்பட்ட சமூகத்தில் பிறந்தவர். அதனால் வடபிரதேசத்தில் நிலவிய சாதியத்தினதும், தீண்டாமையினதும் கொடிய அடக்குமுறைகளையும் அடிமை, குடிமைத்தளைகளையும் நன்கு அறிந்தவர். எனவே சகல ஒடுக்கு முறைகளாலும் சீரழிந்து காணப்பட்ட மக்களை மீட்டெடுப்பதற்காக அவர் அயராது தானும் ஓர் போராளியாக களத்தில் நின்று போராடினார்.

எம்.சி. அவர்கள் ரஸ்சியப் புரட்சி நடைபெற்ற 1917ம் ஆண்டு யாழ்ப்பாணப் பட்டினத்திலே பிறந்தார். அவருக்கு ஐந்து வயதாக இருக்கும் போதே தனது ஆரம்பப் பாடசாலையில் இருந்து படிக்க ஆசனம் கிடைக்காமையால் அப்பாடசாலை சென்று தரையிலிருந்து கல்விபயிலத் தனது எதிர்ப்பைத் தெரிவித்தார். பின்பு அவருக்கு ஒரு ஆசனம் போட ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வினை நாம் இலகுவில் மறந்துவிட முடியாது.

யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலடியிலிருந்த மெதடிஸ்த மிசன் பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியை முடித்த எம்.சி. அவர்கள் தனது உயர்தரக் கல்வியை மேற்கொள்வதற்காக யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரியில் சேர்ந்தார். அங்கு அவரின் கல்விச் செயற்பாடுகளையும் திறமைகளையும் அவதானித்த ஒரு ஆசிரியரான பாதிரியார் "நீ என்ன சாதி" எனக் கேட்டு அவமதித்துள்ளார். இப்படியான சம்பவங்களும் கேவலங்களும், அவமரியாதைகளும் சாதிய ஆணவத்திற்கு எதிராகப் போராடவேண்டும் என்ற உணர்வை அவரது மாணவப் பருவமே அவருக்குக் கற்பிக்கத் தொடங்கியது என்று துணிந்து கூறலாம்.

எம்.சி. அவர்கள் தனது இளமைக்காலத்திலே பல தரப்பட்ட சாதிய ஒடுக்கு முறைகளைக் கண்டவர். அதனால், தனது தாழ்த்தப்பட்ட சமூகம் அனுபவித்துக்கொண்டிருந்த தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராகப் போராடினார். கோயில்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் உட்சென்று வழிபட முடியாது. இதனால் எம்.சி. அவர்கள் மக்களை அணி திரட்டியதுடன் தானே தலைமை தாங்கிப் பல ஆலயக் கதவுகள் திறப்பதற்கு வழி சமைத்தார். தேநீர்க்கடைகளையும் சலூன்களையும் திறக்கப்போராடி வென்றார். யாழ்ப்பாணத்தின் பல கிராமங்களுக்கும் சென்று தாழ்த்தப்பட்ட மக்களை ஒன்று திரட்டி, பல உணவகங்களையும், லோன்றிகளையும் சகல மக்களுக்கும் திறக்க வழிசமைத்தார்.

**1941**ம் ஆண்டு ஆரியகுளம் சந்தியில் சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தச் சங்கத்தை ஸ்தாபிப்பதில் எம்.சி. அவர்கள் முன்னின்று உழைத்தார். இதன் மூலம் அயற் கிராமங்களில் வசித்த தாழ்த்தப்பட்ட இளைஞர்களையும் ஒன்று திரட்டி ஐக்கியப்படுத்தினார்.

**1942**ம் ஆண்டு தாழ்த்தப்பட்ட மக்களின் வரலாற்றில் ஓர் முக்கிய படிக்கல்லாக அமைந்த காலமாகும். இக்காலத்தில்தான் முதன்முதலாக வட இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை உருவாக்கப்பட்டது. இச் சபையின் உருவாக்கத்தில் சுமார் பத்துப் பேரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. இவர்களில் எம்.சி. அவர்கள் மிக முக்கியமான செயற்பாட்டாளராக விளங்கினார். அப்பொழுது யாழ். மாவட்டத்தின் பல கிராமங்களில் இயங்கிக்கொண்டிருந்த ஒடுக்கப்பட்ட மக்களின் ஸ்தாபனங்களை ஒன்று திரட்டி வட இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை உருவாக்கப் பாடுபட்டு வெற்றியும் கண்டார். இந்த மகாசபையின் உருவாக்கத்தில் எஸ்.ஆர். ஜேக்கப், ஆ.ம.செல்லத்துரை வி.ஜே. அரியகுட்டி, ஜி.நல்லையா, எம்.சி. சுப்பிரமணியம், அ.அந்தோனிமுத்து, டி.கணபதிப்பிள்ளை, எம்.பொன்னுத்துரை ஏ.சி.பென்சமின், ம.சின்னப்பு என்போர் தீவிரமாக முன்னின்று செயற்பட்டனர். **24.04.1943**ல் நடைபெற்ற முதலாவது மகாசபையின் மாநாட்டிற்கு தெல்லிப்பளையைச் சேர்ந்த ஆசிரியரும், கட்டிட ஒப்பந்தக்காரருமான யோவேல்போல் அவர்கள் தலைமை தாங்கினார்.

**1945** சோல்பரி ஆணைக்குழுவினர் இலங்கை வர இருந்தனர். அதற்கு முன்னதாக மகாசபையின் பெயர் அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர்

மகாசபை என மாற்றம் செய்யப்பட்டது. இதற்காக எஸ்.ஆர்.ஜேக்கப்பும் சிலரும் திருமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களுக்குச் சென்று அங்கத்தவர்களைச் சேர்த்து வந்தமை குறிப்பிடத்தக்கது. 1944ல் அ.இ.சி.த. மகாசபையின் இரண்டாவது மாநாடு நடைபெற்றது. இதற்கு ஏ.பி. இராஜேந்திரா தலைமை தாங்கினார்.

1945ம் ஆண்டு சோல்பரி ஆணைக்குழுவினரை அன்றைய பருத்தித்துறைத் தொகுதி உறுப்பினரான ஜி.ஜி. பொன்னம்பலம் வடமராட்சிக்குக் கூட்டிச் சென்றார். அப்பொழுது எம்.சி. அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் மிகவும் பின்தங்கி வாழும் கன்பொல்லைக் கிராமத்தையும், மக்களின் அவல வாழ்வையும் காட்டுவதற்கு சோல்பரிக் குழுவினரை அழைத்துச் சென்றார். இதனால் ஜி.ஜி. பொன்னம்பலமும், உயர்சாதி வெறியர்களும் ஆத்திரமடைந்து எம்.சி., டீ.ஜேம்ஸ் ஆகியோரைத் தாக்கமுற்பட்டனர். எனினும், அவர்கள் மயிரிழையி உயிர் தப்பிச் சென்றனர்.

இலங்கை 1948ல் சுதந்திரம் அடைந்த பின் 1956ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் எம்.சி. அவர்களின் கம்யூனிஸ் கட்சித் தோழர் பொன் கந்தையா பருத்தித்துறைத் தொகுதியில் வெற்றிபெற்றார்.

இந்த வாய்ப்பை எம்.சி. அவர்கள் மிகச் சிறப்பாகப் பயன்படுத்தினார். எமது மக்களிற்கு கல்வி, வேலை வாய்ப்பு, நிலம், வீடு போன்ற பல வசதிகளைப் பெற்றுக்கொடுத்தார். இக்கால கட்டத்தில் சுமார் 15 பாடசாலைகளை எமது மக்களுக்குக் கட்டிக்கொடுக்க ஏற்பாடுகளைச் செய்தார். அத்துடன் 100க்கு மேற்பட்ட எம்மவர்கள் ஆசிரிய சேவையில் புதிதாக இணைத்துக்கொள்ளவும் வழிசமைத்தார்.

அகில இலங்கை சிறுபான்மைத் தமிழ் மக்களின் சமூக முன்னேற்ற வரலாற்றிலே பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய உயர் சமூக தமிழ்த் தலைவர்கள் என்றால் அது பொன் கந்தையாவையும் தோழர் தர்மகுலசிங்கத்தையுமே குறிக்கும். இவர்கள் இருவரும் உயர் குடியிலே பிறந்து தாழ்த்தப்பட்ட தமிழ் மக்களுக்காக தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் தியாகம் செய்த உத்தமர்கள். இவர்களோடு எம்.சி. அவர்கள் மிக நெருக்கமாகப் பழகி எமது மக்களுக்கு வேண்டிய உதவிகளையும் பெற்றுக்கொடுத்தார். குறிப்பாக பொன் கந்தையா அவர்கள் எம்.சி. அவர்களுடைய நம்பிக்கைக்குரிய நல்ல நண்பராகத் திகழ்ந்தார்.

1956ல் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் போராட்டம் மேலும் தீவிரமடைந்தது. இதன் காரணமாக 09.07.1956ல் நல்லூர் கந்தசாமி கோயில், யாழ் பெருமாள் கோயில், வண்ணார்பண்ணை சிவன் கோயில் என்பன திறக்கப்பட்டன. இந்த ஆலயப் பிரவேசத்தில் எம்.சியுடன் மகாசபை உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

13.08.1957ல் சமூகக் குறைபாடுகள் ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. பாராளுமன்றத்தில் எம்.சி.யின் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர் பொன் கந்தையா பா.உ. இருந்தார். இதைப்பயன்படுத்தியே அச்சட்டம் கொண்டுவரப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

20.10.1958இல் அ.இ.சி.த. மகா சபையின் தேநீர்க்கடைப் போராட்ட அறைகூவல் பிரசுரம் எம்.சி. அவர்களால் வெளியிடப்பட்டது. இதன் விளைவாக யாழ். சுபாஸ்கபே உட்பட பல உணவகங்கள் சகல மக்களுக்கும் சமத்துவமாகத் திறக்கப்பட்டன.

1956 தொடக்கம் 1960 வரை மகாசபை தமது மக்கள் சார்பாக எம்.சி.யின் தலைமையின் கீழ் பல சமூக முன்னேற்றங்களைக் கண்டது என்று துணிந்து கூறலாம்.

1970ல் எம்.சி. அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டார். இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் சிபாரிசின் பேரில் ஸ்ரீமாவோ அம்மையாரின் அரசு இந்நியமனத்தை வழங்கியது. வட இலங்கையில் சுமார் 40% இற்கு மேற்பட்ட மக்கள் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள். அப்படியிருந்தும் அவர்களுடைய சமூகத்தில் இருந்து இதுவரை எவரும் பாராளுமன்றத்திற்குச் செல்லவில்லை. இந்த மக்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் சென்ற உயர் குடியினர் தாழ்த்தப்பட்ட மக்களின் சமூக முன்னேற்றத்திற்காக எதுவும் செய்யவில்லை. இதேவேளை தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் இருக்கின்ற சில அரசியல் தரகர்களால் மக்கள் பிழையான பாதையில் வழிநடத்தப்படுவது மிகமிகக் கவலையானது ஆகும்.

எம்.சி. அவர்கள் தமது பாராளுமன்ற பதவிக் காலத்திலே எமது மக்களுக்குப் பல வழிகளிலும் உதவினார். அரச உத்தியோகங்கள், காணி, குடியிருப்பு வசதிகள், பாடசாலை அபிவிருத்திகள் என்பன மிக முக்கியமானவை. அத்துடன், 1972ல் சமூகக் குறைபாடுகள் ஒழிப்புச் சட்டத்தில் சில திருத்தங்களைச் செய்வித்து அதனை வலுவுடையது ஆக்கினார்.

2017ம் ஆண்டு எம்.சி. அவர்கள் பிறந்த நூற்றாண்டாகும். அந்தப் பெரும் விடுதலை வீரரைக் கௌரவிக்கும் முகமாக உருவச் சிலை ஒன்றினை மகாசபையினர் நிறுவ முன்வந்தமை பாராட்டிற்குரிய விடயமாகும். அத்துடன், அ.இ.சி.த. மகாசபையின் பவள விழா ஆண்டும் இவ்வருடம்தான் என்பதை நினைக்கும்போது நாம் அனைவரும் பெருமிதம் அடைகின்றோம்.

தேடல் துணை நூல்கள்

1. வடபுலத்து இடதுசாரி இயக்க முன்னோடிகள்
2. அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் வருடாந்த மாநாட்டு அறிக்கைகள்
3. இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும்
4. தீண்டாமைக் கொடுமைகளும் தீமூண்ட நாட்களும்
5. வடு - இலங்கைத் தலித் சமூக மேம்பாட்டு முன்னணி பிரான்ஸ்
6. தமிழ் இலக்கியத்தில் மள்ளர்
7. வட அல்வை முருகேசனார் - பவள விழா மலர் கந்தையா நடேசன் (தெணியானின் கட்டுரை)

# எம்.சி. ஒரு வியக்கத்தக்க மும்முனைப் போராளி

வல்லிபுரம் திருநாவுக்கரசு

இன்றும் இலங்கை அரசியல் அகராதியில் தமிழர் ஒரு சிறுபான்மை இனம் என்றே அழைக்கப்படுவது வழக்கமாகின்றது. இந்தச் சிறுபான்மை இனத்துக்குள் ஒரு சிறுபான்மையாக இனங்காணப்படும் குறைந்த சாதியினர் இந்த மக்கட் பிரிவினர் தொடர்பான பாகுபாடுகள், கொடுமைகள், குறிப்பாக வடக்கில் தலைவிரித்தாடிய காலத்தில் அவர்கள் பல்வேறு வழிகளில் ஓரங்கட்டப்பட்டு, சிறுமைப்படுத்தப்பட்டு, அடக்குமுறைகளுக்கும் வன்முறைகளுக்கும் ஆளாக்கப்பட்டது வரலாறு. தேநீர் சாப்பாட்டுக் கடைகளில் புறக்கணிப்பு, கோவில்களுக்குள் சென்று வழிபட முடியாது. சில பிரபல பாடசாலைகளில் கதவடைப்பு ஏன் பேருந்துகளின் இருக்கையில் இருந்து பயணிக்கவே முடியாதிருந்தது.

ஆண்டாண்டு காலமாகச் சமூக மாற்றம் எதுவும் ஏற்படாத நிலையில் பொறுத்தது போதும் என்று கிளர்ந்தவர்களில் பிரதான முன்னோடியாக எம்.சி.திகழ்ந்தவர். அவர் மிகுந்த திடசங்கற்பத்துடன், அர்ப்பணிப்புடன், பற்றுறுதியுடன் தாழ்த்தப்பட்ட மக்களின் விடிவுக்காக உழைத்தவர். "சிறுபான்மைத் தமிழர் மகாசபை" என நிறுவனப்படுத்தப்பட்டு முன்னெடுக்கப்பட்ட விடியற் பயணத்தில் தலைமைப் பாத்திரத்தினை 4 தசாப்தங்களுக்கு மேலாக எம்.சி.வகித்தவர். இந்த மக்களின் கல்வி வளர்ச்சிக்காகப் புதிய பாடசாலைகள் அமைத்தல் அடங்கலாக அரும் பணியாற்றினார்.

ஆலயம் மற்றும் தேநீர்க்கடைப் பிரவேசப் போராட்டங்கள் ஆங்காங்கே நடத்தப்பட்டதற்கு எம்.சி.உந்துசக்தியாயிருந்து வழி நடத்தினார். ஆலயப் பிரவேசப் போராட்டத்தைப் பொறுத்தவரை, குறிப்பாக மாவிட்டபுரம் போராட்டத்தை எடுத்துக்கொண்டால் இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அப்போராட்டத்தில் எம்.சி. வகித்த திடகாத்திரமான, துணிச்சலான பாத்திரம் மறக்கமுடியாததாகும். பிந்திய காலத்தில் இராணுவ ஆக்கிரமிப்புக்குள்ளாகி வெகுவாகச் சிதைக்கப்பட்ட இக் கோயிலுக்குள் சிறுபான்மைத் தமிழர் தலைகாட்ட முடியாது என அடங்காத்தமிழன் சுந்தரலிங்கம் தலைமையில் நடாத்தப்பட் அடாவடித்தனங்களை முறியடித்தபெருமை எம்.சி.யையே சாரும் என்றால் அது மிகையல்ல.

இன்னும் சொன்னால் எம்.சி. சிறுபான்மைத் தமிழரின் விடிவுக்காக மட்டுமே போராடியவர் அல்ல. ஒரு முன்னோடி மாக்ஸிசவாத இடது சாரியாக, இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த உறுப்பினராக தமிழரின் இனவிடுதலைப் போராட்டத்துக்கும் உழைத்தவர் என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

1956இல் பருத்தித்துறை தொகுதியில் பொன்.கந்தையா வெற்றியீட்டியதற்கு எம்.சி.ஆற்றிய பங்களிப்பானது குறைத்து மதிப்பிடக்கூடியதல்ல. அதே வருடம் பண்டாரநாயக்காவின் தனிச் சிங்களச் சட்டத்திற்கு எதிராக பொன்.கந்தையா மற்றும் பீற்றர் கெனமன் போன்ற கம்யூனிஸ்ட் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் குரல் ஓங்கி ஒலித்ததற்குக் கட்சியின் தலைமைப்பீடத்திலிருந்த எம்.சியும் ஒரு பங்காளி என்பதையும் யாவரும் உணரவேண்டும்.

அது மட்டுமல்லாமல் அவர் ஒரு தொழிற் சங்கவாதியாகவும் கள்ளிறக்கும் தொழிளாலர் சங்க முக்கியஸ்தராகவும், தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைக்காகவும் அயராது உழைத்தவர். எனவேதான் ஒட்டு மொத்தமாக எம்.சி. சிறுபான்மைத் தமிழரின் விடிவுக்காக, தமிழினத்தின் விடுதலைக்காக, தொழிலாளர் வர்த்தகத்தின் மேம்பாட்டுக்காக அயராது உழைத்த ஒரு முழுமையான "மும்முனைப் போராளி" என்பது உண்மையில் மெச்சுவதற்குரியதாகும்.

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை"

எனும் வள்ளுவர் வாக்கிற்கு அமைய 1970களில் பாராளுமன்ற உறுப்பினர் பதவியும் எம்.சியைத் தேடிவந்தது. எம்.சி எம்.பியாகப்பதவி வகித்த காலத்தில் எல்லா மக்களுக்காகவும் பாரபட்சமின்றி பணியாற்றி உள்ளார். கைமாறாக மக்கள் அவருக்கு ஒரு சிறந்த வாகனத்தை அன்பளிப்புச் செய்தனர்.

இந்தியாவில் தலித் மக்கள் தலைவராயிருந்த அம்பேத்கார் சாதிச் சாபக்கேட்டை எதிர்த்து மதம் மாறினார். இலங்கையில் இடது சாரியாகி எம்.சி. மதம் மாற வேண்டிய தேவை இருக்கவில்லை. இதய சுத்தியான போராட்டங்கள் மூலம் மற்றவர்கள் மத்தியில் மன மாற்றம் கொண்டு வருவதே அவரின் நோக்கமாக இருந்தது.

இந்த வேளையில் இலங்கைத்தீவின் அனைத்தின மக்களும், "இன்னொரு இனத்தை அடக்கும் எந்தவொரு இனமும் சுதந்திரமாயிருக்க முடியாது" எனக் கார்ல்மார்க்ஸ் கூறிவைத்ததை நினைவு கூர்ந்து நன்கு புரிந்து கொள்வது பெரிதும் நன்மை பயக்கக்கூடியதாயிருக்கும். எம்.சி.யின் தன்னலமற்ற வாழ்க்கை வியக்கத்தக்தென நினைவு கூர்ந்து விடைபெறுகிறேன்.

# எம். சி.ஒரு சமூகப்போராளித் தலைவன்

வே. சிவராஜலிங்கம்

அரிய மானிடப் பிறப்பின் நோக்கம் மக்களுக்கு தமது உறவுகளுக்கு சார்ந்த சமூகத்திற்கு, பிறந்த கிராமத்திற்கு, மண்ணிற்குத் தன்னால் இயன்றதைச் செய்தல் அல்லது செய்ய முற்படுதலாகும். எமது சமூக விடுதலைக்காகச் செயலாற்றிய முற்போக்கு சிந்தனையும் சமூகப்பற்றும் சமதர்மக் கொள்கையின் பிடிப்பும், துடிப்பான செயலும், வாழ்ந்த சூழலை பழகிய நெஞ்சங்களை மறக்காது மதிக்கின்ற பண்பும், ஒருங்கமைந்த மாமனிதன் போராளித் தலைவன், அல்லும் பகலும் அயராது உழைத்த சமூக சேவகன் அமரர் எம். சி. சுப்பிரமணியம் அவர்களைப் பற்றி நான் அறிந்த வகையிலும் சேர்ந்து பழகிய முறையிலும் உங்களோடு சில கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளும் எண்ணத்துடன் இச் சிறு நினைவுகளைப் பதிவு செய்து கொள்ள விரும்புகின்றேன்.

எமது பிரதேச சமூக அமைப்பில் சாதியமும் அதன் இறுக்கமான கட்டமைப்பும் இதனைப் பேணிய பாரம்பரியக்கூறுகளும் இன்று நெகிழ்ச்சித் தன்மையாகக் காணப்படினும் இவை காலப்போக்கில் தாமாகவோ, அன்றில் மன மாற்றம் காரணமாகவோ திடிரென ஏற்பட்டவையல்ல. இதனை வென்றெடுக்கப் பல அமைப்புக்கள் விழித்தெழுந்து எழுச்சிமிக்க பல போராட்டங்களை, தியாகங்களை, அர்ப்பணிப்புக்களை ஆகுதியாக்கிய வரலாறு எமது சமூகவளர்ச்சிப் பாதையில் மறந்து விட முடியாத மைல்கற்கள் எனலாம். இத்தகைய சமூக மேம்பாட்டினை அடைவதற்கு உரமூட்டிய விளை நிலமான அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபைக்கு அதன் செழிப்பான மூலவேராகப் படர்ந்து பலம் கொடுத்தவர் அமரர் எம். சி. அவர்களாகும்.

ஒடுக்கப்பட்ட மக்கள் வரலாற்றில் சிறிய அமைப்புக்களாக இயங்கிவந்த பல குழுக்களைச் சமூக விடுதலை என்ற நோக்கில் விடுதலைக்குக் களமமைத்துப் போராட்டங்களை முன்னெடுத்துச் செயல்படுத்த ஒரு

பொதுத்தாபானத்தின் தேவையுணரப்பட்டவகையில் 1942ல் உருவாக்கப்பட்ட பொதுஸ்தாபனமே மகாசபையாகும். இளமைக்காலத்தில் தன்னையும் இந் நிறுவனத்தில் இணைத்துக் கொண்டு செயற்பட்ட அமரர் எம். சி. அவர்கள் 1957ல் தலைமைப் பதவிக்கு ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டு, தொடர்ந்து முப்பது வருடங்களாகத் ஆளுமை மிக்க தலைவராகச் செயற்பட்டு வந்துள்ளமையும், இறுதி மூச்சு வரையில் செங்கொடியின் கீழ் வரித்துக் கொண்ட கொள்கையினின்றும் சிறிதும் வழுவாது வாழ்ந்து தமது ஆற்றல் திறனையும் ஆளுமைச் செழிப்பையும், தலைமையின் நெகிழ்வையும் கனதியாக வெளிக்காட்டியிருந்தமை சிறப்பான பண்பாட்டு விழுமியங்களாகும்.

அமரர் எம். சி அவர்கள் ஆரம்பக் கல்வியை அருகாமையிலுள்ள மெதடிஸ்த கலவன் பாடசாலையில் ஆரம்பித்து உயர்கல்வியைப் புனித சம்பத்தரிசியார் கல்லூரியில் கற்று இலண்டன் மற்றிக்குலேசன் பரீட்சையில் சித்தியடைந்தார். தனியார் நிறுவனத்தில் வேலையை ஆரம்பித்து, பின்பு அரசசேவையில் எழுது வினைஞராகப் பணியாற்றினார். சில வருடங்களில் ஐதார்த்த நிலமைகளை அனுபவித்ததனால் உழைக்கும் வர்க்கம் சுரண்டப்படுவதனையும் மதிப்பற்று வாழ்வதனையும், தமிழர்களுள் சிறுபான்மையினர் ஒடுக்கப்பட்டு வாழ்ந்து வருவதனையும் கண்ணுற்று, தான் சார்ந்த சிறுபான்மைச் சமூக மக்களின் துன்ப துயரங்களைத் துடைத்தெறிய வேண்டுமெனில் சமூக சேவையில் ஈடுபடுவேண்டுமென திடசங்கற்பம் கொண்டார். குடும்பத் தலைவர் ஒருவர் வேலைவாய்ப்பின்றி முழுநேரமும் சமூக சேவைகளில் ஈடுபடுவதுதென்பது ஒரு அசாதாரண செயற்பாடாகும். ஆனால் இவரது சகோதரியும் மைத்துனரும் இவரின் சேவை மனப்பாங்கினை ஆதரித்து வீட்டுப் பொறுப்பினை தாங்களே தத்தெடுத்துக் கொண்டமையே வெற்றிக்கான பின்புலம் எனலாம். ஒருவனின் வெற்றிக்கு பின்னால் பெண்ணொருவர் இருப்பார் என்பதும் இங்கு வெளிப்படையாகிறது.

வர்க்கச் சுரண்டலும், ஒழுக்கமுறையும், சமூக ஏற்றத்தாழ்வுகளும், பாகுபாடுகளும் இருக்கும் வரையில் சமூகச் சம நிலையும், மேம்பாடும் எட்ட முடியாதவை என்பதால் உலகப் பாட்டாளி வர்க்கம் சார்ந்த மாக்சிச சித்தாந்தமே சிறந்தது என்று சோசலிச அணியுடனும் முற் போக்கு சக்திகளுடனும் தொடர்பினை ஏற்படுத்தியதுடன், தன்னையும் அவற்றில் இணைத்துக் கொண்டார். இதனால் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து வடபகுதியில் தோழர்கள் கார்த்திகேசன் இராமசாமிஐயர், அரியரத்தினம் வைத்திலிங்கம், பூபாலசிங்கம், பொன். கந்தையா ஜெயசிங்கம் போன்றோருடன் தொடர்புகளைப் பேணியதுடன் கட்சியின் செயற்பாடுகளிலும் தொழிற்படலானார். இக் காலப்பகுதியில்தான் பாராளுமன்றத் தேர்தலில் வடமராட்சித் தொகுதியில் அமரர் பொன் கந்தையா அவர்கள் - 1956ம் ஆண்டில் கம்யுனிஸ்ட் கட்சியில் - போட்டியிட்டு வெற்றியும் ஈட்டிக் கொண்டார் என்பதும் வரலாற்றுச் சாதனையாகும். அன்றிலிருந்து வடமராட்சிப் பகுதியில் இடதுசாரிகளின் வளர்ச்சி துரிதப்படலாயிற்று. ஒரு சமூகத்தின் மேம்பாடு கல்வியினாலும், பொருளாதாரத்தினாலும் வளர்ச்சிப்படுவதன் மூலம் கை கூடும் என்பதையுமுணர்ந்து இவ்விரு துறைகளுக்கும் முன்னுரிமை கொடுத்துச் செயற்படலானார். அக்காலப் பகுதியில் பொன். கந்தையா பா. உறுப்பினராக இருந்த வேளையில் கல்வி அமைச்சரான Dr. N. தகநாயக்கா அவர்களின் உதவியுடன் யாழ் மட்டத்தில் பதினைந்து பாடசாலைகளைச்( வடமராட்சி 02,

தென்மராட்சி 06, காங்கேசன்துறை 02, கோப்பாய் - 02, மானிப்பாய் - 03) சிறுபான்மை தமிழ்மக்கள் அதிகமாக வசிக்கும் கிராமங்களில் உருவாக்கியதுடன், நூற்றுக்கு மேற்பட்ட ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டமையும், பல ஆசிரியர்கள் பயிற்சிக்கலாசாலையில் பயிற்சி பெற்றமையும் குறிப்பிடக் கூடியவை எனலாம்.

ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கு அரசியற் பக்கபலமும் தேவையென உணரப்பட்ட வேளையிலும், பாராளுமன்ற அங்கத்துவம் மிகவும் அத்தியாவசியமாகும் என்ற முனைப்பில் இலங்கை தமிழரசுக் கட்சி அமரர் ஜீ. நல்லையாவை செனட்டராக (மூதவை உறுப்பினர்) நியமித்ததையும் அதையே பெரிதாகவும் பேசிவந்த காலங்களின் பின்னர் 1970ல் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் கூட்டரசாங்கத்தில் அங்கம் வகித்த இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் சிபார்சினால் பாராளுமன்ற உறுப்பினராக அமரர் எம். சி. ஜயா அவர்கள் நியமனம் பெற்றார். பாராட்டு கூட்டமொன்றில் பேசுகையில் எனக்கு வழங்கப்பட்ட இப்பதவி ஒடுக்கப்பட்ட மக்களுக்கு கிடைத்த பரிசு என்றார். பாராளுமன்றத்தின் கூட்டத்தொடர் நிகழும் காலங்களில் எம். சி அவர்கள் கொழும்பு வருவது வழக்கமாகும். இக்காலத்தில் நானும் கொழும்பில் (தீயணைப்புப் படை, விமானப்படையின் ஒரு அலகு) (fire brigade) பணியாற்றி வருகிறேன். எனக்கு மாதத்தில் பதினைந்து நாள்கள் தான் வேலை. மிகுதி பதினைந்து நாள்களும் விடுமுறையாகும். எனது மாமன் முறையிலான அமரர் திரு. கே. ஜீ. மகாலிங்கம் (அதிபர்) முன்னர் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் வாலிப முன்னணிச் செயலாளராகச் செயற்பட்ட வேளையில் அடிக்கடி சந்திப்பதற்காக எமதூருக்கு வருகை தருவதுண்டு. அன்றிலிருந்து அமரர் எம்.சி. ஜயா அவர்களுடன் நெருங்கிப்பழகும் வாய்ப்பு எனக்கு அதிகமாகக் கிடைப்பதுண்டு. சில நாள்களில் நெல்லியடி பருத்தித்துறை, சக்தாதோட்டம், வதிரி, இமையாணன் போன்ற இடங்களுக்குச் சயிக்கிளில் ஏற்றிச்செல்வதும் உண்டு. இந்த அறிமுகம் 1970க்குப்பின்னர் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு வந்தது.

கொழும்பில் கடமைபுரியும் காலங்களில் எனது ஓய்வு நாள்களின் போது தொலைபேசியூடாக என்னை அழைத்து அமைச்சுக் காரியாலயங்கள், திணைக்களங்கள் செல்வதற்கு வருமாறு கேட்டுக் கொள்வார். வெள்ளை நஷனலும், வேட்டியும் கரை மடித்து தைக்கப்பட்டிருக்கும் கறுப்புக் கண்ணாடி தலையில் தொப்பி, கையில் ஒரு லெதர் பாக் பார்க்கும் போது வெளித் தோற்றத்தில் சிங்கள மொழி பேசும் ஒரு அரசியல் வாதியின் உருவமைப்பு. ஆங்கில மொழியில் யாருடனும் சரளமாகப் பேசும் ஆற்றல். வழமையாகவே யாருடனும் பேசும் போது கண்களை மூடிக்கொண்டும், கால்களை அசைத்துக் கொண்டும் பேசுவது இவரது இயற்கையும் சுபாவமும் கூட சிங்கள மொழியில் கேள்வியும் பதிலுமே அளவாகப் பேசிக்கொள்வார். திணைக்களங்களில் சில அலுவலர்களுடன் விபரமாகப் பேசிக் கொள்ள என்னைப் போன்ற சிலர் அவருக்கு உறுதுணையாக இருப்பதுண்டு. இச் செயற்பாடுகளால் எனக்கும் கூட்டரசாங்கத்தில் இருந்த அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களின் பலரது பரீட்ச்சயம் உண்டாக வாய்ப்புக் கிட்டியது. இவ் அனுபவங்களுக்கு ஊடாக சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சிறிது வல்லமை பெறுவதற்கான சந்தர்ப்பங்களும் கிடைத்தமை மறக்க முடியாத முன்னைய பதிவுகளாகவும்.

அமரர். எம்.சி. ஐயா அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராகச் செயற்பட்ட காலத்தில் சமூகக் குறைபாட்டுச் சட்டம் (Social Disabilities Act) பாராளுமன்றத்தில் கொண்டு வந்து அதைச் சட்டமாக்கிய பெருமை எம். சி. ஐயாவையே சார்ந்தது. அத்துடன் குடியிருந்த நிலங்களைச் சொந்தமாக்கியமை, வீடமைப்புத் திட்டங்கள் வீடுகள் வழங்கியமை, விவசாயம் செய்வதற்குக் காணிகள் பெற்றுக் கொடுத்தமை, கூட்டுறவு விவசாயத் திட்டங்கள் உருவாக்கியமை, பல பாடசாலைகளை உருவாக்கியமை, பலருக்கு ஆசிரிய நியமனம் கிடைக்க உதவியமை, வில்லூன்றி, நிற்சாமம், மந்துவில் மாவிட்டபுரம் போன்ற பிரதேசங்களில் நிகழ்ந்த செயற்பாடுகளில் முன்னின்று உழைத்தமை எல்லாம் குறிப்பிடத்தக்கனவே. இவ்வாறு எமது கிராமத்திலும் இளைஞர்கள் 1975ல் அடக்கு முறைக்கு எதிராகச் சமூகப் போராட்டத்தில் விழுப்புண்பட்ட போது எம்மவரை அணுகி ஆறுதல் கூறி அரவணைத்து ஆற்றுப்படுத்தி, ஆலோசனைகளை வழங்கி விடிவிற்காக சட்டத்தரணி அமரர் சரத் முத்தெட்டுகம (கம்யுனிஸ்ட் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்) அவர்களை ஏற்படுத்தியும் உதவியாளர்களாக மோதிலால் பேரின்பநாயகம் ஆகிய சட்ட வல்லுனர்களை இணைத்து நுட்பமாக வழக்கினை நெறிப்படுத்தி ஒருநாள் விவாதத்துடன் தீர்ப்பினை பெற்றுக் கொண்டமையும் எவரும் எதிர்பாராத முடிவு என்பதை எம் மக்கள் இன்னும் நினைவு கூர்வதையும் நாம் பல நிகழ்வுகளில் மீள் வாசிப்புச் செய்கின்றோம்.

அமரர் எம் சி ஐயா அவர்கள் கண்ட கல்விமுன்னேற்றம் பொருளாதார வளர்ச்சி ஆகியன ஊடாகவே ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவு அமையுமென்றார். எந்த உரிமையும் தாமாகவே கிடைப்பதில்லை எனவும் ஜனநாயகப் போராட்டங்கள் மூலம் வெற்றி கொள்ளலாம் என்றும் அரைநூற்றாண்டுகள் சமூக மக்களின் விடுதலைப் போராளியாகவும், அரசியல் அறிஞனாகவும், பல் சமூகங்களின் தோழனாகவும், சமூகத்தலைவனாகவும், மாற்றம் காண விழைந்தவர், வித்திட்டவர். இவரைப் போன்ற கர்மவீரனைக் காண்பது அரிது. இவரது செயற்பாட்டு நடவடிக்கைகளை நினைவு கூருதல் எமது சமூகக் கடமையாகும்.

“உள்ளத்தாற் பொய்யாது ஒழுகின் உலகத்தார்

உள்ளத்துள் எல்லாம் உளன்”

எனும் திருக்குறள் என்ற பொய்யா மொழி மெய்யாகியுள்ளது.

# தமிழ்மக்களின் விடிவுக்காகப் போராடியவர் எம்.சி

வயிரமுத்து திவ்யராஜன்

எண்ணுக்கணக்கற்ற சாதிப்பிரிப்புகளால் பின்னப்பட்டது. எங்கள் ஈழத்தமிழ்ச் சமுதாயம் நிலமானியத்தின் வேலைப் பிரிப்புகளாய் மட்டும் இந்தச் சாதிப்பிரிப்புகள் இருக்கவில்லை. மக்கள் மத்தியில் ஏற்றத்தாழ்வினை நிறுவியது. உயர்வும் இழிவும் பேசியது. மனிதரை இழிசனராய், தீட்டுத் துடக்குள்ளோராய், தீண்டத் தகாதோராய் ஒதுக்கியது. வேற்றுமையை வளர்த்தது. மனித நேயத்தைக் குழிதோண்டிப் புதைத்தது.

ஈழத்தமிழரின் விடுதலைப் போரட்டம் இலட்சத்துக்கும் மேல் உயிர்களை விழுங்கித் தொடர்கிறது. இருப்பிடங்களை இழந்து அகதிகளாய் மக்கள் அலைகிறார்கள். போக்குவரத்துத் தடைகள் உணவு விநியோகத் தடைகள் பட்டினிச் சாவுகள். இருந்த உரிமைகளையும் இழந்த நிலை மக்களின் உயிரிழப்புகள் பற்றி எவருக்கும் அக்கறை இல்லை. பேச்சு வார்த்தை என்பது வெற்றுப் பேச்சுகளாகவும் வெற்று வார்த்தைகளாகவும் நீளுகின்றன. இந்தப் பேச்சுவார்த்தைகளில் உலகநாடுகள் தமது சொந்த நலன்களை மையமாய் வைத்துக்கொண்டு கண்ணாம்பூச்சி விளையாடுகின்றன. ஒருபுறம் சமாதானப் பேச்சு மறுபுறம் ஆயுத விநியோகம் ஆயுதப் பயிற்சிகள். பொதுமக்கள் கொன்று குவிக்கப்படுகிறார்கள். பேயரசாண்டால் பிணம் தின்னும் சாத்திரங்கள்.

ஈழத்தமிழரின் விடுதலைபற்றி சிரத்தையுடன் சிந்திப்பவர்கள் அந்த விடுதலைப் போராட்டம் வெற்றிபெறக் கூடிய விதத்திலான சமூக மாற்றங்களை உருவாக்க வேண்டும். சமூகரீதியில் ஏற்றத் தாழ்வுகளையும் ஒடுக்குமுறைகளையும் வேற்றுப் பிரிப்புகளையும் வைத்திருக்கக்கூடிய ஒரு சமூகம் விடுதலைக்குரிய தார்மீக பலத்தை இழந்துவிடுகிறது.

## சாதியம் ஒழிந்து விட்டதா?

சாதியம் மறைந்து விட்டது. சாதியம் பற்றிப் பேசுபவர்கள்தாம் அதைப் புதுப்பிக்கிறார்கள் என்ற ஒரு கருத்தினைச் சிலரும் சில விடுதலை இயக்கங்களும் முன்வைத்தன. இதில் உண்மை உள்ளதா?

1. தாயகத்தில் பொருளாதார ஆதிக்கத்தின் அம்சமாக இதன் தொடர்ச்சியைக் காணலாம். சுரண்டலுக்கான கருவியாக இன்னும் இது செயற்படுகிறது.
2. உயர்சாதியினர் நிலச் சொந்தக்காரர்களாக, பணபலம் உள்ளவர்களாக இருக்க ஒடுக்கப்பட்டோர் சொந்தநிலம் இல்லாதவர்களாக, பணபலம் குறைந்தோராக, கூலிகளாக இருக்கும் நிலைமைகளைப் பொதுவில் காணலாம். (விதிவிலக்குகள் உண்டு)
3. பொருளாதார சமத்துவத்தின் மூலமே இதை மாற்றமுடியும்.
4. தொழில்களில் மாற்றம் வந்தும் சாதிய அடையாளம் மாறவில்லை.

   ஒடுக்கப்பட்ட மக்களில் இன்று உயர் கல்விகற்று கணக்காளர், பொறியியலாளர், டாக்டர், எழுதுவினைஞர், ஆசிரியர் என இருப்போரின் பிள்ளைகளின் சாதி அவர்களின் தந்தையார், பாட்டனார், பூட்டனார் செய்த தொழில்களின் சாதியினூடாகவே இன்றும் அடையாளப்படுத்தப்பட்டு வருகிறது. பல தலைமுறைகளைக் கடந்தும் சாதியால் அடையாளப்படுத்தப்படுதல் தொடர்கிறது. மாறாக புலம் பெயர்ந்த தேசங்களில் பணம் சம்பாதிக்கும் நோக்கில் உயர் வெள்ளாளர் என்போர் மீன்கடை வைத்து மீன் வெட்டுகிறார்கள். சிகை அலங்காரிப்பு நிலையங்களை நடாத்துகிறார்கள். சுத்திகரிப்பு வேளைகளைச் செய்கிறார்கள். ஆயினும் அங்கு அவர்கள் தாம் இன்னும் உயர்வெள்ளாளர்கள் என்றே சொல்லிக்கொள்கிறார்கள். ஒடுக்கப்பட்டோரைப் பொறுத்தவரையில் மூன்று தலைமுறைகட்கு முந்திய தொழிலோடு இணைந்த சாதிப்பெயர் சுட்டப்படும் அதேவேளை நிகழ்காலத்தில் உயர்வேளாளர் என்போர் செய்யும் தொழில்களால் அழைக்கப்பட்டு அதனோடு இணைந்த சாதிப்பெயர்களால் அவர்கள் அழைக்கப்படுவதில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். புலம் பெயர்ந்து வாழும் இடங்களில் உயர்வேளாளர் என்போர் மட்டுமே சாதியை வெளிப்படையாகச் சொல்லுகிறார்கள்.

## பேசிச் செய்யும் திருமணங்கள்: (அகமண முறை)

பேசிச்செய்யும் திருமணங்களைத் தீர்மானிப்பதில் சாதி பிரதான பங்கை வகிக்கின்றது. தாயகத்தில் மட்டுமன்றி தமிழர் புலம்பெயர்ந்து வாழும் இடமெங்கும் இது மிகக் கடுமையாகப் பார்க்கப்படுகிறது. புலம் பெயர்ந்த தேசங்களில் வேற்று இனங்களுக்குள் தமது பிள்ளைகள் காதலித்துக் கலியாணம் செய்தாலும் பரவாயில்லை. "எளியன் சாதிகளுக்குள் கட்டக்கூடாது" என்று சாதித்தடிப்புள்ள பெற்றோர்கள் வெளிப்படையாகவே சொல்லுகின்றார்கள். இதனடிப்படையில் பல காதலர்கள் பிரிக்கப்பட்டுள்ளனர். ஓரறையில் ஒன்றாய் சேர்ந்து வாழ்ந்த ஜோடிகள் சாதி தெரிந்த பின் வேறாகப் பிரிக்கப்பட்டு வேறு திருமணங்கள் செய்யப்பட்ட சம்பவங்கள் பல சாதியின் பெயரால் நடந்துள்ளன. ஒருத்திக்கு ஒருத்தன் ஒருவனுக்கு ஒருத்தி என்ற தமிழ்ப்பண்பாடு எல்லாம் "சாதியத்துக்கு முன் குப்பையில்" என்று ஆகிவிட்டது.

**மதத்தைவிட சாதி முக்கியம்.**

திருமணத்தைப் பொறுத்தவரை மதம் மாறினாலும் பரவாயில்லை சாதி மாறக்கூடாது என்பதில் தமிழர்கள் கவனமாக இருக்கிறார்கள்.

**தாயகத்தில் இன்னும் ஒடுக்கப்பட்ட மக்களுக்குத் திறக்கப்படாத பொது இடங்கள் இருக்கின்றன.**

- சுடலைகள் வேறுவேறாக இன்னும் பாவனையில் உள்ளன.
- கோயில்களில் கம்பிவேலிகள் போடப்பட்டு எல்லோரையும் வெளியே நிறுத்தி போலிச் சமத்துவத்தைப் பேணுகின்றன.
- தெப்பக்குளங்கள் எளியன் சாதிகள் இறங்கிவிடும் என்பதற்காகக் கம்பி வேலிகளும் கம்பி வலைகளும் போட்டு மூடி வைக்கப்பட்டுள்ளன.
- கோயில் உள்வேலையில் எளியன் சாதிகள் பங்குபற்ற முடியாமல் விதிகளும் குழுக்களும் இருக்கின்றன.
- அன்னதான மடங்களில் எளியன் சாதிகள் சமைக்க முடியாது. அவர்கள் சமைத்தால் உயர் சாதியினர் சாப்பிடமாட்டார்கள்.
- வேறுவேறு சாதிகளுக்கு வேறுவேறான அன்னதான மடங்கள் இன்றும் பேணப்படுகின்றன.
- சில பொதுக் கிணறுகள் சாதிகளுக்கு உரியதாய் வேறுவேறாக இன்றும் இருக்கின்றன. வேறுவேறாக பாவிக்கப்படுகின்றன.

**யுத்தம்இ பேரழிவுகள்இ உடைமைகள் இழப்புக்களுக்குப் பின்னரும் சாதியுணர்வுகள் மறையவில்லை.**

- அகதிகளாய் இடம்பெயரும் உயர்சாதியினர் வாழும் பகுதிகளையும் இல்லிடங்களையும் தேடி ஒதுங்குகிறார்கள்.
- இழிசாதியினர் என அடையாளங்கண்டால் அவர்களை அண்டவிடாது ஒதுக்கிவிடுவார்கள்.
- அகதிகள் முகாம்களிலும் சாதி பார்க்கப்படுகிறது.
- கிணறுகளில் அவர்கள் தண்ணீர் அள்ளவிடாமல் குப்பை கூளங்கள் போடப்பட்டுள்ளன.

**இழிசனரை வெளியே இருத்துதல்**

ஏதும் தேவை கருதி வரும் இழிசனரை வீட்டுக்குள் அழைத்து உபசரிக்காமல் வெளியே முற்றத்தில் நிற்கவைத்து அனுப்பும் போக்கு இன்றும் இருக்கிறது. சொந்த வீட்டுக்குள் அழைப்பதும் விடுவதும் உபசரிப்பதும் சொந்த விருப்பத்தின் பாற்பட்டதாக நியாயம் சொல்லப்படுகிறது. மறுபுறம் விருந்தோம்புதல் தமது தமிழ்ப்பண்பாடு என்று பெரிதாகச் சொல்லிக் கொள்கிறார்கள். குறுக்கே நிற்பது சாதியே!

**தொழில் மகத்துவமும் தொழிற் சமத்துவமும்**

- தொழில் ரீதியாக இழிவாக நோக்குதல் இழிவாக நடத்தல் இன்னும் தொடர்கிறது. தொழிற் சமத்துவம் இன்னும் இல்லை.
- ஈழத்தமிழரின் பொருளாதார விடுதலையில் பனையும் கடலும் பெரிது.
- பனை ஏறுபவர்களையும் மீன் பிடிப்பவர்களையும் குறைந்த சாதியினராக பார்க்கும் பார்வையில் இன்னும் மாற்றமில்லை.
- இதனால் மரமேறுபவர்களின் தொகையும் மீன் பிடிப்பவர்களின் தொகையும் குறைந்து வருகின்றது.
- இன்றும் மீன் பிடித்தவனின் சந்ததியே மீன்பிடிப்பதும்
- மரமேறியவனின் சந்ததியே மரமேறுவதும்
- முடிவெட்டியவனின் சந்ததியே முடிவெட்டுவதும்
- துணி வெளுத்தவனின் சந்ததியே துணி வெளுப்பதும்
- சாதியத்துக்கு அப்பால் தொழில்கள் கொண்டு வரப்படாமைக்கான உதாரணங்களாகும்.
- புலம்பெயர்ந்த தேசங்களில் தொழில் ரீதியான தாயகத்தில் கழிக்கப்பட்ட பல்வேறு தொழில்களைச் செய்தாலும் உயர்சாதிக் கவசத்தை இவர்கள் கழற்றவில்லை.
- மேலங்கிகளைப் போட்டுக் கொண்டு இந்த தொழில்களைச் செய்கிறார்கள். கூடுவிட்டுக் கூடு பாய்வது போல் மேலங்கிகளைக் கழற்றியபின் மீண்டும் உயர் வெள்ளாளர் ஆகிவிடுகிறார்கள்.

**கோயில்கள்**

- கோயில்கள் சாதியத்தின் காவலரண்களாக விளங்குகின்றன. சடங்குகளும் மூடத்தனங்களும் இதற்குச் சேவகம் செய்கின்றன. வேதங்கள் வர்ணாசிரம தர்மங்கள் புராணப் புளுகுகள் இதற்கு மேலும் உதவுகின்றன.

**தொடர்ந்து சாதியத்தைப் பேணுதல்.**

- ஒவ்வொரு சாதியினரும் தங்கள் அளவில் சிறிதாயும் பெரிதாயும் அறிந்தும் அறியாமலும் பலவழிகளில் சாதியத்தைத் தொடர்ந்தும் பேணிவருகின்றனர். உயர்சாதிப் பகுப்புக்களுக்குள்ளேயாயினும் ஒடுக்கப்பட்ட சாதிப் பகுப்புக்களுக்குள்ளேயாயினும் திருமணக்கலப்புக்கள் ஏற்படாமை இதன்பாற்பட்டதே
- தங்கள் தங்கள் சாதிக்குள் திருமணம் செய்தல் கொண்டாடுதல். சுமூகமானதும் பாதுகாப்பானதும் என்ற எண்ணமும் இதற்கு ஒரு காரணமுமாயிருக்கலாம்.
- ஈழத்தமிழர் மத்தியில் இன்னும் சாதிப் பாகுபாடுகள் இருப்பதற்கான பல்வேறு உதாரணங்களை இது போன்று நாம் அடையாளம் காணமுடியும். ஆகவே சாதீயம் ஒழிந்து விட்டது என்பது உண்மைக்குப் புறம்பானது.

- மிக நீண்டகாலமாக இடம்பெற்று வந்த பல்வேறு போராட்டங்களால் சாதியத்தின் கொடூரம் சிதைக்கப்பட்டு உக்கிரம் குறைக்கப்பட்டதே அல்லாமல் சாதியத்தின் வேர்கள் இன்னும் சாகவில்லை.

## சமூக விடுதலைக்கான அத்திவாரம்

சமூக விடுதலைக்கான அத்திவாரம் சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டமே. சாதிப்பிரிப்புக்களால் கூறுபட்டுகிடந்த ஒரு சமூகத்தை ஒற்றுமைப் படுத்துவதற்கு இது உதவியது. மக்கள் மத்தியிலிருந்த அடிமை குடிமை முறைகளை இது பெரிதும் மாற்றியது. ஒடுக்கப்பட்ட மக்களுக்கான கல்வி பொருளாதார விடுதலைக்கு இது உந்து சக்தி அளித்தது. தமிழர்களிடையே சமத்துவத்தை நிலைநாட்ட இது பாடுபட்டது.

இதற்கு முன்னின்று உழைத்த இளைஞர் காங்கிரஸ், ஒடுக்கப்பட்டோர் ஊழியர் சங்கம், வடமராட்சி சமூகசேவா சங்கம், ஆரியகுளம் சன்மார்க்க ஐக்கிய வாலிர் சங்கம், திருவள்ளுவர் மகாசபை இவை ஒன்றிணைந்து உருவாக்கிய சிறுபான்மைத் தமிழர் மகாசபை, தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் முதலிய சமூக அமைப்புகளையும் பின்னனியில் நின்று உதவிய இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி, தமிழரசுக்கட்சி, சமசமாஜக் கட்சி முதலிய கட்சி களையும் நாம் நன்றியுடன் நினைவு கூரவேண்டும். இதில் தலைமை தாங்கி முன்னின்று உழைத்த அனைத்துத் தலைவர்களையும் ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்களில் தமது உயிரை அர்ப்பணித்த அனைத்துப் போராளிகளையும் பொதுமக்களையும் மரியாதை செலுத்தி வணங்குதல் வேண்டும். கம்பியூனிஸ்ட் கட்சியின் வழி நடத்துதலில் வர்க்க சிந்தனையுடன் சித்தாந்தத்துடன் சாதிய ஒடுக்கு முறைக்கெதிரான அனைத்து முற்போக்கு சக்திகளையும் ஒன்றிணைத்து உயர்சாதியைச் சேர்ந்த பல தலைவர்களினதும் மக்களினதும் பங்களிப்புடன் சாதிக் கண்ணோட்டத்துக்கும் அப்பால் மக்கள் சக்தியை முதன்மைப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கப் போராட்டமானது (1966-72) எமது ஈழ விடுதலைப்போராட்டத்துக்கு ஆதாரமான பல்வேறு படிப்பினைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இனப்பிரச்சினையை ஒரு போதும் இனவாதக் கண்ணோட்டத்தில் வெற்றிகொள்ள முடியாது என்ற உண்மையை இதிலிருந்து நாம் தெளிந்து கொள்ள முடியும். சில சிங்கள அரசியல் வாதிகளில் பங்களிப்புக்களையும் இதில் நாம் நினைவு கூர முடியும். 1931 டொனமூர் கமிசனின் சர்வஜன வாக்குரிமை, டபிள்யூ டபிள்யூ கன்னங்கராவின் இலசக் கல்வி, 1956 சமூகக்குறைபாடுகள் ஒழிப்புச்சட்டம் - 1972ல் அதன் திருத்தம், 1960களில் அரசின் உதவியுடன் மகாசபையால் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக உருவாக்கப்பட்ட அரச பாடசாலைகளுடன் ஆசிரியர் நியமனங்களும், செனட்டர் நல்லையாவின் நியமனம் 1970ல் எம்.சி. சுப்பிரமணியம் அவர்களின் பாராளுமன்ற உறுப்பினர் நியமனம் ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியிலான சமாதான நீதவான் நியமனங்கள் பிற உத்தியோக வாய்ப்புகள் சாதிய விடுதலைக்கு உதவி செய்தன.

மறுபக்கத்தில் ஐந்தாம் குரவர் எனப் போற்றப்படும் ஆறுமுக நாவலரும் தனிப்பெருந் தலைவர்கள் எனப் பெயர்பெற்ற சேர்.பொன்.இராமநாதன் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அடங்காத் தமிழன் சீ.சுந்தரலிங்கம் போன்றோரும் எப்படி

சாதியத்தைக் காப்பாற்ற உழைத்தார்கள் என்பதையும் மறந்துவிட முடியாது. இது போன்ற இதய சுத்தியற்ற போலியான தலைமைகளை இனங்காணவும் அவர்கள்பால் எச்சரிக்கையாக இருக்கவும் தமிழ்மக்கள் கற்றுக்கொள்ள வேண்டும். ஈழவிடுதலையை முதலில் அடைவோம், சமூக ஒடுக்குமுறைகள் பற்றிப் பின்னால் பார்ப்போம் என்ற நிலைப்பாடு தவறானது என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

### சாதீயத்தின் வேரினை அறுத்தல்

சமூக விடுதலையின் முழுமை அந்த இனத்தின் விடுதலைக்குப் பலம் சேர்க்கும் என்பதனால் சாதீயத்தின் வேரினை அறுத்தல் ஈழத்தமிழினத்தின் விடுதலையின்பால் நாட்டம் கொண்ட அனைத்து மக்களினதும் கடமையாகும்.

**சாதியச் சமுகத்தின் உட்கட்டுமான மாற்றமும் அதன் சமூக விடுதலையும் பின்வரும் அடிப்படைகளில் எட்டமுடியும்.**

1. ஒடுக்கப்பட்ட பஞ்சப்பட்ட மக்களுக்கான பொருளாதார விடுதலைக்கான திட்டங்களை உருவாக்கிச் செயற்படுத்துதல்.
2. அடிப்படைக் கல்வியறிவைப் பெறுதலைக் கட்டாயப்படுத்தலும் உயர்கல்வி தொழிற் கல்விகளை வழங்குதல்.
3. தொழில் வாய்ப்புகளை அதிகரித்து வருவாயை உயர்த்துதல்.
4. நிலமற்றோர்க்கு நிலத்தைப் பங்கீடு செய்தல்.
5. தொழில் மகத்துவத்தை பேணுதல்.

- விரும்பியவர் விரும்பிய தொழிலை முழுவேலையாகவோ பகுதிநேர வேலையாகவோ செய்யலாம். இதற்கென தேவைப்படும் பயிற்சிகளை தொழிற்கல்வி மூலம் வழங்கவேண்டும். இதனால் சாதி அடிப்படையில் தொழில் செய்தல் மாற்றப்படும்.

- தொழில்களின் தரத்தை உயர்த்துதல் நவீன விஞ்ஞான தொழில் நுட்பங்களின் மூலம் தொழில்களின் தரத்தை உயர்த்துதல்.

தாயகத்தில் இன்னும் சாதி அடிப்படையில் பொதுமைப் படுத்தப்படாது இருக்கும் பொது இடங்களை மேலும் காலதாமதமின்றிப் பொது மக்களுக்காகத் திறந்துவிடுதல்.

கம்பி வேலிகளை இட்டு ஒரு எல்லைக்கப்பால் உயர் சாதியினர் என்போரையும் ஒடுக்கப்பட்டோர் என்போரையும் ஒன்றாய் வெளியே நிறுத்திச் சமத்துவமாய்த் திறந்து விட்டதாய் ஏமாற்றும் அனைத்துக் கோயில்களதும் கம்பி வேலிகளை அகற்றி உண்மையான சமத்துவத்துக்கு வழிகோலல்.

கம்பிவேலிகளை போட்டு மறிக்கப்பட்டிருக்கும் அனைத்துத் தெப்பக்குளங்களையும் திறந்துவிடல்.

பொதுக் குளங்கள், பொதுக் கிணறுகள், பொதுச் சுடலைகளின் சாதி அடிப்படையிலான வேறுபாடுகளை உடனே நிறுத்துதல்

கோவில்களுக்குள்ளே நடைபெறும் அனைத்து அலுவல்களிலும் அனைவரையும் பேதமின்றிப் பங்குபற்றச் செய்தல்.

குறிப்பிட்ட சாதிக்குரியதாய் அந்தப் பிள்ளைகளை மட்டும்கொண்டு இயங்கும் அனைத்துப் பாடசாலைகளிலும் அனைவரும் கலந்து பயிலச் செய்தல், சூழ உள்ளவர்கள் அண்மையிலுள்ள பாடசாலையிலேயே ஆரம்ப கல்வியை பெறவேண்டுமென்பதைக் கண்டிப்பாக நடைமுறைப்படுத்தல்.

சாதிப் பெயர்களைக் கையாளுவதை முற்றாக ஒழித்தல்

பத்திரிகைகளில் வரும் திருமணவிளம்பரங்கள், அந்தியேஷ்டி மலர்கள் மரண அறிவித்தல்கள் போன்றவை ஊடாக சட்ட விதிகளை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆய்வுக் கட்டுரைகளும் வரலாற்றுப் பதிவுகளும் விலக்காக இருக்கலாம்.

சாதிப் பெயர்களால் இழிவு செய்வோர்மீது சட்ட நடவடிக்கை எடுத்துத் தண்டனை வழங்கல்.(பண ரீதியில் இருப்பது நல்லது)

பேசிச் செய்யும் திருமணங்களில் மாற்றம் கொண்டுவரல்.

சாதி சமயம் (கடவுள் ஒன்றே என்றுதானே எல்லாரும் சொல்கிறார்கள்.) சாதகம், சீதனம் (பெண் ஆண் இருவரையும் இழிவு செய்கிறது) போன்ற பிற்போக்குத் தனங்கள் விலக்கப்பட்டுக் கல்வியறிவு ஒழுக்கம் முதலியவற்றிற்கு முதன்மையளித்தல்.

பேச்சுத் திருமணங்களுக்குப் பதிலாக காதல் திருமணங்களை ஊக்குவித்தல். காதல் திருமணம் சாதியத்தை உடைக்கும் முக்கிய அலகாக இருக்கிறது. இதனால் பிறக்கும் குழந்தைகள் எந்தச் சாதியும் இல்லாமல் மனிதராய் அடையாளப்படுத்தப்படுவர். இந்நிலையில் சாதி அடையாளம் இல்லாத எதிர்காலச் சந்ததி உருவாகும்.

புலம் பெயர்ந்த தேசங்களில் வாழும் தமிழர்களின் ஊர் ஒன்றுகூடல்கள் சாதி ஒழிப்பிற்கான கருவியாக மாற்றப்பட வேண்டும்.

புலம்பெயர்ந்து குடியேறிய மூத்த தலைமுறையினரின் (தாத்தா, பாட்டி, பெற்றோர்) சாதிய உணர்வுகளை இங்கு பல்லின மக்களுடன் சேர்ந்து வளரும் இளஞ்சந்ததி முற்றாக மறுதலித்தும் நிராகரித்தும் மனிதாபிமானத்தை முதன்மைப்படுத்திய வாழ்க்கையை மேற்கொண்டு வாழவேண்டும்.

சாதியின் அடிப்படையில் தமது காதலை நிராகரிக்கும் பெற்றோரின் பாசம் என்ற விலங்கை உடைத்து துணிவுடன் தமது காதல் வாழ்வை முன்னெடுக்க வேண்டும். உண்மையான பிள்ளைப் பாசம் உள்ள பெற்றோர் காலவோட்டத்தில் ஏற்றுக் கொண்டு தமது புதிய சந்ததியைக் கொஞ்சிக் குலாவுவர் என்பது நிதர்சனம்.

சமூக இயக்கங்களும் விடுதலையை நேசிக்கும் அனைத்து அமைப்புக்களும் உலகெங்கும் ஈழத் தமிழீழத் தேசியத்தின் விடுதலைக்காய் குரல்கொடுக்கும் அனைத்து மக்களும் தமிழர் மத்தியில் மிச்ச சொச்சமாய் இருக்கும் சாதிவேர்களை அறுப்பதற்கு இணைந்து பணியாற்றுவதன் மூலம் ஈழ விடுதலைக்கு வலுவூட்ட முடியும். ஈழத்தமிழினத்தின் விடுதலையின் உண்மையான அர்த்தங்களைக் கொண்டுவர முடியும்.

# எம். சி. சுப்பிரமணியம் நினைவாக

கிழக்கு வானில் எழுந்த சுடர் விளக்காய், தாழ்ந்து
கிடந்த மக்கள் தமைஎழுப்ப வந்த வன்நீ!
விழியிருந்தும் குருடர்களாய் வாழ்ந்தும், பேச
வாயிருந்தும் ஊமைகளாய் இருந்தும், வாழ
வழியின்றி ஆண்டாண்டாய் ஒடுக்கப்பட்டு,
வறுமையிலும் கொடுமையிலும் தவித்த மக்கள்
எழுந்துதலை தூக்கவந்தாய், எனினும் அந்த
இருள் முழுதும் விலகியதோ? இன்னும் இல்லை!

பிறப்பினிலே தாழ்வுயர்வு இலைஎன் றாலும்
பன்றிகட்கும் நாய்கட்கும் கீழாய், சொந்தத்
திருநாட்டில் இந்த மக்கள் மதிக்கப்பட்டார்:
தீண்டாமை எனும் கொடிய நெருப்பில் தீய்த்தார்!
அரிசனங்கள் ஆண்டவனின் குழந்தை என்றும்
அழகாக ஏமாற்றப் பட்டார் நாட்டில்!
திரையிட்டு மூடிவைத்த ஓவி யம்போல்
துயர்சுமந்து கிடந்தார்கள் அந்த மக்கள்!

அறியாமை எனும் இருட்டில் கிடந்தும், சாதி
ஆதிக்கத் தின்பிடியில் உழன்றும், கூட்டில்
சிறைப்பட்ட பறவைகளாய்த் தாழ்த்தப் பட்டோர்
சேரிஎனும் ஊர்ப்புறத்தில் ஒதுக்கப் பட்டும்
தரித்திரராய் வாழ்ந்துமடிந் தொழிந்தும், தங்கள்
தலைவிதியோ இதுவென்று நினைத்தார் அன்றி
உரிமையோடு எவர்க்கும்சரி நிகராய் வாழும்
உண்மையினை அந்தமக்கள் அறிந்தா ரில்லை!

ஊரிலுள்ள பொதுக்குளத்தில் நீர் எடுக்க
உயர்சாதி மக்களாலே மறுக்கப் பட்டார்!
சேரிமக்கள் தொட்டுவிட்டால் தீட்டு என்றே
தெருவினிலே நடப்பதற்கும் தடுக்கப் பட்டார்!
வேரைப்போல் மண்ணுக்குள் இருந்து கொண்டு
மற்றவர்கள் உயர்ந்தோங்க உழைத்த மக்கள்
சீர்கெட்டுக் கிடந்தார்கள், சிந்தை நொந்து

தவித்தார்கள் அவர்களையார் நினைத்துப் பார்த்தார்?
பள்ளத்தில் கிடந்த மக்கள் எழுந்து வந்து
படியேற நினைக்கையிலும் உதவி டாமல்
தள்ளிவிடப் பட்டார்கள் கல்வி என்னும்
தருநிழலில் ஒதுங்குதற்கும் மறுக்கப் பட்டார்!
எல்லார்க்கும் பொதுவென்னும் கோவி லுக்குள்
இம்மக்கள் செல்வதற்கும் உரிமை இல்லை!
கல்லாக இருக்கின்ற கார ணத்தால்
கடவுள்களும் கண்திறந்து பார்த்த தில்லை?

சாதிமதத் தின்பேரால், கடவுள் பேரால்
தன்இனத்து மக்களெல்லாம் பல்லாற் றானும்
நீதிபெற முடியாமல் பட்ட துன்பம்
நிச்சயமாய் இனிதொடரக் கூடா தென்றே
நாதியற்றும், நலிவுற்றும் கிடந்தோர் வாழ்வில்
நிலையான முன்னேற்றம் பெற உழைத்தாய்!
ஆதிநாளின் கொடுமைஇன்று இலைஎன் றாலும்
அடிமைநிலை முழுவதும்இன்னும் மாற வில்லை!

அன்னியரின் ஆளுகைக்குள் அடிமைப் பட்டு
அடைந்ததுயர் போய், நாட்டு விடுத லைக்குப்
பின்னும்தம் மக்களிடம் ஏற்றத் தாழ்வைப்
பயிராக்கி வளர்த்தோர்கள், தங்கள் வாழ்வைப்
பொன்வயலாய் ஆக்கினார்கள் எளிய மக்கள்
பன்மடங்காய் அடிமையானார்! சொந்த வீட்டில்
அண்ணன்தம்பி கட்குள்ளே வேற்று மைகள்
ஆனதுதான் வெட்கம்! இதை யார் நினைத்தார்?

செந்தா மரைச்சேற்றில் மலர்ந்த தைப்போல்
தோன்றாது தோன்றியமா மணியாய் நீதான்
வந்துபிறந் தாயோஇச் சமுதா யத்தில்!
விடிவெள்ளி யாய்உன்னைக் காண்ப தற்கு
நொந்துதவம் செய்தாரோ, அந்த மக்கள்!
நெடுவாழ்வில் துயர்போக்கும் மருந்தே நீதான்!
இந்தப்பிறப் பில்மட்டும் இன்றி என்றும்
இறவாத புகழுலகில் வாழ்வாய் நீயே!

# சமத்துவத்தின் குரல் எம்.சி.

**த. மகேந்திரராஜா**
ஓய்வுநிலை முகாமையாளர்

எம்சி மனிதத்தின் விடுதலைக்காகப் போராடிய விடுதலைப் போராளி. பள்ளி வாழ்க்கையில் தொடங்கி மரணிக்கும்வரை போராடிய வாழ்நாள் போராளி. இவர் வடபுலத்தின் பட்டிதொட்டியெங்கும் மிதிவண்டியிலேயே பயணம்செய்து ஒடுக்கப்பட்ட மக்களின் அவல நிலையைப் பார்த்து அறிந்தவர். ஒடுக்குமுறையாளர்களின் அராஜகத்தைக் கேட்டறிந்தவர். இப்படி ஓர் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகத் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்த மகத்தான மனிதருக்கு நூற்றாண்டுவிழா நடத்திச் சிலை எடுப்பது போற்றுதற்குரியது. விழாக் குழுவினர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

"மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு"

என்கிறார் வாழ்வியலின் வழிகாட்டி வள்ளுவர்.

ஆம் ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவிற்காக வாழ்நாள் வரை தன்னை அர்ப்பணித்த மனிதனுக்கு நன்றியுள்ளம் கொண்டவர்கள் விழா நடாத்தி சிலை எடுப்பது சிறப்பானது.

எம்சி அவர்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவிற்காகக் கிளிநொச்சிப் பகுதிக்கும் பரப்புரை செய்ய வருவதுண்டு. கிளிநொச்சி ஒரு குடியேற்றப் பிரதேசமாகையினால் அது பரந்துபட்ட பிரதேசமாக

இருந்தது. ஒருவர் ஒரு நிகழ்வில் கலந்து கொள்வதென்றால் பத்து மைல்களுக்கும் அதிகமான தொலைவிலிருந்தும் வரவேண்டும். போக்குவரத்துச் சாதனங்கள் மிகக் குறைவான காலம். இங்கு நான் குறிப்பிடுவது அறுபதுகளின் பிற் பகுதியையேயாகும். அக்காலத்தில் கிளிநொச்சி நகரத்தில் ஒன்றுகூடலுக்கான இடமென்றால் என்னுடைய தாய்வழிப் பேரன் சின்னட்டியுடைய வீடு, அடுத்தது இன்னுமொரு பேரன் முறையான அருளப்பு வீடு. சின்னட்டியினுடைய வீடு பெரிய தலைவாசலுடன்கூடிய பெரிய கல்வீடு. இங்கேதான் எம்சியின் உரைகளை உள்வாங்கக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்துள்ளது. இதன் காரணமாகவே இன்றுவரை தடம்மாறாத இடதுசாரிக் கொள்கையோடு பயணித்துக் கொண்டிருக்கின்றேன். இடதுசாரிகள் தடம்மாறலாம். இடதுசாரிக்கொள்கை மாறாது.

எம்சி அவர்கள் பாடசாலையிலிருந்து ஒடுக்குமுறையை எதிர்கொண்டு மாணவனாக இருந்து போராடி வெற்றி கண்டார். எம்மவர்களிலே ஆயிரக்கணக் கானவர்கள் ஒடுக்குமுறையினால் கல்வியைத் தொடரமுடியாது அரச தொழில் பெறமுடியாத அவல நிலைக்கு ஆளாகினார்கள். ஒடுக்குமுறையின் கொடுமைக்குப் பலியானவர்களுக்குத்தான் ஒடுக்கு முறையின் வலி தெரியும். ஒடுக்குமுறைக்கு எதிராக ஒருசில முற்போக்குச் சிந்தனையாளர்களே போராடி வெற்றி கண்டார்கள் ஏனையோர் போராட்டத்தில் குளிர் காய்ந்தவர்களே. ஆலயம் பிரவேசம், தேநீர்க்கடை பிரவேசம், பாடசாலைகளில் ஏற்றத்தாழ்வு, மயானத்தில் ஏற்றத்தாழ்வு, குடிமைகளின் அடிமைத் தொழில் ஒழிப்பு, தொழிலாளர்களின் கூலிப் பிரச்சனை இவற்றிற்கெல்லாம் எதிராக எம்மவர்கள் போராடி வெற்றி கண்டார்கள். வடபுலத்தில் இந்நிலைமைகளைக் கருத்தில் கொண்டும் எம்சியினுடைய தன்னலமற்ற சேவைக்காகவும் அன்றைய பிரதமர் மாண்புமிகு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் எம்சிக்குப் பாராளுமன்ற உறுப்பினர் நியமனம் வழங்கிக் கௌரவித்தார். இக்காலப் பகுதியில்தான் தென்னை, பனை வளம்சார்ந்த தொழிலாளர்களின் உழைப்பை ஒடுக்குமுறையாளர்கள் சுரண்டிக்கொண்டிருப்பதை முடிவுறுத்துவதற்காக அன்றைய இடதுசாரிக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் டாக்டர் என். எம். பெரேராவுடன் இணைந்து தென்னை, பனை வளம் சார்ந்த தொழிலாளர்களைக் கூட்டுறவு மயப்படுத்தினார் இந் நிகழ்வு போராட்டத்தின் மைல்கல் எனலாம். இன்றும் எமது முற்போக்கு சிந்தனையாளர்களின் செயற்பாட்டிற்குத் தடையாக இருப்பவர்கள் போராட்டத்தில் கலந்து கொள்ளாது குளிர்காய்ந்தவர்களே.

இவர்களே எம்மைப் பார்த்துக் கேட்கிறார்கள் சாதி எங்கே இருக்கிறது என்று. எங்களுடைய செயற்பாடுகள் சாதியத்திற்கு எதிரானவை இல்லை. ஏற்றத்தாழ்விற்கு எதிரானவை. சமத்துவத்திற்கானது, சாதியம் பற்றிப் பேசுபவர்கள் ஒன்றை உணர்ந்து கொள்ள வேண்டும். உயர்பதவிகளிலே சமத்துவம் உண்டா? அல்லது இதற்குத் தகுதியாவர்கள் எம்மிடம் இல்லையா? இப்படியான கேள்விகளுக்கெல்லாம் விடை தேட வேண்டும். மனிதன் பிறந்தான், வாழ்ந்தான், மடிந்தான் என்று இல்லாமல் வாழுங்காலத்தில் சமூகத்திற்கு என்ன செய்தான் என்று வரலாறு இருக்க வேண்டும் இவன்தான் முழு மனிதன். எமது முற்போக்கு எழுத்தாளர்களான டானியல், ஜீவா, தெணியான் போன்றவர்கள் ஒடுக்குமுறைக்கெதிராக நிறைய எழுதியுள்ளார்கள். அவர்களுடைய எழுத்தோட்டத்தில் ஒடுக்குமுறையாளர்களின் அசிங்கமான பக்கங்களும் முகங்களும் அம்பலப்படுத்தப்பட்டது. இவர்களுடைய பெண்களின் நடத்தைகளும் எழுதவேண்டிய கட்டாய தேவைக்குட்பட்டது. இதன் காரணமாக பிறப்பின இரகசியங்களும் அம்பலமாகின. இதன்காரணமாக ஒடுக்குமுறையாளர்களுக்குள்ளும் புரள்வுகள் ஏற்பட்டது. இதன்காரணமாக இவர்கள் சாதியம் பற்றி எழுதுகிறார்கள் என்று கூச்சலிட்டுக் கொண்டிருக்கிறார்கள். சாதியம் என்ற விடயத்தில் எங்களுக்கு முரண்பாடு கிடையாது. உயர்சாதி, குறைந்த சாதி என்கின்றபோதுதான் எமக்கு அதில் உடன்பாடு இல்லை. எம்மவர்கள் எம்சியின் மீதும் சில குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார்கள். ஒடுக்குமுறையாளர் வர்க்கத்திற்கும் எம்சி அரச தொழில் பெற்றுக் கொடுத்தார் என்பது குறுகிய நோக்கம் கொண்டோரது குற்றச்சாட்டு. ஒடுக்குமுறையாளர் வர்க்கத்திற்குள்ளும் சமத்துவம் இன்மை காணப்பட்டது. அவர்களுக்குள்ளும் ஒரு உள்ளக ஒடுக்குமுறை இருந்துள்ளது. எனவே ஒடுக்குமுறையாளர் வர்க்கத்திற்குள் ஒடுக்கப்பட்ட மக்களுக்குத்தான் உதவி செய்தார். ஆகவே எம்சி சாதியம் பார்க்கவில்லை. சமத்துவம் பேணினார் என்பதே உண்மை.

"வடபுலத்தின் சமத்துவத்தின் முதன்மைக் குரல் எம்சி"

# சமூக பேராசான் M.C சுப்பிரமணியம் M.P அவர்கள்

திரு. சீ.குணநாயகம்

தான் பெற்ற கல்விக்கப்பால் சீரழிந்து சின்னாபின்னப்பட்டு இருந்த சமூகத்திலும் இந்த சீரழிவுகளுக்கு காரணமாயிருந்தவர்களிடமும் பெற்றுக் கொண்ட பாடமுந்தான் அவருக்கு மிகப் பெரும் பேறானது. இறைவன் நமக்கிட்ட கட்டளை என்று எண்ணிய எம்மவர்க்கு "வஞ்சகமும் சூதும் கைதேர்ந்த கூட்டத்தார் வகுத்த திட்டம் தான் இது" என்று எடுத்துரைத்தவர் M.C சுப்பிரமணியம்

யாழ்ப்பாணத்தில் தமது வீட்டருகில் கிறிஸ்தவப் பாடசாலையில் அரிவரியில் கல்வி கற்கச் சென்ற போது நிலத்தில் இருந்து கல்வி கற்றபோது அவர் தந்தையாரும் உறவினரும் இணைந்து கீழ் இருந்து படித்த பிள்ளைகளுக்கு மேசை, கதிரை செய்து தந்ததை நினைவில் நிறுத்தலாம். பற்றிக்சில் இடைநிலைக் கல்வியையும், லண்டன் மெற்றிக்குலேசன் உயர்தர கல்வியைப் பெற்ற M.C சுப்பிரமணியம் அவர்கள் காலத்தால் அழியாத காவிய நாயகன். இந்தச் சமூகத்திற்கு இருக்கும் குறைபாடுகளை ஆய்வுக்குட்படுத்தினார். எண்ணற்ற பிரச்சனைகளைக் கருத்திற் கொண்டார். பெரியார், ஜோன் போல் ஆகியோரின் ஆசி பெற்றார். பாரதத்தில் பார்பனரின் சூனியமும் சிறிய நாடான இலங்கையில் சிறிய குடாநாடாம். யாழ்ப்பாணத்தில் சுத்தம் பொய்பொதிந்த சைவநெறி எனும் நரி வெள்ளைச் சூனியத்திற்கும் அம்பேக்கார் வழி நின்று வேட்டு வைத்த மாந்திரிகன் M.C சுப்ரமணியம் அவர்களே. பொதுவான வாக்குரிமை பற்றிய போதனை அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை உருவாக்கம், கள்ளு இறக்கும் தொழிலாளர் சங்கம் உருவாக்கம், பாராளுமன்ற பிரதிநிதியாகச் சமூக குறைபாட்டொழிப்புத் திருத்தச் சட்டம் நிறைவேற்றல், 15ற்கும் மேற்பட்ட பாடசாலை நிறுவுதல், பயிற்சி

பாடசாலைக்குச் ஆசிரிய மாணவர்களை இணைத்தல், கல்வி அதிகாரி நியமனம், நிர்வாக அதிகாரி நியமனம், யாழ்ப்பாண பல்கலைக்கழக வருகைக்கான பங்களிப்பு அரச ஊழியர் நியமனம், காணி வழங்கல் என்று இவ்வாறு M.C சுப்பிரமணியம் பல விடயங்களை நிறைவு செய்தார்.

உலகத்தில் எந்த இனத்திற்கும், எந்தச் சமூகத்திற்கும் மறுக்கப்பட்டிராத மனித உரிமை இந்தச் சமூகத்திற்கு மறுக்கப்பட்டுள்ளது. உலகத்தில் எந்த இனமும் எந்த சமூகமும் அனுபவிக்காத துயரங்களை இந்தச் சமூகம் அனுபவித்தது. எம் சமூகத்திற்குச் சரியான மார்க்கத்தைக் காட்டியவர் M.C சுப்ரமணியம் அவர்கள். தன் பாசறையில் பயிற்சி அளித்துச் சமூகத்திற்குத் தந்த வற்றாத நதிகள் K.டானியல் டொமினிக் ஜீவா, S.T.N. நாகரட்ணம் தங்க வடிவேல் கிருஷ்ணபிள்ளை, P.J அன்ரனி, தெனியான், செந்தில்வேல் போன்றோராவர். இவர்கள் M,C எம் சமூகத்திற்காய்த் தந்த எச்சங்கள்.

ஆலயத்தில் கயிறு கட்டி எம்மவரை வெளியில் நிறுத்திய நிலைமை, சிரட்டையில் தேநீர், தட்டுவத்தில் சோறு வழங்கியதும் இத்தனைக்கும் விடைகொடுத்த சமூகப் பேராசான் M.C சுப்ரமணியம் அவரை வணங்கிடுவோம்.

"எவ்வழி MC வழி அவ்வழி நம்வழி"

***சீ. குணநாயகம்***
பலாலி வீதி உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்
(புன்னாலைக்கட்டுவன் குணசிங்கம்)

# அமரர் எம்.சி. சுப்பிரமணியம் அவர்களைப் பற்றிய நினைவுகள்

**– சீனியர் செல்வராசா**
மண்டான்

1962ம் ஆண்டிலிருந்து அமரர் என் ஞாபகத்தில் இருக்கின்றார். என்னுடைய தந்தையாருடன் அமரர் அவர்கள் நெருங்கிய நட்புடனும், அரசியற் கொள்கைகளில் ஒருமித்த கருத்துடனும் செயற்பட்டுக் கொண்டிருந்த நாள்கள் அவை. சிறுபான்மைத் தமிழர் மகாசபை என்னும் வார்த்தை அவர்களின் உரையாடல்களின் போது அடிக்கடி உச்சரிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கும்.

அமரர் அவர்கள் வடமராட்சிப் பகுதிக்கு வரும் போது, தவறாமல், எனது தந்தையாரிடம் வருவார். எமது தந்தையாருடன் பனையோலைப் பாயில் இருந்து கொண்டு மணிக்கணக்காகப் பேசிக்கொண்டிருப்பார். பெரும்பாலும் மாலை வேளைகளில் இந்தச் சந்திப்பு இடம்பெறும்.

ஒரு சம்பவத்தினை இப்பொழுது என்னால் ஊகிக்க முடிகின்றது. 1950ம் ஆண்டில் எனக்க மூத்த சகோதரி ஒருவர் பிறந்திருந்தார். அவர் பிறந்த கரவெட்டியிலுள்ள “அம்பம்” வைத்தியசாலையில் அந்தக் காலகட்டத்தில் அம்பம் வைத்தியசாலையில் சிறுபான்மையினருக்குக் கட்டில்கள் ஒதுக்கப்படுவதில்லை. எனது தாயார் பிரசவத்திற்குப் போயிருந்த போது கட்டில் கொடுக்கப்படவில்லை. எனது தந்தையார் வைத்தியசாலை நிர்வாகத்தினருடன் வாதாடி, இறுதியில் வெற்றியுடன் தான் திரும்பியிருந்தார். எனது தாயாருக்கு வைத்தியசாலைக் கட்டில் ஒதுக்கப்பட்டு, சுகப்பிரசவத்துடன் சில நாள்களில் எனது இல்லம் வந்து சேர்ந்திருந்தார். எனது தந்தையார் வைத்தியசாலை நிர்வாகத்தினருடன் முரண்பட்டுக்கொண்டிருந்த அந்தச் சந்தர்ப்பத்தில் அமரர் எம்.சி.சுப்ரமணியம் அவர்களும் கூடவே நின்று எமது உரிமைக்களுக்காகக் குரல் கொடுத்திருப்பார்கள் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை. இதன் பின்பு, அம்பம் வைத்தியசாலையில் சிறுபான்மைத் தமிழர் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு கட்டில் ஒதுக்கப்படும் நிகழ்வுகள், தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இது விடயம் குறித்துப் பின் நாளில் என் தந்தையாருடன் உரையாடும் போது அதனை நான் அறியக் கூடியதாக

இருந்தது. பின்நாளில், அமரர் அவர்களுக்குப் பாராளுமன்ற உறுப்பினர் பதவி கிடைத்த பின்னரும் கூட, எனது தந்தையாருடன் அமரர் அவர்களின் நட்பு தொடர்ந்து கொண்டிருந்தது. அவருடைய அரசியற் பாதையில் தொடரக்கூடிய சந்தர்ப்பங்கள் எனக்கு இருக்கவில்லை. தொழில் வாய்ப்புக் கிடைத்தது, நான் பலவருடங்கள் விலகியே இருந்தேன். அந்த நாள்களில் நடந்தேறிய ஒரு சம்பவத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் எனக் கருதுகின்றேன்.

கட்டைவேலிப் பகுதியில் ஒரு அரசியல் நிகழ்வுக்காக, அமரர் அவர்கள் வாகன அணியுடன் வந்திருந்தார். வழக்கம் போல் எனது இல்லத்திற்கு வந்து, எனது தந்தையாரையும் அந்த நிகழ்விற்கு அழைத்துச் சென்றிருந்தார். நிகழ்வு முடிந்து இரவு சுமார் 8.30 மணியளவில் அந்த வாகன அணி உப்பு றோட் என அழைக்கப்பட்ட பாதையில் மண்டான் நோக்கி வந்து கொண்டிருந்த போது, சோனப்பு சுடலைக்கருகில் சில விசமிகளால் வாகன அணி மறிக்கப்பட்டது. மறிக்கப்பட்ட வாகனத்தில் எதுவித கொள்ளை முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. மாறாக, எதிரணி மேலாதிக்க அரசியல்வாதியொருவர் அமரர் அவர்களை அச்சுறுத்தி அவரின் நகர்வுகளை மழுங்கடிப்பதற்காகச் செய்த ஒரு கோழைத்தனமான செயற்பாடே அது என்பது பின்னர் தெரிய வந்தது. இருந்த போதிலும் அந்தச் சந்தர்ப்பத்தில் பதட்டப்படாமல் துணிச்சலுடன் செயற்பட்டு, வாகன அணியை வழிமறித்தவர்களை ஓட ஓட விரட்டி விட்டு, அமரர் அவர்கள் எனது தந்தையையும் அழைத்துக் கொண்டு வந்து மேலும் இரண்டு மணித்தியாலயங்கள் மண்டானிலுள்ள எனது இல்லத்தில் தங்கிப் பசியாறிக் கொண்டே தனது பயணத்தைத் தொடர்ந்திருந்தார்.

பின் நாளில், இளைஞர் போராட்டங்கள் என்று ஆரம்பித்து, ஆயுதப் போராட்டங்களாகப் பர்ணமித்த பின்னர், சிறுபான்மைத் தமிழர் மகாசபையினரின் செயற்பாடுகளும் முடங்கியேயிருந்தன. இப்பொழுது, மகாசபையின் நடவடிக்கைகளைத் திரும்பவும் ஆரம்பிக்கத்தக்க நல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதே நேரம், அமரர் அவர்களின் நூற்றாண்டு நிகழ்வும் இடம்பெற இருப்பதால், அமரர் அவர்களின் சேவைகளை நினைவுகூர்ந்து, அவரைக் கனம்பண்ணும் வேலைத்திட்டம் ஒருங்கமைக்கப்பட்டு, அந்நாரின் உருவச்சிலை ஒன்றினை திறந்து, கௌரவப்படுத்த எடுத்துள்ள முனைப்புக்களை வெற்றி பெற வைப்பது சிறுபான்மையினராகிய எங்களது கடமையாகும்.

# "எம்.சி" என்ற ஆளுமை

"கலாபூஷணம்" ***எஸ்.ஜே.ஜெயக்குமார்***
அகில இலங்கை சமாதான நீதவான்
ஓய்வு பெற்ற கணக்காளர்
சிரேஷ்ட ஊடகவியலாளர்
கரணவாய் கரவெட்டி.

*1966ஆம் ஆண்டு நான் ஈழநாடு பத்திரிகையின் உடுப்பிட்டி நிருபராக நியமனம் பெற்றுச் செயற்படத் தொடங்கிய போது எனக்கு அமரர் எம்.சி. அறிமுகமானார் அவர் எனக்கு அறிமுகமானதே சுவாரசியமானது. ஈழநாடு பத்திரிகைக்காக அப்போதைய உடுப்பிட்டி எம்.பி அமரர் எம். சிவசிதம்பரம், தமிழரசுக்கட்சி வேட்பாளர் அமரர் ஜெயக்கொடி, கம்யுனிஸ்ட் கட்சி வேட்பாளர் அமரர் பொன்.குமாரசாமி சமசமாஜக் கட்சி வேட்பாளர் அமரர் ஆர். ஆர். தர்மரத்தினம் போன்றோரை சந்தித்துப் பேட்டிகள் எடுத்துப் பிரசுரித்து வந்தேன்.*

*இக் காலப்பகுதியில் அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையும், அதன் தலைவர் எம்.சி. சுப்பிரமணியம் அவர்களும் மிகவும் பிரபல்யம் பெற்றிருந்ததுடன் பத்திரிகைகளின் தலைப்புச் செய்திகளிலும் இடம் பெற்று வந்தன. இதனால் எனக்கு அவரைச் சந்தித்து அவரிடமிருந்து செய்திகள் பெற வேண்டுமென்ற ஆர்வம் மேலிட்டது.*

*நெல்லியடியில் ஒரு கூட்டம் நடக்க இருப்பதாகவும் அதற்கு எம்.சி. வருகின்றார் என்றும் அறிந்தேன் அது ஒரு கலந்துரையாடல் போன்று நிகழ்ந்தது. நான் அங்கு சென்ற போது முன்வரிசையில் சில முக்கிய பிரமுகர்கள் அமர்ந்து இருந்தனர். அவர்களில் எம்.சியும் இருப்பார் என்று நினைத்து விசாரித்தேன். அவர் வெளியே யாரோடேயோ கதைத்துக் கொண்டிருப்பதாகக் கையால் காட்டி அங்கே போகுமாறு கூறினார். அங்கு நாலைந்து பேர் உரையாடிக்கொண்டிருந்த இடத்திற்குப் போனேன்.*

*அவர்களில் கையில் ஒரு பையுடன் நின்று கண்களை மூடிமூடிக் கதைத்துக் கொண்டிருந்த ஒருவரிடம் நான் "ஈழநாடு" நிருபர் திரு. எம்.சி. சுப்பிரமணியம் அவர்களைச் சந்திக்க வேண்டும், இங்கே நிற்பதாகச் சொன்னார்கள் என்று சொன்னேன். அதற்கு அவர் என்னைப் பார்த்து மெதுவான சிரிப்புடன் தம்பி நீங்கள் தான் உடுப்பிட்டி நிருபர் ஜெயக்குமாரா என்று கேட்டார். நான் அதிர்ந்து போய்விட்டேன். ஈழநாட்டில் முக்கிய செய்திகளில் உடுப்பிட்டி நிருபர் ஜெயக்குமார் என்று வரும் பார்த்திருக்கிறேன் என்று சொல்லி என்னுடன் பேசத் தொடங்கினார்.*

எனக்கு அப்பொழுது தான் பதினெட்டு வயது படித்துக் கொண்டிருக்கும் போதே பத்திரிகைகளில் எழுதத் தொடங்கி இருந்தேன். எனது பெயரை எவ்வளவு ஞாபகமாக வைத்திருந்தார் என்று என்னால் வியக்காமல் இருக்க முடியவில்லை "தம்பி" நீங்கள் எமது செய்திகளை நன்றாகப் பிரசுரித்து வருகின்றீர்கள். என்று பாராட்டியதுடன் அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் செயற்பாடுகள் சமூக விடுதலைக்கான போராட்ட முன்னெடுப்புக்கள் முக்கியமாக ஆலயப் பிரவேசம் போன்ற விபரங்களை எல்லாம் சுருக்கமாக விபரித்ததுடன் கூடவே தமது செய்திகள் எனக்குக் கிடைக்கக் கூடியதாக ஒழுங்கு செய்வதாகக் கூறி எனது முகவரியையும் எழுதி வாங்கிக் கொண்டார்.

அதன் பின்னர் அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் செய்திகள், அறிக்கைகள் துன்னாலை தக்குச்சம்பாதியைச் சேர்ந்த எனது நண்பர் அமரர் சி.செல்லையா மூலம் எனக்குக் கிடைத்து வந்தன. சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் ஆலயப் பிரவேசம் தேநீர்க் கடைப் பிரவேசம் போன்ற போராட்டங்கள் அக்காலத்தில் மிகவும் தீவிர போக்குக் கொண்டதாக விமர்சிக்கப்பட்ட .போதிலும் அவரது சாத்வீகப் போக்கும், அமைதியான சுபாவமும், எவருடனும் சிரித்துப் பேசிக் கவரும் திறனும் இன, மத, சாதி, சமூக வேறுபாடுகளுக்கு அப்பால் அவருக்கு எல்லாம் சமூகத்தினரிடமும் உயர்ந்த மதிப்பை ஏற்படுத்தி இருந்தது.

இதனாலே சிறுபான்மைத் தமிழர் மகா சபையின் ஆலயப்பிரவேசம் போன்ற போராட்டங்களின் போது சிறுபான்மைச் சமூகத்தவரோடு எல்லாச் சமூகத்தினரும் இணைந்து கலந்து கொண்டிருந்தமையை என்னால் நேரில் காண முடிந்தது.

அமரர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பிரதமராகப் பதவி வகித்த காலத்தில் எம்.சி க்கு நியமன எம்.பி பதவி வழங்கப்பட்டது. அவர் நியமன எம்பியாக யாழ்ப்பாணம் திரும்பிய போது அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பின் போது அவரைச் சந்தித்து எனது வாழ்த்தை தெரிவித்துக் கொண்டேன். அப்போது என்னை அதிர்ச்சி அடைய வைத்தது அவரது கையில் வழக்கமாக வைத்திருக்கும் அதே பையைத் தான் இப்போதும் இறுக்கமாக பிடித்துக் கொண்டிருந்தது தான்.

ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக அவரிடம் எந்த வித ஆடம்பரமோ, பரபரப்போ காணப்படவில்லை. அதே எம். சி. யாகக் கண்களை மூடிய படியே ஆழ்ந்த சிந்தனையுடன் சொல்ல வேண்டியவற்றைச் சொல்லும் அந்த முகம் என்னைப் பெரிதும் கவர்ந்தது.

ஒரு சிரேஷ்ட ஊடகவியலாளன் என்ற வகையில் எம்.சி. என்ற அமரர் எம்.சி சுப்ரமணியம் என்ற "ஆளுமை" விதைத்துச் சென்ற சமூக சமத்துவம் இன்று உலகளாவிய ரீதியில் மலர்ந்து அவருக்கு அணி செய்கின்றது. சிறந்த பேச்சாளராகவும், நினைத்ததைச் சாதிக்கும் செயல் வீரராகவும் மிளிர்ந்தவர் இந்த எம்.சி. என்ற இரண்டெழுத்துக்குரிய அமரர் எம். சி. சுப்பிரமணியம்.

# அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை

கரவை. **க. நாகமுத்து** J.P.

யாழ் குடாநாட்டின் தலைநகரில் தோழர் எம்.சி.சுப்பிரமணியம் தனது இளமைக்காலத்தில் சமூகக் கண்ணோட்டப் பார்வையில் தன் பொது நலத் தொண்டை ஆரம்பித்தார். இதன் அடித்தளம் சன்மார்க்க சனசமூக நிலையம் அக்காலத்தில் சமூக விடிவெள்ளிகளாக காந்தி போன்றோருடன் வடமராட்சியில் சி.செல்லையா, புலேந்திரன் போன்றோர்கள் மண்டான் பகுதியில் திரு. செல்லத்துரை ஆசிரியர், திரு. சின்னத்தம்பி ஆசிரியர், கரவெட்டி கிழக்கில் செல்லத்தம்பி ஆசிரியர், திரு. இ. தம்பிமுத்து, கரவெட்டி வடக்கில் திரு. இராசரட்ணம் ஆசிரியர் திரு.தங்கராசா, திரு சிவபாதம் போன்றோர்கள் அல்வாய்ப் பகுதியில் ஆசிரியர் சதானந்தம் கொற்றாவத்தை தெணியான் ஆசிரியர் போன்றோர் இணைந்து அமரர் தோழர் எம்சிக்காக கரவெட்டி தெற்கில் தோழர் க. நாகமுத்து, திரு வன்னியசிங்கம் போன்றோர்களும் தோளோடு சேர்ந்து அகில இலங்கை சிறுபான்மை தமிழ் மகாசபையின் உறுப்பினராக இணைந்தனர்.

இத்தலைமை நிலையில் தோழர் அன்ரனி ஆசிரியர் செயலாளராகவும் தோழர் இராசையா தனாதிகாரியாகவும் செயற்பட்டனர். இக்காலப்பகுதியில் 1962ல் யாழ் வடபகுதியில் தேநீர்க்கடை, ஆலயம், பாடசாலைகள், பொது இடங்களிலும் அடிப்படை சமூக சடங்கு ஒழுங்கு முறைகள்தான் தொடர்ந்தன. இந்த ஒடுக்குமுறைக்கு எதிராக தலைவர் எம்சி தலைமையில் சாதி ஒழிப்பு போராட்டம் ஆரம்பமாகியது. தேநீர்க் கடைகளில் பொது மக்களுக்கு மூக்குப்பேணி வேண்டாம், ஆலயத்தில் எல்லா மக்களும் வழிபடுவதுபோல் எமது தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் உரிமை வேண்டுமென்று போராடினார். இக்காலப்பகுதியில் தென்னிலங்கையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இலங்கை கொமியுனிஸ்ட் கட்சி, சமசமாஜக் கட்சி அரசோச்சிய காலம் வடபகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த காலம். இக்காலப் பகுதியில் வடபகுதியில் தீண்டாமைக்கெதிரான வெகுசனப்

போராட்டம் கிளம்பியது. சங்கானை நிச்சாமம் தொடக்கம் தென்மராட்சி மந்துவில் வரையிலும் எமது சமூக விடுதலைக்கான போராளிகள் களம் இங்கினார்கள். இந்நிலையில் வடபகுதியில் தமிழ் சமூகத்தில் ஒரு பகுதியினர் உரிமை மறுக்கப்பட்டு பின்தங்கிய நிலையை தென்பகுதி தலைவர்கள் ஆகிய அம்மையார் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, தோழர் பீற்றர் கெனமன், டொக்டர் விக்கிரமசிங்கா, டொக்டர் என். எம். பெரேரா போன்றோர் உணர்ந்தனர். இந்நிலையில் எமது மக்களுக்கு ஒரு பிரதிநிதி தேவை என்பதை உணர்ந்த இடதுசாரிகள் ஒன்றிணைந்து நியமன எம்பியாக தோழர் எம்.சி.யை அம்மையார் அவர்கள் நியமித்தார். இக்காலப்பகுதியில் கன்பொல்லை நிச்சாமம், கரவெட்டி கிழக்கு போன்ற இடங்களில் சாதிவெறியர்கள் தங்கள் பலத்தைக் காட்டத் தொடங்கினர். கன்பொல்லை கிராமத்தில் உக்கிரமான போர், கரவெட்டி கிழக்கிலும் இதே பாணியில் நடைபெற்றது. இக்காலப்பகுதியில் மக்களுக்கான உணவு விநியோகத்தை முற்போக்கு உள்ளம் படைத்தவர்கள் வழங்கினார்கள். தோழர் எம்சி அவர்கள் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையின் காரணமாகச் சாதி ஒழிப்புச் சட்டம் பாராளுமன்றத்தில் அமைச்சர் லக்ஸ்மன் ஜெயக்கொடி மூலம் தென்னிலங்கை முற்போக்கு சிங்கள பிரதிநிதிகளால் நிறைவேற்றப்பட்டது. மாவிட்டபுரம் கோவில் ஆலயப் பிரவேசத்தில் அடங்காத் தமிழர் சுந்தரலிங்கத்திற்கும் குற்றம் அறவிடப்பட்டது வரலாறு காணாத வெற்றியாயிற்று.

இந்திலையில் தோழர் எம்சி அவர்கள் எமது மக்களால் அன்பளிப்பு செய்யப்பட்ட காரில் கரவெட்டி கிழக்கிற்கு விஜயம் மேற்கொண்டார். இரவு நேரத்தில் சோனப்பு சுடலை மயானத்திகு அண்மையாக உள்ள றோட்டில் பிரயாணம் செய்யும்போது பெரும்பான்மை சாதி வெறியர்கள் கைக்குண்டு எறிந்து கொலை செய்ய முயற்சி செய்தார்கள். குறிதவறி உயிர் பிழைத்தார். தாழ்த்தப்பட்ட மக்கள் ஆசீர்வதித்து என்றும் உயிர்வாழப் பிரார்த்தனை செய்தனர்.

அரசியல் கண்ணோட்டத்தில் பாராளுமன்றத்தில் இப்பிரச்சினை எதிரொலித்தது. அப்போது எமது தமிழ் தலைவர்களில் ஒருவரான திரு அமிர்தலிங்கம் இது சீனக் கட்சியினரின் போராட்டம் என மகுடம் சூட்டினார். இவர்களுடைய கூற்றைப் புறந்தள்ளிய தென்னிலங்கை முற்போக்கு சக்திகள் தமிழருக்குள் என்றும் ஒரு சமூகத்தை அடக்கி ஒடுக்குவது சனநாயகத்திற்கு விரோதமான செயல் என்றனர். இக்காலப்பகுதியில் தோழர் எம்சியின் செல்வாக்கு அதிகரித்து இக்காலப்பகுதியில் சிறுபான்மைத் தமிழர்களுக்கான பாடசாலைகளை ஆரம்பித்து சகல ஆசிரியர்களுக்கும் நியமனம் வழங்கினார். இத்தோடு நிற்காமல் காவல்துறையில் படித்த இளைஞர்களுக்கு வேண்டிய உதவி, பதவி உயர்வு வழங்கினார். அரசாங்கத்தின் பல நிறுவனங்களில் எமது படித்த இளைஞர்களைச் சேர்த்தார். யாழ் குடாநாட்டில் சமூக விடுதலைக்கான தலைவராக விளங்கியதுடன், டொக்டர் அம்பேக்கார், நிறவெறிக்கெதிரான மாட்டின் லூதர் கிங் போன்ற தலைவர்களின் நிலைப்பாட்டிலும் அமரர் எம்சியை என் இதயத்தில் என் எண்ணத்தில் நினைத்து வாழ்த்துகிறேன்.

# சாதியப் பிசாசை ஒழிக்க முற்பட்ட வீரத்தலைவன்

**கிருஸ்ணா**
வரணி வடக்கு.

இலங்கைத் தமிழர்களின் வரலாற்றில் சாதியப் பாகுபாடுகள் முக்கிய இடம் பெறுகின்றன. 'சாதி இன்றேல் மனித வாழ்வு இல்லை' என்ற அளவுக்குச் சாதியின் நிலைத்தலானது தொன்று தொட்டு வரும் சமூக அடுக்கமைவாக உள்ளது. தாழ்சாதி மனிதன் தீண்டிவிட்டால் உச்சி முதல் உள்ளங்கால் வரை குளித்தால் ஒழிய தம்மைப் பிடித்த தோஷம் நீங்காது என்கின்றனர் என தந்தை பெரியார் இந்து மதத்தைச் சாடுகிறார்.

தொன்று தொட்டுத் தமக்கான அசைக்க முடியாத வரலாற்றினைக் கொண்டவர்களாக யாழ்ப்பாணத் தமிழர்கள் காணப்படுகின்றனர். இலக்கியம், கலை, கலாசாரத்திற்கு எவ்வாறு சிறப்புப் பெறுகின்றதோ அவ்வாறே சாதியப் பாகுபாட்டிற்கும் யாழ்ப்பாணம் சிறப்புப் பெறுகின்றது. சாதிய அடக்கு முறைகளும் அவற்றிற்கு எதிரான போராட்டங்களும் எழுச்சி பெற்ற இடமாக யாழ்மண் காணப்படுகின்றது. இங்குள்ள சமூகமும் அதன் வாழ்வியல் தளமும் சாதி பற்றிய இறுக்கமான கொள்கைக் கட்டமைப்பைக் கொண்டுள்ளது. இதனால் சைவத்திற்கும் தமிழ் மறுமலர்ச்சிக்கும் பணியாற்றிய ஆறுமுகநாவலர், பொன்னம்பலம் குடும்பத்தினர் கூடச் சாதி பற்றிய வேறுபாடுகளை இறுக்கமாகக் கடைப்பிடித்து வந்துள்ளதுடன், சாதியப் பாரம்பரியத்தையும் கௌரவத்தையும் தொடர்ந்து பேண வழிவகைகள் செய்தவர்களாக காணப்படுகின்றனர்.

20ம் நூற்றாண்டின் மத்திய காலப் பகுதியில் 24 வகையான தடைகள் தாழ்ந்த சாதியினர் எனக் கூறப்படும் மக்கள் மேல் திணிக்கப்பட்டிருந்தன. அவையாவன

1. ஆண்கள் மேலாடை அணியக்கூடாது.
2. வேட்டி முழங்கால் வரை கட்ட வேண்டும்.
3. ஆண்கள் சால்வையைத் தோளில் போடக்கூடாது.
4. பெண்கள் மேற்சட்டை அணியக்கூடாது.
5. பஞ்சமர்கள் வீதி, பொது இடங்களை பயன்படுத்தக்கூடாது.
6. அவ்வாறு பயன்படுத்தும் போது தமது வருகையினை ஏனையோருக்குத் தெரியப்படுத்தக் காவோலையைத் தமக்குப் பின்னால் இழுத்து வர வேண்டும்.
7. தாழ்த்தப்பட்ட மக்கள் திருமணத்தின் போது நகைகள் அணியக்கூடாது.

8. பஞ்சமர்கள் உயர் சாதியினரின் சமயசடங்குககளின் போதும் விசேட விழாக்களின் போதும் வெள்ளை நிற ஆடையை அணியக் கூடாது.
9. இறந்த பின் எரிக்கக் கூடாது புதைக்க வேண்டும்.
10. அவர்களின் துக்க நிகழ்வின் போது வாத்தியங்கள் (பறை மேளம்) பயன்படுத்தக் கூடாது.
11. தாழ்த்தப்பட்ட மக்களின் மங்ககளகரமான நிகழ்வுகளுக்கு இசை வாத்தியங்கள் பயன்படுத்தக் கூடாது.
12. உயர் சாதியினர் பயன்படுத்தும் குளத்தை எக் காரணம் கொண்டும் தமது தேவைகளுக்கு பயன்படுத்தக் கூடாது
13. குடை பயன்படுத்தக் கூடாது.
14. செருப்பு அணியக் கூடாது.
15. உயர் சாதியினர் வணங்கும் தெய்வங்களைத் தமக்கென ஒதுக்கப்பட்ட ஆலயங்களில் வைத்து வணங்கக் கூடாது அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட தெய்வங்களையே வணங்க வேண்டும்.
16. உயர் சாதியினரின் ஆலயங்களுக்குள் செல்லக் கூடாது.
17. சாதாரண கடைகளுக்குள் நுழையக் கூடாது.
18. பொதுக் கிணறுகளில் இருந்து தண்ணீர் எடுக்கக் கூடாது.
19. சைக்கிளையோ, காரினையோ சொந்தத் தேவைக்குப் பயன்படுத்தக் கூடாது.
20. பஸ்சில் பிரயாணம் செய்யும் போது இருக்கையில் அமரக் கூடாது.
21. கல்வி கற்பதற்கு உயர் பாடசாலைகளில் அனுமதி பெற முடியாது.
22. அனுமதி கிடைத்து விட்டாலும் தரையில் அமர்ந்தே கற்க வேண்டும். கதிரையில் அமர்ந்து கற்பது உயர் சாதியினர் மட்டுமே.
23. உயர் சாதியினரின் வீட்டு வளவிற்குள் நுழையக் கூடாது. படலைக்கு வெளியே அல்லது ஒதுக்கப்பட்ட இடத்திலேயே நிற்க வேண்டும்.
24. தாழ்சாதியினருக்கு என ஒதுக்கப்பட்ட தேநீர்க் கோப்பை, சாப்பாட்டுத்தட்டு, மூக்குப் பேணி, தண்ணீர்ப் பானை, சிரட்டை, சாக்கு போன்றவற்றையே பயன்படுத்த வேண்டும்.

இவ்வாறு அடிப்படை மனித உரிமையினை மீறும் செயல்களை கட்டாயமாகக் கீழ்தட்டு மக்கள் மீது திணித்தனர். அவர்களை உலக அறிவு அற்றவர்களாக முட்டாள்களாக ஆக்கிச் சமூகத்தில் இருந்து முற்றாக ஒதுக்கி வைத்தனர்.

அத்துடன் 1958 1968 காலப் பகுதியில் யாழ்குடா நாட்டில் 90% ஆன ஆலயங்கள், 80% ஆன தேநீர்க் கடைகள் மற்றும் உணவு விடுதிகள், 40% ஆன பாடசாலைகள் சாதி ரீதியாக ஒதுக்கப்பட்டவர்களுக்கு மறுக்கப்பட்டிருந்ததுடன் 80% ஆன பாடசாலைகளில் சமத்துவம் காணப்படவில்லை. இவ்வாறான கொடுமைகளை, அடக்குமுறைகளைப் பொறுத்துக் கொள்ள முடியாத தாழ்த்தப்பட்ட சாதி மக்கள்

கிளர்ந்தெழுந்தனர் இவ்வாறு கிளர்ந்தெழுந்த மக்கள் தமக்கான உரிமைகளைப் பெறப் போராடினார்கள். இதில் பலர் உயிர்த்தியாகம் செய்தனர்! இப்போராட்டத்தில் முன்னின்று கீழ்மட்ட மக்களின் உரிமைகளைப் பெறுவதற்காகப் போராடிய ஓர் உந்நத, மனித ஆளுமை கொண்ட ஒருவராக M.C. சுப்பிரமணியம் அவர்கள் காணப்பட்டார்.

அஞ்சா நெஞ்சமும் ஆணித்தரமான சமதர்மக் கோட்பாடும் சமூக சேவை உணர்வும் நிறைந்தவர் M.C. அவர்கள். ஆடம்பரமற்ற பெருமை, வஞ்சகமற்ற, ஆசையற்ற சுத்தமான ஆத்மா என்று பலராலும் அடையாளம் காணப்பட்டது M.C யின் வாழ்வு தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அர்ப்பணிக்கப்பட்டிருந்தது. இந்தியாவில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் போராடிய அம்பேத்கார் போன்று சமூகத்தில் தாழ்ந்திருந்த தமிழர்களைத் தன் சொற்பொழிவுகளால், கருத்துக்களால் தட்டி எழுப்பி நிமிர வைத்து, கல்விச் சிந்தனைகளை ஊட்டி மக்களை வளர்த்த இத்தலைவரின் சிறப்புக்கள் பலவாகும்.

சமூகத்தின் வளர்ச்சிக்கு அரசியல் ஆதாரம் வேண்டும் என்பதில் ஆணித்தரமான நம்பிக்கையுடையவராகி இருந்த M.C. சிறுபான்மை மக்களின் கல்வியை வளர்ப்பதற்கு, அதன் மூலம் வேலை வாய்ப்புக்களைப் பெறுவதற்கும் அரசியலும் அவசியம் எனக் கூறினார். இதன் காரணமாக 1970ம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஸ்ரீமாவோ தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டணி அமோக வெற்றி ஈட்டியிருந்த போது M.C. அவர்கள் நியமன உறுப்பினராக பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டார்.

பொருளாதார ரீதியில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பினைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் M.C. அவர்கள் செயற்பட்டிருந்தார். அந்த வகையில் யாழ்ப்பாணத்தின் சமூக ஒடுக்கு முறையானது பாரம்பரிய பொருளாதார முறைகேடுகளின் கீழ் கட்டுப்படுத்தப்பட்டிருந்தமையால் பொருளாதார விடுதலை ஊடாக ஒடுக்கு முறைக்கு விடுதலை தர முடியும் என்ற கருத்தும் செயல் வடிவமும் அவரால் முன்னெடுக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியில் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் கற்பதற்கு வாய்ப்புக்களை ஊக்குவித்ததோடு, மோட்டார் பொறிக்கைத்தொழில் மின் தொழில்கள் புதிய சேவைகள் முதலியவற்றில் சிறுபான்மையினரின் பங்குபற்றலை அதிகரிக்கப் பாடுபட்டார்.

சாதிக்கு எதிரான போராட்டங்கள் பரவலாக்கப்பட வேண்டும், ஸ்தாபன ரீதியாக வலுப் பெற வேண்டும். என்ற தேவையின் அடிப்படையில் அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை உதயமானது அடக்கப்பட்டு மௌனிகளாகி இருந்த சிறுபான்மைத் தமிழ் மக்கள் தங்கள் உரிமைக்குக் குரல் எழுப்ப ஏதுவாக இச்சபை காணப்படுகிறது. M.C அவர்கள் அந்திம காலம் வரை இதற்குத் தலைமை தாங்கி வழி நடத்தியவராவார்.

தமிழ் மக்கள் மத்தியில் நிலவிய சாதிச் சடங்கு முறையைக் கண்டும் காணாமலும் இருந்த பல புத்திஜீவிகள் மத்தியில் தமிழினத்தின்

அடக்கு முறைக்கும் அராஜகத்திற்கும் உட்படுத்தப்பட்டு, சமூகத்தின் அடிமட்டத்தில் வாழ்ந்த மக்களின் விடுதலைக்காகத் தன் வாழ்வின் ஒவ்வொரு நொடியையும் அர்ப்பணித்த ஒப்பற்ற தலைவனாகத் தன் மக்களால் இன்றும் போற்றப்படுபவராக M.C. அவர்கள் காணப்படுகின்றார். இதனாலேயே அவரது நூற்றாண்டு விழா இன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டுக் கொண்டிருக்கிறது.

"அழியாத சிதையாத யாவராலும் பிடுங்கி எடுத்து விட முடியாத" என்று கூறக்கூடிய அளவிற்கு இன்று சாதிப்பிடிப்பு வளர்ந்து விட்டது. மேலும் வளர்ந்து கொண்டிருக்கிறது. இந்நிலையை முன்னைய காலங்களுடன் ஒப்பிட்டு, இப்போது சாதி குறைந்து கொண்டு, அழிந்து வருகிறது எனப் பலர் சொல்லக்கேட்டு இருக்கிறோம். ஆனால் நடைமுறையில் என்ன காண்கின்றோம். மறைமுகமாகச் சாதியினை வளர்க்கும் முயற்சிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. யாழ்ப்பாணத்தின் பாரம்பரியங்களை நாம் விட்டுக் கொடுக்கக் கூடாது என மார்தட்டிக் கொள்ளுபவர்கள் கூறும் அப் பாரம்பரியங்கள் சாதிய ஒடுக்கு முறைகளே. இன்றும் பல ஆலயங்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் திறந்து விடப்படாத நிலையைக் கண்முன்னே காண்கிறோம். திருமணங்கள் குறிப்பிட்ட சாதிய எல்லைக்குள் மாத்திரமே இடம்பெறுகின்றன. இதனைக் கண்முன்னே பார்த்துக் கொண்டு எங்கே சாதி இருக்கிறது? என சிலர் முட்டாள் தனமான கேள்விகளைக் கேட்கின்றனர்.

தமிழ் வளர, தமிழ் மக்கள் செழிக்க எனத் தலையால் நடந்து செல்கிறோம். என பெருமையடித்துக் கொள்ளும் சாதிய சமூகத்தினர் தன் அயலவனை, தன் இனத்தைச் சேர்ந்தவனைச் சமமாக இருத்திக் கலைகளை வளர்க்க அனுமதிக்கவில்லை. தமிழனின் அறப்போர் முறைகளை அள்ளி விளாசிக் கொண்டு, தாழ்ந்தவர்களின் முதுகில் குத்துவான். உலகில் உள்ள அத்தனை தமிழர்களும் ஒன்று சேர வேண்டும் எனப் பெருங்குரல் எழுப்புபவர்கள் பக்கத்தில் இருக்கும் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவனை ஒன்று சேர்ப்போம் என்றால் சிறுத்தையாய் சீறுகிறார்கள்.

எனினும் ஆரம்ப காலத்துடன் ஒப்பிடும் போது தற்போது ஓரளவு தாழ்த்தப்பட்ட மக்கள் தமது உரிமைகளைப் பெறுவதைக் காண முடிகின்றது, ஆலயப் பிரவேசம் தேநீர்க் கடைப்பிரவேசம், சலூன் கடைப் பிரவேசம், ஆலயங்களில் தேர் இழுப்பதற்கான போராட்டங்கள் என்பன மேற்கொள்ளப்பட்டன. இதற்கு முன்னின்று செயற்பட்டவராக M.C. அவர்களே காணப்படுகின்றார். அத்துடன் அப்போது தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்தும் வகையில் தெங்கு பனம் பொருள் உற்பத்திப் பொருள்கள் பிற்காலத்தில் பெருந்துணையாக இருக்கும் எனத் தீர்க்கதரிசனமாகக் கூறியிருந்தார். அது இன்று வெற்றி அடைந்து பல தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வாதாரமாக இருப்பதை காண முடிகிறது.

சமூக மேம்பாட்டிற்காக அமரர் M.C. அவர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவை மற்றும் செயற்பாட்டுத் திறன் என்பவற்றில் தனது திறமையின் சுவடுகளை மிக ஆழமாகப் பதித்து கொண்டார். இவற்றின் பால் பிற்படுத்தப்பட்ட சிறுபான்மைத் தமிழர்களின் சமூக, பொருளாதார,

அரசியல், கல்வி மற்றும் வேலை வாய்ப்பிலே புதியதோர் அத்தியாயத்தின் திறவு கோலாக அமரர் M.C. அவர்கள் விளங்கினார்.

இலங்கையில் சாதிய எதிர்ப்புப் போராட்டங்கள் சட்டக் கோரிக்கைகள் முன் வைத்த பின்னரும் சாதி தொடர்பான வேறுபாடுகளும் உயர்வு தாழ்வுத் தன்மைகளும் சிற்சில மாற்றங்களுடன் இன்றுவரை தொடர்கின்றன. யுத்தம் காரணமாக உள்நாட்டுக்குள் இடம் பெயர்ந்து கொழும்பு, வன்னி மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழ்பவர்களிடம் சாதியத்தின் வீரியம் குறைவாக இருக்கின்ற போதிலும் யாழ்ப்பாணத்தில் வாழும் தமிழர்களும் புலம்பெயர் தமிழர்களும் சாதியத்தின் கட்டுக்குள்ளேயே இன்றும் வாழ்ந்து வருவதனைக் காண முடிகிறது.

எமது சுயவிபரக் கோவையிலோ, நாட்டின் ஏனைய விண்ணப்பப் படிவங்களிலோ "சாதி" என்ற பதம் பயன்படுத்தப்படுவதில்லை. சட்டக் கோவைகள் சாதிகளைத் தடை செய்துள்ளன. சாதி மனித உரிமையினை மீறும் செயல் என ஐக்கிய நாடுகள் சபையும் பிரகடனப்படுத்தியுள்ளது. முன்னர் இருந்ததைப் போல தற்போது குடிமை, அடிமை வாழ்க்கையினை யாரும் வாழ்வதில்லை தொழிற் பிரிப்பு தற்போது குறைந்துள்ளது. சில தாழ்த்தப்பட்ட சாதி மக்கள் படித்துத் தமக்கான அந்தஸ்தினைத் தாமே முயன்று பெற்றுள்ளனர். இதற்கான பாதையை உருவாக்கியவர் M.C. ஆவார்.

மேலும் இன்றும் கூட உயர் சாதியினரின் குடும்ப நிகழ்வுகளுக்கு வேறு சாதியினரை அழைப்பதில்லை. உயர் சாதியினர் தாழ்ந்த சாதி எனக் கூறப்படும் மக்களின் வீடுகளுக்கு நட்பின் நிமிர்த்தம் சென்றாலும் அங்கே "விரதம்" போன்ற சில தட்டிக்கழிக்கும் காரணங்களைக் கூறி விருந்துபசாரத்தைத் தவிர்த்து தாம் கொடுக்க வேண்டிய பரிசுப் பொருட்களை கொடுத்து விட்டு வருகின்றனர். இது சாதியத்தின் இன்றைய நிலைப்பாடாகக் காணப்படுகிறது.

ஆனால் இலங்கைச் சட்டம் சாதிய வேறுபாட்டை இல்லாதொழிக்கும் சட்டக் கோவையினைக் கொண்டுள்ளது. இன்னும் சாதியின் ஊடுருவல் பனிப்போரினைப் போன்று மக்களை தொடர்வதனைத் தடுக்க சட்டம், வலுவாக்கப்படுவதுடன் சாதி தொடர்பாக பிரச்சினைகளை உண்டு பண்ணுபவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டணையினை வழங்குதல் வேண்டும். அதனூடாக மக்களைச் சரியாக வழிப்படுத்தி வழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதன் மூலம் சாதிப்பாகுபாடுகளை எதிர்காலத்தில் முற்றாக ஒழிக்க முடியும் இதுவே சாதிக்காகப் போராடிய உந்நத மனிதர் M.C அவர்களின் இறுதி அவா ஆகும்.

# எம்.சி. சுப்பிரமணியம்

எஸ். றஜீபன்
யாழ் பல்கலைக்கழக மாணவன்

ஜாதி என்பது ஆண் பெண் என்ற இரண்டு மட்டுமே வேறில்லை என்ற இவ் உலகிற்கு எடுத்த காட்டிய மகான்களிலே எம்.சி. சுப்பிரமணியம் அவர்களினுடைய பணிகள் அன்றும் இன்றும் இவ் உலகு போற்றும் வண்ணம் விளங்குகின்றது. யாழ்ப்பாணப் பண்பாட்டிலே பின்பற்றப்பட்ட தொழிற்பிரிவுகளின் அடிப்படையிலே வளர்ச்சி பெற்றுக் காணப்பட்ட சமூதாய ஏற்றத்தாழ்வுகளையும் அவற்றின் விளைவாக வளர்ச்சி பெற்ற உயர்ந்த வகுப்பினர் எனும் பிரிவுகளையும் அவர்களினால் ஒடுக்கப்பட்டு, சமூதாயத்திலே ஒதுக்கப்பட்ட மக்களிற்காகக் குரல் கொடுத்துப் போராடிய பெருமகானாக எம்.சி. சுப்பிரமணியம் அவர்கள் அன்றைய கால கட்டத்திலே காணப்பட்டார்.

27.09.1917ம் ஆண்டு யாழ் நகரிலே வசித்த கணபதிப்பிள்ளை கண்ணாத்தாள் தம்பதியினரிற்கு மகனாக இவ்வுலகிலே அவதரித்துக் கொண்டார். பிறந்து முன்றரை வயதிலே தாயாரை இழந்து தந்தையாரினுடைய அரவணைப்பிலே வளர்ந்து, ஐந்து வயதிலே யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியிலே உள்ள "மெதடிஸ்த" கிறிஸ்தவ பாடசாலையில் ஆரம்பக்கல்வியைத் தொடர்ந்ததுடன் இன்றைய கால கட்டத்திலே காணப்பட்ட சாதிக் கோட்பாடு அவரை பாதித்தது அவரது பாடசாலைக் காலத்திலே உயர்ந்த சாதியினர் எனக் கருதப்பட்டவர்களின் பிள்ளைகள் மேசை வாங்கில் இருந்து கல்வியை கற்றுக்கொள்ள, தாழ்த்தப்பட்டோர் என்று கருதப்பட்டவர்களினுடைய பிள்ளைகள் நிலத்திலும் இருந்து கல்வியை கற்றுக் கொண்டதனை அவதானித்துக் கொண்டார். எனினும் இவருடைய கல்விக் காலப்பகுதியிலே இவ்வாறான செயற்பாடுகளினால் மனமுடைந்து கல்வியைக் கற்றுக் கொள்வதற்காகப் பாடசாலை செல்வதற்கு மறுத்துக் கொண்டார் எனினும் தந்தை கணபதிப்பிள்ளை மற்றும் திரு. சின்னத்தம்பி ஆகியோரின் விடாமுயற்சியினால் கல்வியைத் தொடரும் நிலை காணப்பட்டது.

இவ்வாறாக வளர்ச்சியடைந்து சென்ற எம்.சி. சுப்பிரமணியம் அவர்கள் தமது பாடசாலைக் கல்வியை நிறைவடையச் செய்ததுடன் தனது வாழ்நாளிலே தமது பணிகளைச் சமூதாயத்திற்கும் மக்களிற்குமாக மேற் கொண்டார். அந்த வகையிலே சமுதாயத்திலே காணப்பட்ட ஏற்றத்தாழ்வுகளை ஒழிப்பதற்காகப் பெரிதும் போராடியதுடன் அன்றைய காலகட்டத்திலே தேநீர்க் கடைகள் போன்றவற்றிலும் தாழ்ந்த சாதியினர் என்ற சமுதாயத்திலே ஒடுக்கப்பட்ட மக்கள் செல்வது தடைசெய்யப்பட்டது. அவற்றிற் காகவும் பெரிதும் பாடுபட்டவராகக்

காணப்படுகின்றார். இவருடைய பெரும் முயற்சியின் விளைவாகவே இன்று அவ்வாறான தொரு நிலையானது நீக்கப்பட்டு ஏற்றத்தாழ்வு அற்ற சமூதாயம் காணப்படுகின்றது எனலாம்.

சமுதாயத்திலே தாழ்ந்த சாதியினர் என்று ஒடுக்கப்பட்ட மக்களின் கல்வி நிலையானது மறுக்கப்பட்ட போதிலும் அவர்களினது கல்வியினுடைய அவசியத்தையும் முக்கியத்துவத்தினையும் எடுத்துக் காட்டி ஒடுக்கப்பட்டவர்களினது கல்விக்காக அவர் சார்ந்த, அவரால் உருவாக்கப்பட்ட ஸ்தாபனங்களின் வழிநின்று திரு. யோவல்போல், திரு.சூரன், திரு.ஜி.நல்லையா போன்றவர்களினுடைய ஒத்துழைப்போடு சமூகசேவா சங்கம், சன்மார்க்க சபை, திருவள்ளுவர் மகாசபை போன்ற சங்கங்கள் ஒன்றிணைக்கப்பட்டு அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை உருவாக்கப்பட்டது.

அடித்தால் திருப்பி அடி என்று அடக்கப்பட்ட மக்களிற்கு அறிவுரை கூறி, சமுதாயத்திலே உள்ள அடக்கப்பட்ட மக்களிற்கு உறுதுணையாக விளங்கியவராகவும் அவர்களைச் சமுதாயத்திலே விழித்தெழ வைப்பதற்கு காரணகர்த்தாவாகவும் விளங்கியவராக எம்.சி. சுப்பிரமணியம் அவர்கள் விளங்குவதுடன் அவருடைய பணிகளும் குறிப்பிடத்தக்கனவாகக் காணப்படுகின்றன. ஒரு காலத்திலே வடக்கில் சாதிக் கொடுமை தலைவிரித்தாடிய போது, அதனால் புறக்கணிக்கப்பட்ட போது சிறுபான்மைத் தமிழர் மக்களின் "சிறுபான்மை" இனமெனத் தாழ்த்தப்பட்டு கல்வி சமூக பொருளாதாரத்தில் ஒடுக்கப்பட்டு வந்தனர். இதனை அனுபவ ரீதியாக உணர்ந்த எம்.சி. அவர்கள் தனது இளவயதிலேயே இவ்வலகை உடைத்தெறிய முயன்றார்.

உலகில் தோன்றும் மனிதர்கள் எல்லோரும் புகழோடு தோன்றுவதில்லை மனிதருள் மாணிக்கமாய்த் திகழ்பவர்கள் ஒரு சிலரே இந்த வரிசையில் அரசியல், பொருளாதார சமூக வரலாற்றில் உலகறிந்த ஒரு மேதையாக அரசியல் வாதியாகத் திகழ்ந்து, எம்.சி. என்று பாமரமக்கள் தொடக்கம் பாராளுமன்றம் வரை அன்போடும் ஆசையோடும் அழைக்கப்பட்ட எம்.சி. சுப்பிரமணியத்தின் அரசியல் வாழ்வு பல போராட்டங்களைக் கண்டது. சமூதாய விடுதலைக்காகவும் கல்வி முன்னேற்றத்திற்காகவும் அவர் பல அதிசயிக்கத்தக்க போராட்டங்களை முன்னெடுத்து வெற்றி கண்டதுடன் சேற்றிலே முளைத்த செந்தாமரையாகத் தனது வாழ்நாளில் மட்டுமன்றி, வாழ்நாட்களிற்குப் பிற்பட்ட காலத்திலும் மக்கள் மத்தியிலே சிறப்புற்று விளங்குபவராகக் காணப்படுகின்றார் என்பது மிகவும் சிறப்பாக போற்றக் கூடியதாக உள்ளது. எனினும் தமக்கென வாழாது பிறரிற்கென வாழ்ந்து மடிந்த மகானாக என்றென்றும் போற்றப்படுகின்றவராக எம்.சி.சுப்பிரமணியம் அவர்களும் அவர்களுடைய பணிகளும் சிறப்புற்று விளங்குகின்றமை சிறப்பிற்குரிய ஒன்றாகக் காணப்படுகின்றது என்பது சிறப்பான ஒன்றாகும்.

# "தனித்துவமான பாரம்பரிய கலாசாரப் பண்பாடுகளைக் கொண்ட தமிழினத்தில் சாதியப் போக்கு" என்பது பற்றி ஒரு நோக்கு

க. பாலன். – இமையாணன்

தமிழ் இனமே இப்பரந்த உலகில் முதன்முதல் தோன்றிய இனமாகவும் அது இந்தியாவிலே குமரிக்கண்டத்திலே தோன்றியதாகவும் வரலாறு கூறுகின்றது. இவ் வரையறுக்கப்பட்ட வரலாற்று உண்மைக்கு அமைவாக "முன்தோன்றிய மூத்தகுடி" என எம் தமிழ்க்குடியை உலகத்திற்கு அறிமுகம் செய்த பெருமை எம் முந்தைத் தமிழரின் தனித்துவம் எனலாம். இப்பெருமைக்குரிய தமிழினத்தை மேன்மேலும் பெருமையடைய வைப்பது அதன் உந்நதமான பண்பாட்டுக் கோலங்களே என்றால் அதில் இரண்டு கருத்துக்களுக்கு இடமிருக்க முடியாது. வீட்டிற்கு வருவோரை விருந்தினராக வரவேற்று, விருந்தோம்பல் செய்து இன்முகத்துடன் வழியனுப்பும் வீட்டுப் பண்பாட்டிலிருந்து நாட்டிலே நடக்கின்ற பழக்கவழக்கங்களிலே மிக உயர்ந்த பண்பாடாக பெண்களுக்கான கற்பொழுக்கமும் ஆண்களுக்கான ஒருவனுக்கு ஒருத்தி என்ற பண்பாடும் உலகத்தில் எந்த இனத்திலும் காணமுடியாத பண்பாடுகள் இன்னும் எண்ண முடியாத எண்ணற்ற எத்தனையோ பண்பாடுகள் தமிழினத்தின் தனித்துவத்தைப் பறை சாற்றி நிற்கின்றன என்பதைக் கூறலாம். இவ்வாறான உந்நத பண்பாடு கலாசாரம், பழக்க வழக்கங்களுக்கப்பால் எம் முந்தையரால் எழுதப்பட்டதும் சொல்லப்பட்டதுமான நூல்கள் பழமொழிகள் போன்ற எவையும் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக, எக்காலத்திற்கும் பொருந்தக் கூடியதாக, எல்லை கடந்த அறிவுக் களஞ்சியங்களாக மிளிரக்கூடியவை என்பதில் எவருக்கும் ஐயம் ஏற்பட ஞாயமில்லை.

இவ்வாறு எண்ணுதற்கரிய சிறப்புகளையும், தனித்துவம் மிக்க கட்டமைப்புக்களையும் கொண்ட தமிழினத்திலே "சாதியம்" எப்பொழுது வந்தது? எப்படி வந்தது? என்பதில் எனக்குப் போதிய அறிவு இல்லை. ஆயினும் சாதியமைப்பு என்பது செய்யும் தொழிலைக் கொண்டே தீர்மானிக்கப்பட்டது என்பது பலரின் கருத்தாகும். இந்த நிலையிலே எம் முந்தையர் தமை நோக்கின் தம் சிந்தனையில் எழுந்த எண்ணக்கருவுக்கு முழுவடிவம் கொடுத்து இந்த மண்ணையும், விண்ணையும் அளந்தனர். மண்ணின் கூறுகளைப் பார்த்து அவற்றை ஐவகை நிலங்களாக வகுத்தனர் அது போல விண்ணிற்குப் போகாமலேயே விண்ணையளந்து கோள்களைப்பற்றிக் குறித்துரைத்தனர். மேலும் மருத்துவம் சோதிடம் போன்ற எல்லாமான மனித வாழ்க்கையின் ஒவ்வொரு கூறுகளையும் ஆராய்ந்து, அறுதியிட்டு இறுதி செய்தது போல, மனிதனையும், அவன் வாழ்ந்த சூழலையும், அச்சூழலில் மேற்கொள்ளப்பட்ட அல்லது மேற்கொள்ளப்பட வேண்டிய தொழிலையுங் கொண்டு சாதியமைப்பை வரையறை செய்துள்ளார்கள் என்பது ஏற்கக் கூடியதே வலிமையான ஒருவராலேயே வலிமையான தொழிலைச் செய்ய முடியும் என்பதும் வாழும் சூழலுக்கேற்ப அங்கு வாழ்பராலேயே அச் சூழலுக்குரிய தொழிலை ஆற்ற முடியும் என்பதும் எல்லாம் இயற்கையானதே இந்தச் சூழலமைவுக்குரியதான நிலையில் செய்யப்படும் தொழிலை வைத்துக் கொண்டு ஒருவனைப் பார்த்துத் தீண்டத்தகாதவன் என்றோ, கீழ்சாதி என்றோ, ஒதுக்கி வைப்பதற்காகச் சாதியை உருவாக்கியிருக்க முடியாது என்பது தெளிவு ஏனெனில் உயிர்களை வருத்துதல் கொல்லுதல் என்பது பஞ்சமா பாதகங்களில் ஒன்று எனக் கூறிய எம்

முந்தையர்க்கு வேதனைப்படுத்திப் பார்க்கும் எண்ணம் அறவே இருத்திருக்க முடியாது. ஆனாலும் இவ்வாறு செய்யப்பட்ட தொழில்கள் மூலம் ஆண்டான், அடிமை முறை ஏற்படவாய்ப்புகள் இருந்துள்ளன. இந்த அடிமை முறை மெல்ல மெல்ல வீரியம் பெற்று எழுந்ததென இந்தத் தீண்டத்தகாதவன் கீழ்சாதி என்பதெல்லாம் இவ்வடிவம் உருப்பட இரண்டு பக்கத்தினரும் பொறுப்பாளிகளே. ஆனால் அடிமையாக்கி, குடிமையாக்கி ஆணவத்துடன் அதிகாரம் செய்தபோதே அவர்களால் கீழ்சாதி என்று செல்லப்பட்ட பஞ்சமர்கள் போராடக் கிளம்பினர். போராடிப் பேராடிப் பயன் கிடைக்காத நிலையிலே ஒரு அமைப்பு ரீதியாகப் போராடுவதன் மூலம் இத் தேசத்திற்கு மட்டுமன்றிச் சர்வதேசத்திற்கும் தம் பிரச்சனையைத் தெளிவுபடுத்த முடியும் என்பதால் சிறுபான்மைத் தமிழர் மகாசபை உருவாக்கப்பட்டது. இவ்வமைப்பை உருவாக்கப் பாடுபட்டவர்களுடன் திரு.M.C. சுப்பிமணியம் ஐயா அவர்களும் இணைந்து மிக நீண்டகாலம் ஒடுக்கு முறைக்கெதிராகப் போராடினார். அடக்குமுறை, ஒடுக்குமுறை, அடிமை குடிமை முறைகளை ஒழிப்பதில் அமரருடைய பங்கு பணியும் அளப்பரியதே. இவரின் தீவிர போராட்டம் காரணமாகவே பஞ்சமர் என்போர் கோவில்களுக்கு உள்ளே சென்று வழிபட முடிந்தது.

இந்த நிலையிலே தமிழ் இனத்தின் பண்பாட்டுக் கோலங்களை எண்ணிப்பார்க்கின் வெட்கித் தலைகுனியுமளவிற்கு உருக்குலைந்து உதவாமல் போய்விட்டதாகவே கருதமுடியும். தமிழன் எங்கு சென்றாலும் எதனைச் செய்தாலும் சென்றான். வென்றான் என்று தான் வரலாறேயொழிய தோற்றதாக வரலாறு இல்லையென்ற நிலை மாறிவிட்டது. தமிழன் தன் பக்குவத்தை இழந்துவிட்டான்.

உலகத்தையே ஒரு குடையின் கீழ் ஆண்ட தமிழ் இனத்திற்கு இன்று சொந்தமாக ஒரு நாடு இல்லை. சாதி என்றும் சமயம் என்றும் கொள்கைக் கோட்பாடு என்றும் தன்னினத்திற்குள்ளேயே வேறுபாடு காட்டி அடிமைப்படுத்தும் நிலை சரியானதென்றால் ஒட்டுமொத்தத் தமிழினத்தை அடுத்த இனம் அடிமைப்படுத்துவது எப்படி நியாயம் இல்லாமல் போகலாம்.

நீண்டதோர் வரலாற்றுப் பின்னணியில் சாதிக் கொடுமைக்குச் சமாதி கட்டப்பட்டாலும் முற்று முழுதாக அவை இடம் பெறவில்லை. சாதி என்பது ஆங்காங்கே ஒழித்து நின்று சந்தர்ப்பம் வரும் போது தலைகாட்டும் நிலைமை தொடரும் கதையாக உள்ளது. இன்று இலங்கையில் உயர் பதவிகளுக்குரிய தகுதி இருந்தும் அது சிறுபான்மையினருக்கு மறைமுகமாக மறுக்கப்பட்டு வருகின்றது. தமிழனைத் தமிழனே சாதியைச் சொல்லி விரட்டுகிறான். தமிழ் இனத்தின் பண்பாட்டுக் கோலங்களில் இதுவும் பழகிப்போன ஒன்றாகி விடுமோவென எண்ணத் தோன்றுகிறது. சிறுபான்மை இனத்தின் சுய சுதந்திரத்திற்கப்பால் அவர்களின் கல்வி மற்றும் ஏனைய திறமைகள் தட்டிக்கழிக்கப்படுமானால் சிறுபான்மைத் தமிழர் ஒன்றிணைந்து போராடவேண்டிய சூழல் ஏற்படலாம். இத் தவிர்க்க முடியாத சூழ்நிலை ஏற்படுமாயின் சிறுபான்மைத் தமிழர் மகாசபை என்பது சிறுபான்மைத் தமிழர்களை ஒன்று சேர்க்கும் ஆயுதமாக மாறலாம். அது மறைந்த தலைவர் M.C சுப்பிரமணியம் ஐயா அவர்களின் கனவை நனவாக்க முயலும். எந்தவோர் விடயத்திற்கும் காரணங்கண்டு தெளியும் அறிவியல் மிகுந்த இன்றைய 21ம் நூற்றாண்டிலே எந்தவொரு தமிழனதும் திறமைக்குத் தடையாக இன்னொரு தமிழனோ, தலைமைத்துவமோ இருக்கக் கூடாது என உறுதிகொண்டு எம்மினத்தின் பாரம்பரிய பண்பாட்டுக் கோலங்களை மதித்து வாழ்தலே தமிழன் என்பதற்கான அடையாளம்.

# சமூகம் விழித்தெழ வழிசமைத்த வல்லோன்

# *M.C* சுப்பிரமணியம்

- பவித்திரா
*கரவை மத்தி*

அரசாட்சி முடிவுற்று ஜனநாயக ஆட்சி வேரூன்றத் தொடங்கிய காலப்பகுதியில், நிலச்சுவாந்தர்களும், வசதி வாய்ப்புக்களைத் தன்னகத்தே கொண்டவர்களுமாக வழிவழியே உயர்வானவர், தாழ்வானவர் எனும் பிரிவினை வாதத்தினை வளர்த்து சுகபோக வாழ்வு வாழ்ந்தனர். இவர்களைச் சார்ந்து வாழும் வாழ்க்கை முறையை அழியவிடாமல் பாதுகாத்துச் சமூகக் குழுமங்களை வழிநடத்தினர்.

அரச கல்விச் சாலைகளில் கடை நிலை மாணவர்களாக அமர்த்திப், பாடம் கற்பித்தனர். இவர்களில் யாராவது கல்வியில் சிறப்படைபவராகக் காணப்பட்டால் அவரது பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தும் பணியினை செவ்வனே செய்து விடுவர். இதனால் பல துன்புறுத்தல்கள், இம்சைகளுக்கு உட்பட்டுக் கதியற்ற நிலையில் தீண்டத்தகாத சமூகங்களாக ஒடுக்கப்பட்டனர்.

1948ம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்தது. வல்லாதிக்கச் சக்திகளின் இடையூறுகளினால் பாதிப்புற்ற இளைஞர்கள் ஒன்று சேர்ந்து அடிமைத்தனத்திற்கு எதிரான முறியடிப்புச் செயற்பாட்டினை ஆரம்பித்தனர். சமூக விழிப்புணர்வுக்கு அவசியமானவற்றினை வரிசைப்படுத்திக் களமிறங்கினர்.

01. அரச பாடசாலைகள் நிறுவிச் சந்ததிக்கான கல்வி விழிப்புணர்வு ஏற்படுத்தல்.

02. இச் சமூகங்கள் எதிர்நோக்கும் அடக்கு முறைகளைத் தகர்த்தல்.

03. கிராமங்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்.

04. இச்சமூகத்தினைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஒருவரை பாராளுமன்ற உறுப்பினர் ஆக்குதல்.

மேற்கூறியவற்றினை முன்னெடுக்கும் போது எதிர் கொள்ளப்படும் பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கும் தலைவர்களாக வழி நடத்தியவர்களுள் அமரர் M.C சுப்ரமணியம் அவர்களின் வகிபாகம் மிகப் பெரியதாகும்.

பலாலி ஆசிரிய கலாசாலை பயிற்சியினை முடித்து, பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக வெளிவந்தவர்களுள் சிலர் அடக்கு முறைக் கெதிராகக் கிளர்ச்சிப் பாதையில் தமது வாழ்வின் அர்ப்பணிப்புப் பயணத்தைத் தொடங்கினர். அவர்களுள் ஒருவர் அமரர் மு.செல்லத்தம்பி ஆசிரியர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் பிறந்த கிராமம் கரவெட்டி கிழக்கு, இக்கிராமம் மிகவும் வல்லாதிக்க சமூக வெறியாளர்களின் ஆக்கிரமிப்பில் அடியுண்டது. அயற் கிராம பாடசாலையில் ஒரு மாணவன் மேலங்கி அணிந்தமைக்காக அடித்து உதைபட்டான். இதைக் கண்ணுற்ற முற்போக்குச் சிந்தனையாளரும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தோழருமாகிய மு.செல்லத்தம்பி ஆசிரியர் அவர்கள், இக் கிராமத்திற்கு ஒரு பாடசாலை அமைக்க வேண்டும் என்ற எண்ணத்தினைப் பஞ்சமர் குழுமத்திலிருந்து கல்விமானாகவும், மொழியாற்றல் கொண்டவராகவும் விளங்கிய அமரர் M.C சுப்ரமணியம் அவர்களிடம் வெளிப்படுத்தினார்.

இதன் தாற்பரியத்தினைப் புரிந்து கொண்டு, ஆலோசனையும், ஆசியும் வழங்கினார் அன்றைய கம்யூனிஸ்ட் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர், திரு.பொன் கந்தையா அவர்களினால் வழங்கப்பட்ட நிதியில் பாடசாலைப் பணியினை ஆரம்பித்தார். ஊர்மக்களை வழிநடத்தி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையினை ஸ்தாபித்தார். இப் பாடசாலைப் பணியினை மேற்கொள்ளும் போது ஏற்பட்ட இடையூறுகள் பலவாயின. அவற்றினை எல்லாம் அகற்றி, வெற்றிப் பாதைக்கு வழிவகுத்தவர் அமரர் M.C சுப்ரமணியம் அவர்கள் ஆகும். இன்றும் இப்பாடசாலை சமூகப் பாடசாலையாகச் சிறப்பான கல்விச் சேவையை வழங்குகின்றது.

இக் கிராமம் உவர்நீர்ப் பிரதேசமாகும். வயல் வெளியில் நன்நீர்க் கிணறு ஒன்று மட்டும் உண்டு. இக்கிணற்றில் குறிப்பிட்ட சமூகத்தினைச் சார்ந்தவர்களே நீர் எடுக்க முடியும். ஏனையோர் அவர்கள் ஊற்றும் நீரினைப் பெற்று நீர்த் தேவையினை பூர்த்தி செய்தல் வேண்டும். (இந்நிலை 1982ம் ஆண்டு வரை நீடித்தது குறிப்பிடத்தக்கது)

இப் பிரதேசத்தின் நீர்ப் பிரச்சனையை மையப்படுத்தி எழுத்தாளர் அமரர் கே.டானியல் அவர்கள் "தண்ணீர்" எனும் நாவலை எழுதினார். இந் நாவல் இந்திய சாகித்திய அக்கடமிப் பரிசு பெற்றதென்பது பெருமைக்குரியதாகும்.

இப்பிரதேசம் மட்டுமல்லாது சங்கானை, மட்டுவில் மற்றும் ஏனைய பிரதேசங்களில் அடக்கப்பட்ட மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதற்கு மகாசபை அமைத்து, அரும்பாடு பட்டு உழைத்து, ஒன்றுபடுத்தி வழிசமைத்த எமது சமூகப் போராளியும், தலைவனுமாகிய M.C சுப்ரமணியம் அவர்களின் சேவையானது சமூக எழிச்சிக்கு அர்ப்பணிப்பு மிக்கது என்றால் அது மிகையாகாது.

# வளர்முக சமூகங்களின் முதலாவது பாராளுமன்ற உறுப்பினர் அமரர் எம்.சி. சுப்பிரமணியம்

**ஆ. ந. இராசேந்திரன்,**
HNDA,APFA, AMA, FIPFM(UK)
சிரேஸ்ட கணக்காளர்,
முன்னாள் தலைவர் யாழ்
மாவட்ட அபிவிருத்தி சபை

அமரர் எம்.சி சுபபிரமணியம் அவர்களின் நூற்றாண்டு மலருக்கு செய்தியொன்றை விடுப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். எம். சி. அவர்கள் இளவயது முதற்கொண்டு பிற்படுத்தப்பட்ட சமூக மக்களின் மேம்பாட்டுக்காக, அவர் தம் கல்வி வளர்ச்சிக்காக, சமூகக் குறைபாடுகளைக் களைவதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் ஏராளம்.

எம்.சி அவர்களின் பணிகளை நான்கு பிரிவுகளாகப் ஆராய்ந்து பார்க்கலாம்.

1. எம்.சியின் சமூக சீர்திருத்தப் பணி
2. எம்.சி.யின் கல்விப் பணி
3. எம்.சியின் பொருளாதார மேம்பாட்டுப் பணி
4. எம்.சியின் அரசியல் பணி

திரு.எம்.சி. சுப்ரமணியம் அவர்கள் அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை என்ற அமைப்பை திரு.ஜோவோல் போல் போன்றவர்களுடன் சேர்ந்து ஆரம்பித்து அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிதறிக் கிடந்த சமூகங்களையும் சமூக மக்களையும் ஒன்று சேர்ப்பதில் பெரும் பங்காற்றினார். அச் சபை ஆரம்பித்த சிறிது காலத்திலேயே அதன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு இறுதிவரை அதன் வளர்ச்சிக்குச் செயலாற்றினார். திரு. எம்.சி.சுப்பிரமணியம் அவர்கள் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கெதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட அடக்குமுறைகளுக்கும், சாதிரீதியான பாகுபாடுகளுக்கும் எதிராகத் தீவிரமாகச் செயலாற்றினார். ஆலயப் பிரவேசம், தேநீர்க்கடைப் பிரவேசம், மயானங்களில்

சமத்துவம் முதலான போராட்டங்களை வன்முறையற்ற வகையில் நகர்த்திச் சென்றார். இவர் கம்யுனிஸ்ட் கட்சியின் முக்கிய உறுப்பினராக இருந்த போது 1960வதுகளின் நடுப்பகுதியில் கம்யுனிஸ்ட் கட்சியில் ஏற்பட்ட சித்தாந்தப் பிளவினால் ஏற்படுத்தப்பட்ட சீனசார்பு கம்யுனிஸ்ட் பிரிவினர் தீவிரவாதத்தையும் வன்முறையையும் சாதிப் போராட்டத்திற்குக் கையிலெடுத்தனர். ஆனால் திரு எம்.சி.சுப்பிரமணியம் அவர்கள் நலிந்த பிரிவினர் தமது விடுதலைக்கு வன்முறையைக் கையிலெடுத்தால் அதனால் ஏற்படப்போகும் பாதிப்பு நலிந்த பிரிவினருக்கே அதிகமாக இருக்கும் என்ற டாக்டர்.மாட்டின் லூதர் கிங் (யூனியர்) அவர்களின் கொள்கையை நன்கு விளங்கிக் கொண்டு, சமூகக் குறைபாடுகள் விடயத்தில் வன்முறையற்ற, ஆக்கபூர்வமான வழிகளில் போராட்ட நடவடிக்கைகளை எடுத்தார். இவ் விடயத்தை வெற்றிகரமாக எடுத்துச் செல்வதற்குத் துணையாகக் கடுமையான சட்டம் ஒன்று தேவை என அவர் திடமாக நம்பினார்.

1957ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் கு. வன்னியசிங்கம் (கோப்பாய்) என்.ஆர்.இராசவரோதயம் (திருகோணமலை) ஆகியோரால் தனிநபர் பிரேரணையாகக் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்ட 1957ஆண்டு 21இலக்கச் சமூகக் குறைபாடுகள் ஒழிப்புச் சட்டம் சாதி எதிர்ப்புப் போராட்டங்களுக்கு அடிப்படையாக அமைந்திருந்தாலும், அதில் கூறப்பட்ட தண்டனைகள் கடுமையானதாக இல்லாமையாலும் உள்ளடக்கப்பட்ட சரத்துக்கள் எதிர்பார்ப்புக்கள் ஏற்றவையாக இல்லாமையாலும் பலரும் அச் சட்டத்தை ஒரு பொருட்டாக எடுக்கவில்லை. அச் சட்டத்தில் சமூகரீதியாகப் பாரபட்சம் காட்டும் நபரொருவருக்கெதிராகப் பாதிக்கப்பட்டவரே வழக்கு தொடுக்க வேண்டும் எனவும் நபரொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து அவருக்கு 6 மாதத்திற்கு மேற்படாத சாதாரண அல்லது கடூழியச் சிறைத்தண்டனையும் 100 ரூபாவுக்கு மேற்படாத அபராதமும் விதிக்கப்படலாம் எனவும் குறிப்பிட்டிருந்தது.

திரு. எம்.சி.சுப்பிரமணியம் அவர்கள் அரசாங்கக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தமையால் இச் சட்டத்தை வலுவுள்ளதாக மாற்றியமைக்க நடவடிக்கை எடுத்தார். இதனால் ஏற்கனவே இருந்த சட்டத்தை 1971ஆம் ஆண்டு 18 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் மூலம் திருத்த நடவடிக்கை எடுத்தார். இச் சட்டத்தின்படி எவராவது நபரொருவருக்கு எதிராகச் சமூக ரீதியான பாரபட்சங்களைக் காட்டினால் அவருக்கேதிராகப் பொலிசாரால் வழக்குத் தொடுக்கப்பட வேண்டும் என்பதோடு குற்றவாளியாகக் காணப்படுமிடத்து அவருக்கு 3 வருடத்திற்கு மேற்படாத சாதாரண அல்லது கடூழியச் சிறைத்தண்டனையும் 1000 ரூபாவுக்கு மேற்படாத அபராதமும் விதிக்கப்படலாம் எனவும் திருத்தப்பட்டது. இந்தத் திருத்தம் சமூகக் குறைபாடுகள் ஒழிப்பு விடயத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. திறக்கப்படாத ஆலயங்கள், நிறுவனங்கள் திறக்கப்பட்டன. ஏதாவது நிறுவனம் பாரபட்சம் காட்டியதாக நீதி மன்றத்தால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டால் அந்நிறுவனத்திற்கான தொழில் உரிமம் மூன்று ஆண்டுகளுக்கு இரத்துச் செய்யப்படும் என்பன போன்ற கடுமையான சரத்துக்கள் சட்டத்தில் சேர்க்கப்பட்டமை விசேடமாக குறிப்பிடத்தக்கவை.

அமரர் எம்.சி. சுப்பிரமணியம் அவர்களின் கல்விப் பணியானது பல்வேறு படிமுறைகளைக் கொண்டதாக இருந்தது. பிற்படுத்தப்பட்ட மக்கள் கல்வியில் முன்னேற்றம் அடைவதன் மூலமே தமது சமூக அந்தஸ்தை உயர்த்திக்

கொள்ளலாம் என்பதில் எம்.சி. அவர்கள் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார். பிற்படுத்தப்பட்ட சமூகப் பிள்ளைகள் தமது கல்வியைப் பெற்றுக் கொள்வதில் உயர் சாதியினரால் ஏற்படுத்தப்பட்ட தடைகளைத் தகர்த்தெறிவதில் முதலில் அவர் கவனம் செலுத்தினார். எம்.சி. அவர்கள் இலங்கை கம்யுனிஸ்ட் கட்சியில் சேர்ந்து அரசியல் செய்தமையால் அக் கட்சியில் அங்கத்தவர்களாக, ஆதரவாளர்களாக இருந்த பல பிரபல பாடசாலை அதிபர்களின் அறிமுகம் ஏற்பட்டது. இதன் மூலம் அரசினர் ஆரம்ப பாடசாலைகளிலும் அமெரிக்கன் மிசன் பாடசாலைகளிலும் ஆரம்பக் கல்வியைப் பயின்ற பல பிற்படுத்தப்பட்ட சமூக மாணவர்கள் பிரபலமான கல்லூரிகளில் சேர்ந்து உயர் கல்வி பெறும் வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தார்.

வருடாவருடம் சோவியத்ருசியாவால் இலங்கை மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த புலமைப் பரிசில்கள் சிலவற்றைப் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும் பெற்றுக் கொடுத்ததன் மூலம் அந்தச் சமூகத்தவர்கள் மத்தியில் பொறியியலாளர்கள், வைத்தியர்கள் ஆகியோர் பலர் தோன்றக் காரணமாகவிருந்தார்.

1956ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் அரசாங்கமானது பல மக்கள் நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. அதில் முக்கியமானது பாடசாலைகளைத் தேசியமயப் படுத்தியமையாகும். பாடசாலைகளை அரசாங்கம் எடுத்தபின் பாடசாலைகளில் நடைமுறையில் இருந்த பல சாதிரீதியான பாகுபாடுகள் குறையத் தொடங்கின. இருந்தாலும் பிற்படுத்தப்பட்ட சமூக மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்வதற்கு நீண்ட தூரம் செல்ல வேண்டியிருந்தமையும், மாணவர்கள் பாடசாலை உபகரணங்கள் உடுப்பு, முதலியவற்றைப் பெறுவதில் பொருளாதார ரீதியில் வளர்ந்த சமூக மாணவர்களுடன் போட்டி போட முடியாத நிலைமையும் பெரும்பாலான பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்லாத நிலைமையை ஏற்படுத்தியதுடன், அவர்கள் மத்தியில் பாடாசலை இடை விலகல்களையும் அதிகரித்தது. இப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு ஒரே வழி பிற்படுத்தப்பட்ட மக்கள் செறிந்து வாழும் இடங்களில் புதிதாகப் பாடசாலைகளை அமைப்பது தான் என எம்.சி அவர்கள் தீர்மானித்து, அப்போது பருத்தித்துறை பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த கம்யுனிஸ்ட் கட்சியை சேர்ந்த திரு.பொன்.கந்தையா அவர்களின் அனுசரனையுடனும் கம்யுனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தலைவர் திரு.வ.பொன்னம்பலம்(வி.பி) அவர்களின் ஆதரவுடனும் 1959ஆம் ஆண்டு கட்டுவன் புலம் குட்டியப்புலம், கரவெட்டி, பூநகரி முதலான 16 இடங்களில் ஆரம்ப பாடசாலைகளை அமைக்க நடவடிக்கை எடுத்தார். இந்த முயற்சிக்கு அப்போதைய கல்வி அமைச்சர் கௌரவ.டபிள்யு.தகநாயக்க அவர்களின் ஆதரவு இருந்தமை இந்த முயற்சி வெற்றி பெறப் பெரிதும் உதவியது என்பதை இந்த இடத்தில் கூறிவைப்பது பொருத்தமானதெனக் கருதுகிறேன்.

புதிதாக அமைக்கப்பட்ட பாடசாலைகள் பிற்படுத்தப்பட்ட சமூக மக்களின் கல்வி வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தின. மாணவர்கள் எல்லோருக்கும் பாடசாலைக்குச் செல்லும் விருப்பையும், ஊக்கத்தையும் ஏற்படுத்தியது எமது பாடசாலை என்ற உணர்வு அமைந்தது ஓலைக் கொட்டில்களையும், மரக்குற்றி இருக்கைகளையும் தாண்டி கல்வியில் ஒரு பிடிப்பை ஏற்படுத்தியது. இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட ஒரு பாடசாலையாகிய

யா/கட்டுவன்புலம் மகா வித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டு இப் பகுதிக்கு சிறந்த கல்விச் சேவையாற்றியது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளில் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த, படித்த இளைஞர்கள் நூற்றுக்கனக்கானோர் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர். ஒரே நேரத்தில் இப்படிக் கணிசமான தொகையினரான பிற்படுத்தப்பட்ட சமூக இளைஞர்கள் அரச வேலையில் சேர்க்கப்பட்டமையானது உணரக் கூடிய சமூக மாற்றம் ஒன்றிற்கு வழிசமைத்தது. இந்த ஆசிரியர்களிற் பலர் பிற்காலத்தில் சமூகத் தலைவர்களாகவும். எம்மவருக்கு வழிகாட்டிகளாகவும் திகழ்ந்தனர்.

திரு. எம். சி. சுப்பிரமணியம் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்த காலத்தில் வங்கிகள் கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் அரச திணைக்களங்களில் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொடுத்தார். இச் சமூகங்களைச் சேர்ந்த பலருக்கு மதுபான விற்பனை சாலைகளுக்கு அனுமதிப்பத்திரங்கள் சிறு கைத்தொழில் பத்திரங்கள் என்பன போன்றவற்றை பெற்றுக் கொடுத்தன் மூலம் எமது சமூகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவினார்.

திரு.எம்.சி சுப்பிரமணியம் அவர்கள் அரசியல் ரீதியில் சமூகங்களை முன்னேற்றுவதற்குப் பல நடவடிக்கைகளை எடுத்தார். எம்.சி. அவர்கள் சாதரண துவிச்சக்கர வண்டியில் கிராமம் கிராமமாகச் சென்று மக்களுக்கு அறிவூட்டியதுடன் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்த மக்களுக்கு ஆதரவும் அளித்தார். எம்.சி அவர்களின் கால்கள் படாத பிற்படுத்தப்பட்ட மக்கள் வசிக்கும் கிராமங்களே இல்லை எனலாம். அப்போதைய உள்ளூராட்சி மன்றங்களான பல்வேறு கிராம, பட்டின, நகர, மாநகர, சபைத் தேர்தல்களின் எல்லாம் எம்மவர்களை வேட்பாளர்களாக நிறுத்தி அவர்களுக்கு வேண்டிய மனத்துணிவையும், மற்றைய உதவிகளையும் செய்து வெற்றிபெற்று உறுப்பினர்களாக உதவினார். தென்னிலங்கை கட்சிகளுடன் எம்.சி அவர்களுக்கிருந்த தொடர்பானது எமது சமூகங்கள் உயர் சாதியினரால் தனிமைப்படுத்தப்பட்டு ஒதுக்கப்படும் நிலையில் இருந்து பாதுகாப்பளித்தது.

திரு. எம். சி. சுப்பிரமணியம் அவர்கள் மிகவும் எளிமையான வாழ்க்கையை வாழ்ந்தவர். எப்பொழுதும் வெள்ளை வேட்டியும் வெள்ளை சேட்டுமே அணிந்து மிகவும் நேர்த்தியாகவும், எளிமையாகவும் காட்சியளிப்பார். அவர் தனது உடுப்புக்களைத் தானே துவைத்து அணிந்து கொள்ளும் வழக்கமுடையவர். இந்தப் பழக்கத்தைப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்திலும் தொடர்ந்தும் கடைப்பிடித்தார். கூட்டங்களில் பேசும்போது சேட்டுக் கைகளை மேலே உருவி, கண்ணை மூடிக்கொண்டு உரையாற்றுவார். முன்னால் இருப்பவர்களின் முகபாவங்களையும் உணர்வுகளையும் கணக்கிலெடுக்காது தனக்குச் சரியெனப் பட்டதை வெளிப்படையாகச் சொல்லும் சுபாவம் உடையவர். யாரையும் பழி வாங்கும் குணம் அவருக்குக் கிஞ்சித்தும் இருந்ததில்லை. அமரர் எம்.சி. அவர்கள் தம்மை எதிர்த்தவர்களுக்கும் உதவும் உயர்ந்த குணமுடைய மனிதராக வாழ்ந்தார். அன்னாரின் புகழ் பல நூற்றாண்டு காலம் இவ்வுலகில் நிலைத்திருக்கும் என்பது திண்ணம்.

# எம்.சி ஒரு சகாப்தம்

**பொன்னையா – குணசிங்கம்**
முன்னாள் உறுப்பினர், உப தலைவர்
மானிப்பாய் பட்டினசபை

"என் நன்றி கொன்றான்றுக்கும் உய்வு உண்டாம்
உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு"
என்பது எமது முன்னோர் கண்ட முடிவாகும்.

இத்தகையோர் மரபுவழி வந்த நாம் பிறந்த பொன்னாட்டிற்கு நாம் சார்ந்த இனத்திற்கும் மொழிக்கும் மதத்திற்கும் என்று உழைத்த உத்தமர்களை எம் கண்முன்னில் நிறுத்திக் காண்கின்றோம்.

இந்த வகையில் M.C. என்று எல்லோராலும் செல்லமாக அழைக்கப்பட்ட M.C. சுப்பிரமணியம் ஐயா அவர்கள் இன்று எம்முடன் இல்லை. இவர் எம்மை விட்டு நீங்கி 28 வருடங்கள் ஆகின்றது. இவர் சாதாரண குடும்பத்தில் பிறந்தார். இளமைக் காலத்திலேயே தொழிலை தூக்கி எறிந்தவர். படோபகத்தையும், பஞ்சு மெத்தையையும், கொஞ்சி விளையாட தூளிகைகளையும் விரும்பவில்லை.

இவர் தமது முழுவாழ்நாட்களையும் விசேடமாக சமூக விடுதலைக்காகவும் பொதுவாக உழைக்கும் வர்க்கத்திற்கு குறிப்பாக வடபகுதி மக்களின் நல்வாழ்வுக்காகவும் செலவழித்தார். நீண்ட நெடுங்காலமாக ஒடுக்கப்பட்டு வந்த மக்களின் கல்வி சமூக பொருளாதார மேம்பாட்டுக்காக உழைத்தார்.

M.C. அவர்களின் சமூக சேவையின் பலனாய் 70.--77 காலப்பகுதியில் ஆட்சி செய்த அரசாங்கத்தில் நியமன பாராளுமன்ற அங்கத்துவர் ஆனார். இடதுசாரி அரசியலில் பங்கேற்று தொழிலாளர் வர்க்கத்துக்கும் மற்றும் உரிமை மறுக்கப்பட்டோர்க்காகவும் பாடுபட்டவர்.

இடதுசாரிகள் முன்வைத்த அரசியல் தத்துவங்களும் பொருளாதார தத்துவங்களும் உரிமை மறுக்கப்பட்ட மக்களின் மேம்பாட்டிற்கும் விடுதலைக்கும் பொருத்தமானவை. அத்தகைய கொள்கையை முன்னெடுத்து செய்வதன் மூலம் ஒடுக்கு முறை மற்றும் சுரண்டலில் இருந்து விடுதலை பெற முடியும் என்று நம்பினார்.

இவர் மகா சபையின் தலைவராகவும் M.P யாகவும் இருந்தகாலம் அது. நான் 1969-1972 காலப்பகுதியில் மானிப்பாய்பட்டின் சபையின் உறுப்பினராக இருந்தேன். மகாசபைக்கு அடிக்கடி போய் வருவேன். மகாசபைக்கு குடாநாட்டின் பல பகுதிகளில் பலர் வருவார்கள். அப்படி வருபவர்களில் V.பொன்னம்பலம், மாட்டின் செல்லையா டானியல் போன்றவர்களை குறிப்பிடலாம். இவர்களுடன் பல்வேறு சமூகப் பிரச்சினைகளைப் பற்றிக் கதைப்போம்.

மானிப்பாய் பிப்பிலிமயானத்தில் பிணங்களை எரிப்பதற்காக தாழ்த்தப்பட்டேருக்கு ஒரு பிட்டியும் உயர்ந்தோருக்கு இன்னொரு பிட்டியும் என்று இருந்தன. M.C. அவர்களின் ஆலோசணையின் பெயரில் பட்டிசபைக்கு இதுபற்றி ஒரு தீர்மானத்தை கொண்டு சென்றேன்.

சாதியின் பெயரால் இருக்கிற இருபிட்டியையும் ஒன்றாக்கி எல்லோரும் ஒரே இடத்தில் பிணங்களை எரிக்க வேண்டும் என்பதே தீர்மானம். அவை ஏனைய அங்கத்தவர்களின் விருப்பப்படி இரண்டு பிட்டியும் இருக்கலாம். விரும்பிய இடத்தில் பிணங்களை சுடலாம் எனத்தீர்மானம் திருத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டது. குடாநாட்டில் பல மயானங்களிலிருந்த இந்த நிலைமை இதன்பின் மாற்றமடைந்கு சகலரும் ஒரே இடத்தில் பிணங்களை எரிக்கும் நிலை கொண்டு வரப்பட்டது. இதற்கு ஆலோசனை வழங்கி வழி காட்டியவா் திரு. M.C. ஆவார்.

1707 மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் தாழ்த்தப்பட்ட மக்கள் உள்ளே சென்று வழிபடவிடாமல் வவுனியா சுந்தரலிங்கம், .தம்பிப்பிள்ளை, துரைச்சாமி தலைமையில் பெரிய அளவில் தடுக்கப்பட்டது. நானும் சென்றேன் என்னையும் தடுத்தார்கள்.

நானும் தம்பிப்பிள்ளைக்கு எதிராக பொலிசில் புகார் செய்தேன். மல்லாகம் நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வவுனியா சுந்தரலிங்கம் தம்பிப்பிள்ளைக்காக வாதாடி வழக்கை வென்று கொடுத்தார். நாங்கள் தோற்றாலும் உரிமைக்காக போராடுவோம். இதற்கும் அளவுக்கு ஆலோசனை வழங்கியவரும் M.C அவர்களே..

மேலும் எமது மக்களின் மேம்பாட்டிற்காகவும் வளர்ச்சிக்காகவும் 15 பாடசாலைகளையும் அதன் மூலம் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளார். இப்பாடசாலைகளை அரசாங்கப் பாடசாலையாக பொறுப்பேற்கப்பட்டு தமிழ் மக்களிக் வளர்ச்சிக்காக முக்கிய பங்காற்றி வருகின்றன..

மேலும் M.C. எடுத்த பல்வேறு முயற்சிகள் காரணமாக ஆலயங்கள், தேனீர் கடைகள், தனியார் பாடசாலைகள் சலூன்கள் போன்றவை சகலரது பாவனைகளுக்கும் திறந்து விடப்பட்டன..

எனவே M.C. அவர்களின் வாழ்க்கை ஒரு சகாப்தமெனில் அது மிகையில்லை.

# இலங்கையின் தமிழர் அரசியல் தலைமைத்துவத்தில் சிறுபான்மை சமூகங்களினது பிரதிநிதித்துவ தேவை

இலங்கைத் தீவில் தேசிய இனப்பிரச்சினை காரணமாக போரும் சமாதானமும் அரைநூற்றாண்டு காலமாக வந்து கொண்டிருந்தன. 2009 இன் பின்னர் யுத்தம் தணிந்து நிற்கின்ற போதிலும் தமிழர் உரிமைதொடர்பான விடயங்கள் மௌனிக்கப்பட்ட தொன்றாகக் காணப்படுகின்றது. இதற்கான மூலாதாரமாக இன முரண்பாடும் போரினவாத ஒடுக்குமுறையும் காரணமாக அமைகின்றன. இச் சூழலில் தமிழ் தேசிய இனம் தம்மீது திணிக்கப்பட்டுள்ள பேரினவாத ஒடுக்கு முறையை எதிர்த்து நிற்பதற்கு ஒவ்வொரு காலத்திலும் ஐக்கியப்படுத்துவதும் வெகுஜன அரசியல் போராட்டப்பாதையில் பயணிப்பதும் சாதாரண விடயமாகி விட்டது. இவற்றோடு கலந்து விட்ட தொன்றாக நமது சமூக அமைப்பில் காணப்படும் வர்க்க, இன, சாதி, பால் முரண்பாடுகள் நான்கும் சமூகத்தில் நிலவி வரும் இவைசார்ந்த ஒடுக்குமுறைகளாக உரியவாறு அடையாளப்படுததப்பட்டு நிற்கின்றன. இவற்றுள் சாதியும் தீண்டாமையும் தமிழர் சமூகத்தில் ஓர் அங்கமாக இறுக்கமுடன் இருந்து வருவதோடு தமிழர்களிடையே சமூகப் பிளவுகளின் பின்னனியில் அரசியல் சார் செயற்பாடுகளும் மறைமுகமாக ஆக்கிரமித்து நிற்கின்றன. குறிப்பாக, தமிழ் அரசியல் தலைவர்கள் இன்றுவரை சாதியையும் தீண்டாமையும் எதிர்த்துப் போராடுவதற்கு எக்காலகட்டத்திலும் அக்கறை காட்டவோ அன்றித் தாழ்த்தப்பட்ட மக்களின் சமத்துவமான நிலையில் வைத்து நடத்துவதற்கும் ஜனநாயகப் படுத்துவதற்கும் இதன் மூலம் ஓர் பரந்த ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கும் முன்வரவில்லை. ஏதாவது ஒரு அரசியல் பிரதி நிதித்துவத்தையோ அன்றிச் சில எலும்புத்துண்டுச் சலுகைகளை வழங்கி விட்டு தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைக்காக உழைத்துக் கொள்கின்றோம் என மார் தட்டிக் கொள்வதிலேயே தமிழ்த் தேசியத் தலைமைகள் இருந்து வருகின்றன.

### தாழ்த்தப்பட்ட சமூக மக்கள்

அடிப்படையில் எதிர்நோக்குகின்ற நிலம், குடியிருப்பு, தொழில் வாய்ப்புக்கள், கல்வி வளர்ச்சி பண்பாட்டு மாற்றங்கள் போன்றன அடிப்படைப் பிரச்சினைகளின் இரண்டாம் மூன்றாம் நிலைகளிலேயே வைத்து நடாத்தப்படுகின்றனர். சமூக பொருளாதார அடிப்படையில் பின்தங்கி வாழ்வோராக கிராமங்கள் தோறும் பலர் காணப்படுகின்றனர். அரசியல்வாதிகளின் பொய்யான வாக்குறுதிகளை நம்பி ஏமாந்த சமூகமாகக் காலம் காலமாக இருந்து வருகின்றது.

### 1970களில் ஏற்பட்ட எழுச்சி

இக்காலத்தில் உருவாக்கப்பட்ட புரட்சிகர அமைப்பான பேரவையானது தமிழர் பழமைவாதத்திற்கு அடி கொடுத்த அதேவேளை தமிழ் மக்கள் மத்தியில் தலைவர்களால் வளர்த்தெடுக்கப்பட்டு வந்த குறுகிய தேசியவாத உணர்வுகளை மழுங்கடிக்கும் வகையிலும் வர்க்க அடிப்படையிலான முற்போக்கு உணர்வுகள் வளர்க்கப்படும் வகையிலும் அமைந்தன. தமிழ் அரசியல் தலைவர்களுக்கு பிற்போக்கு நிலைப்பாட்டையும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான செயற்பாட்டையும்

கோடிட்டுக்காட்டி, தமது ஒட்டுமொத்தமான எதிர்ப்பினைத் தெரிவிக்க 1970ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் சந்தர்ப்பமாக பயன்படுத்தப்பட்டது.

புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி தேர்தலைப் புறக்கணித்துப் பகிஸ்தரிப்பு செய்தது. வெகுஜனப் போராட்டங்களினால் உருவாக்கிய மக்கள் ஆதரவை அது வாக்கு வங்கியாக மாற்றமுனையவில்லை. மாறாக வலிமை தந்தவர்களுக்கே உரிமை கொடுக்க வேண்டும் என்ற முனைப்போடு அனைத்துச் சிறுபான்மையினர்களும் சேர்ந்து 1970ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் இரண்டு பெருந் தொகுதிகளின் மன்னர்கள் என வர்ணிக்கப்பட்டவர்கள் வரலாறு காணாத தோல்விகளுக்கு உள்ளாக்கப்பட்டனர். ஒன்று வலிகாமம் சங்கானையில் போராட்டம் நடைபெற்ற தொகுதியின் தமிழரசுத் தளபதி என வர்ணிக்கப்பட்ட அ. அமிர்தலிங்கமும், அடுத்து வடமராட்சியில் போராட்டம் நடைபெற்ற கரவெட்டியை உள்ளடக்கிய உடுப்பிட்டிச் சிங்கம் என வர்ணிக்கப்பட்ட தமிழ் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான மு. சிவசிதம்பரமும் மேற்படி தொகுதிகளில் படுதோல்வியடைந்தனர். இது மட்டுமல்லாது அடுத்துவரும் தேர்தல்களிலும் நிற்கமுடியாத அளவிற்கு மேற்படி தொகுதிகளிலிருந்து வெளியேறி, காங்கேசன்துறைத் தொகுதியில் அமிர்தலிங்கமும் நல்லூர் தொகுதியில் சிவசிதம்பரமும் நிற்க வேண்டிய சூழலைச் சிறுபாண்மையினர் உருவாக்கியிருந்தனர்.

இத்தகைய எழுச்சிமிகு செயற்பாட்டிற்குச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை இளைஞர் அணியினரின் செயற்பாடு பலம் பெற்றதொன்றாக வரலாற்றுச் சான்று பகிர்ந்தது. இதன் பின்னர் உருவாக்கிய அரசியல் எழுச்சியில் சிறுபான்மையினரின் நலனில் அக்கறை கொண்ட மாமனிதன் எம்.சி. சுப்பிரமணியம் நியமன ரீதியான பாராளுமன்ற உறுப்பினராக தெரிவாகியிருந்தார். இவரது பாராளுமன்றப் பிரதிநிதித்துவ மூடாக இருட்டடிப்புச் செய்திருந்த சிறுபான்மையினரது கிராமங்களின் அபிவிருத்திக்கு வெளிச்சமூட்டப்பட்டது. குறிப்பாக கல்வித்துறையில் அடிப்படை வசதிகளுடன் கூடிய பாடசாலைகள் அமைக்கப்பட்டு சிறுபான்மையின மாணவர் சுதந்திரமாகக் கற்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. கிராமங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் கட்டமைப்புக்கள் திட்டமிட்டவகையில் முன்னெடுக்கப்பட்டன. இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும் தொழில் பயிற்சிகளும் வழங்கப்பட்டன. இக்காலம் சிறுபான்மை மக்களுக்குப் பொற்காலம் என மக்களால் வர்ணிக்கப்படுகிறது. பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தினூடாக எம்.சி. யின் செயற்பாடுகள் மக்கள் மத்தியில் அவரைத் தனிப்பெரும் தலைவராக ஆக்கின.

### 1977 இல் ஏற்பட்ட மாற்றம்

தமிழர் விடுதலைக்கூட்டணி இக்காலத்தில் எழுச்சி பெற்ற வேளை சிறுபான்மையினருக்கு உதவியளிப்போம். எனக்கூறி 1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் உடுப்பிட்டித் தொகுதியின் சிறுபான்மையினர் சார்பாக ரி. இராஜலிங்கம் என்பவரை வேட்பாளராக நிறுத்தி வெற்றியும் பெற்றிருந்தது. இதனால் ஏற்கனவே பாராளுமன்ற உறுப்பினராயிருந்த எம்.சி. சுப்பிரமணியத்தின் பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டது. 2004இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழ்தேசிய கூட்டமைப்புச் சார்பாக கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த கி. சிவனேசன் போட்டியிட்டு யாழ்மாவட்டப்பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். இத்தேர்தல்

வேட்பாளர் தெரிவும் வாக்குச் சேகரிப்பும் சாதியத்தை அடிப்படையாகக் கொண்ட சாராம்சமாக நோக்கப்பட்டதனால் சிறுபான்மையினர் அனைவரும் ஒன்றிணைந்து வாக்களிப்பில் ஈடுபட்டனர். இவரது பாராளுமன்ற உறுப்புரிமையினால் குடாநாடு வன்னி பிரதேசங்களில் சிறுபான்மை மக்கள் வாழும் கிராமங்களில் அபிவிருத்திப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

**2009 இன் பின்னரான நிலை**

தமிழ் மக்களது உரிமைப் போராட்டம் ஆயுதப் போராட்டத்திலிருந்து விடுபட்டு அரசியல் ரீதியான முன்னெடுப்புக்கான சந்தர்ப்பமாக மாற்றியமைக்கப்பட்டது. தமிழ் மக்களைப் பிரதி நிதித்துவப்படுத்துமிடத்து தமிழ் அரசியல் கட்சிகள் தம்முன் போட்டி போட்டு மக்களது உரிமைகள் பிரச்சினைகள் என்பவற்றிற்கு முன்னுரிமை கொடுக்காது தத்தமது சுயநல அரசியற் கலாசாரத்தைக் கொண்டுள்ள நிலையிலே தேர்தல்களில் போட்டியிடும் நிலை காணப்படுகின்றது. இச்சந்தர்ப்பத்தில் பாராளுமன்றத்தேர்தல், மாகாணசபைத் தேர்தல், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அனைத்திலும் சிறுபான்மை மக்களது பிரதிநிதித்துவம் தொடர்பில் நீண்ட இடைவெளியும் பாராமுகமான நிலையும் காணப்படுகின்றது. தமிழர்களின் தனிப்பெரும் கட்சியென மார்தட்டிய தமிழரசுக் கட்சியின் தலைமைகள் இவ்விடயத்தில் நழுவல் போக்கினையும் பொருத்தமற்ற கருத்தினையும் தெரிவித்து நிற்கிறார்களே தவிர மேற்குறிப்பிட்ட தேர்தல்களில் சிறுபான்மை மக்களது பிரதி நிதித்துவத்தினை ஏற்பதாக இல்லை. குறிப்பாக அண்மைக்காலத் தேர்தல்களில் பொருளியல் ஆசான் திரு. மா. லோகசிங்கம், கணக்காளர் திரு. இராஜேந்திரன், திரு. அன்ரனி ஆசிரியர் ஆகியோரது பெயர்கள் தெரிவுப்பட்டியலுக்குக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் பாராளுமன்ற, மாகாணசபைத் தேர்தல்களில் இவர்கள் எவரும் உள்வாங்கப்படாமல் நிராகரிக்கப்பட்ட நிலையில் 2015 பாராளுமன்ற பொதுத்தேர்தலில் சிறுபான்மைத் தமிழர் மகாசபை குறுகியகாலத்தினுள் ஆசிரியர் அன்ரனி தலைமையிலுள்ள வேட்பாளர்களுடன் தேர்தலில் போட்டியிடக் களமிறக்கப்பட்டனர். 1970களில் காட்டிய ஒற்றுமை இந்தத் தேர்தலிலும் மக்கள் எழுச்சி பெற்று வெளிப்படுத்தியிருந்தால் யாழ் மாவட்டத்தில் இரண்டு ஆசனங்களைக் கைப்பற்றியிருக்க முடியும். இது கைக்கெட்டாமல் போனது துரதிஷ்டவசமானதாகும்.

# எம்.சி.வழிகளில் தொடர்ந்திடுவோம்

எங்கள் தலைவனின்
சமூகப் போராட்டம்
அரை நூற்றாண்டைக் கடந்தும் ஓயவில்லை!
நீ கடந்து சென்ற
சமூக வெளி முழுவதும்
சாதிவெறி பிடித்த
சாத்தான்களின் கூரிய முட்களே
பரவிக் கிடந்தன.
எனினும்
இரத்தம் சிந்திய
உன் பாதங்களை
துடைத்துத் துடைத்தே
எழுந்து சென்றாய்!

உன் உயிருக்கு
உலைக்களம் மூட்டியவர்கள்
மேட்டுக்குடியில் பிறந்த
எம் தேசிய வாதிகள் என்பதில்
எப்போதும் தெளிவாய் இருந்தாய்
அதனால், அந்தச்
சாதிச் சண்டியர்கள்
வாழும் குகைக்குள்
நீ சிங்கமாய்ப் பாய்ந்து
கர்ச்சித்தாய்....!

அகிம்சை உனக்கு
ஆடைகட்டிப் பார்த்தது
பகுத்தறிவுக் கொள்கை
முடிசூட்டிப் பார்த்தது
கம்யூனிசமோ.....!
உன் கரங்களுக்கு
வீரவாளைப் பரிசளித்தது
அப்போதுதான்
உன் சரியான பாதை எதுவென
எமக்கே புரிந்தது.

சாதிச்சாக்கடையை
புனிதகங்கையென நினைந்து
அதில் நீராடி மகிழ்ந்த
சைவத் தமிழ்க்காவலர்கள்
எம் உறவுகளை


அடிமைகள் குடிமைகள் என்றும்
தீண்டத் தகாத சாதிகள் என்றும்
சபிக்கப்பட்ட பாவிகள் என்றும்
தேசவழமையில் சட்டம் போட்டனர்
''பாலபாடத்தில்'' குற்றம் சாட்டினர்.
இதற்கு எதிராய்
நீதி கேட்டுப்
போராடப் புறப்பட்டவர்
எம்.சி. என்னும்
எங்கள் தலைவனே!

நோய்களை மாற்ற
மருந்துண்டு, சாதி
நோய்களை மாற்ற
மருந்துண்டோ....?
பாயும் புலிபோல்
வீரமுண்டு, இனியும்
பரம்பரை அடிமையாய்
வாழ்ந்திடவோ...?
கோயில் கதவினை இன்றும்
பூட்டியுள்ள, அந்தக்
கொடுங்கோல் மனிதரை
உதைத்திடுவோம்!

நாய்க்குணம் கொண்ட
வெறியர்களை என்றும்
நையப் புடைதத்திடு என்றார்
எம்.சி ஐயாவே!

ஈராயிரம் ஆண்டுகள்
கடந்தனவே, சாதி
ஈனப் பார்வை இன்னும்
மறையலையே!
பாரினை உழுது
வளம் செய்தோம் - இங்கு
பரதேசிகள் போல்
பயந்து வாழ்வதற்கா....?
தீராநோயாம் சாதியத்தை
தமிழ்த் தேசிய மண்ணில்
வளர்ப்பதேனோ...?
ஊரின் மேட்டுக்குடி நயினார்கள்
எம்மை ஆண்டு அனுபவித்தது
போதுமையா!
மார்பினில் மூட்டிய கனலோடு
நாம் எம்.சி.வழியினில்
தொடர்ந்திடுவோம்!

-சித்திரா சின்னராஜன்-





September 27, 2017

Ramyan Printers, Madduvil